ஸ்ரீ :

# தென்பெண்ணை ஆற்றங்கரைக் கிருஷ்ணகிரி மாவட்டக் கருத்தரங்க மலர்

அக்டோபர் 10-11-2009




ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை

5/1397B இலக்கியம்பட்டி - தருமபுரி 636705

ஸ்ரீ:

# தென்பெண்ணை ஆற்றங்கரைக் கிருஷ்ணகிரி மாவட்டக் கருத்தரங்க மலர்

மலர்க் குழுவினர்


**ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை**

5/1397B, இலக்கியம்பட்டி. தருமபுரி - 636 705.



அன்பளிப்பு

முதன்மைச் செயலாளர் / ஆணையர்
தொல்லியல் (ம) அருங்காட்சியகத் துறை,
தமிழ்நாடு அரசு.

**தென்பெண்ணை ஆற்றங்கரைக்**
**கிருஷ்ணகிரி மாவட்டக் கருத்தரங்க மலர்**

முதல் பதிப்பு ஏப்ரல் 2010

மலர்க்குழு :
பேரா. **தி.கோவிந்தன்**
முனைவர் திருமதி **சௌ.கீதா**
முனைவர் **பெ.வெங்கடேஸ்வரன்**

பக்கங்கள் : 167

நூலின் அளவு : 1/8 டெமி

எழுத்து அளவு : 12 புள்ளிகள்

தாள் தரம் : மேப்லித்தோ

விலை : ரூ. 70

வெளியீடு:
**ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை**
5/1397B, இலக்கியம்பட்டி.
தருமபுரி - 636 705.

தொடர்பு முகவரி :
**முதல்வர்,** KAP **வரலாற்று ஆய்வு மற்றும் பயிற்சி மையம்**
பெருமாள் மணிமேகலை பொறியியல் கல்லூரி வளாகம்,
கோனேரிப்பள்ளி, ஒசூர் – 635 117.

வடிவமைப்பு & அச்சு:
**பிரகதி பிரிண்டர்ஸ்,**
17, செவத்தா கவுண்டர் தெரு,
கிருஷ்ணகிரி. ✆ 04343 - 230887

ஸ்ரீ

# ஆசிரியர் பக்கம்

அண்மையில் உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. தமிழகத்தின் வடக்கு வாசலாகத் திகழும் இப்பகுதி பெண்ணையாற்றின் வளத்தால் பொலிவு பெற்று விளங்குகிறது. கானக நாடன் என்று புலவர் போற்றிய கானக நாடும் கல்நாடும் இன்றும் காட்சி தருகின்றன. தமிழர் முல்லை நிலப் பண்பாட்டை இன்றும் இங்குக் காணலாம்.

இத்தகைய பண்பாட்டுத் தலமாக விளங்கும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பற்றிய கருத்தரங்கில் 75 ஆய்வாளர்களும், 22 மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 27 கட்டுரைகள் படிக்கப்பட்டன. படிக்கப்பட்ட கட்டுரை தந்த சிலர் விழாவிற்கு வரவில்லை. பெற்ற கட்டுரைகளை அப்படியே பதிந்துள்ளோம்.

ஓரிரு கட்டுரைகள் கோப்பில் நெகிழ்ந்தன. என் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அவை அடுத்த பதிப்பில் இடம்பெறும்.

ஊர்ப்பெயர் பற்றிய கட்டுரைகள், கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப்பெயர்கள் என்ற தலைப்பில் தொடர்ந்து சில கருத்தரங்குகள், கலந்துரையாடலை உருவாக்கத் தூண்டுகின்றன.

கிருஷ்ணகிரியின் பண்பாட்டுத் தளம், நாயகன் நள்ளி, முல்லை நில ஆயர் வாழ்வு, முல்லைநில மொழி வழக்கு எனக் கட்டுரைகள் எதிர்காலத்தில் வரும் என நம்புகிறேன்.

இந்தக் கருத்தரங்கத்தை அமைத்துத் தந்து உதவிய மாவட்ட ஆட்சியர் முனைவர் வே.க.சண்முகம், முதன்மை ஆணையர் முனைவர் டி.எஸ். ஸ்ரீதரன், கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று மையத் தலைவர் உயர்திரு.K.A.மனோகரன் அவர்கட்கும் என் நன்றி.

இக்கருத்தரங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட நூல்கள், படத் தொகுப்பு முதலானவற்றுக்கான நிதி உதவி வழங்கிய ஊத்தங்கரை வித்யா மந்திர் தலைவர் திரு.சந்திரசேகரன் அவர்கட்கும் என் நன்றி.

என்னோடு தொடர்ந்து பணியாற்றிவரும் மலர்க்குழுவினர், ஆய்வாளர், அலுவலர் ஆகியோருக்கும் தட்டச்சுப் பணியில் உதவியவர்களுக்கும் என் நன்றி.

கருத்தரங்க மலரை வடிவமைத்து நன்கு அச்சிட்டு வழங்கிய பிரகதி அச்சகத்திற்கும், என்னோடு இந்தப் பணியில் ஈடுபட்டுப் பணியாற்றிய முனைவர் சௌ.கீதா, முனைவர் வெங்கடேஸ்வரன் ஆகியோருக்கும் என் நன்றி.

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : | |
| வரவேற்புரை | : | திரு. K.A. மனோகரன் |
| தலைவர் முன்னுரை | : | |
| தொடக்க உரை | : | முனைவர் T.S. ஸ்ரீதரன், இ.ஆ.ப., முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் |

### வெளியீடுகள்

1. K.A.P ஆய்வு மற்றும் பயிற்சி மையம் தொடக்கம் - துணைவேந்தர் அவர்கள்
2. கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்றுப் பேழை - துணைவேந்தர் அவர்கள்
3. "நள்ளி" காலாண்டு இதழ் - துணைவேந்தர் அவர்கள்

### 4. நூல்கள் வெளியீடு

அ) இராயக்கோட்டை - ஆயர்கள்வண்ணப்படத்தொகுப்பு - முனைவர் T.S. ஸ்ரீதரன், இ.ஆ.ப., முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர்

ஆ) இராயக்கோட்டை வரலாறும், பண்பாடும் - முனைவர் T.S. ஸ்ரீதரன், இ.ஆ.ப., முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர்

இ) காசுகள் - உயர்திரு. A.R.K. அருண் அவர்கள்

ஈ) குறுந்தகடுகள் - மாவட்ட ஆட்சியர் அவர்கள்

உ) பஞ்சாயத்துராஜ் - மாவட்ட ஆட்சியர் அவர்கள்

### முதல் நூல் பெறுபவர்கள்.

அ) திரு. சந்திரசேகரன் அவர்கள்
தலைவர், வித்யாமந்திர் கல்வி நிறுவனங்கள்
ஊத்தங்கரை
- இராயக்கோட்டை வரலாற்றுப் பேழை
இராயக்கோட்டை வண்ணப்படம்.

ஆ) திரு.அரிமா. ஜே. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள்
இராயக்கோட்டை
- குறுந்தகடுகள் மற்றும் காசுகள்

இ) திரு. ஏ.எம். வடிவேல் அவர்கள்
தலைவர் லஷ்மி கல்வி
அறக்கட்டளை, தர்மபுரி
- சங்ககாலம்

ஈ) முனைவர். S. சென்னையன்
கிருஷ்ணகிரி.
- ஆயர் வாழ்வியல்

உ) திரு. ஆர். பெருமாள்ராஜ் - இராயக்கோட்டை வரலாறும், பண்பாடும்

# பாராட்டு விழா அழைப்பிதழ்



## கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று மையம்
## நூல் அறிமுகவிழா மற்றும்
## நூலாசிரியருக்குப் பாராட்டு விழா

நாள் : 10-10-2009 மாலை 5 மணியளவில்
இடம் : மீனாட்சி மஹால், கிருஷ்ணகிரி.

அன்புடையீர் ! வணக்கம்

தென் பெண்ணை ஆற்றங்கரைக் கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கம் அக்டோபர் 2009, 10,11 சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணகிரியில் நடைபெற உள்ளது. அதன் தொடர்ச்சியாக வெளியிடப்பெற்ற நூல்கள் மற்றும் நூலாசிரியர்களுக்குப் பாராட்டு விழா கிருஷ்ணகிரி மீனாட்சி மஹாலில் மாலை 5.00 மணியளவில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் :

உயர்திரு. முனைவர் **வே.க.சண்முகம்,** இ.ஆ.ப.
தலைமை ஏற்கவும்
உயர்திரு. **டி.செங்குட்டுவன்,** சட்டமன்ற உறுப்பினர்
உயர்திரு. **கே.ஆர்.கே.நரசிம்மன்,** சட்டமன்ற உறுப்பினர்
உயர்திரு. **டி.மேகநாதன்,** சட்டமன்ற உறுப்பினர்
உயர்திரு. **கே.கோபிநாத்,** சட்டமன்ற உறுப்பினர்
உயர்திரு. **டி.இராமச்சந்திரன்,** சட்டமன்ற உறுப்பினர்
உயர்திரு. **எம்.ஆர்.இராஜேந்திரன்,** தலைவர் மாவட்ட ஊராட்சி மன்றம்
திருமதி. **பரிதா நவாப்,** நகர்மன்ற தலைவர்
உயர்திரு. **ஜி.ஏ.வடிவேல்,** சென்னை
உயர்திரு. **பாஸ்கரன்,** முதன்மை கல்வி அலுவலர்
உயர்திரு. **பெ.பொன்னுசாமி,** அறக்கட்டளை உறுப்பினர்
உயர்திரு. **பி.என்.குருராவ்,** அறக்கட்டளை உறுப்பினர்
உயர்திரு. **டி.ஏகாம்பவாணன்,பி.ஏ** இயக்குனர், பல்லவன் வங்கி

முதலானோர் சிறப்பு விருந்தினர்களாக விழாவில் பங்கேற்று சிறப்பிக்கவும் இசைந்துள்ளார்கள் அவ்வமயம் நள்ளி காலாண்டிதழ், கிருஷ்ணகிரி மாவட்ட வரலாறு பகுதி-I ஆயர்வாழ்வியியல் சங்ககாலம் மற்றும் காசுகள், கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று குறுந்தகடு, ஒலி, ஒளிப்பேழை, இராயக்கோட்டை வண்ணப்படத் தொகுப்பு நூலும் சிறப்பு விலையில் அளிக்கவும், நூலாசிரியர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற உள்ளதாலும் தாங்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

**கே.ஏ.மனோகரன்** முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
தலைவர் கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று மையம்
(ஸ்ரீ விவேகானந்தா கொடை மற்றும் அறக்கட்டளையின் சார்பு நிறுவனம்)

# தென்பெண்ணை ஆற்றங்கரைக்
# கிருஷ்ணகிரி மாவட்ட
# வரலாற்றுக் கருத்தரங்கம்

# அழைப்பிதழ்

இடம் : கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரகம்

நாள் : **10,11** - அக்டோபர் **2009**

சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை **9.30** மணி

வரலாற்று ஆவணங்களைப் பாதுகாப்போம்!

வரலாறு படைப்போம்!!

# தென்பெண்ணை ஆற்றங்கரைக்
# கிருஷ்ணகிரி மாவட்ட
# வரலாற்றுக் கருத்தரங்கம்

## நிறைவு விழா

நாள் : **11-10-2009** ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை **4.00** மணி

இடம் : **மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கம்**

பேரன்புடையீர், வணக்கம்.

தென்பெண்ணை ஆற்றங்கரைக் கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்க நிறைவு விழாவிற்கு

மாவட்ட ஆட்சித்தலைவர்

முனைவர். **வே.க.சண்முகம்,** இ.ஆ.ப., அவர்கள்

தலைமை தாங்கவும்

தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

முனைவர். **ஔவை நடராசன்** அவர்கள்

நிறைவுரை நிகழ்த்தவும்

கிருஷ்ணகிரி மாவட்ட வன அலுவலர்

உயர்திரு. **V. கணேசன்,** இ.வ.ப., அவர்கள்

நினைவுப்பரிசு வழங்கவும்

கூடுதல் ஆட்சியர்

டாக்டர். **தரேஷ் அகமது,** இ.ஆ.ப., அவர்கள்

சான்றிதழ் வழங்கவும் இசைந்துள்ளார்கள்.

***தாங்கள் வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.***

**மாவட்ட ஆட்சியர்**

# பங்கேற்பாளர் விவரம்

1. திரு. **S.அகமது ஷெரிப்,**
தலைமை ஆசிரியர், பருகூர்.

2. திரு. **ஆ.அன்பழகன்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்.

3. திருமதி பேரா. **அன்பரசி,**
அரசு மகளிர் கல்லூரி,
கிருஷ்ணகிரி.

4. திரு. **அன்பு**

5. திரு. **அமர்நாத்**

6. முனைவர் புலவர்
**கா.அரங்கசாமி,** திருப்பூர்.

7. திரு. **அரவிந்த்,**
இராயப்பேட்டை, சென்னை.

8. திரு. **A.R.K.அருண்,**
பயிற்சியாளர், கோவை.

9. திரு. **அர்த்தனாரி,**
முதுகலை ஆசிரியர், பருகூர்.

10. திரு. **எஸ்.பாலகிருஷ்ணன்,**
தாரமங்கலம், சேலம்.

11. திரு. **பாலசுப்பிரமணி**

12. திரு. **N.சந்திரசேகரன்,**
மாவட்டத் தொலைத் தொடர்புத் துறை,
தருமபுரி.

13. டாக்டர் மேஜர் **சதாபுதின்,**
பேராசிரியர்(ஓய்வு), வாணியம்பாடி.

14. திரு. **சென்னையன்,**
வழக்கறிஞர், கிருஷ்ணகிரி.

15. திரு. **சென்ன மூர்த்தி,**
ஒய்வு பெற்ற அஞ்சலக அலுவலர்,
தருமபுரி.

16. திரு. **சின்னகுட்டப்பா,**
ஒசூர்.

17. திரு. **சின்னசாமி,** ஒசூர்.

18. திருமதி **பரிதா நவாப்,**
நகர்மன்றத் தலைவர், கிருஷ்ணகிரி.

19. திரு. **வி.கஜேந்திரன்,** மோட்டூர்.

20. முனைவர் **சௌ.கீதா,**
தமிழ் இணைப் பேராசிரியர்,
அரசு மகளிர் கல்லூரி, கிருஷ்ணகிரி.

21. பேராசிரியர் **தி.கோவிந்தன்,**
தலைவர், ஸ்ரீ விவேகானந்தர்
கொடை மற்றும் அறக்கட்டளை,
தருமபுரி.

22. திரு. **குல்சார் பேகம்,**
ஆவத்தவாடி.

23. திரு. **குணசேகரன்,**
வேளாண்மைத்துறை, தருமபுரி.

24. திரு. **B.N.குருராவ்,**
அறங்காவலர், தருமபுரி.

25. திரு. **கணேசன்**

26. திரு. **V.கணேசன்,** இ.வ.ப.,
மாவட்ட வனத்துறை அலுவலர்,
கிருஷ்ணகிரி.

27. திரு. **க.ஹரிநாத்,**
அம்(பெள) அறக்கட்டளை,
பாலக்கோடு.

28. திரு. **ஐசக் பாலசிங்கம்,**
தலைமை ஆசிரியர், சூளகிரி.

29. திரு. **எம்.ஜி.ஜெயபால்,**
உதவித் தலைமை ஆசிரியர்,
ஊத்தங்கரை.

30. திரு. **என்.ஆர்.ஜெயசந்திரன்,**
காவேரிப்பட்டணம்.

31. திருமதி **பூ.கல்பனா,**
கிருஷ்ணகிரி.

32. **தொ.நா.கலைசெல்வி,**
கிருஷ்ணகிரி.

33. செல்வி **கவிதா,**
அரசு மகளிர் கல்லூரி,
கிருஷ்ணகிரி.

34. திரு. **சி.குமார்,**
கல்கூடப்பட்டி, பாலக்கோடு.

35. திரு. **பி.குமார்,** செயலர்,
பி.எம்.சி., கோனேரிப்பள்ளி.

36. திரு. **குப்பண்ணாசெட்டி,**
கிருஷ்ணகிரி.

37. திருமதி **லீலா**

38. முனைவர் **பெ.மாதையன்,**
தலைவர்–தமிழ்த் துறை,
பெரியார் பல்கலைக் கழகம், சேலம்.

39. டாக்டர் **மதுசூதனன்,**
பெங்களூரு.

40. திரு. **மகேஸ்வரன்,**
தொகரப்பள்ளி.

41. திரு. **K.A.மனோகரன்,**
தலைவர், வரலாற்று மையம்.

42. முனைவர் **நா.மார்க்சிய காந்தி,**
தொல்லியல் துறை.

43. திரு. **வி.மேகநாதன்,** ஒசூர்.

44. திரு. **எஸ்.முருகானந்தம்,**
பெரியகோட்டப்பள்ளி.

45. திரு. **வி.முருகேசன்,**
பெரியாம்பட்டி.

46. திரு. **எஸ்.எம்.முருகேசன்,**
வழக்கறிஞர், இராயக்கோட்டை.

47. கவியருவி **ந.நாகராஜன்,**
இராயக்கோட்டை.

48. திரு. **மு.நாகேஸ்வரன்,** திருப்பூர்.

49. புலவர் **கு.பச்சைமால்,**
நாகர்கோவில்.

50. டாக்டர் **S.பத்மநாபன்,**
நகார்கோவில்.

51. திரு. **பழனிசாமி**

52. முனைவர் **நா.பழனிவேலு,**
அரசு கலைக்கல்லூரி (ஆ),
கிருஷ்ணகிரி.

53. திரு. **பார்த்திபன்,**
தருமபுரி லாட்ஜ், தருமபுரி.

54. திரு. **பெருமாள் சரவணன்,**
ஆசிரியர், கல்லாவி.

55. திரு. **சி.பிரகாசம்,**
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி.

56. திரு. **எல்.ரகுநாத்,** தருமபுரி.

57. திரு. **ராஜகோபால்,**
காவேரிப்பட்டணம்.

58. பேரா. **இராசசேகர் தங்கமணி,**
பாண்டியன் நகர், கரூர்.

59. முனைவர் **எஸ்.ராஜரத்னம்,**
கிருஷ்ணகிரி.

60. முனைவர் **எஸ்.ராஜவேலு,**
தொல்லியல் துறை, சென்னை.

61. திரு. **இரா.ராமகிருஷ்ணன்,**
ஒசூர்.

62. திரு. **ஆ.இரத்தினகுமார்,**
இராயக்கோட்டை.

63. திரு. **ரத்தினசாமி,**
தலைமை ஆசிரியர்,
அ.மே.நி.பள்ளி, மத்தூர்.

64. திரு. **வி.ரவி,**
பெரியதள்ளப்பாடி.

65. திரு. **நா.ரவிசங்கர்,**
வழக்கறிஞர், கிருஷ்ணகிரி.

66. திரு. **சொ.சாந்தலிங்கம்,**
தொல்லியல் அலுவலர்.

67. திரு. **க.சரவணன்,**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், வேலூர்.

68. திரு. **டி.சரவணன்**

69. திரு. **கோ.சீனிவாசன்,**
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்.

70. திரு. **சேகர்,**
ஸ்வார்டு ட்ரஸ்ட், மத்தூர்.

71. திரு. **கே.செல்வராஜ்,** ICO(S),
மாவட்ட தொழில் மையம், கிருஷ்ணகிரி.

72. திரு. **ச.செல்வராஜ்,**
தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்.

73. **Dr. I.செல்வசீலன்,**
வரலாற்றுத் துறைத் தலைவர்,
அரசு கலைக்கல்லூரி (ஆ), கிருஷ்ணகிரி.

74. திரு. **A.L.ஷெரிப்,** உரிமையாளர்,
ஹீரோ ஷூ மார்ட், வாணியம்பாடி.

75. திரு. **டி.எஸ்.ஸ்ரீதரன்,** இ.ஆ.ப.,
ஆணையர், சென்னை.

76. திரு. **கே.வி.ஸ்ரீஹரி,**
தலைமை ஆசிரியர்,
இராயக்கோட்டை.

77. திரு. **பி.ஆர்.எம்.சுப்பிரமணியன்,**
திராவிடன் பல்கலைக் கழகம், குப்பம்.

78. திரு. **சுகவனமுருகன்,**
காவேரிப்பட்டணம்.

79. தந்தை **சூசைராஜ்,**
எலத்தகிரி.

80. முனைவர் **வே.க.சண்முகம்,**
இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

81. முனைவர் **மு.தங்கராசு,**
துணைவேந்தர்,
பெரியார் பல்கலைக் கழகம், சேலம்.

82. முனைவர் **தமிழ்நாடன்,** சேலம்.

83. திரு. **டி.திம்மராஜ்,**
கிருஷ்ணகிரி.

84. திரு. **M.வடிவேல்,**
வரலாற்று மையம், தருமபுரி.

85. திரு. **கு.மு.வீரமணி,**
வரலாற்று ஆர்வலர், கிருஷ்ணகிரி.

86. திரு. **இரா.வெங்கடாசலம்,**
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி(ஆ),
கிருஷ்ணகிரி.

87. முனைவர் **மா.வெங்கடேசன்,**
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி(ஆ),
கிருஷ்ணகிரி.

88. முனைவர் **பி.வெங்கடேஸ்வரன்,**
வரலாற்றுத்துறை,
அரசு கலைக்கல்லூரி(ஆ), கிருஷ்ணகிரி.

89. திரு. **எஸ்.வேலாயுதம்,**
ரம்யா என்டர்பிரைசஸ்.

90. திரு. **ஜெ.வித்யாவதி,**
பாலக்கோடு.

91. திரு. **கே.விஷ்ணுராம்,**
அ.ஆ.மே.நி.பள்ளி,
சிங்காரப்பேட்டை.

92. முனைவர் **ஔவை நடராசன்,**
மேனாள் துணைவேந்தர்,
தஞ்சைப் பல்கலைக்கழகம்.

93. திரு. **கே.விஷ்ணுராம்,**
அ.ஆ.மே.நி.பள்ளி,
சிங்காரப்பேட்டை.

## உயர்திரு. K.A.மனோகரன் அவர்கள்
## வரவேற்புரை

பண்பானவர்களே! கலாசிரியர்களே! மற்றுமுள்ள நண்பர்களே!

கிருஷ்ணகிரி வரலாற்று மையத்தை ஏற்படுத்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஒத்துழைப்பின் காரணமாகக் கருத்தரங்கத்தில் தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரிகத்தைப் பற்றியும் பேசும் அளவிற்கு வளர்ந்திருக்கிறோம். கருத்தரங்கத்தை மதிப்பிற்குரிய செயலர் முனைவர் ஸ்ரீதரன் அவர்கள் தொடங்கிவைத்திருப்பது மிகவும் பெருமைக்கு உரியதாகும். ஆகவே, வரலாற்று மையத்தின் சார்பில் அவரை மனதாரப் போற்றி வருக! வருக! என வரவேற்கின்றோம்.

அது போலவே சரித்திரச் சான்றுகளை எல்லாம் அது தொடர்பில்லாமல் போகக்கூடாது என்பதற்காகவே பெரு உள்ளம் கொண்டு வருகை புரிந்துள்ள பெரியார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களை வருக! வருக! என வரவேற்கின்றோம்.

நம்முடைய ஆட்சித் தலைவர்க்கு நாம் என்றென்றைக்கும் கடமைப் பட்டுள்ளோம். அவரை வருக! வருக! என்று சொல்வதை விட அவர்கள் நம் குடும்பத்தில் ஒருவர் என்று சொல்லி அவர்க்கு நமது வாழ்த்துக்களையும் கூறி அவரை வருக! வருக! என வரவேற்கின்றோம்.

அதுபோலவே மதிப்பிற்குரிய அருண் அவர்கள் வரலாற்று ஈடுபாடு கொண்டுள்ளவர்கள். நமது விழாவைச் சிறப்பிக்க வந்துள்ள அவர்களையும் வருக! வருக! எனவரவேற்கின்றோம்.

இந்த விழாவிற்கு உறுதுணையாக விளங்கும் பேராசிரியர் கோவிந்தன் அவர்களை வருக! வருக! என வரவேற்கின்றோம்.

இவ்விழாவிற்கு அனைத்து உதவிகளைச் செய்து கொண்டிருக்கும் திரு. பிரகாசம் மற்றும் மாவட்ட அலுவலர்களை, எல்லாவற்றையும் விட இந்த விழாவிற்கு வருகை புரிந்துள்ள உங்கள் அனைவரையும் வருக! வருக! என வரவேற்கின்றோம்.

இராயக்கோட்டைத் தலைமையாசிரியர் மேடையை நிர்வகிக்கிறார். அவர் மாவட்ட ஆட்சியர் முனைவர் வே.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்கள் இந்தக் கருத்தரங்கத்தைச்–சரித்திரப்பதிவை நடத்தித்தர, இந்த மாவட்ட வரலாற்றை வெளிக்கொண்டுவர இடையறாது நாளெல்லாம் உழைத்து உதவி புரிந்த எங்கள் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைமையுரை நிகழ்த்த வேண்டினார். அவரை வரவேற்கின்றோம்.

## கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர்
# முனைவர் வே.க.சண்முகம் அவர்கள்
## தலைவர் உரை

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களே! போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய பெரியார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்களே! எனக்கு ஆசானாய் இருந்து வழிகாட்டி விளங்கும் வணக்கத்திற்குரிய பேராசிரியர் கோவிந்தன் ஐயா அவர்களே! இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துள்ள அருண் அவர்களே! கிருஷ்ணகிரி வரலாற்று மையம் சிறப்பாகச் செயல்படவும், நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடத்திடவும் முன்னின்று நடத்திவரும் அருமைச் சகோதரர் கே.ஏ.மனோகரன் அவர்களே! வணக்கத்திற்குரிய நண்பர்களே! அனைவருக்கும் வணக்கம்!

கற்றுத்துறைபோகிய பெரியவர்களும், நுண்மாண் நுழைபுலம் மிக்கவரும், ஆன்றவிந்து அடங்கிய சான்றோர்களும், அறிவால் வல்லமை படைத்தோரும் நிறைந்த இந்த அவையில் இந்த மாவட்டத்தின் வரலாற்றைப் பற்றி ஓரிரு சொற்கள் சொல்லி அமைவேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஒரு பகுதி கடல் மட்டத்திலிருந்து 1000 அடி உயரமான ஊத்தங்கரை, பர்கூர் பகுதி; மற்றொன்று கடல் மட்டத்திலிருந்து 4000 அடி உயரமுள்ள ஓங்கி வளர்ந்த தொழில் வசதி பெற்றுள்ள ஒசூர்ப் பகுதி.


இந்த இடைப்பட்ட 3000 அடிகள் மேடுபள்ளம் கொண்ட முல்லையும் குறிஞ்சியும் தவிர்த்தது முல்லை நிலப் பகுதியாக இருக்கும் இந்த மாவட்டம்.

இந்த 3000 அடிப் பகுதி பல்வேறு முரண்பாடுகளைக்கொண்டது. இங்கே அளவுக்கதிகமான முரண்பாடுகள்–மிக மோசமான சூழலில்– மிகவும் பின்தங்கிக் கிடக்கின்ற மனித வளமேம்பாட்டின் கடைசி நிலைக்கு முற்பட்ட நிலையில் இருக்கும் இந்த மாவட்டம் வரலாற்றில் பல்வேறு சிறப்புக்களையும் கொண்டது. சில வரலாற்றுச் செய்திகளை மட்டும் குறிப்பிடுகிறேன். காலந்தோறும் பல்வேறு தலைநகரங்களைக் கொண்டிருந்தது. இம்மாவட்டம் ஹொய்சாளர்களின் தலைநகர் தேவர்குந்தாணி, நள்ளியின் நாடு என பல சிறப்புகளைக் கொண்டிருந்தது. கருத்தரங்கில் இன்றும் நாளையும் அறிஞர் இது குறித்துப் பேசுவார்கள்.

முரண்பாடுகள் நிறைந்த பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இந்த மாவட்டத்தைப் பற்றிய தொகுப்பு வெளியிட வேண்டுமென்றும் மேலும் நான் ஒரு வரலாற்று மாணவன் என்பதால், இந்தக் கருத்தரங்கு மிகவிரைவில் அமைய வேண்டும் என்றும் விரும்பினேன். ஆணையர் அவர்களும் இந்த வளர்ச்சியைப் பாராட்டினார்கள். துணை வேந்தர் தொடங்கி வைக்கின்ற இந்த **KAP** வரலாற்று மையம் வரலாற்றுப் பதிவுகளையும் தொடர்ந்து மேற்கொள்ளவும், இட்டுச் செல்லவும் குடத்து விளக்கு போல் இருந்த பதிவுகளைக் குன்றின் மேல் இட்ட விளக்காக ஓங்கி உயர்த்திடவும் வேண்டும். அதுபோல் தழைத்திடவும் வேண்டும்.

எங்கள் அழைப்பை ஏற்றுவந்து வாழ்த்திய முதன்மைச் செயலர் அவர்களுக்கும், துணை வேந்தர் அவர்களுக்கும் அருண் அவர்களுக்கும் நன்றி.

இந்தக் கருத்தரங்கம் வெற்றிபெற உங்கள் ஒத்துழைப்பு தேவை என்பதை நான் நன்கு அறிந்துள்ளேன். இங்கு நிகழ்ச்சிகள் வெறும் தொடக்க நிலை நிகழ்வாக இல்லாமல் முடிபலன் நிலையை நோக்கிச் செல்ல வேண்டும் என்று வேண்டி விடைபெறுகிறேன். நன்றி!



மோரல்பாறை

## பெரியார் பல்கலைக் கழக துணைவேந்தர்
## முனைவர் மு.தங்கராசு அவர்கள்
## ஆற்றிய உரையின் சாரம்

இந்த வரலாற்றுக் கருத்தரங்கிற்கு வந்த பெரியோர்களை வரவேற்று அமர்ந்துள்ள மேனாள் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் K.A.மனோகரன் அவர்களே! கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வே.க.சண்முகம் அவர்களே! தெளிவாகவும் சிறப்பாகவும் உரையாற்றிக் கருத்தரங்கிற்குச் சிறப்புச் சேர்த்துள்ள முதன்மை ஆணையர் முனைவர் T.S.ஸ்ரீதரன் அவர்களே! கல்மைந்தர் என்று தன்னைச் சொன்னால் மகிழும் காட்டு மனிதர் திரு. அருண் அவர்களே! நாற்பதாண்டிற்கு முன்னரேயே என் நண்பரான பேராசிரியர் கோவிந்தன் அவர்களே! பெரியார் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் மாதையன் அவர்களே! பெருமக்களே! பேராசிரியர்களே! செய்தித்துறை நண்பர்களே! இளைஞர்களே! இளைஞர்களில் அதிகமாக விளங்கும் மகளிரே! உங்கள் அனைவருக்கும் காலை வணக்கங்கள்

பேராசிரியர் கோவிந்தன் அவர்கள் என்னை விழாவிற்கு வர அழைத்தார். நானும் இசைந்திருந்தேன். நான் பெரிதும் போற்றுகின்ற நாவரசர் ஔவை நடராஜன் அவர்களும் தொலைபேசியில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் இங்கு நிகழும் வரலாற்றுப் பணிகளுக்குத் துணைபுரிய வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்கள். ஔவை துரைசாமி பிள்ளை போன்றவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே சொன்ன வரலாற்றுச் செய்திகளை எல்லாம் தமிழன் நினைவுபடுத்திக் கொண்டிருந்தால் - தமிழனுக்கு அத்தகைய வரலாற்று உணர்வு இருக்குமானால் நமக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது? என்று பார்த்து வரச் சொல்லும் அவலநிலை ஏற்பட்டிராது. ஔவை துரைசாமிப்பிள்ளை யாழ்ப்பாணம், பாண்டியர்கள் ஆண்ட நாற்பத்தொன்பது நாடுகளில் ஒருபகுதி என்று குறிப்பிட்டிக்கிறார். ஏழ்தெங்க நாடு ஏழ்பனை நாடு என்ற நாடுகளில் ஏழ்பனை எப்பொழுது யாழ்ப்பாணமாயிற்று என்று அவர்கள் சொல்லியிருக்கிறார். இவற்றை எல்லாம் தமிழன் உணர்ந்திருந்தால் இந்தப் பெரிய அவலம் ஏற்பட்டிராது.

முதன் மனிதன் என்று உலக அறிஞர்கள், ஆராய்ச்சியாளர் கூறிக்கொண்டு வருகின்ற தமிழன் தன்னை மறந்து இருக்கிறான். பேச்சிலே எழுத்திலே வரலாற்று உணர்விலே தமிழ் இல்லை. வரலாற்றை மறந்தோமோ மறைக்கப்பட்டதோ தெரியாது. அதனை இன்று எல்லாரும் அறிந்துக்கொள்ள வேண்டுமென்று பெருமைக்குரிய மனோகரன் நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

பள்ளிகளில்-திருமண மண்டபங்களில் கருத்தரங்குகள் நடக்கும். ஆனால் இங்கு ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுவதைக் காணும் போது நமக்கு ஆட்சியர் உள்ளம் புரிகிறது. தமிழன் வரலாற்றை அறிவதற்கு ஆட்சியரகத்திற்கு வாருங்கள் என்று சொன்னால் அதைப்புரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். இது வேறு எந்தத் தமிழ் அமைப்பிற்கும் கிடைக்காத நல்லபேறு. ஆகவே இதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அன்பர் ஒருவர் கிருஷ்ணகிரி மாவட்டம் உயர்வில்லாதது போலக்கருதிப் பேசினார் மலைநாட்டிற்கு பெருமை மிக உண்டு. கடைஏழு வள்ளல்களில் அதியன், நள்ளி, ஓரி, காரி என்ற நால்வர் இந்தப் பகுதியில் வாழ்ந்தவர் தான் ஈரமும், வீரமும் நிறைந்தது கிருஷ்ணகிரி தமிழ் மக்களின் வரலாற்று நூலக விளங்கும் தகடூர் யாத்திரை இந்த மண்ணுக்குரிய நூல். நாமெல்லாம் கொண்டாடும் நள்ளியின் பெயரால் ஒரு பண் இருந்தது. ஒரு யாழ் இருந்தது அன்றைய இசை மரபை அறிந்து கூறுபவர் இங்கு அரிது. தமிழ்ப்பண்கள் 108 தேவாரத்தில் 27 பண்களும் திவ்ய பிரபந்தத்தில் 28 பண்களும் உள்ளன என்ப. சீனாவில் நிகழ்ந்த இசைபற்றிய கருத்தரங்கில் டாக்டர் சி.ராமநாதன், உலகப்பண்களுக்கெல்லாம் தாய்ப்பண் எங்கள் முல்லைப் பண்தான் என்று தகுந்த காரணங்களோடு விளக்கம் எய்தார். அவர்கள் ஹரி காம்போதி என்பது அரி காம்பு ஊதி என்றும் அது குழல் என்னும் இசைக்குருவி என்றும் புலப்படுத்தினார்கள்.

இராமன் ஆண்ட அயோத்தி, தருமன் ஆண்ட இந்திரபிரஸ்தம் எல்லாம் மிகமிகச் சிறிய இடங்கள் இந்த நாட்டிற்கு பரதன் என்று பெயர் வைக்கப் பரதன் செய்த சாதனை என்ன? ஆனால் இராமனும் கிருஷ்ணனும் பரதனும் இந்த நாடெங்கும் பேர் பெற்றார்கள். ஆனால் கங்கை கொண்ட கடாரம் வென்ற சோழன் இராஜஇராஜன், மூன்று திங்களுக்கு முன்னரே பறை அறைந்து படையெடுத்து வென்று வந்த செங்குட்டுவன் போன்ற தமிழ் அரசர்கள் பெயரை இந்த நாட்டிற்கு வைக்கலாம். தேவாரயுத்தம் 18 ஆண்டுகள், ராமராவணயுத்தம் 18 மாதங்கள் பாண்டியர் யுத்தம் 18 நாட்கள் செங்குட்டுவன் கனகவிசயர் போர் 18 நாழிகைகள் இவ்வாறு வென்ற சேரன் செங்குட்டுவன் பெயரை இந்த நாட்டிற்கு வைக்கலாம். ஏன் அவ்வாறெல்லாம் நிகழவில்லை. நமக்கு வரலாற்றில் ஆர்வம் இல்லை என்பதுதான் தலையாய காரணமா?

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உயர்ந்த தத்துவத்தை உயர்த்துபவன் பாட்டைப் போதித்த நம் மக்கள் பண்பாட்டை நம்முடைய மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியது நம்முடைய கடமை. உலகம் தோன்றி 400 கோடி ஆண்டுகள் ஆயின என்பர். ஆனால் இந்த 20ஆம் நூற்றாண்டு அந்த 400 கோடி ஆண்டு வரலாற்றைப் போல வேகமாகச் சென்று வரலாறு படைத்தது இந்த நாட்களில் வாழ்ந்த பெரியார் அண்ணா போன்றவர்களால் தமிழன் எழுச்சி

பெற்றான். அந்தத் தமிழனைப் பேராசிரியர் கோவிந்தன் போன்றவர்கள், மனோகரன் போன்றவர்கள் நடக்கவும் வேகமாகச் செல்லவும் பயிற்ற முனைந்துள்ளார்கள். மக்கள் வண்டியை எடுத்துக் கொண்டு வேறு திசையில் போய் விடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். தவறிக் கீழே விழுந்தாலும் மண்ணைப் போட்டு மூடிவிடுவார்கள். அவ்வாறெல்லாம் நேர்ந்துவிடாமல் தமிழன் வரலாற்றை உலகறியச் செய்வோம். இந்த வரலாற்றுப் பணிகள் தொடர்ந்து நன்கு நடைபெற நான் கிருஷ்ணகிரி வரலாற்று மையத்தின் சார்பில் கே.ஏ.பி. வரலாற்று ஆய்வு மையத்தைத் தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த ஆய்வு மையம் விரைவில் தமிழக வரலாற்றில் ஒளிவெள்ளம் பாய்ச்சி நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிப்பதாக என்று வாழ்த்தி, எல்லோருக்கும் என் நன்றியுனைக் கூறி அமர்கிறேன்.

நன்றி. வணக்கம்.



கோபசந்திரம் கல் தேர்க்கால்களை உடைய
மரத்தால் ஆன தேர்

முதன்மைச் செயலர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர்

முனைவர் **டி.எஸ்.ஸ்ரீதரன்,** இ.ஆ.ப. அவர்கள்

ஆற்றிய கருத்தரங்கத் தொடக்க உரை

மேடையில் அமர்ந்துள்ள அனைத்துப் பெரியோர்களுக்கும் இந்தச் சிறப்பான கருத்தரங்கிற்கு வருகை புரிந்துள்ள பேராசியர்களுக்கும் வல்லுநர்களுக்கும் மாணவ மாணவியர்க்கும் என் துறையின் அனைத்து அன்பர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கருத்தரங்கை விரைவாக ஏற்பாடு செய்து அதில் பங்கேற்கேற்க எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இந்தத் துறையில் பொறுப்பேற்றுக் கொண்டபிறகு ஒருமுறை, இருமுறை அல்ல, பலமுறை, பத்துமுறைக்கும் குறையாமல் இந்த மாவட்டத்திற்கு வருகை புரிந்துள்ளேன். இவ்வளவு அதிகமாக வேறு எந்த மாவட்டத்திற்கும் சென்றதில்லை. ஆனால், இங்கு வர பல வாய்ப்புகளும் பல சிறப்புக் காரணங்களும் இருக்கின்றன.

இந்தியாவின் வடக்கே கைபர் கணவாய் இருப்பது போலத் தகடூர் மாவட்டப் பகுதி அமைந்துள்ளது. ஆந்திரம், கருநாடகம் போன்ற பகுதிகளைத் தொடர்புபடுத்தும்படியாக பலநூறு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே அதியமான் வழித்தடம் அமைந்திருந்தது.

இந்த மாவட்டத்தில் பழைய கற்காலம், புதுக் கற்காலம், நுண்கற்காலம் முதலான நாகரிக கால மனிதர் தொடர்ச்சியாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கான தடயங்களை பையம்பள்ளி, மயிலாடும்பாறை போன்ற இடங்களில் கிடைத்துள்ள சான்றுகள் தெரிவிக்கின்றன.

புதிய கற்காலம், நுண்கற்காலம், சங்ககாலம் மற்றும் அதற்குப் பின்னர் வந்த அரசுகள் விட்டுச் சென்ற தடயங்கள் இங்கே கிடைக்கின்றன. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு நாகரிகம் சிறப்பான நிலையில் இருந்திருக்கிறது.

மூன்றாண்டுகளுக்கு முன் எங்கள் துறை சார்பில் மோதுரில் நிகழ்ந்த அகழ்வாய்வு இங்கு நாகரிகம் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை அறியத் துணை புரிகிறது.

இந்த மாவட்டத்தில் காவேரி, தென்பெண்ணை என்ற இரண்டு பெரிய ஆறுகள் ஓடுகின்றன. ஆனால் அவை மிக ஆழமான பகுதியில் ஓடுவதால் வேளாண்மைக்குப் பயன்படுவனவல்ல. வேளாண்மைக்குப் பயன்படாத இந்த நிலத்தில் எவ்வாறு நிலையில்லாது உழைத்த மக்கள் நிலையாக அமைந்தார்கள் என்று அறிய இங்கு வாய்ப்பு இருக்கிறது. எப்படி ஆடு மாடு வளர்த்தார்கள்? அவர்களிடையே போர்கள் நிகழ்ந்தன என்பனவற்றை எல்லாம் இங்குக்காணப்படும் நடுகற்களும், நவகண்டங்களும் நமக்குத் தெரிவிக்கின்றன.

இந்த மாவட்டத்தில் பழைய கற்காலக் கருவிகள், புதிய கற்காலக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள், இங்கு வாழ்ந்த மக்கள் எவ்வாறு தொழிலில் சிறப்புப் பெற்று வளர்ந்தார்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் எதனால் பெண்ணையாற்றங்கரை வழியாகச் சென்று தங்கள் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பரப்பியிருக்கிறார்கள்.

இந்த மாவட்டத்தில் காணப்படும் கல்வெட்டுக்களைப் படியெடுத்துப் படித்து நூலாக்கி வெளியிட்டுள்ளோம். இத்துறையில் பலர் இங்குள்ளவற்றை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். எங்கள் துறையின் சார்பில் இங்குக் கிடைக்கும் கல்வெட்டுக்கள் முதலானவற்றைத் தொகுத்து ஒரு கையேடாகவும் வெளியிட்டு உள்ளோம். எல்லாவற்றுக்கும் மேலாக தருமபுரியிலும், கிருஷ்ணகிரியிலும் இரண்டு அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன் செம்பியன் கண்டியூர் என்ற இடத்தில் ஒரு புதுக்கற்காலக் கல்லைக் (Neolithic Stone) கண்டெடுத்தோம். அதில் காணப்படும் குறியீடுகள் சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்களொடு ஒற்றுமையுடையன. இந்த மாவட்டத்தில் குகை வண்ண ஓவியங்கள் (Rock Paintings) காணப்படுகின்றன. அவை சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்களோடு ஒத்துச்செல்வன.

இங்குப் பல மொழிகள் பேசுவோர் உள்ளனர். பலமொழி, பல கலாச்சாரம், பல அரசுகள் எனக் கலப்புற்ற கலாச்சாரத்தை (Composite Culture) இங்கு நாம் காணலாம்.

மேலைநாடுகளில் பலவற்றுக்கு வரலாறே இல்லை. ஆனால் நமக்கோ ஒவ்வொரு பகுதிக்கும் ஏன் ஒவ்வொரு ஊருக்கும் மனிதர் பெயர்க்கும் கூட வரலாறு உண்டு. கிராமம் – கோயில் – குளம் என்று எல்லாவற்றுக்கும் வரலாறு உண்டு.

பல ஆண்டுகளுக்கு முன்னரே நமது முன்னோர் பாகலூர், எருமைநாடு என்றெல்லாம் எழுதிவைத்திருப்பதைப் பிராமிக் கல்வெட்டுக்களில் காண்கிறோம்.

இவற்றின் அருமை பெருமைகளைத் தெரிந்து பிற்காலத்தவர் அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறோம். அதனாலே நடுவண் அரசும், மாநில அரசும் பல பகுதிகளை நினைவுச் சின்னங்களாக அறிவித்துப் பாதுகாத்து வருகின்றன. இந்திய நாட்டில் 85 நினைவுச் சின்னங்கள் உள்ளன. ஜெகதேவி அத்தகைய சின்னங்களில் ஒன்றுதான். அதியமான் பெருவழிக் கல்லும் அத்தகைய நினைவுச் சின்னமே. அதியமான் பெருவழிக்கல்லை நாம் அருங்காட்சியத்தில் வைத்துப் பாதுகாத்து வருகிறோம்.

இத்தகைய செய்திகளையெல்லாம் திரட்டி மக்களுக்கு வெளிப்படுத்த முனைப்போடு செயல்படவேண்டும். ஆனால் அவ்வாறு செயல்படுபவர் தனித்தனியாகச் செயல்படுவதோடு, நின்றுவிடாமல் கூட்டாகச் செயல்பட வேண்டும். ஏனோ அறிஞர்கள் கூடி வாழ்ந்தால் கோடிபேர்க்கு நன்மை என்று தெரிந்தும் தனித்தனியே பிரிந்து நிற்கின்றனர் எனத் தெரியவில்லை. சிறிய காரணங்களுக்காகப் பிரிந்து நிற்பதைவிட ஒன்றுகூடிப் பணிபுரிவது பலவகையிலும் நல்ல பலனைத் தரும்.

முடிவாக ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கிருஷ்ணகிரி நகரத்திற்கு அண்மையில் இருப்பது மோரல்பாறை. இங்குள்ள கல்திட்டை அபூர்வமானது. அது வனத்துறை எல்லையில் உள்ளது. அதனை எவ்வாறு பாதுகாப்பது என்று சிந்திக்கலாம். மக்கள் அதனை மேலும் அழியாதவாறு பாதுகாக்கலாம்.

இத்தகைய சிறப்பான இடங்களை ஒன்று சேர்த்துப் பயணிகள் காட்சிக்கு உரியதாக்கினால் மக்கள் அதனைப் பாதுகாப்பர். பலர்க்கும் அப்பொழுது பயன் கிடைக்கும்.

அனைத்துச் சங்கங்கள், வரலாற்று மையங்கள் அனைத்தும் ஒன்றுகூடி மாவட்ட ஆட்சித் தலைவர் துணையொடு பல கருத்தரங்கங்கள், கூட்டங்கள் அமைத்து இந்த மாவட்டத்து வரலாற்றுச் செய்திகளை எல்லோரும் அறியச் செய்யலாம் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

## முனைவர் **ஔவை நடராஜன்** அவர்கள்

### மேனாள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

### ஆற்றிய உரையின் சாரம்

இளமையும் தலைமையும் வாய்ந்து ஆட்சித் தலைவராகத் திகழும் டாக்டர் சண்முகம் அவர்களே! வரலாற்று மையத்தின் தலைவராக விளங்கும் நண்பர் மனோகரன் அவர்களே! வன அலுவலர் நண்பர் கணேசன் அவர்களே! கூடுதல் ஆட்சியாளர் அவர்களே! கலை, பண்பாடு, சமயம், பொதுநலம் என்ற அனைத்துத் துறைகளிலும் தன்னை ஆட்படுத்திக் கொண்டு பணியாற்றும் பேராசிரியர் கோவிந்தன் அவர்களே! வரலாற்றுத் துறையிலேயே பல ஆண்டுகளாக எழுதிவரும் நண்பர் தங்கமணி போன்ற வரலாற்றுப் பேராசிரியப் பெருமக்களே! நண்பர்களே!

கிருஷ்ணகிரி மாவட்டத் தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரிகத்தை நினைந்து எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட அரிய குறிப்புக்களைப் பேராசிரியர்கள் பேசக் கேட்டு மகிழ்ந்தேன். இதில் முதலில் பாராட்டுக்கு உரியவர் ஆட்சித் தலைவர்தான். ஆயிரம் அலுவல்களுக்கிடையே சிக்கித் தடுமாறும் ஆட்சித் தலைவர் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் ஒருமணி நேரம் இருப்பது என்பது திறமையான ஆட்சித் தலைவருக்குத்தான் முடியும். பேராசிரியர் மாணிக்கவாசகம் பெரியார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் தங்கராஜ் போன்றவர்களோடு டாக்டர் சண்முகம் பச்சையப்பன் கல்லூரிகளில் மாணவராகக் கலந்து பழகியதைக் கண்டிருக்கிறேன். என் கண்முன் இளைஞர்களாக விளங்கிய இவர்கள் எல்லாம் இன்று தகுதிவாய்ந்த தலைவர்களாய் விளங்குவதைக் காணும் போது என்னைக் காட்டிலும் மகிழ்ச்சி அடைபவர் வேறு யாராக இருக்கமுடியும்? அதனால்தான் தொடக்கத்திலேயே இளமையும் தலைமையும் வாய்ந்த என்று குறிப்பிட்டேன். இத்தகையவர் தலைமை தாங்கும் போது எத்தகைய ஆட்சி நிகழும் என்பதற்கு இன்றைய நிகழ்வுகள் ஒரு நல்ல சான்றாக அமையும்.

ஜனவரி மாதம் தொடங்கிவிட்டால், எதிர்வரும் கோடையிலிருந்து தப்பித்துக் கொள்ள அந்த நாளில் ஆங்கில அலுவலர்கள் மலை நிலங்களைத் தேடிச் செல்வர். அப்படி மதுரை அலுவலர் கண்டறிந்ததுதான் கொடைக்கானல். அவர்கள் இவ்வாறு செல்லும் இடங்களில் எல்லாம் தாங்கள் கண்டதையும் கேட்டதையும் எழுதிவைக்கும் வழக்கமுடையவர்களாய் விளங்கினர். அவர்கள் எழுதிய குறிப்புக்கள் நமக்கு இன்று கருத்துக் கருவூலங்களாய்க் கிடைத்துள்ளன. அந்த நாளில் மதுரையின் ஆட்சித் தலைவராக விளங்கியவர் திருவாசகம் பயின்றவர் மாணிக்கவாசகர் காலத்தை உறுதி செய்யும்படி பேராசிரியர்கள் நடுவில் வந்து பேசினர். ஆங்கில அதிகாரிகள் தங்கள் மாவட்டத்தின் வரலாறு, மக்கள் பழக்க வழக்கங்கள், மலை, மண், செடி, கொடி, அருவி, விழாக்கள் முதலியவற்றைப் பற்றிக் கண்டு கேட்டதற்கு எழுதியவைதான் கெஜட்டியர்கள். குமரி மாவட்டத்திற்கு அத்தகைய கெஜட்டியர் அண்மையில் எழுதப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு எழுதப்படல் வேண்டும்.

நமக்கு நாளை மறுநாள் என்ன நிகழும் என்று நினைத்துப் பார்க்கும் பழக்கம் இருக்கிறது. Futurology என்று ஒரு பாடம் கூட வந்திருக்கிறது. ஆனால் 17–ஆம்

நூற்றாண்டில் வாழ்ந்த மனிதன் எப்படியிருந்தான்? அவன் உயரம் எவ்வளவு? என்ன உண்டான்? என்பன போன்ற கருத்துக்களைச் சரியாகக் காட்ட ஒரு வழியும் இல்லை. எதிர்காலத்தைப் பற்றி எழுதி, அவ்வாறு நடக்காமல் போனால் நடவடிக்கை எடுப்பார்கள். கடந்த காலத்தைப் பற்றி எழுதினால் பாராட்டிவிட்டுப் போய்விடுவார்கள். அவ்வாறு எழுதப்பட்ட செய்திகள் பலசமயம் நம்மை வலைக்குள் சிக்கவைத்துவிடுவதும் உண்டு. உண்மைகள் விளங்காமல் போய்விடுகின்றன. மாவட்ட வன அலுவலர் குறிப்பிட்டது போல இரண்டு மலைகளுக்கு இடையே சிதறல்களாகக் கிடக்கும் இந்த மலைகள், மண், செடி கொடிகள் பற்றி நினைத்துப் பார்க்க இது ஒரு நல்ல பகுதியாக உள்ளது. கூடுதல் ஆட்சித் தலைவர் அவர்கள், ஸர். தாமஸ் மன்றோ அவர்களைக் குறிப்பிட்டு ரயத்துவாரி முறை இங்கு அறிமுகமான செய்தியையும் சுட்டிக்காட்டினார். ஸர். தாமஸ் மன்றோ இந்தப் பகுதியில் அலுவலராக விளங்கியவர்கள். மன்றோ இந்தப் பகுதி மக்கள் மலை நிலத்து மக்கள் ஆதலால் துடிப்பற்றவர்களாகக் காட்சி அளித்தாலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கினர் என்று குறிப்பிட்டார்கள்.

People may look dull; but Remember that their skills are full என்று மன்றோ கூறியதைக் காணலாம்.

இந்த மலைக்குக் கிருஷ்ணகிரி என்று ஏன் பெயர் வந்தது. கிருஷ்ணன் கோயில் இருந்ததா? அல்லது கிருஷ்ண தேவராயர் இந்தப் பகுதியை ஆட்சி செய்ததாலா? என்று பேராசிரியர் கோவிந்தன் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் இந்தப் பகுதி மக்கள் மலையைக் கல் என்று குறிப்பிடுவர். கரியமலை ஆதலால் கருங்கல் என்றனர். கரிய கூந்தல் கிருஷ்ணவேணி என்றழைக்கப்படுவது போலக் கரியமலை கிருஷ்ணகிரி என்று அழைக்கப்பட்டது என்று குறிப்பிட்டார். எவ்வளவு சரியானதாகவும் நுணுக்கமானதாகவும் இந்தப் பெயர்க் காரணத்தை எடுத்துக் காட்டியது தொன்மையான நாகரித்தைக் காட்டும் வரலாற்றுக் குறிப்புத்தான் ஒரு நாட்டை நீண்டநாள் வாழ வைக்கும் என்பதனை உணரச் செய்கிறது.


இந்தப் பகுதி தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மூன்று மொழிகள் பேதமறக் கலந்து விளங்கும் பகுதி. ஊர்ப் பெயர்களில் பட்டியும், பள்ளியும், ஹள்ளியும் உண்டு. இங்குள்ள பெயர்களின் காரணத்தை நினைத்துப் பார்க்கலாகும். இந்தப் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்படத் துணையாக மாவட்ட ஆட்சித் தலைவர்க்குப் பேராசிரியர் நிலையில் உள்ள ஒருவரை நேர்முக உதவியாளராக நியமித்து அவர்வழிச்செய்திகளைச் சேகரித்து ஆட்சியாளர்க்கு விளக்கம் செய்தால் எத்தனையோ நன்மைகள் உண்டாகும்.

இந்தப் பகுதியில் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன என்ற குறிப்போடு செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் வந்தவர் ஒருவர், அது எத்தனை ஆண்டு பழைமையானது என்ற வினாவிற்கு எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று பதில் தந்தார். அது அவ்வளவு பழைமையானதா? என்ற வினாவைக் கேட்ட உடனேயே ஓராயிரம் இரண்டாயிரம் வருஷம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றார். நான் இவ்வாறு குறிப்பிடுவது நமக்கு வரலாற்றுச் செய்திகளைச் சொல்லும்போது காலம் பற்றிய கருத்தில் குறைபாடு இருப்பதைச் சுட்டிக் காட்டுவதுதான்.

நம்முடைய ஊரில் ஒவ்வொரு சிறு பொருளுக்கும் கூட வரலாறு உண்டு. நம்மூர்க் கோயிலுக்கும் குளத்துக்கும் தெருப் பெயர்க்கும் கூடத் தனித்தனி வரலாறு உண்டு. இவ்வளவு பரந்த வரலாற்று ஆவணங்களைப் பராமரிக்க நமக்குப் போதிய வசதிகள் இல்லை. செய்தித்தாள்களில் இந்த வரலாற்றுக் குறிப்புகளை முதன்மை இடம் தந்து வெளியிடலாம்.

எழுதி வைத்துள்ள இலக்கியம், கண்ணில்படும் காட்சி, கண்ணுக்கு மறைவாக உள்ள செய்திகள் ஆகிய மூன்றையும் இணைத்துப் பார்க்கும் முயற்சிகளில் படித்தவர்கள் ஒன்றுபடுவார்களானால் புதிய கருத்துக்கள் தோன்றக்கூடும்.

இந்த மாவட்டம் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளின் கூட்டாக விளங்குவது. இங்குள்ள ஊர்கள் பட்டி, பள்ளி, ஹள்ளி என்று சொல்லப்படுகின்றன. இங்குள்ளவற்றை ஆராய்ந்தால் வன அலுவலர் திரு. கணேசன் குறிப்பிட்டது போல பழைய பழைய மரபின் எச்சங்களைக் காண முடியும்.



சந்தூர் நடுகல்

மாவட்ட வன அலுவலர்

## திரு. V.கணேசன், இ.வ.ப., அவர்கள்

ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்!

நான் வரலாற்று மாணவன் அல்லன். படித்தது வேளாண்மை. பணி வனத்துறை. ஆர்வத்தினால் நான் வரலாற்றில் ஈடுபாடு கொண்டேன். பேராசிரியர் திரு. **கோவிந்தன்** அவர்களைச் சந்திக்க வாய்ப்பு வந்தது. வரலாற்றைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு வந்தது.

நம்முடைய வனத்துறையைத் தோற்றுவித்தவர் சென்னை மாநில மருத்துவக்கல்லூரி மருந்தியல் பேராசிரியர் **Dr.H.F.C.கிளக்ஹார்ன்** அவர்கள்தான். அவர்கள்தான் இந்திய வனத்துறையை உருவாக்கியவர். இந்தத் துறையில் பணிபுரியும் பெருமித உணர்வு எனக்கு உண்டு.

இந்த அறிஞர் இன்றைய அறிஞர்கள் சிந்தித்துப்பேசும் இயற்கைச் சூழலியல் பற்றி 1856ஆம் ஆண்டுக்கு முன்னரே காடுகளை அழித்ததும் புவி வெப்பமடைதலும் பற்றி உரையாற்றியுள்ளார். 1866ல் ஜெர்மனி அறிஞர்களைத் தொடர்புகொண்ட இத்துறைக்கு ஆக்கம் தேடினார்.

திருக்குறள் 'மணிநீரும், மண்ணும்..' என்று குறிப்பிடுகிறது. நானில அமைப்பு இப்பொழுது குமரி மாவட்டத்தில் மட்டுமே உள்ளது. தொல்காப்பியம் நானிலத்தைக் குறிப்பிடுகிறது.

நாகரீகம் ஆற்றங்கரையில்தான் தோன்றுகிறது என அறிவோம்.

கிழக்குத்தொடர்ச்சி மலைக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் இடைப்பட்ட மலையில் நாம் வாழ்கிறோம். இம்மண்ணில் நாம் பழைய மரபின் எச்சங்களைக் காண முடியும். மாடுகளுக்கு விருப்பத்தோடு உணவு ஊட்டும் காட்சியை வேறு எங்கும் காண முடியாது. அந்த நாளையக் காளைகளை இந்த மண்ணில் இன்றும் காணலாம். கானகத்திற்கு உரிய காயாம்பூ இங்கு உண்டு. முல்லை நில ஆராய்ச்சிக்கு இந்த மண் உகந்த இடம். இந்த ஆராய்ச்சியில் இன்னும் நிறைய நூல்கள் வரவேண்டும். வெளிநாட்டவரெல்லாம் முல்லைநிலம் பற்றி அறிய இங்கு வரல்வேண்டும். அத்தகைய சூழ்நிலை இங்கு நிரம்ப உள்ளது. நாம் அந்த முயற்சியில் வெற்றி பெறுவோமாக!

# பொருளடக்கம்


| வ.எண் | விவரம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | புனித பூமி<br>– எஸ்.எம். முருகேசன் | 27 |
| 2. | தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரிகம்<br>– கு.மு.வீரமணி | 29 |
| 3. | கிருஷ்ணகிரி மாவட்டம் – பறவைப் பார்வை<br>– தொ.ந.கலைச்செல்வி | 34 |
| 4. | சங்ககாலம் முதல் பல்லவர் காலம் வரை<br>– கி.அமர்நாத் ராமகிருஷ்ணா | 38 |
| 5. | சோழர் காலம் முதல் விஜயநகர ஆட்சிக்காலம் வரை<br>– மா.வெங்கடேசன் | 41 |
| 6. | கிருஷ்ணகிரி மாவட்ட சாக்கியர்கள்<br>– எஸ்.சென்னமூர்த்தி | 51 |
| 7. | ஒகேனக்கல் உகுநீர்க்கல்<br>– முனைவர் இரா. மதிவாணன் | 53 |
| 8. | கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப் பெயர்கள் – ஓர் ஆய்வு<br>– ச. செல்வராஜ் | 56 |
| 9. | கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப் பெயர்கள்<br>– பேராசிரியர் தி. கோவிந்தன் | 59 |
| 10. | கிருட்டிணகிரி மாவட்டப் பெயர்கள்<br>– கோ. சீனிவாசன் | 61 |
| 11. | கிருட்டிணகிரி மாவட்டத்தில் தொல்பழங்காலம்<br>– முனைவர் தி.சுப்பிரமணியன் | 66 |
| 12. | சாணாரப்பன் நடுகல் வழிபாடு – ஓர் ஆய்வு<br>– இரா. வெங்கடாசலம் | 77 |
| 13. | நாஞ்சில் நாடும் கொங்குநாடும்<br>– டாக்டர் எஸ்.பத்மநாபன் | 81 |
| 14. | ஔவையாரும் நாஞ்சில் வள்ளுவனும்<br>– புலவர் கு. பச்சைமால் | 87 |

## பொருளடக்கம்


| வ.எண் | விவரம் | பக்க எண் |
|---|---|---|
| 15. | இராயக்கோட்டை - தெருக்கூத்துக்கலை<br>- கவியருவி நாகராசன் | 93 |
| 16. | ஒசூர் அருள்மிகு சந்திரசூடேசுவரர் திருக்கோயில்<br>- இரா. இராமகிருஷ்ணன் | 96 |
| 17. | அத்திமுகம் ஸ்ரீ ஐராவத ஈசுவரர் கோயில்<br>- ஜி. சின்னசாமி | 105 |
| 18. | கிருஷ்ணகிரி மாவட்ட திருநாள் சந்தைகள்<br>- ஆ. அன்பழகன் | 109 |
| 19. | கிருஷ்ணகிரிக் கல்வெட்டுக்களும் அறவியலும்<br>- முனைவர் கா.அரங்கசாமி | 117 |
| 20. | விடுதலைப் போராட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம்<br>- எஸ்.பி.கல்பனா | 123 |
| 21. | வரலாற்றின் பார்வையில் நீதி நிர்வாகம்<br>- என். ரவிசங்கர் | 134 |
| 22. | காந்தியவாதி தியாகி காவேரிப்பட்டிணம் எஸ். நாகராஜ மணியகாரர்<br>- என். ஆர்.ஜெயச்சந்திரன் | 139 |
| 23. | பெண்ணையாற்றங்கரைப் பசுச் செல்வம்<br>- என். சந்திரசேகர் | 145 |
| 24. | நானும் என் மழலைகளும்<br>- மலை. ரத்தினசாமி | 148 |
| 25. | நூற்றாண்டுகளைக் கடந்த ரிமவுண்ட் டிப்போ<br>- வி. குணசேகரன் | 150 |
| 26. | உயிர் மீண்ட சேவல் உரிமையை மீட்டுத் தந்தது<br>- என்.ஆர்.ஜெயச்சந்திரன் | 155 |
| 27. | **Penneswarar Temple in Krishnagiri District**<br>- Dr.Major Syed Shahabudeen | 158 |
| 28. | **History of Bagalur Palayam Poligars**<br>- Mr. Chinna Kuttappa | 165 |


தென்பெண்ணை ஆற்றங்கரைக்
கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று மையம் நூல் அறிமுக விழா
மற்றும்

# புனித பூமி

**எஸ்.எம்.முருகேசன்,** வழக்கறிஞர்,
இராயக்கோட்டை.

வரலாற்று அறிஞர்கள் ஆதிமனிதன் முதல் நாகரீக மனிதன் வரை–உள்ள மனித வரலாற்றைக் கற்காலம் முதலாகப் பகுத்துக் காட்டுவார்கள். இந்த அறிஞர்கள் கருத்துப்படி ஆதிமனிதன் கல் கருவிகளைக் கொண்டவன். படிப்படியே நெருப்பு உண்டாக்கக் கற்றவன்–இவ்வாறு மனித இன வாழ்வை விளக்கம் செய்வது ஒருவகை.

ஆனால் நமது முன்னோர் முற்றிலும் மாறுபட்ட ஒரு காட்சியை நமக்குக் காட்டுகின்றனர். அவர்கள் நான்கு யுகங்களாக் காட்டுகிறார். ஆதியுகத்தில் தருமம் நான்கு காலகளில் உறுதியாக நின்றது. மனிதர்கள் எல்லோரும் தெய்வங்களாகவே வாழ்ந்தார்கள். அடுத்த யுகத்தில் தருமம் மூன்று கால்களில் நின்றது. தந்தையின் சொற்படி நடந்த ஸ்ரீராமர் போன்றவர்கள் உலகில் வாழ்ந்தார்கள். மூன்றாவது யுகத்தில் தருமம் இரண்டு கால்களில் நின்றது. தருமபுத்திரர், அர்ச்சுனன் போன்றவர் வாழ்ந்தனர். இந்த கலியுகம், தருமம் ஒரு காலில் வாழ்கிறது. இவ்வாறு மனிதன் படிப்படியே ஆற்றலில்–ஒழுக்கத்தில் குறைந்தவனாக விளங்குகிறான் என்று சித்தரிக்கிறது.


ஒவ்வொரு சமுதாயமும் ஆதிகாலத்தில் மிகமிக நல்ல வன்மையான பெரியோர்கள் வாழ்ந்தார்கள் என்றும், அவர்களே நமது முன்னோர் என்றும் பெருமையோடு கூறிக்கொள்கிறது.

மூவேந்தர்கள் தங்களைச் சூரிய குலத்தவர் சந்திர குலத்தவர் என்றெல்லாம் கூறிப் பாராட்டிக் கொண்டார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டமும் அத்தகைய பெரியோர் பலரைத் தனது நாட்டிற்குச் சொந்தமாகக் கொண்டுள்ளது. அகஸ்தியர் அருளால் பிறந்த காவிரி தமிழகத்தில் பாயும் போது தனது முதல் பதிவைச் செய்யும் தவம் கிருஷ்ணகிரி மாவட்டமே. ஆம். அதுபோல முதன்முதலாகப் பெண்ணை பாய்வதும் இந்த மாவட்டத்தில்தான். மார்க்கண்டரும், அகஸ்தியரும் இந்த மாவட்டத்தில் இப்பொழுது நதியாக விளங்குகிறார்கள்.

முனிவர்களில் மிகமிகச் சிறந்தவர்களில் ஒருவர் துர்வாசர். இவரைச் சிறுவர்வாசர் என்றும் கூறுவர். இவரது திருவடி முத்திரையை இன்றும் இராயக்கோட்டை மலையில் காண்கிறோம். இன்றும் இந்த மலையில் அவர் தவம் செய்வதாக மக்கள் நம்புகின்றனர்.

கண்வ மகரிஷி தவம் செய்த இடம் என்று தேன்கனிக்கோட்டையைக் கொண்டு புராணம் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கண்வ முனிவரே கங்கர் குலத்தின் முன்னோர். ஸ்ரீஇராமபிரானுக்குக் கங்கை நீரைக் கொண்டுவந்த அனுமனால் உண்டான அனுமன் தீர்த்தம் இம்மாவட்டத்தின் தெற்குவாயிலில் பெண்ணையாற்றுக் கரையில் உள்ளது. இந்தப் புண்ணிய பெரியோர்களை நாம் நினைந்து போற்றுவோமாக.



இராயக்கோட்டை

# தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரிகம்

கு.மூ.வீரமணி, 68–பெரியசாலை தெரு, அண்ணாநகர், கிருஷ்ணகிரி.

## சரித்திரச் சான்றுகள்:

கிருஷ்ணகிரி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு முக்கியத்துவம் உடைய பகுதி என்றால் அது மிகையாகாது. இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பகுதிகளில் மக்கள் வாழ்ந்துள்ளனர். அதற்கு ஆதாரம் இப்பகுதிகளில் காணப்படும் புதைகுழிகள் (சமாதிகள்). அதைப் பல பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். 1. கல்பதுக்கை (Cist) 2. கற்கிடை (Dolmen) 3. கற்குவை (Cairn) 4. பரல் உயர் பதுக்கை (Cairn Circle) 5. தொப்பிக்கல் (Hood stone) 6. குடைக்கல் (Umbrella stone) 7. நெடுநிலை நடுகல் (Menhir) 8. ஈமத்தொட்டி (Sarcophagus) 9. ஈமத்தாழி (Urn Burial) 10. கல்வட்டங்களுடன் கூடிய கல் பதுக்கைகள் கல்திட்டைகள் (Dolmenoid cists with circle stones) இவ்வளவும் தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரங்களிலும், கிருஷ்ணகிரி சுற்றுப்புறங்களிலும் காணக் கிடைக்கின்றன.

பழம்பெரும் கற்காலத் தடயங்களை இந்தியாவில் இரண்டு இடங்களில் கண்டுபிடித்தனர். 1. வட இந்தியாவில் பலுசிஸ்தான். 2. தென்னிந்தியாவில் செங்கல்பட்டு (தமிழகம்) அதன் தொடர்ச்சியாகப் பழைய கற்கால ஆயுதத் தொழிற்சாலை இப்பகுதியில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது என 1916–ஆம் ஆண்டில் திரு.ராபர்ட் புரூஸ்புட் கூறினார். அதை 1950–ஆம் ஆண்டு வாக்கில் கண்டுபிடித்தனர். அந்த ஊர்ப் பெயர் வரட்டனப்பள்ளி ஆகும்.

கிருஷ்ணகிரி வட்டத்தில் மகராஜக்கடை சாலையில் 5 கி.மீ. தொலைவில் உள்ள கொல்லப்பள்ளியும், கிருஷ்ணகிரிக்குத் தென்கிழக்கே 20 கி.மீ தொலைவில் உள்ள தொகரப்பள்ளியும் புதிய கற்கால மக்கள் வாழ்விடங்களாகும். களஆய்வு செய்யப்பட்ட பெருங்கற் சின்னங்கள் உள்ள ஊர்கள் 1. சூளகிரி 2. சூலிகுண்டா 3. தென்கரைக்கோட்டை 4. உத்தனப்பள்ளி 5. கொல்லஹள்ளி 6. கும்மனூர் 7. மல்லப்பாடி 8. தவளம் 9. மூங்கில்மடுவு 10. மல்லசமுத்திரம் 11. சென்னசந்திரம்

12. பீமண்டபள்ளி 13. கொல்லபள்ளி 14. ஜீனூர் 15. மகாராஜகடை 16. கங்கலேரி 17. பச்சிகானப்பள்ளி 18. சந்தூர் 19. மேலுமலை 20. தொகரப்பள்ளி 21. மயிலாடும்பாறை.

1978–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறை மாணாக்கியர்கள் அகழாய்வு செய்யும்பொழுது பர்கூருக்கு இரண்டு கி.மீ.தொலைவிலுள்ள மல்லப்பாடி மலையில் வரலாற்றுக்கு முந்திய கால ஓவியங்கள் (Rock Painting) கண்டுபிடிக்கப்பட்டன. தமிழகத்தில் அறியப்பட்ட முதல் பாறை ஓவியம் அது என்பதில் கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் பெருமிதம் கொள்ளலாம். அதில் வெள்ளைச் சுண்ணம் (White Kaolin) பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்காலத்தைத் தொல்லியலார் புதிய கற்காலம் (Neolithic Period) என்பர். மல்லப்பாடிக்கு அருகில் பையம்பள்ளி (வட ஆற்காடு மாவட்டம்) மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் புதிய கற்கால மக்கள் வட்ட வடிவமான குழி வீடுகள் கட்டி வாழ்ந்தனர் என்று அறியப்பட்டுள்ளது. மேலும் புதை குழிகளில் காண்டாமிருகத்தின் எலும்பையும் கண்டெடுத்துள்ளனர். தற்சமயம் இந்தியாவில் அசாம் மாநிலத்தில் மட்டும் வசிக்கும் காண்டாமிருகம் இந்தியாவின் தென்பகுதியான தமிழ்நாட்டில் கிடைத்தமைக்கான காரணம் இதுநாள் வரை புலப்படவில்லை. தொல்லியல் அறிஞர்களான திரு. S.R.ராவ், திரு. S.D.சங்ககாலியா போன்றோர் இங்கு வாழ்ந்த மக்கள் எந்த சமயம், என்ன மொழி பேசினர்? அவர்கள் பண்பாடு என்ன? ஒன்றும் புரியாத புதிராகவே இருக்கிறது எனக் கூறியுள்ளனர்.

பீர்பள்ளி, மகாராஜக்கடை இவ்விரண்டு இடங்களிலும் பெருங்கற்காலச் சின்னங்களில் ஓவியங்கள் இருப்பதை அண்மைக் காலத்தில் கண்டுபிடித்துள்ளனர். மகாராஜக்கடையில் கிடைத்துள்ள ஓவியத்தில் "பிரமி" எழுத்துக்கள் உள்ளதாக ஒரு கருத்தும் நிலவுகிறது.

பொன்முடியார், அரிசில்கிழார் இருவரும் சேர்ந்து பாடிய "தகடூர் யாத்திரை" என்பது சங்ககால நூல் என்பர். அப்பொழுது கிருஷ்ணகிரி, தருமபுரியுடன் சேர்ந்திருக்க வாய்ப்புள்ளது. இதை ஜம்பை கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. அடுத்து முதலாம் மகேந்திரவர்மனின் 7ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று சந்தூரில் கிடைத்துள்ளது. அதில் பெறப்படும் செய்தி என்னவென்றால் இப்பகுதியை வாணர் தலைவர்கள் ஆண்டுள்ளனர், பல்லவ மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு, இரண்டாம் மகேந்திரன் மகன் ஈசுவரவர்மன், கல்வெட்டு ஒன்று அனுமந்தாபுரத்தில் கிடைத்துள்ளது.

தமிழ்நாட்டில் கிடைத்த செப்பேடுகளில் பழமையானது வேள்விக்குடி செப்பேடு என்பர். அதுபோல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிடைத்த செப்பேடுகளில் பழமையானது இராயக்கோட்டைச் செப்பேடு ஆகும். இது கந்தசிஸ்ய

விக்கிரமவர்மன் என்னும் பல்லவ மன்னனால் வழங்கப்பட்டது. தென்னிந்தியாவின் நாணயவியலின் தந்தை எனப் போற்றப்படும் சர்.வால்டர் எலியம் என்பவரின் சேகரிப்பில் அடங்கிய இச்செப்பேடு தமிழ், சமஸ்கிருதம் என்னும் இரண்டு பகுதிகளாக உள்ளது.

மற்றொரு இராயக்கோட்டைச் செப்பேடு மாவலிவானராயன் (ஜெயநந்திவர்மன்) பற்றியதாகும். அதன் விபரம் : நந்திவர்ம பல்லவமல்லன் கங்கமன்னன் ஸ்ரீபுருஷனுடன் போரிட்டு வென்று "உக்ரோதயம்" என்னும் விலை மதிப்பற்ற மணியைப் பறித்தான். அப்போது கங்கனிடமிருந்து வசப்படுத்திக்கொண்ட நிலப்பரப்புகளைப் பல்லவர்களுக்கு விசுவாசமாக இருந்த ஜெயநந்திவர்மன் என்னும் வாணர் தலைவனுக்குக் கொடுத்துள்ளான் என்பதே ஆகும். மாவலிவாணராயன் 4–ஆம் ஆண்டைக் குறிக்கும் கன்னடக் கல்வெட்டு ஒன்றும் இங்கு கிடைத்துள்ளது.

முதலாம் இராஜேந்திரன் மைந்தன் முதலாம் இராஜாதிராஜன் கல்வெட்டு ஒன்று கிருஷ்ணகிரி வட்டம் காத்தாடிக் குப்பம் கிராமத்தில் கிடைத்துள்ளது. இதில் விஜயராஜேந்திர மண்டலத்து எயில்நாட்டு மேலையூர் என்று ஓர் ஊர் குறிப்பிடப்படுகிறது. கலிங்கத்துப்பரணி புகழ்பாடும் முதலாம் குலோத்துங்கன் 3–ஆம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த நடுகல் கல்வெட்டு ஒன்று கிருஷ்ணகிரி வட்டம் கெங்காவரம் என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. குலோத்துங்கனின் மற்றொரு கல்வெட்டு ஒசூர் சந்திரசூடேஸ்வரர் கோவிலில் உள்ளது. அடுத்தது கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள சின்னக்கொத்தூர் (குந்தாணி) என்னுமிடத்தில் உள்ளது. இதில் இம்மன்னனின் பெயர் "ராசகேசரி பர்மரான இராஜேந்திர சோழர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் 10–ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (கி.பி.1188) தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரம் உள்ள பெண்ணேசுவரம் மடம் சிவன்கோயிலில் உள்ள கல்வெட்டு இவனைத் "திரிபுவனவீர சோழதேவன்" என்று குறிப்பிடப்படுகிறது. மூன்றாம் இராசராசனின் 7–ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று ஊத்தங்கரை வட்டம் ஆம்பள்ளியில் கிடைத்துள்ளது. விடுகாதழகிய பெரும்பள்ளி என்னும் சமணப்பள்ளி ஒன்று இருந்ததாக அக்கல்வெட்டு இயம்புகிறது. கிருஷ்ணகிரி வட்டம் வாடாமங்கலம் என்னுமிடத்தில் கிடைத்துள்ள 17–ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுப் பதினெண்பூமி தனபாலன் என்பவன் அகஸ்தீசுவரர் கோயிலுக்குத் தேவதானமாக நாற்கண்டக விதை நன்செய் நிலம் அளித்துள்ளான் என்கிறது. விடுகாதழகிய பெருமாள் விலங்காமொழி என்னும் சொல்லின் எழுத்துக்களைப் பிரித்து சக்கர அமைப்பில் எழுதி வினோதமாகக் கம்பைநல்லூர்க் (நாகையன் பள்ளி) கோயிலில் பொறித்து உள்ளான்.

கிருஷ்ணகிரி வட்டம் நெடுங்கல்லில் கிடைத்துள்ள கல்வெட்டு மதுராந்தக வீரநுளம்பன் தனித்து ஆட்சி நடத்தியுள்ளான் என்ற செய்தியைக் கூறுகிறது. முதலாம் புக்கன் மகன் குமார கெம்பணன் பெயரில் கிருஷ்ணகிரி வட்டம் மேகலசின்னம்பள்ளிக் கிராமத்தில் கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. பெண்ணேசுவர மடத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்று கி.பி.1369–ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இக்கல்வெட்டு குமார கெம்பணின் அனைத்து வெற்றிகளில் துணை நின்ற தளபதியான கண்டரகூளிமாராய நாயக்கன் தென்பெண்ணை ஆற்றில் "கண்டகண்டர் வெளிப்பெருவாய்க்கால்" என்னும் ஒரு வாய்க்கால் வெட்டுவித்தான் என்ற செய்தியைத் தருகின்றது.

## கிருஷ்ணகிரி வட்டம்

- காரகுப்பம் கிராமத்தில் கிடைத்துள்ள கல்வெட்டு ஒன்று ஜொம்மண்ண உடையார் என்ற ஒரு மகாபிரதானி பற்றிய குறிப்பைத் தருகின்றது.
- கி.பி.1394 (சகம் 1316) ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று கிருஷ்ணகிரி வட்டம் தீர்த்தமலையிலுள்ள தீர்த்தகிரீஸ்வரர் கோவிலில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாம் புக்கனின் காலத்தது.
- கி.பி. 1415–ஆம் ஆண்டைச் சேர்ந்த முதலாம் தேவராயனின் கல்வெட்டு ஒன்று கம்பைநல்லூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- தக்கண சமுத்திராபதி எனப் புகழப்படும் இரண்டாம் தேவராயன் மகன் மல்லிகார்சுனர் கல்வெட்டு ஒன்று சின்னக்கொத்தூர் குந்தியம்மன் கோயிலில் முற்றுப்பெறாத நிலையில் கிடைத்துள்ளது.
- (கி.பி.1463) துளுவ வம்சம் கிருஷ்ண தேவராயருக்குப் பின் ஆட்சிக்கு வந்த அரவீடு அச்சுதராயர் கல்வெட்டு ஒன்று மட்டும் தளியில் கிடைத்துள்ளது. கி.பி1536–ஆம் ஆண்டைச் சார்ந்த இக்கல்வெட்டுக் கன்னட மொழியிலுள்ளது.

## சமயநிலை


சங்க காலம் முதல் கி.பி.17–ஆம் நூற்றாண்டு முடிய நடுகல் வணக்கம். இப்பகுதியில் மிகுந்திருந்தது. அப்பழக்கம் நாளடைவில் வெறும் நினைவுச் சின்னமாக மாறியதில் வியப்பேதுமில்லை. கொற்றவை வழிபாடு கி.பி.8–ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இருந்துள்ளது. கங்கர்கள், நுளம்பர்கள் இப்பகுதியை ஆண்டபோது சமணம், பௌத்த மதங்கள் செல்வாக்குடன் விளங்கின.

குகைகளில் சமணர் கற்படுக்கைகள் கண்டறியப்பட்டுள்ளதே இதற்கு ஆதாரம். காவேரிப்பட்டணம் தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரம் உள்ள துர்க்கத்தில் தலை இன்றிப் பத்மாசனத்துடன் கூடிய இரு சிலைகள் முண்டத்துடன் காணக்கிடைப்பது மற்றொரு ஆதாரம். இங்குள்ள விஷ்ணுகோயில் அருகே முஸ்லிம் சமாதிகள் நிறைய உள்ளன. கோவிலைத் தவிர ஒரு வீடு கூட இப்பகுதியில் கிடையாது. இது ஏன் என்பது பற்றித் தொல்பொருள் ஆய்வாளர்களும், சரித்திர வல்லுனர்களும் தான் விளக்கமளிக்க வேண்டும்.

இன்றும் தென்பெண்ணை ஆற்றோரமுள்ள பெண்ணேஸ்வர மடத்திற்கு அருகில் ஜைனூர் என்னும் ஊரில் நயினார் எனப்படும் சமண சமயத்தவர்களே அதிகமளவில் வாழ்கின்றனர். சிரப்பலி கொடுக்கும் சிற்பங்கள் பத்து பெண்ணேஸ்வர மடத்தில் உள்ளன. வீரன் ஒருவன் தலையை அரிந்து கொடுக்க இன்னொருவன் அத்தலையைக் கூடை ஒன்றில் வைத்துக்கொண்டு குதிரையில் விரைவது போன்ற சிற்பம் ஒன்று குந்தாணியில் உள்ளது. ஒட்டக் கூத்தர் எழுதிய தக்கயாகப் பரணியிலும், ஜெயங்கொண்டர் வரைந்த கலிங்கத்துப்பரணியிலும் சுயபலி கொடுக்கும் பழக்கம் கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சுற்றிலும் மலைகள் இருப்பது அரணாக உள்ளது. "ஆறு இல்லா ஊர் பாழ்" என்பது பழமொழி. ஆனால் இவ்வூரில் தென்பெண்ணை ஆறு பாய்வது இறைவன் கொடுத்த வரப்பிரசாதம். உணவை உற்பத்தி செய்யவும், உணவுப்பொருளாகவும் இருக்கும் நீரை இம்மாவட்டத்திற்கு வழங்குவது தென்பெண்ணை ஆறு என்றால் அது மிகையாகாது.



நெடுங்கல்

# கிருஷ்ணகிரி மாவட்டம்



## பறவைப் பார்வை

**தொ.ந.கலைச்செல்வி (எ) தொ.ந.கலையா**
2,461/C ஆனந்த்நகர், இராயக்கோட்டைச் சாலை, (நீதிமன்றம் எதிரில்), கிருஷ்ணகிரி.

"யாதும் ஊரே: யாவரும் கேளிர்" என்று உணர்ந்த மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்றால் வந்தாரை வளமாக்கும் கிருஷ்ணகிரி மாவட்டம்.

விஜயநகரப் பேரரசில் கிருஷ்ண தேவராயர் காலத்திற்கு முன் அரசுரிமைப் போட்டி நடைபெற்றது. பேரரசின் வலிமை குன்றியதைப் பயன்படுத்திக் கொண்ட தமிழக நாயக்கர்கள் தாங்கள் ஆட்சி புரிந்த பகுதிகளிலேயே சுயாட்சி பெற விரும்பினர். இதனைத் தடுக்கக் கிருஷ்ணதேவராயர் படை எடுக்க வேண்டி வந்தது. இப்படையெடுப்பில் தமிழகத்தில் நாயக்கர்கள் ஒடுக்கப்பட்டு கிருஷ்ணதேவராயர் ஆட்சி நடைபெற்ற ஒரு பகுதி தான் கிருஷ்ணகிரி.

கிருஷ்ணதேவராயர் ஆட்சியைக் கைப்பற்றியதால் கிருஷ்ணகிரி எனவும் கிருஷ்ணனின் நிறம் ஒத்த கரியநிறம் கொண்ட மலைகள் சூழ இருப்பதால் கிருஷ்ணகிரி எனவும் வழங்கப்படுகிறது என்பர்.

குறிஞ்சி நிலப்பகுதியான மலையும் மலைசார்ந்த பகுதியும், முல்லை நிலப்பகுதியான வனமும் வனம் சார்ந்த பகுதியும் மருதநிலப் பகுதியான வயலும் வயல் சார்ந்த பகுதியும் அமையப் பெற்றதால் முப்பெரும் நிலப்பரப்பைத் தன்னுள் அடக்கிய போற்றுதலுக்குரிய மாவட்டமாகத் திகழ்கிறது கிருஷ்ணகிரி மாவட்டம்.

இப்பகுதியில் வன்னியர், வாணியர், குறும்பர், குயவர், பரதர், ஜைனர், சமணர், வீரசைவர், மராட்டியார், அந்தணர், வைணவர், இஸ்லாமியர், கிறித்துவர் எனப் பல்வேறு மத இன மக்களும் ஒரு தாய் மக்களாக வாழும் சமத்துவபுரம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

இப்பகுதியில் வேளாண் தொழிலை அடிப்படையாகக் கொண்டு கால்நடை வளர்ப்பு, பழக் கூழ் உற்பத்தி, பட்டு நூல் தயாரிப்பு, காய்கள், பழங்கள், மலர்கள் மொத்த விற்பனைக்கிடங்கு பெருமளவு நடைபெறுகின்றன. குடிசைத் தொழில்களாகப் பீடி சுற்றுதல், தீக்குச்சி தயாரித்தல், பாய், கூடை முடைதல், பால்

பொருள் சார்ந்த இனிப்பு வகை தயாரிப்புகள் நடைபெறுகின்றன. ஜவுளி விற்பனை அங்காடிகள் பொன், வெள்ளி ஆபரண அங்காடிகள் வணிக நோக்கில் இலாபம் ஈட்டி வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டம் 5143 ச.கி.மீட்டர் பரப்பளவைக் கொண்டது. மேலும் கடல் மட்டத்தில் இருந்து 300 மீட்டர் முதல் 1400 மீட்டர் வரை உயர்ந்து உள்ளது. மாவட்ட எல்லைகளாகக் கிழக்கே வேலூர் மாவட்டமும், மேற்கே கருநாடக மாநிலமும் வடக்கே ஆந்திர மாநிலமும், தெற்கே தருமபுரி மாவட்டமும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்தில் சனத்குமார நதி, பெண்ணையாறு, மார்க்கண்டேய நதி ஆகியவை சிற்றாறுகளாகவும் காவிரி, தென்பெண்ணை பேராறுகளாகவும் பாய்ந்து இம்மாவட்டத்தை வளம் கொழிக்கச் செய்கிறது.

கொஞ்சும் கன்னடம், சுந்தரத் தெலுங்கு, மதுரமான மராட்டி, உருக்கமான உருது, ஜெயமெனும் ஜைனமொழி, மலைக்க வைக்கும் மலையாளம் என அனைத்தும் கலந்த அறுசுவை மொழிகள் பேசும் கதம்ப மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். ஆந்திர எல்லை கர்நாடக எல்லை என எல்லைகளில் பரவியிருந்தாலும் தொல்லை தராத மாவட்டம் இம்மாவட்டம். தமிழகத்தில் நடைபெறும் குற்றச் செயல்களில் பின்தங்கி இருந்து முன்னதாகப் பேர் சொல்லும் மாவட்டம் இம்மாவட்டம். அடர்ந்த வனப்பகுதிகளில் மலைப்பாம்பு, யானை, மான், குள்ளநரி, முள்ளம்பன்றி, கரடி, செந்நாய், புலி இவை காணப்படுகின்றன.

உணவுப்பயிர் உற்பத்திகளாக நெல், ராகி, கம்பு, சோளம், பருப்பு வகைகள், அனைத்துவகை காய்கறிகளும் அதிகளவில் பயிராகின்றது, கனிகளில் முதல் நிலையில் மாங்கனியும், அடுத்ததாக வாழை, சீதா, கொய்யா விளைகின்றன.

கனிம வளங்களாக அபாடைட், பித்தளைதாது, கோரண்டம், சுண்ணாம்பு, மாக்னசைட், நிக்கல், குவார்ட்ஸ், கருங்கல், கிரானைட் கிடைக்கின்றன. கறுப்பு கிரானைட் பல வண்ண கிரானைட் (பாரடைசோ) இன்றைய நாளில் அதிகளவில் இனம் காணப்பட்டு உலக அளவில் வர்த்தகரீதியாக பெரும் வெற்றி பெற்றுள்ளது.

சங்க காலத்தில் அதியமான்களால் ஆட்சி செய்யப்பட்ட பின்னர் பல்லவர், சோழர் போசாளர், விஜயநகரம் போன்ற பேரரசர்களாலும் அத்திமல்லன் புரத்தாவார் போன்ற குறுநில மன்னர்களாலும் ஆளப்பட்டது. அதன்பின் தொடர்ச்சியாக ஜமீன்தார், மிராசுதார் மிட்டாதார், நிலச்சுவான்தார் என காணப்பட்டனர்.

'வினோபாவின் பூமிதான இயக்கம்' வாயிலாகப் பெருமளவு பண்ணை நிலம் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட பல தியாகிகள் வாழ்ந்த பெருமைக்குரிய மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

மூதறிஞர் இராஜாஜி பிறந்த தொரப்பள்ளி இம்மாவட்டத்தில் அமைந்து, 'தொண்டை மண்டலம் சான்றோர் உடைத்து' எனும் கூற்றை நிரூபித்து உள்ளது. எண்ணற்ற சான்றோர்களின் எண்ணிலடங்கா தியாகத்தால் தியாகபூமியானது இம்மாவட்டம். காவேரிப்பட்டணம் நாகராஜ மணியகார், கிருஷ்ணகிரி முனுசாமி கவுண்டர் இலவச மருத்துவத் தந்தை அன்னாஜி, அரிசன நல ஊழியர் தொகரப்பள்ளி நஞ்சுண்ட செட்டியார் உள்ளிட்ட பலர் பெயருக்காகவோ புகழுக்காகவோ அன்றி உடல்சார்ந்த உழைப்பையும் பொருள் சார்ந்த உழைப்பையும் நல்கிச் சென்றனர். புறநானூற்றுத் தாயின் கூற்றாக 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே', என்பதை உணர்த்திய மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்பதை நன்குணர்ந்த இம்மாவட்ட மக்கள் காடுகளிலும், மலைகளிலும், நதிகளிலும் தாண்டி தாவி நீந்தி பல்வேறு இன்னல்களுக்கு இடையே கல்வி கற்று மாநிலத்தின் முதல் தர அதிகாரிகளாக 1950–களிலே பதவி வகித்தனர். இன்றைய நாளில் அரசு கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் எனப் பல்துறை சார்ந்த கல்லூரிகளில் பலர் திரளாகக் கல்வி கற்று வீட்டிற்கும் நாட்டிற்கும் பெயரையும் புகழையும் ஈட்டித்தந்து பெருமை கொள்ளும் மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிராம தேவதை வழிபாடு முக்கிய இடம் வகிக்கிறது. பெரிய கோவில்கள் பெருமளவு இல்லை என்றாலும் சிறிய கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் சிறப்பான கதை உள்ளது. கிருஷ்ணகிரி, குப்பம் நெடுஞ்சாலையில் சிந்தகம்பள்ளி இணைப்புச் சாலையில் அமைந்துள்ள ஜோடு பசவேஸ்வரர் கோயில் மாடுகளைத் தெய்வங்களாக வழிபட்டமைக்குச் சிறந்த சான்றாகும்.

மைசூர் சமஸ்தானத்தில் முகலாய மன்னர்களின் மதமாற்றத்திற்கு அஞ்சிப் பெரும்பாலான வீரசைவர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குக் குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்த ஒரு குடும்பத்தினர் தங்களது குலதெய்வத்தை விட்டுவிட்டு வந்து விட்டனர். அவர்களில் இரு சகோதரர்கள் வணிகத்தின் பொருட்டுக் குதிரையின் மீது குப்பம் வழியே சென்றனர். வழிப்பயணக்களைப்பால் அவ்வனப்பகுதியில் படுத்து உறங்கினர். அவர்கள் கனவில் வந்த சிவபெருமான் தான் இவ்விடத்தில் இடம் பெயர்ந்து இருப்பதாகத் தெரிவிக்க, காலைப் பொழுதில் விழித்தெழுந்த சகோதரர்கள் அவ்வனப் பகுதியில் செடி, கொடி, புதர்களை விலக்கித் தேடியபோது அவர்கள் கையில் இருந்த ஆயுதம்பட்டு ஒரு கற்பாறையில் குருதி கொப்பளிக்க அதுவே இறைவன் உறைந்த


இடம் என அறிந்த அவர்கள் முழுமையாக அவ்விடத்தைத் தூய்மை செய்ய இரட்டைப் பாறைகள் நடுவில் பிளந்து ஒரு ஜதை மாட்டின் பின்முதுகு போல் காட்சி அளித்தது. சிவபெருமானின் வாகனமாகிய நந்தியே அவ்விடத்தில் அவ்வாறு காட்சி அளித்ததைக் கண்ட சகோதரர்கள் அது நாள் முதற்கொண்ட தங்களது குலதெய்வமாக வழிபட அவர்கள் சந்ததியினர் ஜெகதேவி, தொகரப்பள்ளி, மாதூரஅள்ளி ஊர்களில் பரவி வழிபட்டு வந்தனர்.

வெயிலிலும் மழையிலும் நனைந்த இறைவன் சிந்தகம்பள்ளி நிலச்சுவான்தார் கூத்தப்ப கவுண்டர் கனவில் தோன்றித் தனக்கு ஆலயம் எழுப்பும் படிக் கட்டளையிட அவர்தம் நிலங்களை விற்று மண்டபமும், கோயிலும் எழுப்பினார். வீரசைவ இனத்திற்குக் குலதெய்வமான இறைவன் ஆலயம் எழுப்பக் கூறியதோ வேளாளர் இனத்தவருக்கு, என்னே இறைவனின் திருவிளையாடல் கால்நடைகளுக்கு ஏற்படும் எல்லாவித நோய்களையும் குணப்படுத்தும் திருத்தலமாக இன்று கர்நாடகம், ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய மூன்று மாநில மக்களுக்கும் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறது. இத்தகைய சிறப்பு மிக்க இத்திருத்தலம் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றொரு சிறப்பாகும்.

மேலும் அரியக்கா–பெரியக்கா திருவிழா மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திரௌபதி வரலாறு மகாபாரதம் ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் பட்டி தொட்டி எங்கும் கதாகாலட்சேபமாக நடத்தப்பட்டு வருகிறது.

மனித வளம், மண் வளம் நிறைந்த இம்மாவட்டத்தின் பெருமையை அனைவருக்கும் கூறி மகிழ்வோமாக.

**தொ.ந.கலைச்செல்வி**



கிருஷ்ணகிரி மலைக்கோட்டை

## கிருஷ்ணகிரி மாவட்டம்



# சங்ககாலம் முதல் பல்லவர் காலம் வரை

கி.அமர்நாத் ராமகிருஷ்ணா

தமிழகத்தின் 30–வது மாவட்டமாக உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் மிக நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது என்று கூறுதல் மிகையாகாது. உலக வரலாற்றில் மனிதன் நாகரீக வாழ்வியல் முறை தொடங்கிய காலம் புதிய கற்காலமாகும். அந்தக் காலத்தில் மனிதன் தான் அதற்கு முன் அதாவது பழைய கற்காலத்தில் உணவிற்காக எவ்வாறு நாடோடியாக அலைந்து திரிந்து கொண்டிருந்தானோ அந்த முறையை விட்டு நிலையான ஓர் இடத்தில் தங்கிப் பயிர்த்தொழிலைப் புரியலாயினான். அத்தகைய புதியகற்கால மனிதன் வாழ்ந்த பகுதியாகத் தமிழகத்தில் கருதப்படும் பகுதி இம்மாவட்டத்தில்தான் அமைந்துள்ளது என்று கூறுதல் பெருமையுடைய்தாகும். கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள தொகரப்பள்ளியே இப்புதியகற்காலத்திற்கு மிகசிறந்த சான்றாகும். முதன்முதலில் இப்பகுதியில் முனைவர். B. நரசிம்மய்யா அவர்களின் தலைமையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புதியகற்காலத்திற்கான ஆதாரங்கள் வெளிக்கொணரப்பட்டன. இதன்பின் அண்மைக்காலத்தில் தமிழ்ப்பல்கலைக் கழகத்தைச் சார்ந்த முனைவர் கே.ராஜன் தலைமையில் தொகரப்பள்ளிக்கு அருகாமையில் உள்ள மயிலாடும்பாறையில் அகழாய்வுகள் மேற்கொண்டு புதியகற்காலச் சான்றுகள் உறுதிசெய்யப்பட்டன.

இம்மாவட்டத்தின் வரலாறு புதியகற்கால காலத்துடன் நின்றுவிடவில்லை. இன்றுவரை இதன் வரலாறு தொடர்ந்து வந்துக்கொண்டேயுள்ளது. புதியகற்காலத்திற்குப் பின் தமிழகத்தில் காணப்படுவது இரும்புக்காலம் என்றழைக்கப்படும் பெருங்கற்கால காலமாகும். பெருங்கற்காலக் காலத்தின் எச்சங்கள் தென்னிந்தியா முழுவதிலும் காணப்படுகின்றன. அதில் பெரும்பான்மையாகத் தமிழகத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் பெரிய பாறைகளைக் கொண்டு இறந்த தம் இனமக்களுக்கு புதைகுழிகளை அமைத்துள்ளனர். இந்தப் புதைகுழிகள் டால்மன் என்றும், சிஷ்ட் என்றும், மென்ஹீர் என்றும் முதுமக்கள் தாழி என்றும் பலவகைகளில் அழைக்கப்படுகின்றன. தமிழகத்தில் காணப்படும் இப்பெருங்கற்காலத்தின் கால அளவு கி.மு.5ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரை என்று அறிஞர்களால் கணிக்கப்பட்டுள்ளது. நீங்கள் வினாவலாம் ஏன்? தலைப்பில் சங்ககாலம் முதல் என்று குறிப்பிட்டுப்

பெருங்கற்காலத்தைப் பற்றி கூறுகிறார் என்று என்னலாம். ஏனெனில் அண்மைக்காலத் தொல்லியல் அறிஞர்கள் இப்பெருங்கற்காலத்தைச் சங்ககாலத்துடன் தொடர்புடைய நாகரிகம் என்று தங்களின் ஆராய்ச்சியின் விளைவாக எடுத்தியம்புகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் சான்றுகள் சங்க இலக்கியங்கள் முதுமக்கள் தாழிகள் மற்றும் பலவகையான புதைகுழிகளையும் சிறப்புற விவரித்து கூறியுள்ளன என்பதாகும். அதோடு நில்லாமல் புதைகுழிகள் எதனை எடுத்துக்காட்டுகின்றன என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆராயவேண்டும் என்றும் கூறுகின்றனர். ஏனெனில் பெரும் பாறைகளைக் கொண்டு ஒரு மனிதன் இறந்த மனிதனைச் சிறப்பிக்கின்றான் என்றால் அம்மனிதன் அக்கால சமுதாய மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் பெருமை செய்திருக்க வேண்டும். எனவே, அம்மனிதனின் நினைவாக இப்புதைகுழிகள் உருவாக்கப்பட்டன. இதுவே பிற்காலத்தில் அதாவது சிற்பங்கள் தோன்றிய காலத்தில் நடுகல் சிற்பங்கள் தமிழகத்தில் காணப்படும் சங்ககாலத்தின் கால அளவும் பெருங்கற்காலத்தின் கால அளவும் சமகாலத்தவையே என்று கூறுதல் மிகையாகாது. எனவே இந்தப் பெருங்கற்காலத்தைச் சங்ககாலத்துடன் இணைத்துக் கூறுதல் முறையே. இதனை வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மெய்ப்பிக்கும். இம்மாவட்டத்தில் இத்தகைய சிறப்பு வாய்ந்த பெருங்கற்காலத்திற்கான ஆதாரங்கள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. அதில் முக்கியமான இடமாக விளங்குவது மல்லப்பாடி ஆகும். இதனை அகழாய்வு செய்த சென்னைப் பல்கலைக்கழக பண்டைய வரலாறு மற்றும் தொல்லியல் துறை பேராசிரியர் கே.வி.ராமன் அவர்கள் இதன் இரும்புக் காலச் சிறப்பினையும் இதன் காலஅளவு கி.மு.3ஆம் நூற்றாணடு முதல் கி.மு.1ஆம் நூற்றாண்டு வரை என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார்.

இனி, சங்ககாலத்தில் இம்மாவட்டத்தில் அரசியல் நிலை எவ்வாறு இருந்தது என்று இக்கட்டுரையில் விரிவாக காண்போம். தமிழகம் சங்ககாலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களினால் மட்டும் ஆண்டு வரப்படவில்லை. கொங்குநாடு, தொண்டை நாடு, நடுநாடு என்னும் தன்னாட்சி நாடுகளும் இருந்து வந்தன என்பதனைச் சங்க இலக்கியங்களில் வாயிலாக அறிகிறோம். நடுநாடு என்பது சோழ நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் மற்றும் கொங்கு நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியாகும். இதன் தலைநகராக திருக்கோவிலூர் விளங்கியது. அதேபோல் தொண்டை நாடு என்பது காஞ்சிபுரத்தை அடக்கிய தொண்டைமண்டலமாகும். தற்பொழுதுள்ள கோவை, நீலகிரி, சேலம், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியே கொங்கு நாடு என்றழைக்கப்பட்டது. புலவர் குழந்தை அவர்கள் இந்த நாடு இயற்கை வளங்கள் சூழ்ந்த பகுதி என்றும் இங்குள்ள பூந்தாது, மணல், தேன் என்னும் பொருள்களில் இருந்து கொங்கு என்ற சொல் வந்ததாகவும் கூறுகின்றார்.

கொங்கு நாட்டில் தற்போதைய கிருஷ்ணகிரி மாவட்டம், தகடூர் நாட்டுப்பிரிவில் இருந்தது. இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் நெடுமான்அஞ்சி என்பவன் ஆட்சிபுரிந்து

வந்தான். இவருடைய ஆட்சி வடக்கே கோலார்ப் பகுதி முதல் தெற்கே நாமக்கல் வரை பரவியிருந்தது. சேர மன்னர்கள் சேரன் செங்குட்டுவன், பெருஞ்சேரல் இரும்பொறை. நடுநாட்டு மன்னன் மலையமான் திருமுடிக்காரி, பாண்டிய மன்னன் பசும்பூண் பாண்டியன் ஆகியோர் அதியமானின் சமகாலச் சங்ககால மன்னர்களாகக் கருதப்பட்டனர்.

சேரன் செங்குட்டுவன் தகடுரை முற்றுகையிட்டு அதனைக் கைபற்றியதாக அகநானூறு கூறுகின்றது. அச்சமயம் அவனை எதிர்க்கத் தகடூரில் யாரும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. கரூரைத் தலைநகராக கொண்டு ஆட்சிபுரிந்து வந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலத்தில் அதியமான் கொங்கு நாட்டில் உள்ள கொல்லிமலையைக் கைப்பற்றிக் கொண்டான். பெருஞ்சேரல் இரும்பொறையின் பெருமையைக் குலைக்கச் சோழ பாண்டிய மன்னனுடன் நட்புறவை மேற்கொண்டான். இதனால் கோபமுற்ற இரும்பொறை கொல்லிமலைப் போரில் அதியமானையும் அவனோடு நட்பை மேற்கொண்ட சோழ பாண்டிய மன்னர்களையும் தோல்வியுறச் செய்ததாகப் பதிற்றுப்பத்துக் கூறுகின்றது. அதியமான் மீது பகைகொண்ட மலையமான் திருமுடிக்காரி தகடூர் மீது படையெடுத்தான். அவனை அதியமான் வென்றதோடால்லாமல் திருகோவிலூரையும் அழித்ததாக ஔவையார் புறநானூற்றில் கூறியுள்ளார். தோற்றுப்போன காரி பெருஞ்சேரல் இரும்பெறையின் உதவியை நாடினான். அதியமானுக்குப் பசும்புட் பாண்டியன் மற்றும் அதியமானின் மகன் எழினி துணைபுரிந்தனர். தகடூரில் கடுமையான போர் நிகழ்ந்தது. இப்போரில் அதியமானும், அவன் மகன் எழினியும் உயிர் இழந்தனர் என்று தகடூர் யாத்திரை என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

அதியமான் போர்ச் செயலினால் மட்டும் தலைசிறந்த மன்னன் என்று அறியப்படவில்லை அவனுடைய கொடை, அவனின் உயர்வுக்குக் காரணமாக அமைந்தது. அதியமான் ஒரு சமயம் கஞ்சமலைக்குச் சென்றபோது அங்கு கிடைத்த அதிசய கருநெல்லிக்கனியைக் கொண்டுவந்து தான் உண்ணாமல் ஔவைப்பாட்டியிடம் கொடுத்தார். இக்கனியை உண்டவர் நீண்ட நாட்கள் வாழ்வர் என்பது மரபு, அதனைத் தான் உண்ணாமல் சங்கத்தமிழ் வளர்த்துவரும் ஔவை உண்டால் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவும் என்று நம்பிய சிறப்புடைய இம்மன்னன் வாழ்ந்த பகுதியே இன்றைய கிருஷ்ணகிரி மாவட்டம் என்று சொல்லுதல் மேலும் இம்மாவட்டத்திற்குச் சிறப்புச் செய்வதாகும்.

சங்க காலத்திற்குப் பின் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழகத்தின் இருண்டகாலம் என்று வர்ணிக்கப்படும் களப்பிரர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. களப்பிரர்கள் தமிழகத்தை கி.பி.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6–ஆம் நூற்றாண்டு வரை உள்ள கால கட்டத்தில் ஆட்சி புரிந்தனர். இவர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் மேலும் கர்நாடக தேசத்தைச் சார்ந்தவர்கள் என்றும்

பேலூர் கல்வெட்டுச் சான்றுரைக்கின்றது. அக்காலம் முதல் இக்காலம் வரை கிருஷ்ணகிரி மாவட்டமே தமிழகத்தைக் கர்நாடகத்துடன் இணைக்கும் பகுதியாகத் திகழ்கின்றது. அவ்வாறு தமிழகத்திற்கு வந்த களப்பிரர்கள் இம்மாவட்டத்திலும் தங்களின் ஆட்சியை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும் என்பது திண்ணம்.


கி.பி.6ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சிம்ம விஷ்ணு என்ற பல்லவ மன்னன் தமிழகத்தில் களப்பிரர்களை அகற்றி காஞ்சியைத் .தலைமையிடமாகக் கொண்டு பல்லவப் பேரரசை ஏற்படுத்தினார். இவருக்குப் பின் வந்த மகேந்திரவர்மன் மற்றும் நரசிம்மவர்மன் பல்லவ நாட்டைச் சீரும் சிறப்புடன் ஆட்சி புரிந்தனர். ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் உதாரணத்திற்கு இழப்புடையார்பட்டி மற்றும் புளியனூர் என்னும் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவர் கால நடுகல் கல்வெட்டு மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள இராயக்கோட்டைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு செப்பு பட்டயமே பல்லவர்களின் ஆட்சியை விவரிக்கும் சான்றாக விளங்குகின்றது. இச்சான்று மூலம் குமாராசத்தியர் என்னும் குறுநில மன்னர் கப்பலூர்ப் பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு சிம்ம விஷ்ணு காலத்தில் ஆட்சி புரிந்ததாகவும், சிறுபாலர் என்ற குறுநில மன்னர் மேல் வெண்நாடு என்னும் பகுதியைத் தலைமையிடமாக கொண்டு மகேந்திர வர்மனின் காலத்தில் ஆட்சிபுரிந்ததாகவும் அறியலாம். இதன் மூலம் பல்லவர்களின் ஆட்சி காலத்தில் இம்மாவட்டம் அவர்களின் நேரடி ஆளுகையின் கீழ் குறுநில மன்னர்களினால் ஆளப்பட்டு வந்தது என்று அறிகிறோம்.

<u>மேற்கோள்பட்டி</u>

1. அகநாநூறு 212 : 14–16
2. புறநாநூறு 99 : 13–14, 91 7–11
3. பதிற்றுப் பத்து 75 : 1–2
4. தமிழ்நாட்டு வரலாற்று குழு, தமிழ்நாட்டு வரலாறு சங்க காலம்–அரசியல், தமிழ்நாட்டு பாடல் நூல் நிறுவனம், சென்னை–1983.
5. கே.வி.ராமன், தொல்லியல் ஆய்வுகள், சேகர் பதிப்பகம், சென்னை–1979.
6. புலவர் குழந்தை, கொங்கு நாடு, வேலர் பதிப்பகம், ஈரோடு–1968.
7. சு.இராசவேலு, கோ.திருமூர்த்தி, தமிழ்நாட்டு தொல்லியம் அகழாய்வுகள், சென்னை–1995.
8. Indian Archaeology A Review, Archaeological Survey of India, New Delhi.
9. Annual Report of Indian Epigraphy, 1963, No.11.
10. K.A.Nilakanta Sastri, History of South India, Oxford University Press-1966.
11. K.K.Pilley, A Social History of the Tamils, Madras-1975
12. N.Subramanian, History of Tamil Nadu, Koodal Publisher, Madurai-1972



# சோழர் காலம் முதல் விஜய நகர ஆட்சிக் காலம் வரை கிருட்டிணகிரி



**மா.வெங்கடேசன்,** தமிழ் விரிவுரையாளர், அரசு கலைக் கல்லூரி (ஆடவர்), கிருட்டிணகிரி.

வடக்கே ஆந்திரத்தையும், தெற்கே தர்மபுரி மாவட்டத்தையும், கிழக்கே வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களையும், மேற்கே கர்நாடகத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள கிருட்டிணகிரி மாவட்டம் பல்லவர் ஆட்சிக்காலம் முதல் விஜயநகர ஆட்சிக்காலம் வரை தமிழகத்தின் நுழைவு வாயிலாக இருந்திருக்கிறது. குறிப்பாக, சோழர்கள் ஆட்சிக்காலத்தில் புறமலை நாடு என இப்பகுதி அழைக்கப்பட்டது. பல்லவர், சோழர், போசளர், நுளம்பர், கங்கர், பாணர், கொங்கணி, பிரித்தினிக் கொங்கணியர், விஜய நகரர் ஆகியோரும், பல குறுநில மன்னர்களும் இப்பகுதியை ஆட்சி புரிந்துள்ளனர். இம்மாவட்டத்தில் இயற்கையாக அமைந்துள்ள கல்லாலான சிறு குன்றுகளும், காடுகளும், வளமான தென்பெண்ணையாறும் இங்குப் பல அரசுகள் இருந்தமைக்கு அடிப்படையாக விளங்குகின்றன. கலவையான சமூக பொருளாதார கலாச்சார அரசியல் மாறுபாடுகள் இம்மண்ணில் தொடர்ந்து நிகழ்ந்து வந்துள்ளன. சோழர் காலம் முதல் விஜயநகர் ஆட்சிக்காலம் வரையான இம்மாவட்டத்தின் வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்துவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளும் நடுகற்களும் இதற்கு அடிப்படைச் சான்றுகளாக அமைகின்றன.

## சோழர் காலம்:

பல்லவர்களின் வீழ்ச்சிக்குப் பின் ஒசூர் உள்ளிட்ட கிருட்டிணகிரி பகுதி மேலைக்கங்கர் வசம் இருந்தது. இச்செய்தியினை, கிருட்டிணகிரி சையது பாஷா மலையில் உள்ள ஸ்ரீ புருசன் கல்வெட்டு குறிப்பிடுகிறது. "கங்கபாடியும் நுளம்ப பாடியுங் கடிகை வழியுங் குடமலை நாடுங்... புறமலை நாடு... (1974/78) என்ற முதல் இராஜராஜனின் மெய்கீர்த்தி அவன் வெற்றி பெற்று ஆட்சி செய்த நாட்டுப்பகுதிகளைக் குறிக்கிறது. தான் கைப்பற்றிய இடங்களோடு நுளம்பபாடியையும் குறிப்பதால் இவன் ஆட்சிக்கு முன்பு வரை அதாவது கி.பி.9ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி.10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இப்பகுதி. நுளம்பரிடம் இருந்துள்ளது. இம்மன்னன் இப்பகுதிகளை வென்று தமக்குக் கட்டுபட்டு ஆளும். 'சிற்றரசர்களாக நுளம்பர்களை மாற்றியிருப்பதை மெய்க்கீர்த்தியிலிருந்து அறியமுடிகிறது. கிருட்டிணகிரிப் பகுதியை ஆட்சி செய்த சோழ மன்னர்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கூறலாம். 1. முதலாம் இராசராசன் (கி.பி.1010) 2. முதலாம் இராசேந்திரன் (கி.பி.1024)

3. வீர இராசேந்திரன் (கி.பி.1195) 4. முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 11ஆம் நூற்றாண்டு) 5. மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1198) 6. மூன்றாம் இராசேந்திரன் (கி.பி.1241)

**முதலாம் இராசேந்திரன் : (கி.பி.1012–1044)**

பண்டையக் காலத்தில் செவிடப்பாடி என அழைக்கப்பட்ட ஒசூரில் அமைந்துள்ள சுப்பிரமணியர் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட முதல் இராசேந்திரனின் 14 ஆவது ஆட்சியாண்டுக் கன்னடக் கல்வெட்டு ஒன்று சாலவூருவில் இருந்த ஒருவனின் மனைவி குளம் வெட்டிய செய்தியையும், போல மண்ட நாட்டைச் சார்ந்த விக்கிரம சோழ கவுண்டர் குறித்தும், பெயர் குறிப்பிடாத தெய்வங்களுக்குக் கொடுத்த தானத்தையும் பற்றிக் குறிப்பிடுகிறது. (ARE 1972/270)

**வீர இராசேந்திரன் : (கி.பி.1063–70)**

ஊத்தங்கரைச் சாவடியூரில் கிடைத்த வீர இராசேந்திரன் காலக்கல்வெட்டு இம்மன்னனைப்பற்றிய மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இதில், மலையடிக் குன்றத்து வெள்ளாளன் குறசாத்தன் அடியான் தாசையன் மாணிக்கஞ்செட்டியார் மகன் வசவையன் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். (1972/38)

கி.பி.1188–இல் எழுதப்பட்ட வீர இராசேந்திரன் கால ஆனந்தூர்க் கல்வெட்டு, ஆனந்தூர் இறைவனுக்குத் துறுமுருடையார் எடுத்தான் என்பவன் ஒரு நந்தாவிளக்குச் சந்திராதித்தன் வரை எரிய உரி எண்ணையும் சிவலோகக் காணியும் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. (1972/11) இவ்விரு கல்வெட்டுகளிலிருந்து இம்மன்னனின் ஆணைக்குட்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்துள்ளதை அறியலாம்.

**முதலாம் குலோத்துங்கன் : (கி.பி.1070–1120)**

ஒசூர் சந்திரசூடேசுவரர் கோயில் கல்வெட்டு முதலாம் குலோத்துங்களின் மெய்க்கீர்த்தியினைக் குறிப்பிடுகிறது. (1974/46) மல்லிகார்ச்சுன துர்க்கம் என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டு புகழ்மடு விளங்க... எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி. கோவிலுக்கு நிலங்களைத் தேவதானமாக வழங்கிய வீரராஜேந்திர தன்னாடுடையன் என்பவனைப் பற்றிக் கூறுகிறது. முதலாம் குலோத்துங்கனின் குறுநில மன்னனாகப் பனைஞ்சன் சாமன் என்கிற வீரராஜேந்திர தன்னாடுடையன் என்பவன் துர்க்கம் பகுதியினை ஆண்டிருக்கலாம் எனத் தெரிகிறது. (ARE 308/1956)

சோழரின் ஆணைக்குட்பட்ட குறுநில மன்னர்கள் கிருட்டிணகிரி பகுதியினை ஆட்சி செய்துள்ள தன்மையினை தேவர் குந்தாணி குந்தீஸ்வரர் கோயில் அதிட்டானத்தில் காணப்படும் முதலாம் குலோத்துங்கன் காலக் கல்வெட்டொன்று, இராஜராஜன் என்கிற செங்கீரன் என்பவர் இக்கோயிலுக்கு ஓர் ஆண்டுக்குத் தேவைப்படும் 90 நாழி எண்ணெய் வாங்குவதற்கான பணத்தைக் கோயில் கருவூலத்திற்கு வழங்கிய செய்தியைக் கூறுகிறது. (ARE 303/1956)

**மூன்றாம் குலோத்துங்கன் : (கி.பி.1178–1223)**

மூன்றாம் குலோத்துங்கன் கால (கி.பி.118) ஆனந்தூர்க் கல்வெட்டு தான் தோன்றீஸ்வரமுடைய நாயனார்க்கு மணி விளக்கும் நிலங்களையும் எடுத்தான் துருமூர் என்பவன் வழங்கியதைக் குறிப்பிடுகிறது. (DH 230) பெண்ணேஸ்வர மடம் கல்வெட்டு, பெண்ணேஸ்வரன் கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்தியைக் கூறுகிறது. (DH 187) இம்மன்னனின் பிரதிநிதிகள் இக்கோயிலைப் புனரமைத்து பல கொடைகளை வழங்கியுள்ளதை அறியலாம்.

**மூன்றாம் இராசராசன் : (கி.பி.1216–1256)**

மூன்றாம் இராசராசனின் ஏழாவது ஆட்சியாண்டில் (கி.பி.1223) பொறிக்கப்பட்ட ஆம்பள்ளிக் கல்வெட்டு மிகவும் குறிப்பிடத்தகுந்த கல்வெட்டாகும். அதியர் வமிசத்தில் தோன்றிய விடுகாதழகிய பெருமாள் ஆழ்வாருக்குக் கங்க காமிண்டன் என்பவன் பள்ளிச்சந்தமாகக் கட்டின குட்டையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. (1972/9) இம்மன்னன் காலத்தில் கிருட்டிணகிரிப் பகுதியில் சமணர்கள் மிகுதியாக வாழ்ந்திருத்தல் கூடும்.

**போசளர் :**

சோழராட்சிக்குப் பின் கிருட்டிணகிரி உள்ளிட்ட பகுதிகளைப் போசளர் ஆளத்தொடங்கினர். குறிப்பாக, சோமேசுவரன், வீர இராமநாதன், வீர விஸ்வநாதன், வீர வல்லாள தேவன் ஆகியோர் ஆண்டனர். வேப்பனப்பள்ளிக்கு அருகிலுள்ள குந்தாணி, தேவர் குந்தாணி என்ற இரண்டு ஊர்கள் அடுத்தடுத்து உள்ளன. இன்று சிறு கிராமங்களாய்த் தம் பழம்பெருமையினை இழந்து காணப்படுகின்றன. தேவர் குந்தாணியைப் போசள மன்னன் வீர சோமேஸ்வரன் ஆண்டான், இம்மன்னன் காலச் சிந்தல்பாடிக் கல்வெட்டு, அரூர் சிந்தல்பாடியில் அமைந்துள்ள ஈசுவரன் கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்க சங்கய தண்ணாக்கன் என்பவன் ஆலமேடு என்ற இடத்தில் விளைந்த விளைச்சலில் ஒரு பகுதியினை வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. (1974/145) இம்மன்னனுக்கு வீர நரசிம்மன் என்கிற மூன்றாம் நரசிம்மன், வீர இராமநாதன் ஆகிய இரு புதல்வர்கள் இருந்தனர். இவர் மறைவுக்குப் பின்னர் (கி.பி.1254) தேவர் குந்தாணி வீர இராமநாதன் வசம் வந்தது. போசள அரசில் மைசூரை ஒட்டிய பகுதிகள் மூன்றாம் நரசிம்மனுக்கும், தமிழகப்பகுதி வீர இராமநாதனுக்கும் பிரித்து வழங்கப்பட்டன. தொடக்கத்தில் வீர இராமநாதன் திருச்சிக்கருகில் உள்ள 'கண்ணனூர் கொப்பத்தை' தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தான். ஆனால், மாறவர்மன் குலசேகர பாண்டியன் சோழர், போசளரின் தமிழகப் பகுதிகளை மீட்டுக்கொண்டதால் மீண்டும் கொப்பத்தைப் பெற வீர இராமநாதன் கடுமையாகப் போரிட நேர்ந்தது. இறுதியில் கொப்பத்தைப் பெற்ற வீர இராமநாதன் தன் தமையனிடம் போர் செய்து சில பகுதிகளை வென்று பெங்களூர், கோலார், தும்கூர் பகுதிகளை உள்ளடக்கிய தமிழகப்பகுதியுடன் சேர்த்து 'தேவர் குந்தாணி'யைத் தலைநகரமாக்கி ஆட்சி புரிந்தான்.

இம்மன்னனின் 37ஆம் ஆட்சியாண்டில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து நடசாலைக் கோயில் நெடுந்தேவருக்கு விளக்கெரிக்கக் கொடுத்த கொடை பற்றி ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. (செல்வராஜ், ப.11) செவிடப்பாடி (ஒசூர்), கிருட்டிணகிரி பகுதிகளை ஆட்சி செய்த வீர இராமநாதன் ஒசூர் சந்திரசூடேஸ்வரர் கோயிலுக்குப் பல கொடைகள் வழங்கிய செய்தியினைக் குறிப்பிடுகிறது. வீர இராமநாதன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1282) தவம் செய்யும் முனிவர்க்குத் தியானம் செய்வதற்காகத் தனி இடம் ஒதுக்கி அங்கு 13 நாட்கள் சிவனை வழிபாடு செய்வதற்குச் செய்த நிவந்தத்தைக் கூறுகிறது. (1974/331)

வீர இராமநாதனுக்குப் பின் அவர் மகன் வீர விஸ்வநாதன் (கி.பி.1296) ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இம்மன்னனும் தன் தந்தையைப் போன்றே செவிடப்பாடி (ஒசூர்) சந்திரசூடேஸ்வரர் கோயிலுக்குப் பல கொடைகள் வழங்கியுள்ளதை இக்கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. "செவிடநாயனார்க்குரிய தேவதான ஊர்களிலிருந்து ஸித்தாயம் (சிறு வரி) முதலியவற்றால் வரும் 127 பொன்னை செவிடநாயனார்க் கோயில் திருப்பணிக்கு அளிக்குமாறு வீர விஸ்வநாத தேவர் ஆணையிட்டுள்ளதை இக்கல்வெட்டுச் செய்தியிலிருந்து அறிய முடிகிறது. (1974-33A)

வீர வல்லாள தேவன் (கி.பி.1511) ஆட்சிக்காலத்தில் இராமண்ணன் என்பான் அத்தியூர் தேனுழான் பள்ளம் ஆகிய ஊர்களை வீர வல்லாள பட்டணம் என்று பெயரிட்டு ஒரு சிலருக்குக் கொடையாக வழங்கினான். இவர்கள், நிலங்களுக்குரிய வரிகளை 58 பொன் மரியாதை செலுத்தப்பட வேண்டும். சித்தாயம், மனை திறை, குதிரை உத்ரை, மல்லுதனம், திக்கை அதிகாரி சீவிதம், கீழ்த்தண்டு, மேல்தண்டு, புதுத்திறை, புதுக்காணிக்கை ஆகிய வரிகள் பற்றியும் கொத்தூர்க் கல்வெட்டுக் (1974–7) குறிப்பிடுகிறது. இக்கால கட்டத்தில் வசூலிக்கப்பட்ட வரிகளை இதன்வழி அறியலாம்.

**கங்கர்:**

கங்கபாடியை ஆண்டு வந்த கங்கர்கள் புறமலை நாட்டுப் பகுதியையும் ஆட்சி புரிந்தனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் இப்பகுதியினை ஆளத் தொடங்கினர். சங்க மன்னர்களுள் புருச பருமர், ஸ்ரீ புருச வருமர், அத்தி மல்லன், திரிபுவன மல்லன், மல்லபூர்வதிராஜன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர். நடசாலை நடராசர் கோயில் கல்வெட்டுகளிலிருந்து திரிபுவன மல்ல பூர்வாதிராயன் என்ற குறுநில மன்னன், அவனது வம்சத்தைச் சார்ந்த தாமத்தாழ்வார் மகன் அத்திமல்லன், பூர்வாதிராயன் ஆகியோர் கிருட்டிணகிரி ஒசூர்ப் பகுதிகளை ஆட்சி செய்துள்ளதை அறிய முடிகிறது.

அத்திமல்லன் பற்றிக் குறிப்பிடும் நடசாலைக்கல்வெட்டு, "அத்திமல்லன் என்பவன் வைகாசி மாதம் நிகளிங்கீஸ்வர நாயனார்க்குத் திருப்பணி செய்யும் பொருட்கள் ஓர் ஊரும் அதில் அடங்கிய 'செம்பாண்டான் இருப்பு' முதலிய பகுதிகளையும், அல்லூர்ச் சுங்கம், சாரிகை முதலான மகமைகளையும் சேர்த்து

வழங்கியுள்ளான் எனக் கூறுகிறது. (செல்வராஜ், ப.12) இம்மன்னன் ஒசூர் சந்திரசூடேஸ்வரர் கோயில் நம்பிராட்டியாரை எழுந்தருளச் செய்து, பூசைக்கு கொத்தகாமிண்டன்பள்ளியை நிவந்தமாக வழங்கியதை இக்கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. (1974-42A) அத்திமல்லன் கோவில் திருப்பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவன் என்பதை அறிய முடிகிறது. ஒசூர்ப் பகுதியைச் சுற்றியுள்ள ஊர்களான அத்திப்பள்ளி, அத்திமுகம், அத்திநத்தம், அத்திசந்திரம் என்பன இம்மன்னனின் பெயரால் அமைந்திருப்பதன் மூலம் இவனது ஆட்சிச் சிறப்பினை அறிந்து கொள்ளலாம்.

புருச வருமனது ஆட்சிக்காலத்தில் பிருணாதுவியார் என்பவர் புறமலை நாட்டை (கிருட்டிணகிரி, ஒசூர்ப் பகுதிகள்) ஆண்டு வந்தார். அவர் மழவூர்த் தொறுக்கொள்ளச் சென்றபோது அப்பூசலில் செருப்பச்சடையன் என்ற வீரன் இறந்துபட்டான் என்ற செய்தியைத் தரும் நடுகல் குறிப்பிடத்தகுந்தது. (1973–18)

கங்க மன்னர்களுள் மல்லபூர்வாதிராஜன் (கி.பி.1249) அத்திமல்லனைப் போன்றே நீர்ப்பாசன வசதி, இறைப்பணிகளில் அதிக நாட்டமுடையவனாக இருந்துள்ளான். இதனைப் பின்வரும் ஒசூர் மேல் சூடாபுரம் ஈசுவரன் கோயில்க் கல்வெட்டு உணர்த்துகிறது.

“செயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க் கோட்டத்து வெண்புரியத்தைச் சார்ந்த கம்மாண்ட காரைக்கிழான் என்பவன் நிகரிலிச் சோழ மண்டலத்து மாசந்தி நாட்டு முதுகிரையன்பள்ளியில் சேவிடை சமுத்திரம் என்னும் பெயரால் ஓர் ஏரியைக் கட்டுவித்தான். அவ்வேரிப்பாய்ச்சலில் உள்ள கீழ்க்கழனியை 16 அடிக்கோலால் அளந்து 400 குழியைச் சேவிடை நாயனார்க்கு ஒதுக்கிய பின் எஞ்சியுள்ள பகுதியை மூன்று கூறிட்டு இரு கூறுகளைத் திருவேகம்பமுடையான் என்பவருக்கும், ஒரு கூறை பிராமணர்க்கும் விட்டதையும், விச்சாகமுண்டன்பள்ளி எனுமூரில் உள்ள நிலங்களையும் அவ்விறைவனுக்கு அளித்தான்” (1974–4) என்றும் கூறுகிறது. இக்கல்வெட்டில் வரும் திருவேகம்பமுடையான் என்பவர் தேவர் குந்தாணியில் உள்ள குந்தீஸ்வரன் கோயில் இறைவனைக் குறிக்கிறது. கங்க மன்னர்கள் ஒசூர், கிருட்டிணகிரி, தேவர் குந்தாணி உள்ளிட்ட பகுதிகளை ஆட்சி புரிந்துள்ளனர் எனலாம்.

**நுளம்பர்/கொங்கணியர் :**

நுளம்பர்களும் கொங்கனி மன்னர்களும் இப்பகுதியை ஆட்சி புரிந்துள்ளதை நடுகற்கள் வழி அறியலாம். நுளம்பர்கள் ஆட்சி செய்த பகுதி நுளம்பபாடி என அழைக்கப்பட்டது. மகேந்திர நுளம்பனுக்குப் பின் அய்யப்ப தேவர் (கி.பி.9–10) இப்பகுதியை ஆட்சி செய்துள்ளான். வீர நுளம்பன், நுளம்ப வீர சோழன் ஆகியோரும் இப்பகுதியினை ஆண்டிருப்பதை நடுகற்கள் மூலம் அறியலாம்.

வீர நுளம்பனின் 15ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.9) ஆநிரை மீட்பின்போது இறந்த செகத்தாருடைய மாணிக்கடையனார் பற்றி ஊத்தங்கரை நடுகல் தெரிவிக்கிறது. (1972–14)

நுளம்ப வீர சோழனின் (கி.பி.9) ஆட்சியில் தள்ளப்பாடி என்ற ஊர் மேல் படை வந்து ஆநிரைகளைக் கவர்ந்தபோது உதப்பியூரைச் சார்ந்த நுங்கிலன் தொண்டையன் மகன் மூக்கையன் இறந்த பட்ட செய்தியைக் கூறுகிறது. (1972–6)

கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிருதி கொங்கணி மன்னனான கட்டினை பருமா் கால நடுகல் ஒன்று காணப்படுகிறது. (1972–41) சிவமார பருமனனின் ஆட்சிக் காலத்தில் கந்தவாணதி அரையர் புறமலை நாடாண்டபோது கூடல் என்ற ஊரில் நிகழ்ந்த போரில் இறந்த வீரனைப் பற்றி செய்தியினை வரதன்பட்டி நடுகல் குறிப்பிடுகிறது. (1974–163) எனவே நுளம்பர்களும் கொங்கணி மன்னர்களின் பிரதிநிதிகளும் இப்பகுதியினை ஆட்சி செய்துள்ளனர்.

**விஜய நகர ஆட்சி:**

விஜய நகரப் பேரரசினை நிறுவிய ஹரிஹரர் மன்னனின் தங்கையைப் போசாளன் வீர இராமநாதனின் அமைச்சன் பெல்லப்பா நாயக்கன் மணந்து கொண்டான். அத்துடன் ஓசூர்ப் பகுதியை விஜயநகராட்சிக்குட்பட்டு ஆண்டு வந்தான். ஹரஹரா தனது ஆட்சியின் எல்லையைப் பாண்டிய நாடு வரை விரிவுபடுத்தினான். இம்மன்னனுக்குப் பிறகு பெனுகொண்டாவைச் சேர்ந்த அட்சுதராயன், ஜெகதேவராயனை வேலூர்க்கருகில் உள்ள சந்திரிகிரியின் பிரதிநிதியாக அனுப்பி வைத்தான். இவன் கிருஷ்ணதேவராயரின் மருமகனான அளியராமராயரின் மகளை மணமுடித்துக் கொண்டு கிருட்ணகிரி, ஓசூர், இராயக்கோட்டை, ரத்னகிரி ஆகிய பகுதிகளை ஆட்சி செய்தான். சந்திரகிரியிலிருந்து தலைநகரை இரத்னகிரி, இராயக்கோட்டை ஆகிய இடங்களுக்கு மாற்றினான். இவனது பெயரால் ஜெகதேவி என்ற ஊர் இன்றும் கிருட்டிணகிரிக்கருகில் இருப்பது கருதத்தக்கது. பின்னர் ஜெகதேவ ராயனிடமிருந்து ஓசூர்ப்பகுதியை மைசூர் மகாராஜா ஸ்ரீ கண்டீஸ்வர நரசிம்ம உடையார் கைப்பற்றிக் கொண்டார். (கருமலை, 2002:5)

விஜயநகர மன்னர்களான மல்லிகார்ச்சுனன், வீரதேவ மகாராயர், இம்மடிபுக்கராயர், முக்கண்ண உடையார், நரசிங்க தேவர், கம்பண்ணன் ஆகியோரின் ஆணைக்குக் கட்டுப்பட்ட பிரதிநிதிகள் இப்பகுதியினை ஆட்சி புரிந்தனர்.

மல்லிகாரர்ச்சுனன் குறித்த பல செய்திகளைக் கி.பி.1463ஆம் ஆண்டைச் சார்ந்த குந்தாணிக் கல்வெட்டுக் கூறுகிறது. விரவி நாட்டுக் குந்தாணியில் உள்ள ஸ்ரீ கைலாசமுடைய நாயனாருக்குத் தானமளித்த செய்தியும், இவனது ஆணைக்குக் கட்டுபட்டு ஆட்சி செய்த குறுநில மன்னனைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது. மல்லிகார்ச்சுனனுக்கு அடங்கி ஆட்சி செய்தவன் விரவி நாட்டுக் குறியரபள்ளி கல்லுகவாய்ப்பற்று என்பவன் ஆவான். இவன் சந்தொட்டி, பள்ளி ஆகிய

ஊர்களைக் கைலாசநாதர் கோயிலுக்குத் தானமளித்ததைக் கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு, மழை நாட்டு மருதூருடையான் தேவாண்டை மகன் குமரப்பெருமாள் ஸ்ரீ கைலாசமுடையாருக்குத் தேவசமுத்திரம் ஏரியை விலைக்குப் பெற்று அக்கோயிலுக்குத் தேவதானமாக வழங்கியதைக் குறிப்பிடுகிறது. (செல்வராஜ், ப.25)

மேலும், அத்திமுகக் கல்வெட்டு (ARE 462), மாசந்தி நாட்டில் உள்ள அத்திமுகை ஊரில் அமைந்துள்ள அழகிய நாயனார் திருக்கோயிலுக்குத் தேவைப்படும் வழிபாட்டு செலவுகளுக்குக் காணிக்கை, பலதாலி, சோடி முதலிய வரி வருமானத்தை சர்வமானியமாக மல்லிகார்ச்சுன மகாராயர், நரசிங்கராயர் சார்பில் நஞ்சுராஜ உடையார் வழங்கியுள்ளதைக் கூறுகிறது.

இக்கல்வெட்டுச் செய்திகளிலிருந்து மழை நாட்டுப் பிரதிநிதியாக மருதூருடையான் தேவாண்டை மகன் குமரப்பெருமாளும், விரவிநாட்டை குறியரபள்ளி கல்லுகவாய்ப்பற்றும், மாசந்தி நாட்டினை நஞ்சை உடையாரும் மல்லிகார்ச்சுனனுக்குக் கீழ்ப்படிந்து ஆட்சி புரிந்துள்ளதை அறிய முடிகிறது.

வீரதேவ மகாராயர் ஆட்சிக்காலத்தில் (கி.பி.1415) கம்பைநல்லூர் தேவிநாயனார் மகாபூஜைக்கு ஈச்சம்பாடி என்ற ஊரினைத் தேவதானமாக வழங்கிய செய்தியினை அக்கோயில் கல்வெட்டின் மூலம் அறியலாம். (1974–131) மேலும், அதே கம்பைநல்லூர்க் கல்வெட்டு, மூக்கனூர்ப்பற்று நாட்டவர்கள், தேசிநாதர் கோயிலிற் பணிபுரியும் மலையப்பட்டன் அழகிய திருச்சிற்றம்பலம் உடையான் என்பானூக்குப் 'பெரிய நம்பி' என்ற பட்டம் வழங்கிய செய்திகளைக் கூறுகிறது.

விஜயநகர முக்கண்ண உடையார் காலத்தைச் சார்ந்த (கி.பி.15) புலியைக் கொன்றவீரன் குறித்த நடுகல் (1972–9) ஒன்று ஆனந்தூரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. நரசிங்க தேவர் ஆட்சிக்காலத்தில் தாத்திரட்டியார் என்பவர் தாழைநத்தத்தில் இருந்த கோவிலுக்குத் திருநந்தா விளக்கெரிக்கவும், நைவேத்தியம் செய்யவும் நஞ்சை, புஞ்சை நிலங்களைத் தானமாக வழங்கியதைப் புட்டிரெட்டிபட்டி சிவன் கோவில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. (1974–177)

கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கம்பண்ணன் கால வேட கட்டமடுவு நடுகல் ஒன்று பொம்மைய நாயக்கர் அளித்த நிலக்கொடைகளைக் குறிப்பிடுகிறது. (1974–79) இக்கல்வெட்டுச் செய்திகளின் அடிப்படையில் விஜயநகர மன்னர் கால ஆட்சி கிருட்டிணகிரி, ஒசூர், ஊத்தங்கரை உள்ளிட்ட பகுதிகளில் கி.பி.16ஆம் நூற்றாண்டு வரை நீடித்துள்ளதை அறிய முடிகிறது.

**நாட்டுப் பிரிவுகள்:**

தொண்டை மண்டலம், பாண்டி மண்டலம் என்பது போல் இப்பகுதி முழுவதும் ஒரு மண்டலம் என்று தனியாகப் பிரிக்கப்படவில்லை. இன்றைய தருமபுரி, கிருட்டிணகிரி பகுதிகள் அன்று புறமலை நாடு, கோவூர் நாடு, மீகொன்றை நாடு, மீவேணாடு, தகடூர் நாடு என்ற பிரிவுகளாக கி.பி.7ஆம் நூற்றாண்டு வரை பிரிக்கப்பட்டுள்ளன. கி.பி.8–9ஆம் நூற்றாண்டில் கங்கநாடு, கோயிலூர் நாடு, வேளாள நாடு, தாயனூர் நாடு, வேள்கலி நாடு, எயில் நாடு,

மன்ன நாடு என்று பிரிக்கப்பட்டுள்ளது, கி.பி.9–10 ஆம் நூற்றாண்டில் இப்பகுதி நுளம்ப நாடு என அழைக்கப்பட்டது. சோழராட்சியில் குறிப்பாக, இராசராசன் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டை மண்டலங்களாக மாற்றினான். ஒவ்வொரு மண்டலத்திற்கும் தம் பெயரையே வைத்துள்ளான். இதனால் தொண்டை மண்டலம் ஜெயங்கொண்ட சோழ மண்டலமாகவும், நுளம்ப பாடி நிகரிலி சோழ மண்டலமாகவும் மாறியது. இம்மாற்றத்தினை முதல் இராசேந்திர சோழனின் கல்வெட்டு, "நுளம்ப பாடியான நிகரிலி சோழ மண்டலம்" என்று குறிப்பிடுகிறது. சோழராட்சியில் நிலப்பகுப்பு முறை முறையே, மண்டலம் வள நாடு, நாடு, ஊர் என்ற பெயரில் அழைக்கப்பட்டன.

தகடூர் நாடு, புறமலை நாடு, எயில் நாடு ஆகிய நாடுகளுடன் அலைமலை நாடு, வல்லவரையர் நாடு, புலிகரை நாடு என்ற பிரிவுகள் கி.பி.12ஆம் நூற்றாண்டில் இருந்துள்ளதைக் கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். புறமலை நாடு தான் இன்றைய கிருட்டிணகிரிப் பகுதியாகும்.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் நிகரிலி சோழ மண்டலம் முடிகொண்ட சோழ மண்டலமாக மாறியது. வளநாடுகளில் இராசேந்திர சோழ வளநாடு, எதிரிலி சோழ வள நாடு என்ற இரண்டே வளநாடுகள் மட்டும் கிருட்டிணகிரி பகுதியில் இருந்துள்ளதைக் கல்வெட்டுச் செய்திகளிலிருந்து அறியலாம்.

நடசாலைப் பகுதி ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் இருந்துள்ளது. இதன் நாட்டுப் பிரிவுகள் பின்வருமாறு: விரிவு நாடு, எஞ்ஞாடு, மோந்தூர் நாடு, திருமுனைப்பாடி நாடு, புதுக்குன்றி நாடு, நடுவி நாடு என்பன. பாலையூர், கங்கராயனி, கோட்டை, கூடுமுக்கி, நிகளிங்கச்சுரம், திசமச்சுரம், சிகாமணி நல்லூர் முதலிய ஊர்ப்பெயர்களையும் நடசாலைக் கல்வெட்டுகளிலிருந்து அறிய முடிகிறது.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஒசூர்ப் பகுதி முரசு நாடு என அழைக்கப்பட்டது. மேலும் கடத்தூர் நாடு, பெரிய நாடு, மாசந்தி நாடு, தென்கூற்று நாடு என பல்வேறு நாடுகள் கி.பி.13 முதல் 16 ஆம் நூற்றாண்டுகளில் உருவாக்கப்பட்டன.

போசளர்களின் வருகையால் நாடு என்பதற்குப் பதிலியாக "பற்று" என்று இப்பகுதியில் வழங்கியுள்ளனர். கி.பி.13 தாமலூர்ப் பற்று, கி.பி.14 – தென்பற்று, கி.பி.15 – மூக்கனூர்ப் பற்று, கி.பி.16– குடில் பற்று ஆகியவற்றைக் கூறலாம். விஜயநகர ஆட்சியில் இப்பகுதி சீர்மை என்ற புதிய ஊர்ப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. கி.பி.16ஆம் நூற்றாண்டில் குந்தாணி என்ற ஊர் குந்தாணிச் சீர்மை என அழைக்கப்பட்டது. இதுவே தற்காலத்தில் சீமை என வழங்கப்படுகிறது. (சான்று –தென்பாண்டிச் சீமை)

சோழராட்சியில் ஏற்படுத்தப்பட்ட நாடு, ஊர்ப்பிரிவுகள் போசள, விஜயநகர மன்னர்களின் ஆட்சியின் போது பல மாற்றங்களைப் பெற்றன.

இவ்வாறு சோழர், போசளர், கங்கர், நுளம்பர், கொங்கணியர், விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் கிருட்டிணகிரி மாவட்டப்பகுதிகளில்

அம்மன்னர்களின் ஆணைக்குட்பட்டவர்கள் ஆட்சி செய்திருப்பதையும், இம்மாவட்டப் பகுதிகள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதையும் கல்வெட்டுச் செய்திகளின் வழி அறிய முடிகிறது.

**சான்று விளக்க நூல்கள்:**



1. கருமலைத் தமிழாழன், அருள்மிகு மரகதாம்பிகை சமேத ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில் தல வரலாறு, இந்தியன் புக் சென்டர், ஒசூர் 2002.

2. செல்வராஜ், ச. தகடூர் நாட்டுக் கோயில்கள், முதல் தொகுதி, மூர்த்தி புக்ஸ், காவேரிப்பட்டிணம், 1995.

3. நாகசாமி, இரா. (பொ.ஆ), தருமபுரிக் கல்வெட்டுகள், (முதல் தொகுதி), தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை. 1975.

4. Gai, G.S. (Editor), Topographical List Of Inscription (1939-1972) Published by The Director (Epigraphy) Mysore-5. On behalf of The Director General Archaeological Survey of India, 1986.

5. Mahalingam, T.V. A Topographical list of Inscriptions in the Tamil Nadu and Kerala States, Vol. iv. Indian Council of Historical Research, S.Chand and Company Ltd., New Delhi, 1989.

கோபசந்திரம் கல் தேர்க்கால்களை உடைய
மரத்தால் ஆன தேர்

# கிருஷ்ணகிரி மாவட்ட சாக்கியர்கள்

S.சென்னமூர்த்தி
கிருஷ்ணகிரி

சோழர்கள் பல்லவர்கள் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 13ம் நூற்றாண்டு முடிய ஆட்சி செய்தார்கள். மனுவாத சாதிய அமைப்பை எதிர்த்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததால் புத்த தம்ம குடிகளாகிய சமணர்களையும், சாக்கியர்களையும் கொடுமைப் படுத்தியும், இழிவுபடுத்தியும் உள்ளதை அறியலாம்.

கழுவிலேற்றும் வழக்கத்தை "நீலகண்ட சாஸ்திரி" கே.கே.பிள்ளை, சீனிவாச்சாரி, டி.வி. மகாலிங்கம், கராசிமா மற்றும் பர்டன் ஸ்டெய்ன் உட்பட வரலாற்றாளர்கள் வெளிப்படுத்தத் தவறிவிட்டார்கள். "தலித் குடிமகனின் மறுக்கப்பட்ட வரலாறு" என்ற நூலின் ஆசிரியர் ஜே. மோகன் குறிப்பிடுகின்றார் (பக்கம் 72)

சாக்கியர்களைப் பேய்கள் என்றும் மூடர்கள் என்றும் இழித்தும் பழித்தும் எழுதியுள்ளதைத் தேவாரம்,பெரியபுராணம் நூல்களின் மூலம் அறிய முடிகிறது.

"குண்டா டிச்சாமண சாக்கியப் பேய்கள்" - சுந்தரர் தேவாரம்
புத்தர் விகாரையும் இழிவுபடுத்தத் தவறவில்லை.

"மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்களுக்கும் முடம் வைத்த
பீடுடைய புலியூர் - சுந்தரர் தேவாரம்

குண்டாடிய சமண ஆதர்கள்
குடைச் சாக்கியிடர் அறியா - சுந்தரர் தேவாரம்

தமிழக வரலாற்றில் தொழில் அடிப்படையில் தீண்டத் தகாதவர்களாகவும் உள்ளனர். அத்தகைய சாக்கியர்கள் இன மக்கள்தான் கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் வாழும் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர்கள் ஆவார்கள்.

**தென்பெண்ணை ஆற்றங்கரைப் பகுதியில் வசிக்கும் கௌதம புத்தரின் வழித்தோன்றல்களான சாக்கியர்களின் வாழ்க்கை முறைகள்:**

தென்பெண்ணை பாய்ந்தோடும் பகுதியான கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், அரசம்பட்டி, இருமத்தூர், தொட்டம்பட்டி, எம்.பள்ளிப்பட்டி, மருதிப்பட்டி, புங்கனை, கொமாரம்பட்டி, அனுமன்தீர்த்தம், பாவக்கல், எட்டிப்பட்டி, டி.அம்மாப்பேட்டை மற்றும் தூவல் ஆகிய பகுதிகளில் சுமார் 100 ஊர்களில் சாக்கியர் குலத்தினர்கள் வசித்து வருகின்றனர்.

தமக்குப் பிறக்கும் குழந்தைகள் ஆணாக இருந்தால் சாக்கன், சாக்கப்பன் என்றும், பெண்ணாக இருந்தால் சாக்கி, சாக்கியம்மாள் என்றும் தம் குல தெய்வமாகப் போற்றும் சாக்கனாட்சி அம்மன் பெயரில் பெயர் வைத்து அழைக்கின்றார்கள். அவர் தம் குல தெய்வமான சாக்கனாட்சி அம்மன் கோயில் எலவடை கிராமத்தில் உள்ளது. மொரப்பூர் - கல்லாவி சாலையில் 3 கி.மீ. தொலைவில் எலவடை கிராமம் உள்ளது. 5 ஆண்டுகட்கு ஒருமுறை சாக்கியர் குடியினர்கள் குடும்பத்துடன் சென்று சாக்கனாட்சி அம்மன் திருவிழாவில் 3 நாட்கள் தங்கி விழாக் கொண்டாடுகின்றார்கள். இவ்விழாவிற்குப் பெண்கள் வெண்ணிற ஆடை அணிந்தும், பயபக்தியுடனும் கலந்து கொள்வார்கள்.

இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் 'கபில வஸ்து' என்னும் அழகிய நகரம் உள்ளது. அப்பகுதியில் சாக்கியர்கள் வாழ்ந்து வந்தனர். சாக்கியர் குலத்தில் பிறந்த அரசன் சுத்தோதனருக்கும் கோலியர் குலத்தவரான அஞ்சனர் என்பவரின் மகள் மகாமாயா தேவருக்கும் கி.மு. மே திங்கள் வைசாக பௌர்ணமி நன்னாளில் சித்தார்த்தர் பிறந்தார் என வரலாறு ஒன்று பகர்கிறது.

நூல் சாக்கியமுனி புத்தர் (பக்கம் 21) ஆசிரியர் முருகசிவகுமார்

குறிப்பு : தருமபுரி மாவட்டத்திலும், கிருட்டிணகிரி மாவட்டத்திலும் தென்பெண்ணைப் பகுதியில் உள்ள சாக்கியர்களுக்கு உறவுமுறையில் கோலியர் என்று அழைக்கப்படுவார்கள். சித்தார்த்தரின் துணைவியார் யசோதா குலத்தினரும் கோலியன் என்றே அழைக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒகேனக்கல் உகுநீர்க்கல்

முனைவர் **இரா.மதிவாணன்**
மதிப்புறு இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல், அகர முதலித் திட்ட இயக்ககம், சி–48, வீடமைப்பு வாரிய வளாகம், 2–ஆம் நிழற்சாலை, அண்ணாநகர், சென்னை–40. அலைபேசி : 92832 17788

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி தமிழ்நாட்டுக்கே உரியது என்பது வரலாற்று உண்மை. தண்டூன்றி நடந்த இடமெல்லாம் தமிழ் வளர்த்த ஔவையும் அதியமானைப் பாடும்போது "தலைநீர்நாடன்" என அதியமானைப் பாடியுள்ளார்.

**தலைநீர்நாடன்–அதியமான்**

"மலையலர் அணியும் தலைநீர்நாடன்
கண்டாற் கொண்டும் அவன் திருந்தடி வாழ்த்தி"

என்னும் புறநானூற்று வரிகளுக்குச் சேரவேந்தர் செய்யுட் கோவை **(பக்.306)**யில் பேராசிரியர் மு.இராகவையங்கார் "காவிரியின் தலைநீர் பாயும் நாடனாகிய அதியமான்" எனப்பொருள் கூறியிருக்கிறார். சோழநாட்டை நன்செய்நிலமாக்கிய காவிரி, அதியமான் காலத்தில் ஒகேனக்கலுக்கு மேற்பகுதி இருகரைகளிலுமுள்ள ஊட்டமலை, வெளிக்குன்று (பிளிகுண்டு) ஆலம்பாடி ஆகிய பகுதிகளில் நன்செய் நிலம் நெல்விளைய உதவியது தெரிகிறது. இப்பகுதியைத் **தலைநீர்நாடு** என ஔவையார் குறித்திருப்பது கவனிக்கத்தக்கது. காவிரியும், பாலாறும் அதியமானுக்கு உரியவை என்பதால் அதியமானை ஈராற்றுப் பெருந்தலைவன் எனவும் குறிப்பிட்டனர்.

அதியமானின் ஆட்சி எல்லை கொள்ளேகாலம் தலைக்காடுவரை பரவியிருந்தது. அங்கும் ஒரு தகடூர் உண்டாக்கியிருந்தான். அதியமான் பெருவழிக்கல் என்னும் காவதக்கல் இரண்டு தருமபுரியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போக்குவரத்து நெடுஞ்சாலை ஒன்று கிழக்கே மாமல்லபுரத்துப் பகுதியிலிருந்து துறைமுகத்துக்குச் செல்லும் நாவல் தாவளம் அதியமான் பெருவழி. இது மேற்குநோக்கி ஒகேனக்கல் அடைந்ததும் அங்கு மூன்று சாலை கூடுமிடத்தில் உணவுண்டு ஓய்வெடுத்துக் கொள்ளும் சோற்றுமலை அடிவாரம் இன்று ஊட்டமலை (ஊண்–ஊட்டம்=உணவு) எனப்படுகிறது. இங்கிருந்து அஞ்செட்டிக் கணவாய்ச்சாலை மேற்கு நோக்கிக் கொள்ளேகால் தகடூருக்கு (தலைக்காட்டுக்கு)ச் செல்லும் சாலை தெற்கு நோக்கியும் பிரிந்தன. ஆதலால் அதியமான் ஆட்சிக்காலத்தில் ஒகேனக்கல் பகுதி வணிகப்பாதையின் மையமாக இருந்தது என்பதும் புலனாகிறது.

## உகுநீர்க்கல் உயிர்காவிரி :

ஒகேனக்கல் என்பது கன்னடப் பெயர். ஆனால் இப்பகுதியில் உள்ள கல்லாத மக்கள் இதனை ஆடுதாண்டிக்கல் என்றே அழைக்கின்றனர்.

உகுநீர்க்கல் என்னும் பெயர் அதற்கும் முன்பு வழங்கிய பழைய பெயர். 1940ஆம் ஆண்டு கூட, நடத்தப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் "சேமன் சண்டை" என்னும் தெருக்கூத்தில் கட்டியங்காரனாகிய கோமாளி, "நான் கங்கையாடப் போறேன். அட, நான் குமரியாடப் போறேன்" எனப்பாடும் சாமியாரைப் பார்த்து", ஏன் பக்கத்திலிருக்கும் உகுநீர்க்கல்லுக்குப் போகக்கூடாதா? எனக்கேட்டு நகையாடுவதை நான் பார்த்திருக்கிறேன். இதிலிருந்து இதன் பழைய பெயர் உகுநீர்க்கல் என்று தெரிகிறது.

1969ஆம் ஆண்டு சென்னை தம்புசெட்டித் தெருவிலுள்ள புது இலக்கியப் பதிப்பகம் வெளியிட்ட "குளிர் காவிரி" என்னும் கவிதை நூல் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சியை 100 பாடல்களில் வருணிக்கிறது. இதன் ஒன்பதாம் தலைப்பு உகுநீர்க்கல் உயிர்காவிரி எனத்தரப்பட்டுள்ளது.

**"உகுநீர்க்கல் உயிர்கர்வேரி**
**மிகுதானியம் தகவாய்வினை**
**பகுத்துண்பவர் எவராயினும்**
**மிகுநீர் அருள் மகவாய்க்கொள்**
**கொளினே**
**உயிராய்ப் போற்றுவர் உயர்பண் பாடுவர்**
**துயர்நீர் தெய்வத் தாய்நீ எனவே"**

என்பது இத்தலைப்பிலுள்ள முதற்பாடல். இந்து ஆங்கில நாளிதழிலும் இந்நூலின் மதிப்புரை வெளிவந்துள்ளது.

உகுநீர்க்கல் என்பதே ஒகேனக்கல் எனத்திரிந்து விட்டது. கன்னடத்தில் புகையெழும் கல் எனப் பொருள்காட்டுவது முற்றிலும் பொருந்தாது.

உலகில் உள்ள எல்லா நீர்வீழ்ச்சிகளிலும் நீராவி மேலெழுவது இயல்பானது. நீராவி போன்ற நீர்த்துளிப் படலத்தை புகையெனக் கருதிப் பெயரிடுவதாயின் கன்னட நாட்டிலுள்ள "ஜோக்" நீர்வீழ்ச்சிக்குக் கன்னடத்தார் ஒகேனக்கல் எனப் பெயரிட்டிருக்க வேண்டுமல்லவா?

கி.பி.12–ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வட தமிழ்நாட்டில் கன்னட ஆட்சி நிலவிய குறுகிய காலத்தில் ஒகேனக்கல் எனப் பெயரிடும் வரை பன்னூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்த அழகிய நீர்வீழ்ச்சிக்குத் தமிழர்கள் தமிழில் பெயரிடாமலிருந்தார்கள் என்று சொல்லமுடியாது.

## ஆலம்பாடி :

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு எதிர்க்கரையில் ஆலம்பாடி என்னும் சிற்றூர் உள்ளது. இது இந்திய விடுதலைக்கு முன்பு வரையிலும் கூட ஒரு நகரமாகவும் தருமபுரியின் வடக்கு, வடமேற்கு பகுதிகளை உள்ளடக்கிய தமிழ்நாட்டு வட்டாட்சியர் தலைமை இடமாக (தாலுக்கா) இருந்தது என்பது பழைய சேலம் மாவட்டத்து அரசிதழ் (கெசட்டியர்) வாயிலாகவும் தெரிகிறது.

இன்று சிற்றூராகக் காணப்படும் ஆலம்பாடி சார்ந்த கணவாய்ப் பகுதி போக்குவரத்து நெடுஞ்சாலையாக இருந்தபோது இது பெரிய ஊராகவும் வணிகத் தலைநிலமாகவும் இருந்தது. இன்றும் தருமபுரி, பென்னாகரம், இண்டூர் போன்ற இடங்களில் வாழும் வாணியர் எனும் வணிகக் குடும்பத்தாரும் கோயில் பூஜை செய்து வந்த பிராமணக் குடும்பத்தாரும் தங்கள் முன்னோரில் பலர் ஆலம்பாடியில் இருந்தவர்கள் எனக்கூறுகின்றனர். இங்கு மிகவும் சிறப்பு வாய்ந்ததும் சிற்ப வேலைப்பாடுகள் உள்ளதுமான சிவன் கோயில் அழிந்த நிலையில் கேட்பாரற்றுக் கிடக்கிறது. "ஆலம்பாடி நெய்யும் அதிகன்பாடி (அதகப்பாடி) மோரும் மணக்கும்" என்னும் பழமொழியும் இங்கு வழங்கி வருகிறது.

## கன்னடப் பெயர்கள் இயல்பானவை அல்ல :

திப்புசுல்தான் காலம் வரை பாராமஹல் பகுதிகளில் வரிவாங்கும் அதிகாரிகள் கன்னடம் பேசுவர்களாக இருந்ததால் தருமபுரி மாவட்டத்து ஊர்ப்பெயர்கள், மலைப்பெயர்கள், ஆறுகளின் பெயர்கள் ஆகியவற்றைக் கன்னடப் பெயர்களாக வருவாய்த்துறைப் பதிவேடுகளில் பதிவு செய்தனர். அதனை அப்படியே ஆங்கிலேயர் காலத்திலும் பின்பற்றினர். ஆதலால் தருமபுரி மாவட்டத்துக் கன்னடப் பெயர்கள் செயற்கையாகப் புகுத்தப்பட்டன. இவை இயல்பானவை அல்ல.

ஊர்மக்கள் பருவத்தம்பட்டி என்கிறார்கள். வருவாய்த்துறைப் பதிவேட்டில் பருவதனஹள்ளி எனக் கன்னடப் பெயராக உள்ளது. வரகூர் என்னும் பெயர் பருகூர் என்று பதியப்பட்டுள்ளது. இதுபோன்றே உகுநீர்க்கல் ஒகேனக்கல் எனப்பதிவு பெற்றுள்ளது. திப்புசுல்தான் காலத்துப் பெயர் மாற்றங்கள் வரலாற்றை மாற்றிவிடமுடியாது. ஒகேனக்கல்லின் பழைய பெயராகிய உகுநீர்க்கல் என்னும் தமிழ்ப்பெயர் மீண்டும் சூட்டப்படுவது நல்லது.

# கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப் பெயர்கள் ஓர் ஆய்வு

**ச. செல்வராஜ்,** மாவட்டத் தொல்லியல் அலுவலர், தஞ்சாவூர்

**போச்சம்பள்ளி :** கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் சோமேஸ்வரதேவனது கல்வெட்டில் இவ்வூரைப்பற்றி குறிப்பிடும் பொழுது, "பந்தலன் பள்ளி திருவணத்தீஸ்வரமுடைய நாயனார்க்குப் போச்சையன்பள்ளி தேவதானமாக விட்டேன்" என்று போச்சையன் பள்ளி தேவதானம் அளித்த குறிப்பும், ஊரின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. போச்சையன் பள்ளி என்று இருந்து பின்னர் போச்சம்பள்ளி என மாறிவிட்டது. செவிவழிச் செய்தியாகக் கூறும் பொழுது போர் செயன்பள்ளி என்பதே ஊரின் பெயர். போரில் வெற்றி கொண்டவன் இருப்பிடம் என்பது பொருள். தற்போது மருவி அழைக்கப்படுகிறது.

**நடசாலை :** கிருஷ்ணகிரி வட்டத்தில் அமைந்தது. நெடுசால், நெடுந்தேவர், நடசாலை என்று மருவி வந்துள்ளது.

"ஸ்ரீ மகா மண்டலீஸ்வரன் திரிபுவன மல்ல பூர்வாதிராயனே
நெடுந்தேவர் கோயில் தானத் தார்"

என்று அவ்வூர் கோயில் கல்வெட்டுக்கள் அவ்வூரை நெடுந்தேவர் என்றே குறிப்பதைக் காணமுடிகிறது. பின்னர் காலப்போக்கில் நடசாலை என்று திரிந்துள்ளது. இங்குள்ள நடராசர் செப்புத் திருமேனி மிகவும் உயரமான மெலிந்த நிலையில் காணப்படுகிறது. அவர் நெடுந்தேவர் எனக் காரணப் பெயர் பெற்று அந்த இறைவன் பெயராலும் இவ்வூர் பெயர் அமைந்திருக்கலாம்.

**அங்குசகிரி :** இவ்வூரில் அமைந்த மலையின் அமைப்பு யானைப்பாகனின் அங்குசத்தைப் போல் காணப்படுகின்ற காரணத்தால் அங்குசகிரி என்று பெயர் பெற்று இருக்கக்கூடும் என்பர். இப்பகுதியை அங்குராயலு என்ற மன்னன் ஆட்சிபுரிந்ததால் அவன் பெயராலே அங்குசகிரி என்று ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கொள்வதே சாலச் சிறந்தது.

**பஞ்சப்பள்ளி :** மேலகிரி மலை அடிவாரத்தில் பஞ்சப்பள்ளி அமைந்துள்ளது. இதன் அருகாமையில் சனத்குமாரநதி காணப்படுகின்றது. இங்குக் காணப்படும் குளம் விசைய நகர வைசிராய் ஒருவரால் கட்டப்பட்டுள்ளது. அதனை கிருஷ்ணராய சமுத்திரம் என்று பெயரிட்டு அழைத்தனர். தற்பொழுது அழைக்கப்படும் பஞ்சப்பள்ளி எனும் பெயர் பிற்காலத்தில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக வறட்சி ஏற்பட்டு மக்கள் இப்பகுதியில் தஞ்சம் அடைந்து தங்கள் பஞ்சம் நீக்கும் பள்ளியாக இதனைக் கருதி இப்பெயரைப் பஞ்சப்பள்ளி என மாற்றியிருக்கலாம். எப்படி இருப்பினும் இன்றும் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டத்தின் தண்ணீர் பஞ்சத்தைப் போக்கும் ஊராகத் திகழ்ந்து வருகின்றது.

**ஊத்தங்கரை :** கி.பி. 13-14ஆம் நூற்றாண்டில் உள்ள கல்வெட்டு. இவ்வூரைப்பற்றிக் குறிக்கும் பொழுது "ஆடையூர் நாட்டு எயில் நாட்டு தென்பற்று ஊர்க்கரை மேனோக்கின மரமும்" என்று ஊரின் பெயரைக் குறிக்கும் இடத்தில் ஊர்க்கரை என்றே காணப்படுகின்றது. ஊர்க்கரை என்று அழைத்து வந்த பெயர் மருவி ஊத்தங்கரை என ஆனது. பாம்பாற்றின் கரையில் அமைந்த ஊர். எனவே கரை ஊரானது ஊர்க்கரை ஆகி ஊத்தங்கரை என நின்றது.

**வரட்டனப்பள்ளி :** கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மிகப் பழமையான ஊர். சுமார் 50,000 ஆண்டுகட்கு முன்னர் இப்பகுதியில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பழைய கற்கால மக்கள் இங்குத் தங்கி வாழ்ந்துள்ளனர். இங்கு ஒரு தொழிற்பேட்டையும் அமைத்துப் பழைய கற்காலக் கைக் கோடாரிகளைச் செய்து வந்துள்ளனர் என்பதும் ஆய்வில் வெளிப்படுத்தப்பட்ட உண்மை ஆகும். இவ்வூர் பிற்காலத்தில் மாற்றம் பெற்றது என்பதற்கு வரட்டனப்பள்ளி நரசிம்மசாமி கோயில் அருகே உள்ள குன்றில் கிடைத்த கல்வெட்டு தெளிவான சான்றாக நிற்கின்றது. அக்கல்வெட்டில் பிராமணருக்குச் சர்வ மான்யமாக கொடுத்த தானத்தைக் குறிக்கும் பொழுது வரட்டனபள்ளியின் பழைய பெயர் கங்கராயச் சதுர்வேதி மங்கலம் என்ற குறிப்பும் கிடைக்கின்றது. அந்தணர்களுக்குத் தானமாக அளித்த பகுதியைச் சோழர்கள் காலத்தில் சதுர்வேதி மங்கலம் என்று குறிப்பது வழக்கம்.

கல்வெட்டு வாசகம் :

"அங்கணப்பற்று வரட்டனப்பள்ளியான கங்கராயச் சதுர்வேதி மங்கலம் நஞ்செய் புஞ்செய் நாற்பால் எல்லையும் மேனோக்கின மரமும் கீனோக்கின கிணறும் தேவதானம் திருவிளையாட்ட முட்பட்ட இருபத்தெட்டு பிராமணருக்கும் சர்வ மான்யமாகக் குடுத்தேன்." என்று குறிக்கின்றது. இதில் வரட்டனபள்ளியின் பெயர் கங்கராயச் சதுர்வேதிமங்கலம் என்றும் கல்வெட்டு வெட்டப்பட்ட காலத்தில் வரட்டனபள்ளி என இருந்தமைக்கும் இதுவே சான்றாகும்.

**கும்மளாபுரம் :** கும்மளாம் பூ - தாமரை - குமிழும் பூ. இவ்வூர் தாமரை நகர் என்று அழைக்கப்பட்டுள்ளது. இங்கு 101 குளங்கள், 101 கோயில்கள் இருந்ததாக மாவட்ட விவர நூல் குறிக்கின்றது. இப்பெயர் காரணப் பெயராக அமைந்துள்ளது.

**இரத்தனகிரி :** சனத்குமார நதியின் தெற்குப் பகுதியில் பேவு நத்தம் கிராமத்தின் அருகே அமைந்துள்ளது. இது ஒரு தன்னாட்சி பெற்ற அரசாக இயங்கி வந்துள்ளது. பின்னர் ஜெகதேவராயர் தன்வசம் வைத்திருந்தார். கி.பி. 1652இல் தேன்கனிக்கோட்டையை ஆண்ட இட்டிபால்ராவ் என்பவரிடம் இருந்து மைசூரை ஆண்ட கந்திரவ நரச ராஜா பெற்றார். இரட்டிபால்ராவ் பெயரால் இட்டிகல் துர்கம் என்றும் அதுவே வீரபத்திர துருகம் எனவும் இரத்தினகிரி எனவும் வழங்கி வருகின்றது.

**சூளகிரி :** மலைகளின் அமைப்பு சூலம் போன்ற அமைப்பில் அமைந்துள்ளதால் சூலம் கிரி, கிரி என்பது மலையைக் குறிப்பது. அதன்

அடிப்படையில் சூளகிரி ஏற்பட்டது என்பர். கிரி என்ற பெயரில் ககனகிரி, அங்குகிரி, கிருஷ்ணகிரி போன்றவை குறிப்பிடத்தக்கன.

**மகாராஜகடை :** இவ்வூரை அங்கணாச்சி மலை. அங்கண நாச்சியம்மன், அங்கடிப்பாறை என குறிப்பர். இம்மலை மீதுள்ள அம்மன் பெயராலே அமைந்துள்ளது. பின்னர் மராட்டிய மன்னன் சிவாஜி இம்மலையில் வந்து தங்கியதால் "அரசு நின்ற நிலை" என்றும் பின்னர் அதுவே மகாராஜகடை என்றும் கன்னட மொழியின் தாக்கத்தில் அமைந்தது.

**ஒசூர் :** கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதலே இவ்வூரை குறிக்கும் கல்வெட்டுக்கள் செவுடபாடி என்றே குறிப்பிடுகின்றன. "வீரவிஸ்வநாத தேவராயர் செவிடபாடியில் உடையார் செவிட நாயனார் கோயிலில்" - என்ற விஸ்வநாதன் கல்வெட்டும், பிற கல்வெட்டுக்களும் செவிடபாடி என்றே குறிக்கின்றன. செவிட நாயனார் என்பது சேயுடை நாயனராக இருந்திருத்தல் வேண்டும். சோமாஸ் ஸ்கந்தரை சேயுடை நாயனாராகக் குறிப்பர்.

**செடிகள், மலர்ப் பெயர்கள் :** கடுக்காய்ப்பட்டி - எலுமிச்சன அள்ளி, எட்டிமரத்துப்பட்டி, எருக்கம்பட்டி, ஆலமரத்துப்பட்டி, நெல்லிமரத்துப்பட்டி, கருவேலம்பட்டி, புல்லுகுறிச்சி இவைகள் அந்தந்தப் பகுதியில் அமைந்த மூலிகைச் செடிகள் பெயர்களிலேயே ஊரின் பெயரும் அமைந்துள்ளது சிறப்பிற்குரியது ஆகும். இது போன்ற மலர்கள் அல்லியூர், தாமரைக்கோயிலம்பட்டி, கும்மளாபுரம் போன்றவை குறிப்பிடலாம்.

**விநோதப் பெயர்கள் :** உலகம், உலகம் காத்தான் போன்ற விநோதமான பெயர்களையும் காண முடிகிறது.

**நிறைவு :** பொதுவாக ஊர்ப்பெயர்கள் ஆய்வு அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை, தொழில், இயற்கை வளம், பண்டைய பெயர்கள், காரணப் பெயர்கள், மாற்றம் பெற்றவையா அன்றி மாற்றிக் கொள்ளக்கூடியவையா எனவும் தூய தமிழ்ப் பெயர்கள் இவை அனைத்தையும் இவை நமக்கு இவ்வாய்வின் மூலம் தெளிவுபடுத்துகின்றது.

---


*உதவிய நூல்கள் :*

1. முனைவர் எ.இராமசாமி — மாவட்ட விவர நூல் சேலம், தமிழ்நாடு அரசு 1967
2. முனைவர் சீதாராம் குருமூர்த்தி — கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வெட்டுக்கள்
3. சேதுப்பிள்ளை ரா.பி. — தமிழகம் ஊரும் பேரும் 1946
4. செல்வராஜ்.ச. — தருமபுரி மாவட்ட ஊர்ப் பெயர் ஆய்வு
5. ஏ.ஆர்.இ. — 1971-72
6. ஏ.ஆர்.இ. — 1975-76
7. முனைவர் இரா.நாகசாமி — தருமபுரி மாவட்டக் கல்வெட்டுக்கள்
8. முனைவர் கி.ஸ்ரீ.ஸ்ரீதர். இ.ஆ.ப. — பாறை ஓவியங்கள் 2004

# கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப் பெயர்கள்

'பேராசிரியர்' **தி.கோவிந்தன்**

கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப்பெயர்களின் பழைய வடிவங்கள் தொகுப்படும்போது சங்க காலச் சொல் மரபும், திரிபு வடிவங்களும் தெளிவாகும்.

கிருஷ்ணகிரி என்ற பெயரைப் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள். கிருஷ்ணதேவராயருடன் இணைத்துக் காண்பர். சிலர் இறைவன் கிருஷ்ணனொடு சார்த்திக் காண்பர்.

சங்க காலத்தில் இன்றைய கிருஷ்ணகிரி மலைக்கு இருந்த பெயர் கருங்கல் என்பது. மலையைக் கல் என்றழைப்பது வழக்கே. கிருஷ்ணகிரிப் பகுதியில் கல் என்பது பெருவழக்கு. எடுத்துக்காட்டு நெடுங்கல், உச்சிக்கல், பாவக்கல், தட்டக்கல். கல் ஆயர், கல்கோபர் என்ற வழக்கமும் உண்டு. கருங்கல் என்ற பெயரை நரிவெருஉத் தலையார் புறநானூற்றில் 'எருமையன்ன கருங்கல்' என்று எடுத்துக் காட்டுகிறார்.

1.இந்தக் கருங்கல் என்னும் பெயரே பிற்காலத்தில் கரியகல் என்ற பொருளில் கிருஷ்ணகிரி ஆயிற்று. எடுத்துக்காட்டாகத் தோட்டி மலையைக் குறிப்பிடலாம். தொட்டு உணர்த்தும் கருவிக்குத் தோட்டி என்பது பெயர். தோட்டி போலத் தோற்றம் கொண்டது தோட்டிமலை. இந்த மலையை அங்குசகிரி என்று மொழி மாற்றி அழைத்தனர். இவற்றை எல்லாம் ஒப்புநோக்கினால் கருங்கல்லே கிருஷ்ணகிரி ஆயிற்று என்பது தெளிவாம். யானை வலசை விளங்கும் கருமலை என்பது இன்றைய கிருஷ்ணகிரிக்கு முற்றிலும் பொருந்துவதாம். இப்புறப்பாட்டின் நாயகனும் பாடலைப் பாடிய புலவரும் இம்மலைக்கு அருகில் வாழ்ந்தவர் என்பது ஒரு கூடுதல் செய்தி.

2. பண்டைத் தமிழ்வினைச் சொற்களுள் ஒன்று 'உந்து' என்பது. இச்சொல் உடல் உறுப்பில் 'உந்தி' என்றாயிற்று. முன் உந்துதல், முந்துதல். இவ்வாறே பிந்துதல், விந்துதல் என்ற சொற்களையும் பகுத்துக் காணலாம். உந்துதல் என்ற சொல்லின் பிறவினை வடிவம் உத்துதல். உந்துதல் விசைத்தெழுதல். உந்துதல் விசைத்தெழச் செய்தல். மாவினத்தை விசைதெழச் செய்தல் மா உத்துதல். மாவினை உத்துவோர் மாவுத்தர். இச்சொல் யானையை உத்துவோர்க்கு சிறப்புப் பெயராகிப் பின்னாளில் யானைப் பாகரையே மாவுத்தர் என்ற சொல் குறிப்பதாயிற்று.

மாவுத்தன் வாழும் தரை மாவுத்தர்தரை. ஊற்றுக்களால் ஆன தரை ஊற்றாம் தரை. இச்சொல் ஊற்றங்கரை என்றாயிற்று. காகம் மிகுந்திருந்த இடம் காகந்தரை. காகங்கரை ஆயிற்று. (காக்கா ஏரி போல). மாவுத்தன்தரை

மாவுத்தன்கரையாயிற்று. இக்கரை 'ரெ' என்றாகி பின்னர்ப் 'கிரி' யாயிற்று. இவ்வாறு மாவுத்தங்கரை மாவுத்தகிரியாயிற்று. அச்சொல் இன்று மத்தகிரியதாயிற்று.

3. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தொன்மையான ஊர்களில் ஒன்று தென்கனிக்கோட்டை என வழங்கப்படும் ஊர். இவ்வூருக்கு டெங்கினிக்கோட்டை என்ற பெயரும் உண்டு. இவ்வூரில் உள்ள பெருமாகளுக்கு வேட்டராயர் என்பது பெயர். இது கண்வ முனிவரொடு தொடர்புப்படுத்தப்படும் ஊர். டிங்கனிமகாத்மியம் என்ற புராணம் இந்த ஊர்க்கோயிலுக்கு உரியது.

டெங்கனிக்கோட்டை
டிங்கனிக் கோட்டை
தென்கனிக்கோட்டை
தென் கானக்கோட்டை

என்ற பல பெயர்கள் இவ்வூர்க்கு உண்டு. ஒவ்வொரு பெயர்க்கும் ஒரு காரணம் உண்டு. அந்தக் காரணம் ஏற்கக்கூடியதாகவும் அமைந்திருக்கும் இவ்வாறு உள்ள இந்த ஊரின் தொன்மையான வடிவத்தை அறிவது எப்படி? எல்லாப் பெயர்களும் கோட்டை இருந்ததை உறுதி செய்கின்றன. ஆகவே ஊர்ப்பெயர் இறுதியில் கோட்டை என்றே அமைந்திருந்தது என்பது உறுதியாகும்.

தமிழ்நாட்டில் காட்டுக் கோட்டை உண்டு. மலைக்கோட்டை உண்டு. நிலக்கோட்டை உண்டு. இந்தப் பெயர்களுக்குள் இந்த ஊர்க்கு ஒத்து இருப்பது காட்டுக் கோட்டை என்பது. இங்குள்ள காடுகளுக்குக் கானம் என்ற பெயரே பெருவழக்கு. எடுத்துக்காட்டு முதுகானம், ஆவகானம், நாரகானம், சேவகானம். அதனால் இந்த ஊரும் கானக்கோட்டை என்றே அழைக்கப்பட்டதென்று உறுதியாகும்.

கானக்கோட்டை தென்திசையில் இருப்பதால் தென்கானக் கோட்டை என்று பெயர் என்பர். தெற்கே உள்ள கானம் என்றால் பெயரிட்டவர்ல் இந்த கானகத்திற்கு வடக்கே உள்ளவராதல் வேண்டும். கானத்திற்கு வடக்கே இருந்தவர். இக்கானத்தை தென்கானம் என்றழைக்கவில்லை. ஆகவே 'தென்' என்பது பொருத்தமில்லாமல் உள்ளது. இவ்வூர்க்கு அருகில் தேன்கானம் என்ற ஊர் உள்ளது. அவ்வூரை அடுத்துக் கோட்டை அமைந்திருந்தது. அதனல் தேன்கனிக்கோட்டை என்று பெயரிட்டு அழைத்தார்கள் என்பது இயல்பான முடிபேயாகும். இப்பகுதிவளமானது, தேன்வளம் மிகுந்தது. ஆகவே தேன்கானக்கோட்டை என்பது மருவியது என்று தெளியலாம்.

இந்தப் பொருள் மரபு புலனாகாமையால், தங்கள் கருத்துக்கு இசைவான சொற்களைக் கொண்டு பெயரை விளக்கம் செய்ய முன்றவர்கள் அந்தக் கருத்திற்கு இசையப் புராணம் செய்தனர் என்று கொள்ளலாம். சான்றாக 'சே' என்றும் பெயரால் கன்றுகளை அழைத்த ஆயர்களுக்குச் சே இடையர் என்பது பெயர். அவர்கள் வசித்த இடம் சே இடைப்பாடி. அது செவிடப்பாடியாயிற்று. அந்த மலைக்கு எருதுமலை என்றே பெயர். எருதுமலையை இடபகிரியாக்கி, இடபத்தை தருமதேவருடையாக உருவகித்து ஒசூர்ப்புராணம் செய்தனர். இது காலந்தோறும் ஏற்படும் மாற்றம். தமிழ்மரபு கொண்டு ஊர்ப் பெயர்களை நுட்மாகக் கண்டால் மேலும் பல செய்திகள் புலனாகும்.

# கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப் பெயர்கள்

கோ.சீனிவாசன்,

முனைவர் பட்ட ஆய்வாளர், அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

## முல்லை நிலம் :

காடுகளும், மலைகளும் சூழ்ந்த பகுதியாகக் கிருஷ்ணகிரி மாவட்டம் உள்ளது. இதன் எல்லைகளாகக் கிழக்கே வேலூர் மாவட்டமும், திருவண்ணாமலை மாவட்டமும் உள்ளன. மேற்குப் பகுதியில் கர்நாடகமும், வடக்குப் பகுதியில் ஆந்திர மாநிலமும், தெற்குப் பகுதியில் தருமபுரி மாவட்டமும் எல்லைகளாக உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப்பெயர்களில் வரலாற்றுச் சிறப்பும், பண்பாட்டுத் தாக்கமும் பொதிந்து உள்ளன. அத்தகைய ஊர்ப் பெயர்களில் முல்லை நிலத்தைப் பொதுக்கூறாக கொண்ட ஊர்ப்பெயர்கள் மட்டும் ஆராயப்படுகிறது.

தொல்காப்பியத்தில் காடும் காட்டைச் சார்ந்த பகுதியையும் முல்லை நிலம் என்று வகைப்பாடு செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் காடுகள் நிறைந்த பகுதி இப்பகுதியில் கால்நடை வளர்ப்புத் தொழில் முக்கியமானதாக உள்ளது. கர்நாடகச் சமவெளிப் பகுதியிலிருந்து மேய்ச்சல் தொழிலுக்காக இப்பகுதிக்கு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். காலப்போக்கில் நிரந்தரக் குடிகளாக மாறிவிட்டனர். நாகரிகம் வளர்ச்சியடையக் காட்டிலிருந்த மக்கள் பிற பகுதிகளிலும் குடியேறினர். அப்படிக் குடியேறிய பகுதிக்குத் தன் தொழிலின் அடிப்படையிலும், அவர்கள் சார்ந்திருந்த நிலத்தின் தன்மையை அடிப்படையாக வைத்தும் ஊர்களுக்குப் பெயரிட்டுள்ளனர்.

## முல்லை நிலம்

கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப்பெயர்களில் 1. பொதுக்கூறு 2. சிறப்புக் கூறு என்று இரண்டு வகையான பிரிவுகள் உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட முல்லை நிலத்தின் பொதுக்கூறு வடிவங்களான 'பட்டி' தொட்டி, தண்டலை, நத்தம், தோட்டம், அட்டி, பாடி, வாடி என்று எட்டு வகையில் அமைந்துள்ளன.

### பட்டி

முல்லை நிலத்து ஊர்ப் பெயர்களின் பொதுக்கூறு வடிவம் 'பட்டி' ஆகும். சங்ககாலத்தில் 'பட்டி' என்ற சொல், கால்நடைகளை அடைத்து வைப்பதற்கான இடம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

'பட்டி' என்னும் சொல் முல்லை நிலத்து ஊர்களைக் குறிக்கும்' என்கிறார்[1] ரா.பி.சேதுப்பிள்ளை. மேலும், ஒய்.சுப்பராயலு, பட்டி என்ற சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்.

'பட்டி' என்ற வடிவம் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. ஆனால் அது ஊர்களைக் குறிப்பிடும் சொல்லாகவோ தொழுவினைக் குறிப்பிடும் சொல்லாகவோ இல்லை. கி.பி. 11–ஆம் நூற்றாண்டு வரை நில அளவைக் குறிப்பிடும் ஓர் அலகாகப் பட்டி இருந்திருக்கின்றது.[2]

கிருஷ்ணகிரி மாவட்ட ஊர்ப்பெயர் பொதுக்கூறு முடிவுகளில் **264** இடங்களில் 'பட்டி' பின்னொட்டாக அமைந்துள்ளது.

தாவரங்களின் அடிப்படையில் ஆலம், வேம்பு, மூங்கில், முருங்கை, புளி, புங்கம், பனை, வேலம், மரங்களின் பெயராக ஆலப்பட்டி, வேப்பாலம்பட்டி, முருங்கப்பட்டி, புளியம்பட்டி, புங்கம்பட்டி, வேலம்பட்டி, பனைமரத்துப்பட்டி என்றும் பெயர் வந்துள்ளது. காட்டுப் பகுதியில் குடியிருப்பு இருந்த காரணத்தினால் காட்டு சிங்கிரிப் பட்டி என்றும் பெயர் அமைந்துள்ளது.

விலங்குப் பெயர்களாக 'ஜிங்கல் கதிரம் பட்டி' நாகல்பட்டி, என்னும் பெயர்கள் வந்துள்ளன. 'ஜிங்கலு' என்கிற தெலுங்குச் சொல்லுக்கு 'மான்' என்று பொருள் பண்டைய காலத்தில் இப்பகுதி காடாக இருந்தது. காட்டில் பெருமளவு மான்கள் இருந்ததால் இப்பெயர் வந்துள்ளது. போக்குவரத்து வாகன வசதிகள் இல்லாத காலத்தில் கழுதைகளின் மேல் மூட்டைகளை அடுக்கி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வர். துணி மூட்டைகளையும் கழுதையின் மேல் இட்டுச் செல்வர். கழுதைகளை வளர்த்து வந்ததால் கழுதைப்பட்டி என்று பெயர் வந்துள்ளது.

தொழிலின் அடிப்படையில் பூசாரிப்பட்டி, கொட்டுக்காரன் பட்டி என்ற பெயர்கள் காணப்படுகின்றன. பூசாரித் தொழில் செய்கின்றவர்கள், மேளம் (இசைக்கருவி) வாசிக்கின்றவர்கள் இருந்த குடியிருப்புகளாக இவை இருந்துள்ளன.

சாதியின் அடிப்படையில் அமைந்த ஊர்ப் பெயர்களாக கொல்லப்பட்டி, குரும்பட்டி, தாசம்பட்டி, அப்பிநாயக்கன்பட்டி, ரெட்டிப்பட்டி, சாலை ஜோகிப்பட்டி, ஒட்டப்பட்டி, பாப்பாரப்பட்டி, மேல் வெள்ளாளப்பட்டி, செட்டிப்பட்டி, வண்ணாத்திப்பட்டி, லிங்கனாம்பட்டி, வேடப்பட்டி ஆகிய ஊர்ப்பெயர்களில் கொல்லர், குருமர், நாயக்கர், செட்டி, ஜோகி, ஒட்டர், பார்ப்பனர், வெள்ளாளர், நாயுடு, செட்டியார், வண்ணார், லிங்காயத்தார், வேடர் ஆகிய சாதிகள் இடம் பெற்றுள்ளன.

உறவுமுறைப் பெயர்களாக மகனூர் பட்டி என்றும் விசுவாசமாக இப்பகுதியில் ஒருவர் இருந்த காரணத்தினால் விசுவாசப்பட்டி என்றும் உடல் அங்க குறைகளை வைத்து சப்பாணிப்பட்டி, குள்ளம்பட்டி என்னும் பெயர் வந்துள்ளன.

'பட்டி' என்கிற பொதுக்கூறு வடிவம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பெரும்பாலும் முல்லை நிலத்தையே குறிப்பிடுவதாக உள்ளது.

### பாடி

இடையர் குடியிருப்புப் பகுதிகளை 'பாடி' என்று அழைக்கப்படுவதுண்டு, 'பட்டி' என்கிற சொல் சங்க இலக்கியத்தில் 51 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இடப்பெயரிலும், வினையிலும் இச்சொல் வருகின்றது. வினையில் வருகின்ற பொழுது வாழ்த்துதல் என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகிறது.

தாவரத்தின் அடிப்படையில் இலவம், அத்தி மரங்களின் பெயரால் இலவம்பாடி என்றும், அத்திபாடி என்றும் வழங்கப்பட்டு வருகிறது. வயல்வெளிகள் காணப்பட்டதால், பழனம்பாடி என்றும், படைத் தளவடங்களுடன் தளபதிகள் இருந்த காரணத்தினால் சின்ன தாளப்பாடி, பெரிய தாளப்பாடி என்றும் பெயர் வந்துள்ளது.

மல்லப்ப நாயக்க மன்னரின் பெயரால் மல்லப்பாடி என்றும் பெயர் வந்துள்ளது.

### வாடி

'பட்டி' 'வாடி' பகரம்–வகர மாற்றமடைந்து தெலுங்குச் சொல்லாக 'வாடி' என்று முல்லைநில குடியிருப்பைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. விலங்குகளின் அடிப்படையில் ஆவத்துவாடி, கப்பல்வாடி என்ற பெயர்கள் 'ஆவு' என்கிற தெலுங்குச் சொல்லுக்கு 'மாடு' என்று பொருள். தெலுங்கில் 'கப்பலு' என்றால் தவளை என்று பொருள். தாவரத்தின்அடிப்படையில் தெலுங்கில், 'நிம்மல் வாடி' நிம்ம என்றால் எலுமிச்சை என்று பொருள். எலுமிச்சை மரங்கள் மிகுந்திருந்த காரணத்தினால் இப்பெயர் வந்துள்ளது.

'ஒப்பதவாடி' என்னும் ஊர் காடுகள் சூழ்ந்த பகுதி. 'ஒப்ப' என்ற தெலுங்குச் சொல்லுக்கு 'புதர்' என்று பொருள் முட்புதர்கள் பெருமளவில் காணப்பட்டதால் ஒப்பதவாடி என்று பெயர் வந்துள்ளது.

'வாடி' என்கிற பொதுக்கூறு வடிவம் தாவரம், விலங்குகளின் பெயராலேயே வந்துள்ளது.

### தொட்டி

தமிழில் 'பட்டி' என்ற சொல், தெலுங்கில் 'தொட்டி' என்று வழங்கப்பட்டு வருகிறது. ஆந்திர மாநில எல்லையை ஒட்டியுள்ள தளி, சூளகிரிப் பகுதியில் தொட்டி என்கின்ற பொதுக்கூறு வடிவம் பெருமளவில் காணப்படுகின்றது. இப்பகுதிகளில் தெலுங்கு பேசும் மக்கள் பெருமளவில் காணப்படுகின்றனர்.

'தொட்டி' என்கிற பொதுக்கூறு வடிவம் பெரும்பாலும் ஆட்பெயர்களின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டு வருகிறது.

இந்தப் பெயர்கள் ஊர் மூத்தவர்களின் பெயரிலோ, ஊர்த் தலைவரின் பெயராலோ, வழங்கப்பட்டு வருகின்றன. ஆட்பெயர்களின் அடிப்படையில் புட்டன் தொட்டி, இராமன் தொட்டி, பாப்பையன் தொட்டி, கிரியப்பன் தொட்டி, ரகமான் தொட்டி எனப் பலவகை அமைந்துள்ளன.

சாதியின் அடிப்படையில் கவுண்டர், போயர், செட்டியார், ஆச்சாரி, பூசாரி என்ற பெயரில் சாம்பு கவுண்டான் தொட்டி, லம்பாடி தொட்டி, செட்டிராம தொட்டி, முனிபோயன் தொட்டி, வெங்கட்டாச்சாரி தொட்டி, ராசநாயக்கன் தொட்டி, பூசாரி தொட்டி என்றும் பெயர் வந்துள்ளது.

## தண்டரை

'தண்டரை' என்பது சோலையைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. கெலமங்கலம் பகுதியில் மட்டும் தண்டரை என்ற ஊர் உள்ளது. கெலமங்கலம் பகுதியில் லம்பாடிகள் பெருமளவில் வசித்து வருகின்றனர். இவர்கள் குடியிருக்கும் பகுதிக்குத் தண்டரை என்று பெயரிட்டு வழங்குகின்றனர். தண்டரை கெலமங்கலம் பகுதியில் வழங்கப்படும் ஊர்ப்பெயராகும் இவ்வூர் லம்பாடிகளின் குடியிருப்பைக் கொண்டதாக உள்ளது. இச்சொல் தண்டலை என்பதன் திரிபாகும்.

## தோட்டம்

மரம், செடிகளின் கூட்டம், தோப்பு, தோட்டம் என்று வழங்கப்பட்டு வருகிறது. காடுகளில் வசித்து வந்த மக்கள் பொருளாதாரத் தேவைக்காக தென்னை, புளி, வாழை, பலவகை மரங்களைத் தோட்டங்களாக வளர்த்தனர். பின்னர்த் தோப்புகளைக் காவல் காக்கவும், தோப்புகளில் குடியேறினர். பிறகு அந்த தாவரத்தின் பெயராலேயே ஊருக்குப் பெயரிட்டு அழைத்தனர். சான்றாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாளே தோட்டம், ஜாமத் தோட்டம், பனந்தோப்பு, புளியந்தோப்பு, அன்ன பாளே தோட்டம் என்பவையாகும். ஜாமம் என்ற தெலுங்குச் சொல்லுக்குக் கொய்யா என்று பொருள் 'பாளே' என்ற கன்னடச் சொல்லுக்கு 'வாழை' என்று பொருள்.

## அட்டி

'பட்டி' என்ற சொல் கன்னடத்தில் அட்டி என்று வழங்கப்பட்டு வருகிறது. சங்க இலக்கியத்தில் அட்டி என்ற சொல், உணவு, சமையல் செய்யும் இடம் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இடப்பெயராக வழங்கப்படவில்லை. தமிழில் வழங்கும் 'பகரம்' கன்னடத்தில் அகரமாக ஒலிக்கப்படுகிறது. குறிப்பாக 'பாலு' கன்னடத்தில் 'ஹாலு' என்றும் 'பத்து' என்கிற எண்ணைக் குறிப்பதற்கு ஹத்து என்றும் வழங்கப்பட்டு வருகிறது.

தாவரங்களின் அடிப்படையில் உணிசெட்டி, உள்ளட்டி கன்னடத்தில் உளி என்றால் புளியையும் 'உள்ளு' என்றால் புல்வெளியையும் குறிக்கும்.

அதியமான் நெடுமான் அஞ்சியின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக இருந்ததினால் 'அஞ்செட்டி' என்னும் பெயர் வந்துள்ளது.

சாதியின் அடிப்படையில் ஜொகட்டி என்றும் பெயர் வந்துள்ளது.

## தொகுப்புரை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முல்லை நிலத்து ஊர்களில் பெரும்பாலும் தாவர விலங்கு பெயர்கள் அமைந்துள்ளன. குறிப்பாகத் தாவர வகைகளில், வேம்பு, ஆலம், பனை போன்ற தாவரங்கள் மிகுதியாக இருந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமூகத்தின் அடிப்படையில் ரெட்டி, நாயக்கர், கவுண்டர் சாதிகள் உள்ளன. இருப்பினும் தொழிலின் அடிப்படையில் இடைநிலைச் சாதிகளான மேளக்காரர், வண்ணார், போயர், சாதிகளும் ஊர்ப் பெயர்களில் காணப்படுகின்றன. இடைநிலைச் சாதிகளின் ஆதிக்கமும் ஊர்ப்பெயர்களில் இருப்பதை அறிய முடிகிறது. முல்லை நில ஊர்ப்பெயர்களில் பெரும்பாலும், தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளின் தாக்கம் காணப்படுகிறது.

## ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்


1. சேதுப்பிள்ளை, ரா.பி. 1950, தமிழகம் ஊரும் பேரும், சென்னை, இராஜன் அச்சகம்.
2. நாகராசன், கரு.டாக்டர், 1985, செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள், சென்னை, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
3. பகவதி கே. 1986, தமிழக ஊர்ப்பெயர்கள், சென்னை, உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்.
4. மணிமாறன், பா.அ.ம.முனைவர், 2004, மதுரை மாவட்ட ஊர்ப் பெயர்கள்–ஓர் ஆய்வு, சென்னை, தி.பார்க்கர்.
5. Ramachandran K.S. 1980, Archaeology of South India Tamil Nadu, Delhi, SUNDEEP PRAKASHAN
6. Richards, F.J. 1918, Madras, District Gazetteers, Salem, Madras, Government Press.
7. Ramachandra Murthy, S.S. Dr. 1985, Study Of Telgu Place Names, Delhi, Agam Kala Prakashan.



**தொடர்பு முகவரி**

142/72, இலட்சுமணராவ் தெரு,
புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி.
அ.கு.எண். 635 001.

தொல்லியல் ஆய்வு சுமார் 150 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. தொல்லியல் ஆய்வுடன் தொல்மாந்தர் ஆய்வும் **(Anthropology)** இணைந்து செயல்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுகள் மூன்று பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

1. அகழாய்வுகளில் கிடைக்கின்ற கருவிகள், மட்கலங்கள் போன்றவை.

2. சவக் குழிகளில் கிடைக்கின்ற எலும்பு, மண்டை ஓடுகள் போன்றவை.

3. தற்காலப் பழங்குடிகளுடன் இவற்றை ஒப்பு நோக்குதல்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் செய்யப்பட்ட ஆய்வுகள் தொல்குடிகளின் தனிப்பட்ட பண்பாட்டுக் கூறுகளை வெளிபடுத்துவனவாக உள்ளன. தமிழகத்தில் இத்தகைய ஆய்வுகள் செய்யப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தனித்தன்மை உள்ளது என்பது தெரியவருகிறது. இத்தகைய மாற்றங்களுக்கு அப்பகுதியில் நிலவும் இயற்கையமைப்பே காரணம். இதன் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கற்காலம் :** மனித இனம் தோன்றிய பின்னர் அவர்களுடைய உணவுப் பொருட்களைக் கல்லால் ஆன ஆயுதங்களின் உதவியுடன் பெற்றனர். கல்லாயுதங்கள் மட்டும் தெரிந்திருந்ததால் இக்காலம் கற்காலம் **(Stone Age)** என்று அழைக்கப்பட்டது.

கிருட்டிணகிரி மாவட்டத்தில் உள்ள வரட்டனபள்ளி என்ற ஊரில் சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கற்கால மக்களின் கல்லாயுதங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கொற்றலை ஆற்றின் கரையில் சுமார் 32 இடங்களில் பழைய கற்கால மக்களின் கல்லாயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் கிடைத்த கல்லாயுதங்கள் செய்த தொழில் நுட்பத்தின் அடிப்படையில் இதற்குச் "சென்னைக் கல்லாயுதத் தொழிற்பட்டறை" **(Madras Industry)** என்று பெயரிடப்பட்டுள்ளது.[2] தற்போது வரட்டனபள்ளியில் கிடைக்கின்ற கல்லாயுதங்களும் மேற்கண்ட கல்லாயுதங்களைப் போன்று உள்ளன. எனவே, இங்குக் கிடைக்கின்ற கல்லாயுதங்கள் செங்கல்பட்டுப் பகுதியில் கிடைக்கின்ற கல்லாயுதங்களின் வளர்ச்சியடைந்த நிலை என்று கூறலாம். வரட்டனப்பள்ளியில்

கிடைக்கின்ற கல்லாயுதங்கள் இடைக்கற்கால கல்லாயுதங்களாகும். இங்கு கைக்கோடாரி, வட்டக்கருவிகள், கிழிப்பான்கள் போன்றவை கண்டெடுக்கப் பட்டுள்ளன.

இடைக்கற்கால மக்களின் வளர்ச்சியடைந்த நிலையே கடைக்கற்காலம் **(Late Stone Age)** என்று பெயரிடப்பட்டுள்ளது. கல்லாயுதங்களைச் செய்யும் தொழில் நுட்பத்தில் கடைக்கற்கால மக்கள் புதிய தொழில் நுட்பத்தைக் கையாண்டனர். கடைக்கற்காலத்தைச் சார்ந்த மக்களின் கல்லாயுதங்களும் பர்கூர், கப்பல்வாடி மலையடிவாரங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்கால மக்கள் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் வந்தவர்கள்[3], இதைத் தொடர்ந்து நுண்கற்காலம் **(Microlithic Age)** என்று அழைக்கப்படுகின்ற சிறிய கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளனர். இக்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் பையப்பள்ளி, தொகரப்பள்ளி, மயிலாடும்பாறை போன்ற இடங்களில் கிடைக்கின்றன[4]. இக்கால மக்கள் குகைகளிலும், குகை போன்ற பாறைகளின் அடிவாரங்களிலும் வாழ்ந்தனர். காட்டு மிருகங்கள், கிழங்கு, காய்கனிகள் இவர்களுடைய உணவாக இருந்தன. இவர்கள் தங்களுடைய உணவைத் தேடி மிருகங்களுடன் மிருகங்களாகக் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்தனர். கல்லாயுதங்களைத் தவிர மற்ற உலோகங்களின் பலன் தெரியாத காலமாக இருந்ததால் இக்காலம் கற்காலம் என்று அழைக்கப்படுகிறது.

**புதிய கற்காலம்:**

கிருட்டிணகிரி மாவட்டத்திலும், நுண் கற்காலத்தைத் தொடர்ந்து புதிய கற்கால மக்கள் வாழ்ந்தனர். புதிய கற்காலம் என்பது நாகரீக வாழ்க்கையில் முதன் முதலில் அடியெடுத்து வைத்த காலம் என்பதால் இதை "மறுமலர்ச்சிக் காலம் அல்லது புரட்சிக்காலம்" என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உணவைத் தேடி நாடோடிகளாகத் திரிந்த மக்கள் இக்காலத்தில் நிலையான வாழ்க்கையை அமைக்க முற்பட்டனர். உணவுப் பொருட்களைத் தேடித் திரிவதை விடுத்து அவற்றை உற்பத்தி செய்யக் கற்றிருந்தனர். விவசாயம் செய்ய முற்பட்ட காலம் என்பதால் இவர்களுடைய வாழ்விடங்கள் அல்லது ஊர்கள் சிற்றோடைகள், நீர் ஊற்றுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்தன. புதிய கற்கால மக்கள் மலை அடிவாரங்களில் உள்ள நீர் நிலைகள், நீர் ஊற்றுகளின் அருகில் குடியமர்ந்தனர். இவைகளே பின்னர் கிராமங்களாக மாறின.

இவர்கள் கல்லாயுதங்களைச் செய்வதிலும் கை தேர்ந்தவர்களாக இருந்தனர். மேட்டுநில விவசாயம் செய்யத் தேவையான அமைப்பில் கல்லாயுதங்கள் உருவாக்கப்பட்டன. தானியங்களை அறுப்பதற்கும் காய்கனிகளை வெட்டுவதற்கும் ஏற்றாற்போன்ற கல்லாயுதங்களைப் பயன்படுத்தினர். இக்கல்லாயுதங்களை இரும்பு ஆயுதங்களைப் போன்று வெட்டும் விளிம்பைக் கூர்மையாக்கவும் தெரிந்திருந்தனர். மலை அடிவாரங்களிலும், காடுகளிலும் வாழ்ந்ததால் கால்நடைகளை வளர்க்க முற்பட்டனர். ஆடு, மாடு, நாய், கோழி, போன்றவற்றை வளர்த்து அதிலிருந்தும் உணவுப் பொருட்களைப் பெற்றனர்.

கால்நடைகள் மேய்த்தல், இவர்களுடைய முக்கியமான தொழிலாக இருந்ததால் இதுவே இவர்களுடைய சொத்தாகவும் மாறியது. கால்நடைகளுக்குத் தேவையான புல்வெளிகளைத் தேடி இவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். புதிய கற்கால மக்கள் முதல் முதலில் மட்கலங்களைக் கையால் செய்து பயன்படுத்தி உள்ளனர். வீடுகள் வட்டமாகவும், நீண்ட வட்டமாகவும் இருந்தன. வீடுகளின் மேல் கூரை வேயப்பட்டிருந்தது. கற்களை வைத்துச் சுவர் போன்ற அமைப்பு கட்டப்பட்டிருந்தது. ஒரு வீட்டில் இரண்டு அறைகள் தடுக்கப்பட்டிருந்தன. இக்கால மக்கள் சோளம், ராகி போன்றவற்றைப் பயிரிட்டுள்ளனர். நாகரீக வாழ்க்கையில் முதற் படியிலிருந்த இக்கால மக்களின் தொல்பொருட்கள் பையம்பள்ளி, தொகரப்பள்ளி, மயிலாடும்பாறை, மல்லப்பாடி, குட்டூர் போன்ற இடங்களில் கிடைக்கின்றன. புதிய கற்கால மக்கள் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள்.

**பெருங்கற்காலம் :** பெரிய பெரிய கற்களைக் கொண்டு நினைவுச் சின்னங்கள் அமைத்ததால் இக்காலம் பெருங்கற்காலம் என்று பெயரிடப்பட்டுள்ளது. இக்காலம் புதிய கற்கால மக்களின் வளர்ச்சியடைந்த நிலையாகும். பெருங்கற்கால மக்களிடையே இரும்பின் பயன்பாடு தெரியாத பெருங்கற்கால மக்கள் என்றும், இரும்பின் பயன்பாடு தெரிந்த பெருங்கற்கால மக்கள் என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இரும்பின் பயன்பாடு தெரிந்த காலம் இரும்புக்காலம் **(Iron Age)** என்றும் அழைக்கப்படுகின்றது. பெருங்கற்கால மக்கள் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள். இக்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் வாழ்விடம் தனியாகவும் ஈமச்சின்னங்கள் தனியாகவும் காணப்படுகின்றன.

**வாழ்விடங்கள் :** மக்கள் நிலையான இடத்தில் குடிசைகளை அமைத்து அதில் வாழ்ந்தனர். வீடுகள் வட்ட வடிவிலும் இருந்தன. சுவர்கள் கல்லையும் மண்ணையும் கொண்டு கட்டப்பட்டிருந்தன. பின்னர் மூங்கில் தட்டியின்மேல் மண்ணையும் பூசி சுவராக்கப்பட்ட வீட்டின்மேல் புல் வேயப்பட்ட கூரைகள் இருந்தன. இக்கால மக்களின் கிராமங்கள் நீர் நிலைகள், சிற்றோடைகள், மலையடிவாரங்களில் இருந்தன. சக்கரத்தின் உதவியுடன் மட்கலங்களைச் செய்யத் தெரிந்திருந்தனர். இக்கால மட்கலங்கள் நேர்த்தியாகவும், பளபளப்பாகவும் காணப்படுகின்றன. தானியங்களைச் சேகரித்து வைக்கவும் தெரிந்திருந்தனர். இரும்புக் கருவிகள் விவசாயம் செய்யப் பயன்படுத்தப்பட்டன. இரும்பினால் ஆன கத்தி, வாள், கோடரி, அம்பு முனைகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இக்கால மக்கள் பானை ஓடுகளில் தங்களுடைய குறியீடுகளை எழுதும் முறையை வைத்திருந்தனர். பானையின் மேல்பகுதியில் சுடுவதற்கு முன்பும், சுட்டபின்பும், கீறல் குறியிடுகளைக் கீறியுள்ளனர். பல மட்கலங்களில் பெயர்கள் தமிழி எனப்படும் பிராமி எழுத்துக்களில் காணப்படுகின்றன. கிருட்டிணகிரிப் பகுதியில் கீறல் குறியீடுகளும், சில எழுத்துக்களும் கிடைத்துள்ளன. இக்கீறல் குறியீடுகள் குலக்குறியைக் குறிப்பனவாக உள்ளன[8]. இக்காலத்திற்கு முன்னர் எழுத்துக்களோ,

குறியீடுகளோ தெரியவில்லை. இக்கீறல் குறியீடுகளில் இருந்து எழுத்தின் வரிவடிவம் தோன்றி இருக்கின்றது. எனவே எழுத்தை உருவாக்கவும், அவற்றை எழுதவும் இக்கால மக்கள் தெரிந்திருந்தனர். கருப்பு சிவப்பு, சிவப்பு, கருப்பு நிற மட்கலங்களில் இத்தகைய கீறல் குறியீடுகள் காணப்படுகின்றன.

**நினைவுச் சின்னங்கள் :**

பெருங்கற்கால மக்கள் இனக்குழு மக்களாக வாழ்ந்தனர். இவர்களுடைய குழுவில் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் வைத்திருந்தனர். இத்தகைய ஈமச் சின்னங்களுக்குத் தனி இடங்கள் தேர்வு செய்யப்பட்டு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. வாழ்விடங்களின் அருகில் இத்தகைய சின்னங்கள் காணப்படுகின்றன. மனிதர்களின் உடல் மட்டும் அழியக்கூடியது. ஆன்மா அழிவதில்லை என்ற எண்ணம் அக்கால மக்களிடையே நிலவியது. இதனால் இறந்தவர்களின் ஆன்மா அக்குழுவைச் சுற்றி இருக்கும் என்றும் அவர்களுடைய வேட்டைத் தொழில் மற்றும் இனவிருத்தி ஆகியவற்றுக்கு இந்த ஆன்மா துணை நிற்கும் என்ற எண்ணமும் இருந்தது. நினைவுச் சின்னங்களில் உள்ள இடுதுளை எனப்படும் துவாரம் இந்த ஆன்மா சென்றுவர உதவியாக அமைக்கப்பட்டிருக்கும். கிருட்டிணகிரி மாவட்டத்தில் இந்நினைவுச் சின்னங்களைப் பாண்டவர் கோயில், பாண்டவர்பாறை, செத்தகாடு போன்று பல பெயர்களில் அழைக்கின்றனர். மகாபாரதத்தில் வருகின்ற பாண்டவர்களுடன் இவை தொடர்பு படுத்தப்பட்டுள்ளன.

**பாண்டவர்கள் :**

பொதுவாக இறந்தவர்களைப் புதைக்கும் இடமாக உள்ளதால் "இது மாண்டவர் கோயில்" என்று முதலில் இருந்து பின்னர் மருவிப் பாண்டவர் என்று வந்திருக்க வேண்டும். பாண்டவர்கள் என்பதால் அவர்கள் வனவாசம் சென்றபோது வாழ்ந்த இடம் என்று மாற்றம் பெற்றது. மகாபாரதக் கதையில் பாண்டவர்கள் காட்டில் வனவாசம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் பாண்டவர்கள் 14 ஆண்டுகள் காட்டில் வனவாசம் சென்றபோது அவர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டவை என்றும் அவர்கள் வனவாசம் முடிந்து சென்ற பின்னர் மண்மேடாகக் காணப்படுகின்றன என்றும் பல இடங்களில் கூறுகின்றனர். பாண்டவர் 14 ஆண்டுகள் வனவாசம் இருந்த "மச்சதேசம்" என்பது இப்பகுதியில் இருந்தது என்றும் அவர்கள் இப்பகுதியில் தங்கினர் என்றும் சில இடங்களில் கூறுகின்றனர். இக்கருத்து தமிழகத்தில் மட்டுமின்றி ஆந்திரம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களிலும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக "பாண்டவர் பண்ட்", "பாண்டவர் மனே" ஆகியவற்றை எடுத்துக் கொள்கின்றனர்.

தமிழகத்தில் 'மாண்டவர் குழி' என்பது மருவி 'பாண்டவர் குழி' என்று வந்தது என்று கே.ஆர்.சீனிவாசன் கருதுகின்றனர். தருமபுரிப் பகுதியில் பல இடங்களில் செத்தகாடு, செத்த குட்டை என்ற பெயர்கள் காணப்படுகின்றன. செத்தகாடு என்று கூறப்படுகின்ற இடங்களில் பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ளன. இதைப் போன்று செத்தகுட்டை என்ற சிறிய மலையின் அடிவாரத்திலும் பெருங்கட் படைச் சின்னங்கள் உள்ளன. இத்தகைய சொல்வழக்கு மற்றப் பகுதியில் இல்லை.

**குள்ள மனிதர்கள்** : பல இடங்களில் குள்ள மனிதர்களுடன் ஒப்பிட்டுக் கதைகள் கூறப்படுகின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் குள்ள மனிதர்கள் வாழ்ந்தனர் என்றும், அக்காலத்தில் அடிக்கடி நெருப்பு மழை பெய்ததால் அதிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள கற்பலகையால் ஆன கல்லறையைப் பூமிக்கு அடியில் கட்டிக் கொண்டு வாழ்ந்தனர் என்றும் கூறப்படுகின்றது. ஆனால் ஒரு நாள் எதிர்பாராதவிதமாத் தங்கக்கட்டி மழை பெய்ததாம். அந்தத் தங்கக் கட்டிகளைச் சேகரிக்கக் கல் வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் வெளியில் வந்தனர். அதுசமயம் தங்க மழை நெருப்பு மழையாகப் பெய்ததாம். இதனால் குள்ள மனித இனம் முழுவதும் சாம்பலாகிவிட்டது. கல்வீட்டில் இருந்த குழந்தைகள் தான் தற்போதைய மனித இனத்தின் முன்னோடிகள் என்ற ஒரு கதையும் கிருட்டிணகிரி மாவட்டத்தில் வழங்குகிறது.

**கல்வட்டம்** : கிருட்டிணகிரி மாவட்டத்தில் கல்வட்ட வகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. தரையின் கீழே குழி ஒன்றைத் தோண்டி அந்தக் குழியில் இயற்கையாகக் கிடைத்த பலவகைக் கற்களை நான்குபுறமும் நிறுத்தி சதுரம் அல்லது நீண்ட சதுரமான அமைப்புடைய அறை உருவாக்கப்பட்டது. பக்கத்திற்கு ஒன்று அல்லது இரண்டு கற்களும் இணைத்து வைத்து இந்த அறை கட்டப்பட்டுள்ளது. இந்த அறையின் கீழ்ப்பகுதியில் முதலில் பலகைக் கல்லைக் கொண்டு தரைபோன்று பாவப்பட்டுள்ளது. தரையில் பாவப்பட்ட கல்லின் மேல் படையல் பொருட்கள் வைக்கப்பட்டன. அதன் பின்னர் இந்தக் கல்லறை ஒன்று அல்லது இரண்டு கற்பலகைகளைக் கொண்டு மூடப்பட்டுள்ளது. குழியில் நான்கு புறமும் உள்ள கற்பலகைகள் சாயாமல் இருக்கத் தாங்கு சுவர்கள் அல்லது கற்கள் வைக்கப்பட்டுள்ளன. இதன் பின்னர் இந்தக் கல்லறை மூடப்பட்டுள்ளது. இக்கல்லறையை முழுவதும் மறைக்கும் நோக்கத்தில் சிறிய சல்லிக்கற்கள் அல்லது கூழாங்கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் கல்லறை சிறிய குவை அல்லது மேடான பகுதியாகக் காட்சியளிக்கின்றது. இக்குவியல் வட்ட வடிவில் வைக்கப்பட்ட பின்னர் இந்த வட்டத்தைச் சுற்றிலும் இயற்கையாகக் கிடைத்த உருண்டையான கற்கள் வட்டவடிவில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் இக்கல்லறை தரைமட்டத்திலிருந்து ஒரு மீட்டர் முதல் இரண்டு மீட்டர் உயரம் வரை காணப்படுகின்றது. வட்டவடிவில் வைக்கப்பட்ட உருண்டைக் கற்கள் இக்கல்லறை சிதைந்துவிடாமல் இருக்க ஏதுவாக இருந்தது. இதனுடைய அமைப்பை அடிப்படையாகக் கொண்டு இதற்குக் கல்வட்டம் **(Cairn Circle)** என்று பெயரிடப்பட்டுள்ளது.

**பேழை** : மேலே கூறப்பட்டதைப் போன்று கல்லறையைத் தலையின் கீழ் அமைத்து அந்தக் கல்லறையில் நீண்ட ஈமத் தொட்டி **(Sarcophagi)** ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பேழைகள் வைக்கப்பட்டுள்ளன. இத்தொட்டிகள் மண்ணில் செய்து சுடப்பட்டிருக்கும் ஈமத்தொட்டியின் அடிப்பகுதியில் இரட்டைக் கால் வரிசைகள்

காணப்படுகின்றன. இந்தக் கால்கள் 12, 24 என்ற எண்ணிக்கையில் இருக்கும். இந்த ஈமப் பேழை மூடி ஒன்றால் மூடப்பட்டிருக்கும். இந்த மூடியும் மண்ணால் செய்து சுடப்பட்டிருக்கும். இந்த ஈமப் பேழை உள்ள குழி பெரிய பலகைக் கற்களைக் கொண்டு மூடப்பட்டு அதன் மேல் கூழாங்கற்களையும் சிறிய உருண்டையான கற்களையும், குவித்து மேடான பகுதியாக ஆக்கப்படும். ஈமப் பேழையின் கழுத்துப் பகுதியில் அலங்கார வேலைப்பாடுகள் உள்ளன. இக்கல்லறையின் கிழக்குப் பகுதியில் உள்ள கற்பலகையில் இடுதுளை எனப்படும் துவாரம் ஒன்று உள்ளது. சில கல்லறைகளில் ஏதாவது ஒரு பக்கமுள்ள கற்பலகையில் இந்த இடுதுளைகள் போடப்பட்டிருக்கும். இடு துளையில் முகப்பு வாயில் போன்ற சிறிய அமைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது இக்கல்லறையின் நுழைவாயிலைப் போன்ற அமைப்பில் இருக்கும். இந்த நுழைவாயிலும் மேல்பகுதியில் பலகைக் கற்களைக் கொண்டு மூடப்பட்டிருக்கும். இந்த மூடியும் மண்ணால் செய்து சுடப்பட்டிருக்கும். இந்த ஈமப் பேழை உள்ள குழி பெரிய பலகைக் கொண்டு மூடப்பட்டு அதன் மேல் கூழாங்கற்களையும் சிறிய உருண்டையான கற்களையும் குவித்து மேடான பகுதியாக ஆக்கப்படும். ஈமப்பேழையின் கழுத்துப்பகுதியில் அலங்கார வேலைப்பாடுகள் உள்ளன. இக்கல்லறையின் கிழக்குப் பகுதியில் உள்ள கற்பலகையில் இடுதுளை எனப்படும் துவாரம் ஒன்று உள்ளது. சில கல்லறைகளில் ஏதாவது ஒரு பக்கமுள்ள கற்பலகையில் இந்த இடுதுளை போடப்பட்டிருக்கும். இடுதுளையின் முகப்பு வாயில் போன்ற சிறிய அமைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது இக்கல்லறையின் நுழைவாயிலைப் போன்ற அமைப்பில் இருக்கும். இந்த நுழைவாயிலும் மேல்பகுதியில் பலகைக் கற்களைக் கொண்டு மூடப்பட்டிருக்கும் இதைப்போன்ற ஈமப்பேழை கிருட்டிணகிரிக்கு அருகிலுள்ள ஜீனூர் என்ற ஊரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப்பேழை தற்போது தருமபுரி அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

### கல்திட்டை : (Dolmens)

கல்திட்டை என்னும் ஈமச்சின்னம் பரந்த பாறையின் மேல் அமைக்கப்படும் கல்லறையாகும். இந்தக் கல்லறையும் கல்வட்டத்தைப் போன்று இருக்கும். பரந்த பாறையின் மேல் பெரிய நான்கு பலகைக் கற்களைக் கொண்டு செவ்வகமாக அல்லது சதுரமாக அமைக்கப்படும். கற்பலகைகள் ஒன்றுடன் ஒன்றை இணைத்து கல் நிற்பதற்கு ஏற்றாற் போன்று ஒரு கல்லை நீட்டி இரண்டாவது கல்லை அதனுடன் இணைத்து ஒன்றுக்கு ஒன்று தாங்கி போன்று நிறுத்தப்பட்டிருக்கும். இதனால் இதன் அமைப்பு "ஸ்வஸ்திகா" போன்ற தோற்றத்தில் இருக்கும். இக்கல்லறையிலும் மூடுகல் எனப்படும் கற்பலகையைக் கொண்டு மூடப்பட்டிருக்கும். நாற் பக்கங்களிலும் கற்பலகைகள் சாய்ந்துவிடாமல் இருக்கத் தாங்கு சுவர்கள் சிறிய கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். கிழக்குப்பக்கமுள்ள பலகைக்கல்லில் இடுதுளை வட்டவடிவில் காணப்படுகிறது. இதன் முன்வாயில் போன்ற **(Passage)** அமைப்பு ஒன்று உள்ளது. இதைத் தொடர்ந்து இக்கல்லறையைச் சுற்றிலும் வட்டவடிவில்

கற்பலகைகள் அல்லது சிறு கற்களால் ஆன தாங்கு சுவர் எடுக்கப்பட்டிருக்கும். இந்த அமைப்பு கோட்டையைச் சுற்றி உள்ள மதில் போன்ற அமைப்பில் இருக்கும். இதைப் போன்ற கல்திட்டைகள் மல்லசந்திரம், மகாராஜகடை போன்ற இடங்களில் காணப்படுகின்றன.

### தாழி : (Urn)

தாழிவகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் தமிழகத்தின் தென்பகுதியில் அதிக அளவில் காணப்படுகின்றன. தரைக்குமேல் எந்தவிதமான அடையாளங்களும் இன்றி நிலத்தின் கீழ்த் தாழிகள் புதைக்கப்படுகின்றன. ஆனால் கிருட்டிணகிரிப் பகுதியில் கல்குவைத் தாழிகள் என்ற சின்னங்களின் கீழ்க் காணப்படுகின்றன. தாழியைவிடச் சிறிதளவு பெரிய குழியை வெட்டி அந்தக் குழியில் தாழிகள் இறக்கப்படுகின்றன. தாழியின் பாதி அளவில் தாழியைச் சுற்றிலும் திண்ணை விடப்பட்டிருக்கும். இந்தத் திண்ணையில் தாழியைச் சுற்றிலும் படையல் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். சிலவற்றில் தாழியில் எலும்புகளும் படையல் பொருட்களும் வைத்து முழுவதும் மண்ணைக் கொண்டு நிரப்பப்பட்டிருக்கும். இதன்மேல் மூடி அல்லது கற்பலகை மூடி வைத்துக் குழி மூடப்படும். இந்த இடத்தில் சிறிய கற்களையும், சில சமயங்களில் கூழாங்கற்களையும் குவித்துக் கற்குவையாக ஆக்கப்பட்டுள்ளது. இத்தகைய கற்குவைகள் ஊத்தங்கரை வட்டத்தில் காணப்படுகின்றன.

கிருட்டிணகிரியிலிருந்து சுமார் 16 கி.மீ. தூரத்தில் பஞ்சிகானப்பள்ளி என்ற ஊர் அமைந்துள்ளது. இங்குக் கல்வட்ட வகையைச் சார்ந்த பெருங்கட்படைகள் சுமார் 1000 பரந்த அளவில் உள்ளன. இக்கல்லறைகளும் மற்ற கல்லறைகளைப் போன்று காணப்பட்ட போதிலும், இரண்டு கல்லறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளவை அதிக அளவில் காணப்படுகின்றன. இவற்றிலும் பெரும்பாலானவை சிதைந்த நிலையில் உள்ளன.10 பட்டகப்பட்டி, மூங்கில்புதூர், இட்டிக்கல் அகரம், பெடார், மிட்டப்பள்ளி போன்ற இடங்களில் 100க்கும் மேற்பட்ட கல்வட்டங்கள் காணப்படுகின்றன.

கிருட்டிணகிரிக்கு அருகிலுள்ள ஜீனூர் என்ற ஊர் பெங்களூர் நெடுஞ்சாலையின் அருகிலுள்ளது. இங்குள்ள கல் வட்ட வகையைச் சார்ந்த ஈமச்சின்னத்தில் பேழை எனப்படுவது மண் தொட்டியைப் போன்றது. இப்பேழை 1.30 மீட்டர் நீளமும் 60 செ.மீட்டர் அகலமும் உடையது. மண்ணால் செய்து சுடப்பட்டுள்ளது. இதன் கீழ்ப்பகுதியில் இரண்டு வரிசைகளில் 24 கால்கள் உள்ளன. பேழையின் அடியில் துவாரம் உள்ளது. மூடி சிதைந்துள்ளது. இந்தப் பேழையில் இரும்பு, வாள், அம்பு முனைகள், கத்தி போன்றனவும், கருப்பு சிவப்பு மட்கலங்களும், சிவப்பு மட்கலங்களும் படையல் பொருட்களாக இருந்தன. பேழை வகையைச் சார்ந்த நினைவுச் சின்னங்கள் கிருட்டிணகிரி பகுதியில் வரட்டனப்பள்ளி, ஜீனூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் கிடைத்துள்ளன.

தாழி வகையைச் சார்ந்த நினைவுச் சின்னங்கள் ஊத்தங்கரை வட்டத்தில் காணப்படுகின்றன. தாழி தனியாகக் கல்லறையின் உட்பகுதியிலும் வைத்து மூடி அதன்மேல் கற்குவையாக அமைக்கப்பட்டுள்ளன. தாழி மண்ணால் செய்து சுடப்பட்டுள்ளது. இதன் வாய்ப் பக்கத்தின் கீழ்ப்பகுதியில் சில அலங்காரக் குறிகள் காட்டப்பட்டுள்ளன. தாழி பலகைக் கல் அல்லது சுடுமண் மூடியைக் கொண்டு மூடப்பட்டுள்ளது. தாழி வகையைச் சார்ந்த ஈமச் சின்னங்கள் தமிழகத்தில் கிழக்குப் பகுதியில் அதிக அளவில் உள்ளன. இது வடபகுதியில் பரவியுள்ளது. கிருட்டிணகிரி பகுதியில் இருந்த கல்வட்டமும், கிழக்குப் பகுதியிலிருந்த தாழியும் இணைந்து ஊத்தங்கரைப் பகுதியில் பரவியுள்ளன. இதைப் போன்றவை கிருட்டிணகிரி வட்டத்தில் கிடைக்கவில்லை.

**மல்லசந்திரம் :**

தமிழகத்தில் கிருட்டிணகிரி மாவட்டத்தில் மட்டும் அதிக அளவில் கல்திட்டை வகையைச் சார்ந்த ஈமச்சின்னங்கள் அமைந்துள்ளன. கல்திட்டை என்பவை பரந்த பாறையின் மேல் அமைக்கப்பட்ட கல்லறைகள் ஆகும். கிருட்டிணகிரி மாவட்டத்தில் உள்ள கல்திட்டைகளில் மல்ல சந்திரம் மற்றும் மகாராஜ கடை ஆகிய இரண்டு இடங்களிலும் ஒவ்வொரு இடத்திலும் சுமார் 200 கல்திட்டைகள் காணப்படுகின்றன. (இன்று கல்திட்டையில் பலவும் அழிந்துவிட்டன. ஒன்றிரண்டே உள்ளன)

முதல் கல்வட்டத்தை அடுத்து இரண்டாவது கல்வட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கல்வட்டத்திலுள்ள கற்பலகைகளின் உயரம் முதல் கல்வட்டத்திலுள்ளவற்றைவிட உயரம் குறைந்துள்ளன. இரண்டாவது கல்வட்டம் முதல் கல்வட்டத்தைப் போன்று இருந்தாலும், இதன் அமைப்பு. சுற்றுச்சுவர் போன்று காணப்படுகின்றது. இரண்டாவது 'வட்டத்திலும் இரண்டு வகையான கற்பலகைகள் உள்ளன. இந்த வட்டத்தில் பக்கத்திற்கு இரண்டு அரைவட்ட வடிவப் பலகைக் கற்கள் வீதம் மொத்தம் 8 அரைவட்டப் பலகைக் கற்களும் ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு செவ்வக வடிவப் பலகைக் கல் வீதம் மொத்தம் நான்கு பலகைக் கற்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கல்வட்டம் சுமார் 90 செ.மீ. இடைவெளியில் அமைந்துள்ளது. இந்தக் கற்பலகைகள் சாய்ந்துவிடாமல் இருக்கக் கருங்கற்களைக் கொண்டு கற்கள் அல்லது தாங்கு சுவர் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. இச்சுவரில் செவ்வகம் மற்றும் சதுர அமைப்புடைய சிறிய கற்கள் காணப்படுகின்றன. இந்தக் கட்டட அமைப்பு முறையில் கற்கள் வைத்து கட்டப்பட்டுள்ள முறை தற்காலத்திய ஆங்கில கட்டட வகையைச் சார்ந்த ஹெட்டர் **(Header)** வகையைச் சார்ந்தது. இந்தக் கட்டடக் கலையே தமிழகக் கட்டடக் கலையின் தொடக்கம் என்பது பெருமைப்பட வேண்டிய செய்தியாம்.

செவ்வகம் அல்லது சதுர அமைப்பில் அமைந்த கல்லறை மையப்பகுதியிலும் இதைச் சுற்றிலும் வட்ட வடிவில் இரண்டு கற்பலகைகளின் வட்டங்களும் அமைந்துள்ளன. முதல் கல்வட்டம் உயரமாகவும், இரண்டாவது கல்வட்டம் உயரம்

குறைந்தும் காணப்படுகின்றன. இக்கற்பலகைகள் பாறையின் மேல் அமைக்கப்பட்டுள்ளதால் சாய்ந்துவிடாமல் இருக்கத் தாங்கு சுவர்கள் அதைச் சுற்றிலும் உள்ள இரண்டு திருச்சுற்று சுவர்கள் போன்றும், வாயில் பகுதி நுழைவாயில் போன்றும் கற்காலக் கோயில் அமைப்பைப் போன்று சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டட அமைப்பு முறையே தமிழகக் கட்டடக் கலையின் தொடக்கம் என்பதும் இதை அடிப்படையாகக் கொண்டு கட்டடக்கலை வளர்ச்சியடைந்தது என்றும் கூறுவது மிகையாகாது.

இரண்டாவது வகையைச் சார்ந்த கல்திட்டையிலுள்ள கல்லறை ஸ்வஸ்திகா அமைப்பில் உள்ளது. கிழக்குப் பக்கமுள்ள கற்பலகையில் வட்ட வடிவில் இரு துளையும் உள்ளன. இடுதுளைக்கு நேராக வாயில்பகுதி சிறிய அளவில் காணப்படுகிறது. கல்லறையைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் மூடுகல் வரை உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது. இந்த கல்வட்டங்கள் சாய்ந்துவிடாமல் இருக்கத் தாங்குசுவர் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தாங்கு சுவரில் உள்ள கல் அடுக்கு முறை தற்கால ரெகுலர்கோர்ஸ் **(Regular Course)** வகையைச் சார்ந்தது.

பாறையில் உள்ளவற்றைத் தவிர மண் கலந்த பகுதியில் ஒருவகையான கல்திட்டைகள் உள்ளன. இக்கல்திட்டை மண்ணில் பாதியும், தரையின் மேல்பகுதியில் தெரிகின்ற அமைப்பில் உள்ள இந்தக் கல்திட்டையைச் சுற்றிலும் கல்வட்டம் ஒன்று இயற்கையாகக் கிடைத்த உருண்டையான கற்களைக் கொண்டு சில கல்வட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தரையின் கீழ்ப்பகுதியில் மட்கலங்களும். இரும்பு பொருட்களும் கிடைத்துள்ளன. இவை படையல் பொருட்களாக வைக்கப்பட்டவை என்பது தெளிவு.

சில இடங்களில் கல்திட்டைகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றன. (அதாவது பெரிய கல்திட்டையைச் சுற்றிலும் சிறிய கல்திட்டைகள் சுமார் 10-க்கும் மேற்பட்டவை) பெரிய கல்திட்டை மற்றவற்றைவிடப் பெரியதாகவும் நேர்த்தியாகவும் அமைந்துள்ளது. பெரிய கல்திட்டைக்குக் கிழக்கில் இடுதுளையும், மற்றவற்றில் உள்ள இடுதுளைகள் மற்ற திசைகளிலும் உள்ளன. இதை ஒரு குழு அல்லது வட்டத்தைச் சார்ந்தவர்களின் கல்லறையாகக் கொள்ளலாம். குழுத்தலைவனின் கல்லறையைச் சுற்றிலும் அக்குழுவைச் சார்ந்தவர்களின் கல்லறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மல்லசந்திரத்திலுள்ள கல்திட்டையைப் போன்றவை மகாராஜகடை, சென்னசந்திரம் ஆகிய இடங்களில் உள்ளன.

கல்திட்டையிலுள்ள கல்லறையின் வடக்குப் பக்கமுள்ள கற்பலகையில் அக்கால ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஓவியங்கள் வெள்ளை வண்ணத்தில் உள்ளன. மனித உருவங்கள், விலங்குகளின் உருவங்கள், விலங்கின் மேல் மனிதன் அமைந்துள்ள உருவங்கள், வீரர்கள் சண்டை செய்யும் காட்சிகள் போன்றவற்றுடன் குறியீடுகள், பிராமி எழுத்தைப் போன்ற வடிவங்கள் ஆகியவை கல்லறையின் உட்பகுதியில் காணப்படுகின்றன. இவை அக்கால மக்களின் சமுதாயச் சூழ்நிலையை எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளன.

**கற்கால ஓவியங்கள் :**

கிருட்டிணகிரி மாவட்டத்தில் பல இடங்களில் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள் குகைகளிலும் குகையைப் போன்று சாய்வான பாறையின் மேல் பகுதியிலும் தீட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான ஓவியங்களின் மேல் மழை தண்ணீர் வராமல் இருக்கும் இடத்தைத் தேர்வு செய்து ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இப்பகுதியில் கிடைக்கின்ற ஓவியங்கள் இரண்டு வண்ணங்களில் காணப்படுகின்றன[1]. சிவப்பு வண்ணம் மற்றொன்று வெள்ளை வண்ணம். பல இடங்களில் சிவப்பு வண்ண ஓவியங்களும், வெள்ளை வண்ண ஓவியங்களும் இணைந்தும் ஒன்றின் மேல் ஒன்று தீட்டப்பட்டுள்ளன. சிவப்பு ஓவியங்களின் மேல் வெள்ளை வண்ணத்தில் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. எனவே, சிவப்பு வண்ண ஓவியங்கள் காலத்தால் முற்பட்டவை என்றும், வெள்ளை வண்ணம் பிற்பட்டவை என்றும் தெளிவாகின்றது.

சிவப்பு வண்ண ஓவியங்கள் பாறைகளின் தாழ்வான பகுதிகளில் மட்டும் காணப்படுகின்றன. ஆனால் வெள்ளை வண்ணம் பாறைகளிலும் கல்திட்டைகள் எனப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களிலும் உள்ளன. எனவே வெள்ளை வண்ணம் பெருங்கற் படையை உருவாக்கிய மக்களால் வரையப்பட்டது என்று கிருட்டிணகிரி பகுதியில் உள்ள ஓவியங்கள் மூலம் அறியலாம். சிவப்பு வண்ணம் இக்காலத்திற்கு முன்பு வாழ்ந்த புதிய கற்கால மக்களால் வரையப்பட்டது. சிவப்பு வண்ணம் புதிய கற்கால மக்களின் ஓவியங்கள் என்பது தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. புதிய கற்கால மக்களின் ஓவியங்கள் மயிலாடும்பாறை, மகாராஜகடை; பையம்பள்ளி போன்ற இடங்களில் உள்ளன.

வெள்ளை வண்ண ஓவியங்கள் சிவப்பு வண்ண ஓவியங்களைவிட அதிக அளவில் கிடைத்துள்ளன. வெள்ளை வண்ணத்தில் வரையப்பட்ட ஓவியங்கள் ஒருவரால் வரையப்படவில்லை. பலர் இணைந்து இதைச் செய்துள்ளனர். மல்லசந்திரம், மகாராஜகடை, வரமணகுண்டா, சென்னசந்திரம், ஆகிய இடங்களில் உள்ள கல்திட்டைகளில் இந்த ஓவியங்கள் உள்ளன. இவை கல்திட்டைகளில் வைக்கப்பட்ட படையல் பொருட்களைப் போன்று உள்ளன. மனித உருவங்கள், மிருகங்களின்மேல் அமர்ந்து செல்லும் மனித உருவம் வீரர்கள் சண்டை செய்யும் காட்சிகள், நடனமாடும் காட்சிகள் போன்றவை தெளிவாகக் காணப்படுகின்றன. மாடு, நாய், மான், யானை போன்ற மிருகங்களும் என்ன விலங்கென்று தெரிந்து கொள்ள முடியாத மிருகங்களும் உள்ளன. முக்கோண அமைப்புடைய உருவங்கள் சிந்துவெளி எழுத்துக்களை நினைவூட்டுவன வாகும்.

வரமணகுண்டாவில் கட்டங்களும் அதைச் சுற்றிலும் வேலியைப் போன்ற அமைப்புகளும், சூரியன், சந்திரன் போன்றனவும் தடிப்பாகக் காணப்படுகின்றன. கிருட்டிணகிரி பகுதியில் கிடைக்கின்ற ஓவியங்களில் அதிக அளவில் பெரிய கோட்டைப் பள்ளி என்ற ஊரில் உள்ள மலையில் கிடைக்கின்றன. இந்த ஓவியங்கள் அனைத்தும் வெள்ளை வண்ணத்தில் உள்ளன. இங்கு முக்கோணம், சதுர அமைப்புகளும், ஏணி, மீன்முள், உடுக்கை, சூரியன், சந்திரன் போன்றனவும் உள்ளன.

கிருட்டிணகிரி மாவட்டத்தில் ஓவியங்கள் உள்ள இடங்கள்.

1. மயிலாடும்பாறை
2. ஜெகதேவி மலை
3. காமராஜ நகர்
4. கிருட்டிணகிரி மலை
5. வரமணகுண்டா
6. மகாராஜ கடை
7. மல்லசந்திரம்
8. சென்ன சந்திரம்
9. மல்லப்பாடி
10. பெரியகோட்டப்பள்ளி
11. கெங்காவரம்
12. பையம்பள்ளி

அடிக்குறிப்பு :


1. Soundarajan. K.V., Glimpses of Indian Culture, Art, Architecture and Religion, Sundeep Prakashan, Delhi, 1981.
2. Sankalia, H.D., Prehistory and Protohistory of India and Pakistan, Poona, 1974. P 540
3. ஆவணம், இதழ். 14
4. Narasimhaiah, B.Neolithic and Meglithic Culture in Tamil Nadu, Sundeep Prakasha New Delhi, 1980.P.75
5. முனைவர் தி. சுப்பிரமணியன், தமிழகத் தொல்லியலும் வரலாறும் தகடூர்ப்பகுதி, நியூ செஞ்சுரி, சென்னை. ப.53
6. A.R.E 1964-65 PP 22-23;1067-68
7. மேலது. ப.57
8. மேலது. ப.62
9. Rajan, K. Archaeological Gazatteer of Tamilnadu, Manoo Pathipakam,Thanjavur, 1997.P. 110
10. முனைவர் தி.சுப்பிரமணியன், "தமிழகத் தொல்லியலும், வரலாறும் தகடூர்ப் பகுதி," நியூ செஞ்சுரிபுக் அவுஸ் லிட்., சென்னை. ப.103
11. Rajan, K. Archaeological Gazetteer of Tamil Nadu, Manoo Pathippakam, Thanjavur, 1997. p.110.
12. மேலது/ ப.77
13. Steve Roskams, "Excavation", Cambridge Manuuals in Archaeology.
14. முனைவர் தி.சுப்பிரமணியன், "தமிழகத் தொல்லியலும் வரலாறும்-தகடூர்ப் பகுதி", நியூ செஞ்சுரி புக் அவுஸ் லிட்., சென்னை-125,

# சாணாரப்பன் நடுகல் வழிபாடு - ஓர் ஆய்வு



**இரா.வெங்கடாசலம்**, எம்.ஏ., பி.எட்.,
உதவிப் பேராசிரியர் (முதுநிலை),
தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி.

கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழக வரலாற்றில் 'நடுகல் வழிபாடு' முறையில் மிகச்சிறந்து விளங்குகிறது. இச்சூழலில் இவ்வழிபாட்டு முறைக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வுத்தலைப்பு :**

'சாணாரப்பன் நடுகல் வழிபாடு' -ஓர் ஆய்வு என்பது ஆய்வுத் தலைப்பாகும்.

**ஆய்வு நோக்கம் :**

தமிழக வரலாற்றில் விடுபட்டுப்போன சில வழிபாட்டு முறைகளைக் கண்டறிதல், சிறு தெய்வ வழிபாட்டோடு கலந்துவிட்ட நடுகல் வழிபாடு இம்மாவட்டத்தில் வேறு எங்கெங்கு காணப்படுகிறது என்பதை இனங்கண்டு வெளிக்கொணர்தல்.

**ஆய்வு அணுகு முறைகள் (Approach of the Study) :**

நேரடிக் கள ஆய்வு முறை மற்றும் ஏற்கெனவே வெளிவந்த ஆய்வு முறைகளை ஒப்பு நோக்கிக் கண்டறியும் முறை. தேவையான இடங்களில் உரிய விளக்கங்கள் தரப்படுவதால் இதில் விளக்க முறைத்திறனாய்வு அணுகுமுறை (Descriptive Approach) பயன்படுத்தப்படுகிறது.

**சாணாரப்பன் மலை பெயர்க் காரணம் :**

தொகரப்பள்ளி–சாணாரப்பன் மலை–கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டத்தைச் சார்ந்த பகுதி. இம்மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் சாணார் இனத்தைச் சார்ந்த குடிகள் பல நூற்றாண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். பழங்காலத்தில் இம்மலையைச் சுற்றியும் சார்ந்தும் சாணார் இனமக்கள் மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்திருக்கலாம்.

அப்போது அவர்களால் ஏற்படுத்தப்பட்டு வணங்கப்பட்டு வந்த வழிபாட்டு முறையினடிப்படையில் இம்மலைக்குச் "சாணாரப்பன் மலை" என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

# தொகரப்பள்ளி – சாணாரப்பன் மண்டு

பெரிய சாணாரப்பன் மண்டு கோயிலில் மொத்தம் 16 நடுகல் சிற்பங்கள் உள்ளன. தனிக்கோயிலாக இருப்பது 14. மேற்பக்கம் உடைந்து பலகைக் கல்லாக இருப்பது 2. கல்வெட்டுக்கள் இருப்பது 9,10,13 மற்றும் 14வது கோயிலில். 9வது கோயிலில் தெலுங்குக் கல்வெட்டு ஒன்று உள்ளது. 10, 13 மற்றும் 14வது கோயிலில் தமிழ்க் கல்வெட்டு உள்ளது.

மண்டின் நுழைவு வாயிலில் நிரை கவரும் புலியின் சிற்பம் சிறப்பம்சமாகும். ஆண்புலி (கடுவன்புலி) மேய்ச்சல் நிரையைத் தாக்கிக் கவர்வதை மிகவும் அழகாக வடித்துள்ளனர். இரண்டாவது நடுகல் கோயிலில் மேற்புறக் கல்லில்லாமல் (Capstones) உள்ளது. மூன்றாவது நடுகல் கோயிலில் அஞ்சலி முத்திரையுடன் காணப்படும் வீரக்கல். நான்காவது நடுகல் கோயிலில் மேற்கல்லுடன் கூடிய தனிக் கோயில் அருகருகேயுள்ள இரட்டை நடுகல் கோயில் வீரன் புலியுடன் சண்டையிடுவது முதல்கல் இதிலிலுள்ள 2வது கல் குதிரை மீதிருந்த ஈட்டி எறியும் கல் மூடுதல்கல்லில் உள்ள வீரன் தன் வில்லிலிருந்து அம்பைச் செலுத்துகிறான். அம்பு பாய்ந்த புலி அவனருகில் இருக்கிறது. அவ்வீரனின் இடையில் குத்துவாள் ஒன்று உள்ளது.

ஐந்தாவது நடுகல் கோயில் குதிரையிலிருந்து போரிடும் வீரக்காட்சி. போரிடுபவனின் உருவம் குதிரையின் முன்னங்காலின் கீழே வில்லுடன் தாக்குவதாக வடிக்கப்பட்டுள்ளது. ஆறாவது நடுகல் கோயில் காட்டு எருமையுடன் சண்டையிடும் காட்சி. வில்லிலிருந்து வந்த அம்பு மிருகத்தைத் துளைத்து வெளிவரும் காட்சி. ஏழாவது நடுகல் கோயில் எட்டாவது கல் தனிக்குதிரை வீரன் கல்லாகும். எட்டாவது நடுகல் கோயில் ஒன்பதாவது நடுகல்லின் மேற்பகுதியில் ஒற்றைவரி தெலுங்குக் கல்வெட்டு ஒன்று உள்ளது. தெலுங்குக் கல்வெட்டின் வாசகம் **"வீரமொகுடு"** என்பதாகும். (இதன் பொருள்–வீரமகன்). ஒன்பதாவது நடுகல் கோயில் பத்து, பதினொன்றாவது நடுகல்லில் உள்ள சிற்பம்தான் இத்தொகுதியில் மிகப்பெரியதாகும். அதுமட்டுமல்லாது இரட்டை அடுக்கில் உள்ளது. வெண்குடை ஏந்திய காவலன் சண்டையிட்டு மரணமடைவது முதல் பகுதியிலும், இரண்டாம் பகுதியில் விண்ணுலக மங்கையருடன் செல்வது போலவும், பக்கவாட்டு நடுகல்லில் சிவலோகத்தில் லிங்க வழிபாடு செய்வது போலவும் காட்டப்பட்டுள்ளது. இதில் இடப்பக்கமுள்ள பலகைக் கல்லில் நான்குவரித் தமிழ்க் கல்வெட்டொன்று உள்ளது. பத்தாவது நடுகல் கோயில் குத்துவாள் வீசும் வீரனுடைய கல்லாகும். வீரன் அருகில் தேவியிருப்பது போலுள்ளது.

பதினோர்ராவது நடுகல் கோயில் குதிரை வீரனின் தனிக்கல். பனிரண்டாவது கோயில் முன்பகுதியிலுள்ள சண்டைக் காட்சி இரண்டு வீரர்கள் வில்லிலும் ஈட்டியிலும் சண்டையிடுவதாகக் காட்டப்பட்டுள்ளது. மரணமடைந்தவர்

கைலாயம் சென்று லிங்க வழிபாடு செய்யும் காட்சி, அஞ்சலி முத்திரையுடன் காணப்படுகிறது. இதன் வலப்பக்கப் பலகைக் கல்லில் தமிழ்க் கல்வெட்டொன்று சிதைந்து தெளிவற்ற நிலையிலுள்ளது. பதினொன்றாவது கோயில் 15வது நடுகல்லில் முந்தைய கோயிலுள்ள சிற்பம் போலவே சண்டைக் காட்சியும் இதன் வலப்பக்கப் பலகைக்கல்லில் 11 வரி தமிழ்க்கல்வெட்டும் உள்ளது. பதினான்காவது கோயில் 16வது நடுகல் இரண்டு வீரர்கள் சண்டையிட்டுத் தலையைக் கொய்வது போன்ற காட்சியும் பக்கத்தில் அவரது தேவி இருப்பது போலவும் உள்ளது. இவையாவும் பெரிய சாணாரப்பன் மண்டு கோயிலில் காணப்படும் நடுகல்காட்சிகளாகும்.

இம்மண்டின் வடக்குப் பகுதியில் மலையடிவாரத்தில் மிக அடர்ந்த அழகான மூங்கில் காப்புக் காடு உள்ளது. இங்குதான் பொது வழக்கில் கூறப்பட்டுவரும் பெரிய சாணாரப்பன் சிறிய சாணாரப்பன் என்ற கூற்றின்படி பூமியில் புதைந்துள்ள ஒரே பெரிய பாறைக் குன்றிலமைந்த இரு தனி நடுகற்களின் புடைப்புச் சிற்பங்களின் தொகுதியாக அமைந்துள்ளது. இத்தூண் சிறிய சாணாரப்பன் கோயில். இச்சிற்பத் தொகுதியின் வடகிழக்கில் உள்ள தனி புடைப்புச் சிற்பம் தனியொரு வீரனின் நடுகல்லாகவும் தென்கிழக்கில் உள்ள நடுகல் புலிக்குத்திப்பட்டான் கல்லாகவும் உள்ளது.

இரண்டிலும் இறந்த வீரன் கைலாயத்தில் லிங்க வழிபாட்டை மேற்கொள்ளும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது. பொதுவாகப் பெரிய சாணாரப்பன் மற்றும் சிறிய சாணாரப்பன் கோயில் இரண்டு நடுகல்லிலும் பெரிய சாணாரப்பன் கோயில் மூன்று நடுகல்லிலும் கைலாயத்தில் லிங்க வழிபாடு மேற்கொள்வதைக் காட்டுகிறது. சமீபகாலம் வரை சுடுமண் மற்றும் சுதையினால் செய்யப்பட்ட பொம்மைகள், குதிரைகள் வைத்து வழிபட்டுள்ளனர். மேலும் இம்மண்டுவில் ஏழு நாய்கள் (தனிக்கல்லில் வடிக்கப்பட்ட காவல் நாய் கழுத்துப் பட்டையுடன்) வைக்கப்பட்டுள்ளன. மண்டுவின் எதிரே உள்ள முன் பகுதியில் கூரான கல் ஆயுதங்கள் வைத்து வழிப்பட்டுள்ளனர்.

இரண்டு மண்டிலும் (பெரிய சாணாரப்பன் சிறிய சாணாரப்பன்) கோயிலிலும் சம்பந்தப்பட்டாத தனி நடுகல்லில் (இது ஊர்ப்பகுதியிலிருந்து வரும் வழியில் மண்டுவிற்கு முன் வடபகுதியில் உள்ளது) வீரனுடைய இரு புறங்களிலும் இருமங்கைகள் மதுக்குடங்களுடன் இருப்பது போலவும் அதிலொரு மங்கை வெற்றிப் பதாகையை ஏந்தியவளாகவும் வீரனின் வலது கையில் உடைவாளும் இடைக்கச்சில் குறுவாளும் தாங்கியவளாக காட்டப்பட்டுள்ளாள். இதன் மேலே ஒற்றை வரித் தெலுங்கு எழுத்துக்கள் படிக்க இயலாத நிலையில் சிதைந்துள்ளது. ஒன்பதாவது நடுகல்லில் உள்ள ஒரு தனி வரிக் கல்வெட்டினைக் கன்னடக் கல்வெட்டு என்று டாக்டர் ராஜன் தமது Archaeological Gazetteer of Tamil Nadu என்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் மேற்குறித்த வாசகம் தெலுங்கில் அமைந்துள்ளது என்பது தற்போது ஆய்வில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தெலுங்குக் கல்வெட்டு இருப்பதால் தெலுங்கு மன்னர்கள் காலத்தியது எனலாம்.

ஜெகதேவிராயன் மலைக்குச் சற்றுத் தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளதால் ஜெகதேவராயன் காலக் கல்வெட்டாகவும் இருக்கலாம். இதன் காலம் சுமார் நானூறு ஆண்டுகளாகவும் இருக்கலாம். பெனுகொண்டாவின் ஜெகதேவிராயன் 2–ஆம் ரங்கராயன் ஆட்சி காலத்தில் பீஜப்பூர் சுல்தானுடன் சந்தரகிரிப் போரில் வெற்றியைத் தேடித்தந்தமைக்காகப் பெற்ற சீதனச் சொத்து ஜெகதேவியாகும். ரங்கராயனின் மகளையும் மணமுடித்து 64 குடும்பங்களுடன் ஜெகதேவியில் ஆட்சியைத் தொடங்கிய ஜெகதேவிராயன் காலத்தியது இக்கல்வெட்டுகள் ஆகும். அதாவது கி.பி.17–ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் ஆகும்.

தொகரப்பள்ளி பெரியசாணாரப்பன் மலை, சின்ன சாணாரப்பன் சாணாரப்பன் சாமி இவை குறித்து அப்பகுதியில் சுமார் நானூறு ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு இம்மலையில் இருவருக்கும் சண்டை ஏற்பட்டு அதன் பின்பு சின்ன சாணாரப்பன் பிரிந்துவிட்டார் என நம்புகின்றனர். இக்கோயிலுக்கு மான்ய நிலம் சுமார் 15 ஏக்கருக்கு மேல் உள்ளது.

இந்நிலம் தொகரப்பள்ளியைச் சேர்ந்த முன்னாள் மிட்டாதாரர்களான திரு.இராமமூர்த்தி கவுண்டர், திரு.கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் ஆகியோர் வசம் இருந்துள்ளதாகவும், தற்போது அவர்களது வாரிசுகளான அமரர் திரு. தம்பி வெங்கடாசலம், திரு. சத்தியமூர்த்தி குடும்பத்தார் நிர்வகித்து வருவதாகவும் கூறுகின்றனர்.

இந்நடுகற்கள் உள்ள இடம் முழுவதையும், மலை, கோயில், சாமி, வனம் என்றெல்லாம் பல பெயர்களில் அழைத்தாலும் இவைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் நட்டு வைத்துள்ளனர். கடந்த ஆறுமாதத்திற்கு முன்புவரை ஒரு சில காலம் பூஜைகள் செய்துள்ளனர் (அமாவாசை, பௌர்ணமி வழிபாடு)

அதாவது கார்த்திகைத் தீபத்தை இங்குள்ள மலையில் ஏற்றிய பின்னரே மற்ற சாமிகளுக்குப் பூஜை செய்வதை இன்னமும் மரபாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வனத்தினுள்ளே அசைவம் சாப்பிடுபவர்கள் உள்ளே நுழைவதைத் தவிர்த்து வருகின்றனர். பூஜைக்கு, பானகம், பொரி–கடலை வைத்து சாதாரணமாக வழிபடுகின்றனர்.

இவ்வனத்திற்கு முன்பு ஆடுபுலி ஆட்டம் (19கட்டம்), சதுரங்கம் (64 கட்டம்) என்ற இரண்டையும் அருகருகே கோடுகளமைத்து விளையாடியதற்கான தடயம் இன்றும் உள்ளது. இதன் தெற்குப் பகுதியில் உரல் ஒன்றையும் அமைத்துள்ளனர். புதிர் விளையாட்டும் (Maze) விளையாடியுள்ளனர். அவற்றுக்கான கல்லால் வெட்டப்பட்ட ஆட்டக் கட்டங்கள் பாறைகளில் காணப்படுகின்றன. இந்த வனத்தினுள் ஏராளமான சுடுமண் பொம்மைகள் (சுதைச் சிற்பங்கள்) சிதைந்து காணப்படுகின்றன.

# நாஞ்சில் நாடும் கொங்கு நாடும் ஒரு வரலாற்றுப் பார்வை

டாக்டர் எஸ்.பத்மநாபன்

தமிழகத்தின் தென்கோடி குமரி மாவட்டம், வடகோடி கிருஷ்ணகிரி மாவட்டம், குமரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நான் வருகை தந்துள்ளேன். வரலாற்றுக் கண்ணோட்டத்திலே நோக்கினால் உங்களில் ஒருவன் இங்கு வந்துள்ளேன் என்பதுதான் உண்மை. நான் ஒரு வரலாற்று ஆய்வாளன். அந்த அடிப்படையிலே தான் இந்த உண்மையை இங்கே நான் கூறுகிறேன். குமரி மாவட்டத்திலுள்ள நாஞ்சில் நாட்டிலிருந்து கொங்கு நாட்டிற்கு நான் வருகை தந்துள்ளேன். இந்த நிகழ்ச்சியை வரலாற்று நோக்கில் நான் பார்க்கிறேன். மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்ட நாடு தமிழ்நாடு. பண்டைய சேரநாட்டின் தென்பகுதி நாஞ்சில் நாடு. வடபகுதி கொங்குநாடு. அதனால் உங்களில் ஒருவன் நான் என்பதுதான் வரலாற்று உண்மை.

நாஞ்சில் நாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் பண்டைக் காலத்திலிருந்தே தொடர்பு உண்டு. மட்டுமல்ல ஒற்றுமைகளும் உண்டு. குமரியிலே இந்துமாக்கடல், அரபிக்கடல், வங்கக்கடல் ஆகிய மூன்று கடல்கள் இணைகின்றன. அதே போன்று கிருஷ்ணகிரியில் தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்கள் இணைகின்றன. குமரி மாவட்டம் தமிழ்த்தாயின் திருவடி என்றால் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழ்த்தாயின் கிரீடமாகத் திகழ்கின்றது எனலாம். இரண்டு மாவட்டங்களிலும் தொன்மையான வரலாற்றுச் சுவடுகள் அதிகம் உள்ளன. குமரி மாவட்டத்தின் புதைந்து போன வரலாற்றை வெளியே கொண்டுவரும் நோக்கத்தோடு 1991 ஆம் ஆண்டு கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாடு ஆய்வுமையம் தொடங்கப்பட்டு பல வரலாற்று உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து பல சாதனைகளைப் படைத்துள்ளது என்பதைப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி வழியாகப் பலர் அறிவர். அதே பணியைச் செய்யக் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த அறிஞர்கள் இந்த வரலாற்றுக் கழகத்தைத் தொடங்கியுள்ளனர். கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் பொதுச் செயலாளர் என்ற நிலையில் இந்த நிறுவனத்தை வாழ்த்தி, வரவேற்று எனது ஆய்வுரையைத் தொடங்குகின்றேன். எனது ஆய்வுரையின் தலைப்பு "நாஞ்சில் நாடும் கொங்கு நாடும் - ஒரு வரலாற்றுப் பார்வை"

கொங்குநாட்டில் இதுவரை நான்குமுறை நான் வருகை தந்துள்ளேன். அதுவும் பாராட்டுப் பெற வந்துள்ளேன். நாஞ்சில் நாட்டவனை கொங்கு நாடு பாராட்டியது இங்கே குறிப்பிடத்தக்கது. 12-09-2001 அன்று கொங்கு நாட்டிலுள்ள பவானிக்கூடல் அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத் திருக்குட முழுக்கு விழாவினை

முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட திருவிதாங்கூர் மாமன்னர் ஸ்ரீ உத்திராடம் திருநாள் மார்த்தாண்ட வர்மாவை, அருட்செல்வர் மகாலிங்கனாரின் வேண்டுகோளுக்கு இணங்க, அவையோருக்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பினை நான் பெற்றேன். அந்நேரத்தில் அருட்செல்வர் அவர்கள் கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் பணிகளையும், அதன் மாத இதழான ஆய்வுக் களஞ்சியத்தின் பணிகளையும் பாராட்டி, இதுபோன்று எல்லா மாவட்டங்களிலும் ஆய்வு மையமும், ஆய்வுக்களஞ்சியமும் தொடங்கினால் சிறப்பாக இருக்கும் என்று அறிவுரையும் கூறினார். அருட்செல்வரின் அறிவுரையை நிறைவேற்றியவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தினரான நீங்கள்தான் என்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். தென்பெண்ணை ஆற்றங்கரைக் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வரலாற்று உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வுமையம் போன்று தொடங்கப்பட்ட இந்த ஆய்வு நிறுவனம் சிறப்புடன் திகழ மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறேன்.

அடுத்த பாராட்டுவிழா 13-12-2005 அன்று கொங்குநாட்டில் பேரூரில் உள்ள தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் கல்லூரியில் பேரூர் ஆதினம் கயிலை சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தலைமையில் நடைபெற்ற கோவைகிழார் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் பங்கேற்று "மொழி மற்றும் பண்பாட்டு நோக்கில் பண்டைய சேரநாடும் இன்றைய கேரளமும்" என்ற தலைப்பிலே உரையாற்றிப் பாராட்டும் பெற்றேன். அந்த உரையைப் பேரூர் திருமடத்தின் மாத ஏடான சிவசாந்தலிங்கர் இதழில் தொடர்ந்து வெளியிட்டுச் சிறப்புச் செய்தார்கள்.

மூன்றாவது பாராட்டுவிழா கொங்கு நாட்டிலுள்ள அவிநாசியில் நடைபெற்றது. சமயப் பணிகளையும், சமுதாயப் பணிகளையும் இரண்டு கண்களாகக் கொண்ட கொங்கு மண்டலத்திலுள்ள விஜயமங்கலம் அப்பர் அடிகள் சிவநெறி வழிபாட்டுத் திருக்கூட்டத்தின் 300-வது மாத உழவாரத் திருப்பணி மற்றும் சிவாலய வழிபாடு வெள்ளி விழாவினை முன்னிட்டு 30-04-2006 அன்று அவிநாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சன்மார்க்க தேசிகர் தவத்திரு. ஊரன் அடிகளார் முன்னிலையில், பேரூர் திருமடம் தமிழ் மாமுனிவர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் **சிவநெறித் திருத்தொண்டர்** என்ற விருதினை எனக்கு வழங்கினார்.

அடுத்து 30-09-2007 அன்று நான்காவது முறையாக கோவை வந்தேன். கோவை இடைய பாளையத்தில் தமிழ்ச் சிற்றிதழ் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 19-ஆவது மாநாட்டில் கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையத்தின் மாத இதழான ஆய்வுக் களஞ்சியத்திற்குத் தமிழகத்தின் சிறப்புச் சிற்றிதழ் என்ற விருது வழங்கினர். அந்த இதழின் ஆசிரியர் என்ற நிலையில் நான் வந்து அந்த விருதினைப் பெற்றேன். இன்று ஐந்தாவது முறையாக கொங்கு நாட்டிற்கு வருகைதந்துள்ளேன். 8 ஆண்டுகளுக்குள் ஐந்துமுறை கொங்கு நாட்டிற்கு நான் வருகைதந்துள்ளேன் என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. நான்கு முறை கொங்கு நாடு வந்து நான் பாராட்டுப் பெற்றேன். ஐந்தாவது முறை கொங்கு

நாட்டவர்களான உங்களை, உங்கள் வரலாற்றுக் கழகத்தைப் பாராட்ட நான் வந்துள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை நான் பேசியது சுயபுராணமாக இருந்தாலும், நாஞ்சில் நாட்டிற்கும், கொங்கு நாட்டிற்கும் சங்க காலத்தில் இருந்து வந்த தொடர்பு அறுந்துவிடவில்லை, தொடர்ந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டவே எனது பயணப் பட்டியலை இங்கே தொகுத்தளித்தேன்.

ஒரு வரலாற்று ஆய்வாளன் என்ற நிலையில் கொங்கு நாட்டையும், நாஞ்சில் நாட்டையும் தன்னகத்தே கொண்ட பண்டைய சேர நாட்டிற்கு உங்களைச் சிறிது நேரம் அழைத்துச் செல்கிறேன். பொறுமையோடு சிறிது நேரம் என்னுடன் வர வேண்டுகிறேன். பண்டைய சேரநாடுதான் இன்றைய கேரள மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சேரநாட்டின் பங்கு மகத்தானது. அகத்தியர் தங்கித் தமிழ் வளர்த்த அகத்தியர் கூடம் இன்று கேரள மாநிலத்தில் நெடுமங்காடு வட்டத்தில் உள்ளது. 2381 சங்கப் பாடல்களில் 722 பாடல்கள் சேர நாட்டிலிருந்து வெளிவந்தவையாகும். திருவள்ளுவர் பண்டைய சேர நாட்டைச் சார்ந்தவர். சேர நாட்டிலே வழங்கப்படும் பல சொற்களும், பழக்கவழக்கங்களும் திருக்குறளிலே இடம் பெற்றுள்ளன. திருவள்ளுவர் பெயரால் ஓர் ஊரும், ஒரு மலையும், ஒரு நாடும் சேர நாட்டில் உள்ளன. திருவள்ளுவர் சேர நாட்டிலே குமரி மண்ணிலே பிறந்தவர் என்ற உண்மை தமிழ்நாடு அரசு ஏடுகளில் இடம் பெற்றுள்ளது. ஐம்பெரும் காப்பியங்களில் இரட்டைக் காப்பியங்களாகத் திகழும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சேர நாட்டிலே தோன்றியவை. சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள் சேரநாட்டைச் சார்ந்தவர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் சேர நாட்டிலுள்ள சேர்த்தலையைச் சார்ந்தவர். மதுரையில் கூலவாணிபம் செய்ததால் மதுரைக் கூலவாணிகன் சேர்த்தலைச் சாத்தனார் என்ற பெயரைப் பெற்றார். கேரளத்திலேதான், ஒருவர் பிறந்த இடத்துடன் அவரது பெயரைச் சேர்த்துக் கொள்ளும் மரபு அதிகம். பட்டம் தாணுபிள்ளை, மன்னூர் கோவிந்தபிள்ளை, பனம்பள்ளி கோவிந்த மேனோன் என்று பட்டியல் நீளும். சேர்த்தலைச் சாத்தனார் என்ற பெயரை பிற்காலத்தில் மாற்றி எழுத்தாணியால் தலையைக் குத்தி சீழ்வடிந்ததால் சீழ்தலை என்ற பெயரைப் பெற்றார் என்றும், அதுவே பின்னர் சீத்தலை என்று மாறியது என்றும் கதையைக் கட்டிவிட்டனர். சாத்தன் என்ற பெயர் இன்றும் சேர்த்தலை வட்டாரத்தில் அதிகம் உண்டு. சாத்தனார் புத்த சமயத்தைச் சார்ந்தவர். சேர்த்தலையும் ஒரு காலத்தில் புத்தசமயத் தாவளமாக இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. சேர்த்தலையைச் சுற்றியுள்ள பல ஊர்கள் தமிழ்ப் பெயர்களைக் கொண்டுள்ளன. திருவிழா, துறவியூர், மருத்துவர் வட்டம், தண்ணீர் வட்டம் ஆகியவை அவற்றுள் சில. இவ்வாறு ஐம்பெரும் காப்பியங்களில் இரண்டு காப்பியங்கள் கேரளத்தில் தோன்றியுள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

பண்டைய சேர நாடான இன்றைய கேரளத்தில் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் பாதுகாக்கப்படுகிறது. தமிழின் சிறப்பு எழுத்து 'ழகரம்' அந்த ழகரம் கேரளத்தில்தான் சரியாக, அழகாக உச்சரிக்கப்படுகிறது. கேரளத்திலே கூறப்படும்

வாழைப்பழம், மதுரையிலே வாளப்பளமாகி, சென்னையிலே வாயப்பழம் ஆயிற்று. கேரளத்திலே தேரை இழுப்பார்கள். தஞ்சையிலே தேரை இளுப்பார்கள். சென்னையிலே தேரை இஸ்துகினு போவார்கள். இதுதான் இன்றைய தமிழகத்தில் தமிழனின் நிலை. கேரளத்திலே கண்ணகிக்குக் கோயில்கள் பல கட்டியுள்ளனர். செங்கன்னூர் பகவதி கோயிலில் ஆராட்டுத் திருவிழாவின் போது கண்ணகி தமிழ்ப் பெண்ணாகவே காட்சி தருகிறார். ஆனால் தமிழ்நாட்டில் சினிமா நடிகைகளுக்குக் கோயில் கட்டி வழிபடுகின்றனர். சங்க காலத்தில் மதுரையில் சிறப்புடன் நடைபெற்ற திருவோணப் பண்டிகையை மதுரைக் காஞ்சியில் நாம் காணலாம். ஆனால் இன்று தமிழ்நாட்டில் திருவோண விழாவே இல்லை. திருவோணம் கேரளத்தில் தேசீயத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. கேரளத்தில் இன்று தமிழ்மொழியும், பண்பாடும் பாதுகாக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை.

பண்டைய காலத்திலிருந்தே சேரநாட்டின் தென்பகுதியான நாஞ்சில் நாட்டிற்கும், கொங்கு நாட்டிற்கும் அரசியல் மற்றும் காலாச்சாரத் தொடர்பு இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்களிலிருந்து நாம் அறிய முடிகிறது. கொங்கு நாட்டிலுள்ள தர்மபுரியைத் தலைநகராக் கொண்டு ஆண்டு வந்தவன் அதிகன் என்பதையும், நாஞ்சில் நாட்டை ஆய் அண்டிரன், திதியன், அதிகன் ஆகியோர் ஆண்டு வந்தனர் என்பதையும் அகநானூறும், புறநானூறும் கூறுகின்றன. அதிகன் ஊரான அழகியபாண்டிபுரம் என்று மேல்கரை கல்வெட்டுகளும், அழகிய பாண்டிபுரம் முதலியார் வீட்டு ஓலைச் சுவடியும் தெரிவிக்கின்றன. இவ்வாறு அதிகன் தலைநகரான தகடூர் கொங்கு நாட்டிலும், அதிகன் ஊரான அழகியபாண்டிபுரம் நாஞ்சில் நாட்டிலும் இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. தகடூரை ஆண்டுவந்த அதிகனுக்கு எழினி என்ற ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அதுபோல குமரி மாவட்டத்திலே திருவட்டாறுப் பகுதியை ஆண்டுவந்த ஆதனுக்கும் எழினி என்ற சிறப்புப் பெயர் உண்டு. "வாட்டாற்று எழினி ஆதன்" என்பது பறநானூற்றுப் பாடல். அதிகனுக்கும், அவ்வையாருக்கும் இருந்து வந்த தொடர்பு எல்லோரும் அறிந்ததுதான். அவ்வையார் அதிகனைப் பற்றிப் பாடிய 23 பாடல்களும், அதிகன் மகன் பொருட்டு எழினி பற்றிப் பாடிய 3 பாடல்களும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அந்த அவ்வையாருக்குக் குமரி மாவட்டத்திலே 3 இடத்தில் கோயில்கள் உள்ளன. மட்டுமல்ல, குமரி மாவட்டத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் அவ்வையார் என்று பெயர் சூட்டப்படுகிறது. குமரி மாவட்டப் பெண்களுக்கே உரிய நோன்பு அவ்வை நோன்பு என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நாஞ்சில் நாட்டிற்கும், கொங்கு நாட்டிற்கும் சங்ககாலத்திலிருந்தே அரசியல் மற்றும் கலாச்சாரத் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்று இந்த வரலாற்றுத் தகவல்களால் நாம் அறிய முடிகிறது.

நாஞ்சில் நாட்டவரும், கொங்கு நாட்டவரும் நாக வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். நாகத்தின் பெயரால் எழுந்த நாகர்கோவில் நகர் நாஞ்சில் நாட்டில் உள்ளது. நாகர்கோவில் நாகராஜர் ஆலயத்தில் 6 அடி உயரத்தில் படமெடுத்த கோலத்தில் காட்சிதரும் இரண்டு நாகர் சிலைகள் மிகவும் பிரசித்திப் பெற்றவை.

அதேபோன்று கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோட்டு மலைச்சரிவில் 60 அடி நீளம் கொண்ட ஒரு பாம்பின் சிலை புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தில் ஏழுர் செட்டு சமுதாயத்தினர் ஒடுப்புரை என்ற இடத்தில் பாம்புச் சிலைக்குப் பொங்கலிட்டு வழிபடுவது போல, திருச்செங்கோட்டிலும் பாம்புச் சிலைக்குப் பொங்கலிட்டு வழிபடுகின்றனர். இரண்டு இடங்களிலும் பாம்பின் உருவைக் கல்லிலே செதுக்கி நேர்த்திக் கடன் முடிக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

கொங்கு நாட்டில் கொண்டலாம்பட்டி நாட்டாமங்கலம் சென்றாயப் பெருமாள் கோயில் கருவறையில் பாம்புப்புற்றுதான் உள்ளது. கொங்கு நாட்டில் நெசவுத் தொழில் செய்யும் தேவாங்க இனத்தவர் நாக வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். அவர்கள் திருமண விழாவில் மணமகன், மணமகளுக்குத் தாலி கட்டுவதற்கு முன்னர் நாகவல்லி என்ற ஒருவகைத் தாலியினை மணமகனின் தாய், மணமகளுக்குச் சூட்டும் வழக்கம் இருந்து வந்தது.

நாஞ்சில் நாட்டைப் போலவே கொங்கு நாட்டிலும் குறிப்பாகத் தேவாங்க இனத்தவரிடையே நாகராஜன், நாகவல்லி, நாகம்மாள் போன்ற பெயர்களைக் கொண்டவர்கள் பலர் உண்டு. இவ்வாறு நாகவழிபாடு நாஞ்சில் நாட்டையும், கொங்கு நாட்டையும் இணைக்கின்ற நிலையை வட்டார வழக்கியல் மூலம் நாம் அறிய முடிகிறது. கி.பி. 7,8,9 நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டு மக்கள் நாஞ்சில் நாட்டிலுள்ள நாகராஜர் ஆலயம் வந்து விளக்கேற்றி வழிபாடு செய்ததாக ஒரு வரலாறு உண்டு. நாகர்கோவில் நாகராஜர் ஆலயத்தில் ஆவணி மாதக் கடைசி ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் திருவிளக்கு அலங்காரம் இன்றும் கொங்குநாட்டு விளக்கு என்றுதான் அழைக்கப்படுகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு நாகராஜர் ஆலயத்தில் திருக்குடமுழுக்கு விழா நடத்தியதும், அக்கோயில் வளாகத்தில் முருகன் ஆலயத்தை எழுப்பி, கந்த சஷ்டி விழாவை தொடங்கியதும் கொங்கு நாட்டைச் சார்ந்த கீதஸ்ரீ செங்கோட முதலியார் அவர்கள்தான். இன்று கந்த சஷ்டிவிழா நாகராஜர் ஆலயத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இவ்வாறு நாகராஜர் ஆலயத்தோடு கொங்கு நாட்டவர் நெருங்கிய தொடர்புடையவர்கள் என வரலாறு கூறுகின்றது. நாஞ்சில் நாட்டின் ஆன்மீகத் திருநகரான சுசீந்திரம் ஆலயத்தில் காட்சி தரும் அனுமன் சிலையும், கொங்கு நாட்டிலுள்ள நாமக்கல்லில் காட்சிதரும் அனுமன் சிலையும் உலகப் பிரசித்தி பெற்றவை.

இந்த அரசியல், கலாச்சார அடிப்படையில் தோன்றியதுதான் கொங்கு நாட்டிலுள்ள சேலத்தையும், நாஞ்சில் நாட்டிலுள்ள கன்னியாகுமரியையும் இணைக்கும் சேலம் - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை. அதுதான் இன்று என்.எச்.47 என்று அழைக்கப்படுகிறது.

கேரளத்திற்கும், கொங்கு நாட்டிலுள்ள ஈரோட்டிற்கும் அரசியல் தொடர்பு உண்டு. கி.பி. 1885 முதல் 1924 வரை திருவிதாங்கூர் ராஜ்யத்தை ஆண்டுவந்த ஸ்ரீமூலம் திருநாள் மாமன்னர் ஈரோட்டில் பெரியார் ராமசாமி நாயக்கர் இல்லத்தில் தங்கும் வழக்கம் இருந்தது. பெரியாரும் ஸ்ரீமூலம் திருநாள் மாமன்னரும் நெருங்கிய நண்பர்களாவர். அந்த அடிப்படையில்தான் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள மகாத்மா காந்தி அவர்கள் பெரியாரைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார் என்றும், பெரியார் வைக்கம் சென்றபோது அவருக்கு அளிக்கப்பட்ட அரசு வரவேற்பை ஏற்றுக் கொள்ளாமல் "நான் விருந்தாளியாக இங்கு வரவில்லை. போராளியாக வந்துள்ளேன்" என்று கூறினார் என்றும் பெரியாரின் வரலாறு கூறுகின்றது. வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்ட ஈரோடு பெரியாருக்கு வைக்கத்திலே திருவுருவச்சிலை எழுப்பப்பட்டுள்ளது.

கோவையில் 2007-ஆம் ஆண்டு நடைபெற்ற விழாவில் கோவையிலிருந்து வெளிவரும் ஓம்சக்தி பொறுப்பாசிரியர் கவிஞர் சிதம்பரநாதன் அவர்கள் உரையாற்றும்போது திருவள்ளுவர் குமரி மாவட்டத்தில் பிறந்தவர் என்ற எனது ஆய்வினைக் குறிப்பிட்டு எனது கருத்தை எவராலும் மறுக்க முடியவில்லை என்பதையும் குறிப்பிட்டார். இங்கு ஒரு வரலாற்று உண்மையை நான் கூற வேண்டும். திருவள்ளுவர் குமரி மாவட்டத்தைத் தென்னெல்லையாகவும், கொங்கு நாட்டை வட எல்லையாகவும் கொண்டிருந்த பண்டைய சேரநாட்டிலேதான் பிறந்தார்.

அவ்வாறென்றால் திருவள்ளுவரைப் பெற்றெடுத்த பெருமை பண்டைய சேர நாட்டினரான உங்களுக்கும் உண்டு என்பதைப் பணிவன்புடன் கூறிக்கொள்கிறேன். திருவள்ளுவர் பிறந்தது குமரி. மறைந்தது மயிலையாக இருக்கலாம். மயிலையில் அமைந்துள்ள திருவள்ளுவரின் நினைவாலயம் அவரது சமாதியாக இருக்கலாம். சான்றோர்கள் மறைந்த இடத்திலே அவர்களுக்கு நினைவாலயம் எழுவது தமிழ் மரபு.

இவ்வாறு நாஞ்சில் நாடும் கொங்கு நாடும் அதுபோல சேரநாடும் கொங்குநாடும் சங்க காலத்திலிருந்தே அரசியல் மற்றும் கலாச்சாரத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை இலக்கியமும் வரலாறும், வட்டார வழக்கியலும், கள ஆய்வும் நமக்குத் தெரிவிக்கின்றன. மறைந்துபோன, மறந்துபோன, இந்த வரலாற்றுத் தொடர்பினை நினைவூட்டும் வண்ணம் இந்த நிகழ்ச்சி இங்கே அமைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியை இங்கே ஏற்பாடு செய்து, அடியேனை இங்கே வரவழைத்து உங்களோடு கலந்துரையாடும் வாய்ப்பினையும் தந்த நிகழ்ச்சி அழைப்பாளர்களையும், இதுவரை எனது உரையைப் பொறுமையோடு செவிமடுத்த உங்கள் எல்லோருக்கும் எனது பணிவான நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

# ஔவையாரும் நாஞ்சில் வள்ளுவனும்...



புலவர் **கு.பச்சைமால்,** இயக்குநர்,

தமிழாலயம், சாமிதோப்பு, குமரி மாவட்டம் - 629 709

'ஔவை' என்ற பழந்தமிழ்ச் சொல்லுக்கு அன்னை என்று பொருள். ஔவை என்பதும் தொல்காப்பியர், திருவள்ளுவர், அதங்கோட்டாசான் போல ஒரு சிறப்புப் பெயர் ஆகும். ஔவை, யாருக்கு அன்னை? எனக்கு, உங்களுக்கு, தகடூர் நாட்டுப் பெருமக்களுக்கு தமிழக மக்கள் அனைவருக்கும், ஏன், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கோட்பாட்டின் படி உலக மக்களுக்கெல்லாம் அன்னை அவர். நம் எல்லோருக்கும் தனித்தனியே அன்னை உண்டு. எல்லோருக்கும் அன்னை ஔவை.

ஒரு பெண்புலவருக்கு அன்னை எனப் பெயர் சூட்டி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அவர் பெருமை பேசிவருகிறோமே! இது ஏன்?

ஔவையார் தமிழ்நாட்டில் தகடூரில் பிறந்து வாழ்ந்தார். 'தகடு' என்றால் பூவிதழ். பூவிதழ் போன்ற நாடு இது. இந்த பூவிதழின் மணம் ஔவை பாடலாக மணக்கிறது.

ஔவை அதியமானின் அவைப்புலவர்,

அதியமான்கள் யார்?

கரும்பை இந்த மண்ணுக்குக் கொண்டு வந்தவர்கள் என்பதை ஔவைதான் நமக்குச் சொன்னார். அசோக சக்கரவர்த்தியால் 'சதிய புதோ' - சத்திய புத்திரர் என்று கல்வெட்டில் பொறிக்கப்பட்டவர்கள்.

சிறப்பு மிக்க இந்த சத்தியபுத்திரர் வரிசையில், கடையெழு வள்ளல்களில் ஒருவராக - உத்தம வள்ளலாக அதியமான் நெடுமான் அஞ்சி திகழ்கிறார். ஔவையின் பாடல்களாகப் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நான்கு சங்க நூல்களிலும் புறப்பாட்டு - 33, அகப்பாட்டு 26 ஆக 59 பாடல்கள் உள்ளன. சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களில் அதிகம் பாடியவர் ஔவையார், புலவர் பரம்பரையின் வேர். இப்பாடல்களை ஆராய்ந்த அறிஞர்கள் திகைத்துப் போயுள்ளனர்.

பேராசிரியர் சி.யேசுதாசன் *Peaks of Sangam Poetry* நூலில்,

"ஔவையின் மேதைமையின் ஆற்றலையும் வீறார்ந்த மாண்பையும் உலகப் பெண்பாற் புலவர்கள் படைப்புகளோடு ஒப்பிட்டு நமது வரம்பிற்குட்பட்ட

அறிவை வைத்துக் கூறுமிடத்து அவர்களுள் உறுதியாக முதலிடம் இவருக்கே உரியது என்பதைத் துணிந்து கூறுகின்றோம்" என்கிறார்.

அறிஞர் பெ.சு.மணி 'சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்' - நூலில் கி.மு. 1500 முதல் கி.பி. 200 வரை உலகில் வாழ்ந்த உலகப் பெண்பாற் புலவர்கள் 165 பேரின் 230 பாடல்களோடு ஔவையின் பாடல்களை ஒப்பிட்டு அவருக்கு நிகர் யாருமே இல்லை என்று முடிவு கண்டு,

"வீரம், காதல் இரண்டையும் பாடி உலக இலக்கிய மரபிற்குப்
புதிய நன்கொடையை வழங்கியவர்" என்று கூறுகின்றார்.

அதனால்தான் அறிவுலகமெல்லாம் இப்புலமைப் பெருமாட்டியை 'அன்னை' என்று மதிப்பிட்டு வணங்கித் துதிக்கிறது.

ஔவை அதியமானை 5 பாடல்களில் 'என் தலைவர்' என்றும், ஒவ்வொரு பாடல்களில் 'எம் கோமான்' (எங்கள் அரசன்) 'எந்தை' (என் தந்தை), 'அண்ணல்' (தலைவர்) என்றும் குறித்துள்ளார். பெருமகன், அதியர் கோமான், கடுமான் தோன்றல், ஒள் ஞாயிறு அன்னோன், வைகல் உழுவன் என்றெல்லாம் பாடியுள்ளார்.

ஔவை, அதியமான் அவைப்புலவர், நெல்லிக்கனி பெற்றவர், தொண்டைமானிடம் தூது சென்றவர் என்ற பெருமையெல்லாம் அவருக்கு உரியவை.

மகாகவி பாரதியார், 'ஔவை வெறுமனே நூலாசிரியர் மட்டும் அல்லர். அவர் காலத்திலேயே அவர், ராஜரீதியில் மிகவும் வல்லவர்' என்று தமிழ்நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பட்டவர் என்று போற்றியுள்ளார்.

அதியமான் பாணர்க்குப் பரிசுகள் பல வழங்கி அழியாப் புகழ் பெற்றவன். தன்னை நாடி வந்த புலவர், பாணர்களுக்கு வேறு பரிசில் வழங்க முடியாத - போர்ச் சூழல் இருந்தால் என்ன செய்வான்? புறநானூறு 390ஆம் பாடல் "பகடுதரு செந்நெல் போராடு வழங்கி" என்றோர் நுட்பமான செய்தியைக் கூறுகிறது. வயல் அறுத்துக் களத்தில் குவிக்கப்பட்டுள்ளது. அவற்றை அள்ளிச் செல்லுங்கள் என்று கூறிவிட்டான் அதியமான்! எப்படி இருக்கிறது கொடைவளம்! அதனால் தான் ஔவை "சிவபெருமான் போல் வாழ்க" என்று பாடினார்! அவர் மதிப்பை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.

"சிறிய அளவு கள்(பதநீர்) பெறினே எமக்கு ஈயும்
பெரிய கள் பெறினே.

யான் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும்" என்று பாடிக்களித்த ஔவை அதியமான் போரில் வீழ்ந்த போது, பகைவர் வீசிய வேல் அவன் மார்பை மட்டும் துளைக்கவில்லை.

பாணர் பாத்திரத்தைத் துளைத்தது
இரப்பவர் கைகளையும் துளைத்தது
புரக்கப்பட்டவர் கண் ஒளியை மங்கவைத்தது
புலவர்கள் நாவையும் துளைத்தது என்றவர் மேலும்;

"அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று" (புறநானூறு - 235) என்று பாடியுள்ளார்.

உலகத்து ஒப்பாரிப் பாடல்களில் (கையறு நிலை) இதுவே ஒப்புயர்வற்றது. பின்னர் அதியமான் மகன் பொகுட்டெழினியையும் பாடியுள்ளார். இவையெல்லாம் புறநானூறு கற்றார் அனைவருக்கும் தெரிந்தவைதான்.

இனி

"பாடுநர் இல்லை
பாடுநர்க்கு ஒன்றும் ஈகுநரும் இல்லை"

என்று பாடிய ஔவை பின் என்ன ஆனார்? எங்கே சென்றார்? இவ்விடத்தில் நாஞ்சில் வள்ளுவனைப் பற்றி அறிதல் வேண்டும். பொகுட்டெழினியை வாழப் பாடிய ஔவை வடக்குத் தமிழ்நாட்டில் எங்கும் செல்லவில்லை. யாரையும் பாடவில்லை. விறலியரான தம் தோழியரோடு நாகர்கோவில் - தருமபுரி 500 கிலோ மீட்டர் தூரம் கடும்பயணம் செய்து நாஞ்சில் நாட்டை அடைகிறார்.

நாஞ்சில் நாடு இன்றைய குமரி மாவட்டத்தின் தோவாளை, அகத்தீசுவரம் வட்டங்களை உள்ளடக்கிய வளநாடு ஆகும்.

தமிழ்ச்சங்கம் வேட்டைக் காலத்திலிருந்து வளர்ந்து வேளாண்மைப் பருவத்தில் நுழைந்தபோது முதன்முதலில் கலப்பையால் (நாஞ்சில்) உழுது பயிரிட்ட பகுதி இதுவாக இருக்கலாம். உலகத்தில் உழுகருவி (கலப்பை - நாஞ்சில்)யின் பெயரைப் பெற்ற ஒரே நிலப்பகுதி நாஞ்சில் நாடுதான். நல்ல செய் (வயல்) நிலம் உருவாவதற்கு நாஞ்சில் என்னும் கலப்பை பயன்படுத்தப்பட்டது. எனவே 'நாஞ்சில் நாடு' என்று பெயர் அமைந்தது. அங்குள்ள மலைக்கும் அதே பெயரை மக்கள் வழங்கினர்.

நாஞ்சில் நாட்டின் தலைவன் நாஞ்சில் வள்ளுவன். தென்திசைக்கு வருகை புரிந்த ஔவையார் நாஞ்சில் நாட்டை அடைந்துள்ளார். வள்ளுவனை ஒருசிறைப் பெரியனார், மதுரை மருதனிள நாகனார், கருவூர் கதப்பிள்ளை ஆகிய புலவர்களும் பாடியுள்ளனர். நாஞ்சிலுக்கு வந்த ஔவை நேரே வள்ளுவன் அரண்மனைக்குச் செல்லவில்லை. ஓரிடத்தில் தங்கி சமைப்பதற்குக்கீரை பறித்தார்கள். சமையல் தொடங்கியபோது தங்களிடம் அரிசி தீர்ந்து போனதால் 'சிறிது அரிசி வேண்டும்' என்று வள்ளுவனுக்குச் சொல்லிவிட்டார்கள்.

அவன், ஒரு பையில் கொஞ்சம் அரிசி அனுப்பினால் போதும். ஆனால் அவனோ யானை சுமக்கும் அளவு அரிசியை யானைமேல் ஏற்றி அனுப்பிவிட்டான். நாஞ்சில் தலைவன் தன் வயல்நாட்டின் கொடையாண்மையை இவ்வாறு வெளிப்படுத்தினான். அவன் செயல்கண்ட ஔவை திகைத்தார் - வியந்தார் - மகிழ்ந்தார். அவனைப்பற்றி ஒரு பாடல் பிறந்தது.

தடவுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம் சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிறர்
வரிசை அறிதலின் தன்னும் தூக்கி
இரும்கடறு வளைஇய குன்றத்து அன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே! அன்னதோர்
தேற்றா ஈகையும் உளது கொல்
போற்றார் அம்ம பெரியோர்தம் கடனே!

என்பது அவர் பொன் பாட்டு - அரிய பாட்டு - அரிசிப் பாட்டு.

சில அரிசி கேட்டதற்கு யானையோடு அரிசி அனுப்பிய அவன் பெருமயைத் 'தேற்றா ஈகை' என்று போற்றினர். அதை உலகப் புலவர்களெல்லாம் அறிதல் வேண்டும் என்பதற்காக 'மடவன் மன்ற செந்நாப் புலவீர்' என்றார். வஞ்சப் புகழ்ச்சியாக அவனை 'மடவன்' என்றார். 'கொடை மடம்' என்ற ஒரு வள்ளன்மைக் குறியீடு இப்பாடலில் மிளிர்கிறது. தான் பாடிய யாரையும் அவர் 'பெரியன்' என்று பாடியதில்லை. நாஞ்சில் பொருநனைப் பாடும் இந்த நல்வாய்ப்பினால் பிறருக்காக ஆண்ட வள்ளல்களையெல்லாம் 'பெரியோர்' என்று போற்றிவிட்டார்.

ஔவையின் வாழ்வு நிலையை ஊன்றிப் பார்த்தால் அவர் நாஞ்சில் நாட்டிலிருந்து திரும்பிப் போகவில்லை என்பதை உணர முடியும். மிக முதிய வயதில் குமரிக்கு வந்த அவள் அங்கேயே காலமாகி - கடவுளாகிவிட்டார். அதனால் தான் ஔவைக் கிழவி என்ற வழக்குப் பிறந்தது. நாஞ்சில் வள்ளுவனால் ஆதரிக்கப்பட்டு வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த சிறப்பால் தெய்வத்துள் வைத்துப் போற்றப்பட்டுள்ளார். குமரித் தமிழர்கள் அவருக்குக் கோவில் கட்டித் தொழுது அவர் பெருமையைத் தலைமுறை தலைமுறை தோறும் போற்றி வருகின்றோம்.

நாஞ்சில் நாட்டில் நாஞ்சில் வள்ளுவனுக்குக் கோவில் இல்லை. ஔவைக்கு நாகர்கோவில் - திருநெல்வேலி நெடுஞ்சாலையில் முப்பந்தல் என்ற இடத்தில் கோவில் அமைத்தார்கள்.

தமிழ் இலக்கிய - சமய வரலாற்றில் ஆறு ஔவைகள் வாழ்ந்ததாகவும், ஏழு கோவில்கள் இருப்பதாகவும் அறிஞர்கள் அறுதியிட்டுள்ளனர். குமரி மாவட்டத்தில் மூன்று ஔவை கோவில்கள் உள்ளன. அவைகளுள் முப்பந்தல் கோவில்தான் சங்க கால ஔவை கோவில். ஓர் இயக்கி கோவிலோடு இணைந்து இன்றுவரை அழியாமல் அது பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த முப்பந்தல் பல சிறப்புகள் பெற்ற ஊர். வள்ளுவன் காலத்தில் நாஞ்சில் நாட்டின் முக்கிய நகரம், தலைநகர், மூன்று பெருவழிச் சாலைகளின் சந்திப்பு. இந்த நகரிலிருந்து தெற்கே சென்றால் குமரி. மேற்கே சென்றால் சேரரின் வஞ்சி. கிழக்கே சென்றால் பாண்டியரின் கொற்கை.

இந்த இடத்தில்தான் ஔவையைச் சேரமான் மாரிவெண்கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியும் சந்தித்த அரிய நிகழ்வு அமைந்தது. தமிழக அரசியல் வரலாற்றில் இது ஒரு திருப்பு முனை. அதனால் தான் 'முப்பந்தல்' என்ற பெயரும் வந்தது. இந்த சந்திப்பில் தமிழகப் 'போர் அரசியல்' குறித்த மக்கள் கருத்தை - போர் எதிர்ப்பை, ஔவை ஓர் அறவுரையாக - அறிவுரையாக மூவேந்தர்க்கும் வழங்கியுள்ளார். புறநானூற்றில் 317ஆம் பாடலாக அமைந்துள்ள ஔவை மொழிகளைப் புதிய நடையில் காண்போம் :

பேரரசர்களே!
முத்தீ ஒளிபோல விளங்கும் உங்களுக்கு
நான் அறிந்த அளவுக்குக் கூறுகின்றேன்.
ஒரு நாடு, அதன் அரசன் இறந்துவிட்டால்
அதுவும் அவனோடு இறந்துவிடுவதில்லை.
மேலும் அது இருக்கவே செய்யும்.
அன்னியர் கைகளிலும்
அது சிக்கிவிடும்.
போர்களினால் அரசர்களின் வாழ்வு
அற்ப ஆயுள் ஆகிவிடுகிறது.
உங்களுக்கு இறைவன் வகுத்த
நாள் முழுவதும் நீங்கள் வாழ வேண்டும்.
விண்மீன்களை விட
மழைத்துளிகளை விட
அதிக நாள் வாழ்வீர்களாக.
*என்பது அவர் எண்ணத்தின் ஒளிவீச்சு.*

நீங்கள் அதியமானின் - ஔவையின் தகடூர் நாட்டில் வாழ்கிறீர்கள். நான் நாஞ்சில் வள்ளுவனின் நாஞ்சில் நாட்டில் வாழ்கிறேன். ஔவை இருநாட்டிலும் வாழ்ந்த சிறப்புக்குரியவர், எந்த நாடு நல்ல நாடு? என்ற ஒரு கேள்விக்கு அவர் அளித்த பதில் அவர் பெருமைக்கே பெருமை சேர்ப்பதாகும்.

நாடாக இருந்தால் என்ன?
காடாக இருந்தால் என்ன?
மேடாக இருந்தால் என்ன?
பள்ளமாக இருந்தால் என்ன?
எங்கே ஆடவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ
அந்த நாடே நல்ல நாடு
அந்நாடு வாழ்க!

என்பதே அவர் அளித்த பதில்.

உலகில் பூசல்களுக்கும், போர்களுக்கும் ஆடவர்களே காரணம். பெண்களையும் அவர்களே வழிநடத்துகிறார்கள். எனவேதான் பாரதிதாசன் :

"மாதெரெல்லாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை சாக்காடும் இல்லை"

என்று பாடினார். இதை நாம் நினைக்க வேண்டும். ஔவையின் பழைய தமிழைப் பாவேந்தர் புதிய தமிழில் பாடியுள்ளார்.

"நம் நாடுகள் நல்ல நாடுகளாக இருக்க
ஆண்களாகிய நாம் நல்லவர்களாக இருக்க வேண்டும்"
ஔவையார் இருநாடுகளின் குடிமகளாக வாழ்ந்துள்ளார்.

அவர் இறுதியாகப் பாடிய நாஞ்சில் நாட்டின் தலைவன் கடையெழு வள்ளல்களின் பின் வரிசையில் முன் நிற்பவன்.

ஔவையோ தமிழ்கவிஞர்களில் மட்டுமல்ல

உலகத்தின் பெண் கவிஞர்களிடையே முதலிடத்தில் இருக்கிறார்.

இவர்கள் இருவரும்

நாஞ்சில் நாட்டில் - குமரி மண்ணில்

சந்தித்து - மகிழ்ந்து - செந்தமிழ் வளர்த்து

வரலாறு ஆகியுள்ளனர்.


பழைய சரித்திரம்

புதிய சரித்திரத்திற்கு வித்தாகட்டும்

புதிய தலைமுறை எழுச்சி கொள்ளட்டும்.



வேப்பனப்பள்ளி ஸ்ரீராமர்கோயில் தெப்பக்குளம்



# இராயக்கோட்டை தெருக்கூத்துக் கலை

கவியருவி நாகராசன்
அலைபேசி : 97878 64219

1/777, கிருட்டிணகிரி சாலை,
இராயக்கோட்டை – 635 116.
கிருட்டிணகிரி மாவட்டம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கிருட்டிணகிரி மாவட்டத்தில் கோபுர கலசம் போல் ஒளிவிடக் கூடிய கிராமம் தான் இராயக்கோட்டை.

இது இதயத்தின் வடிவம் போல் இருமலைகளுக்கு இடையிலே அமைந்துள்ளது. இங்கே இதயம் உள்ள நல்ல மனிதர்கள் வாழ்கிறார்கள். இந்த ஊரின் வடக்குப் புறத்தில் சித்த முனிவர் தூருவாசமகாரிஷு குடிகொண்டு வாழ்ந்து வரும் தலமாக விளங்கும் மலையுள்ளது. அதைத் தூருவாசர் மலை என்பார்கள்.

அதற்கு மேற்குப் புறம் சூளகிரி சாலையில் 1920–ஆம் ஆண்டு கட்டப்பட்ட துரோபதியம்மன் திருக்கோயில் ஒன்று உள்ளது. செஜ்ஜலப்பட்டி முனியப்பன் என்பவரின் நிலத்தில் வன்னிமரம் ஒன்று இன்றும் உள்ளது. அதன் கீழ்தான் துரோபதியம்மன் நிலைகொண்டு இருந்தாள். அந்த இடத்தில் அருள்வாக்கு கூறிய பிறகுதான் இராயக்கோட்டை அருகில் கோயில் கட்டப்பட்டது.

அங்கே வைகாசி மாதம் ஆண்டு தவறாமல் சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாகக் கூத்து நடைபெற்று வருகிறது.

இக்கோயிலின் சார்பில் நடைபெறும். கூத்தைச் சுமார் இருபது ஊர்க்காரர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து நடத்தி வருவதாக செஜ்ஜலப்பட்டி திரு. S.M.அப்பாவு தர்மகர்த்தா கூறுகிறார். பாரம்பரியமாக இவர்களுடைய குடும்பத்தார்கள் இப்பணியைச் செய்து தொண்டாற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

இக்கோயிலின் முன்புறத்தில் வைகாசி மாதம் பாரதக் கோயிலுக்குரிய கொடியினை ஏற்றி. கோயில் தர்மகர்த்தா குழுவினர் வலது கையில் கங்கணம் கட்டிக் கொள்வார்கள். அதன் அடையாளமாக மஞ்சள் வெட்டியைக் கட்டிக் கொள்வார்கள்.

இக்கோயிலில் தலைசிறந்த வித்வான்களைக் கொண்டு பதினெட்டு நாட்கள் பாரதக் கதையை நாள்தோறும் பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

அதற்குப்பிறகு இரவு 10 மணிக்குத் தெருக்கூத்து ஆரம்பமாகிவிடும். மிகச்சிறந்த தெருக்கூத்து கலைஞர்களைக் கொண்டு 18 நாட்களும், மகாபாரதக்

கதையைச் சுவைப்பட கண்ணுக்கும், காதுக்கும் விருந்தளிக்கும் வகையில் தெருக்கூத்தாக நடைபெறும்.

கூத்து நடைபெறும் இடம் பரந்த வெட்ட வெளியாகக் காணப்படுகிறது. நாடகக் கொட்டகை அமைப்பும், வேஷம் கட்டிக்கொள்ளத் தனியிடமும், கூத்து நடைபெறும் இடத்திற்கு முன்புறம், தனியிடத்தில் வாத்தியக்காரர்களின் இசைக் குழுவும் காணப்படும்.

தெருக்கூத்து நடிகனுக்கும், பார்வையாளர்களுக்கும் இடையே முப்பது அடிதூரம் வரை இடைவெளி காணப்படும்.

உள்ளே உள்ள தெருக்கூத்து நடிகர்கள் வர்ணம் பூசி கதை பாத்திரத்திற்கு ஏற்ப ஆடை அலங்காரங்கள் செய்து கொண்டு, பெரிய தலைக்கிரீடம், புஜகீர்த்திகள், பெரிய காதுகள், மார்பணிகள் அணிந்து கொள்வார்கள்.

மறைக்கப்பட்டுள்ள திசைக்குள் இருந்து அறிமுகத்துடன் இராகத்துடன் பாடலும், இசையும் முழங்க ஆவலைத் தூண்டக் கூடிய வகையில் பின்பாட்டுக் காரர்கள் பாடல்பாட

“வந்தேனே...” என்று முதன்முதலில் பாப்பூன் அறிமுகப்படுத்தியபடி இசையுடன் பாடியபடி வருவார்.

இராயக்கோட்டைத் தெருக்கூத்தில் மொல்லம்பட்டி முனுசாமி பொப்பூன் (கட்டியங்காரன்) என்றாலே அழுத பிள்ளையும் வாயை மூடிவிடும். கைகளைத் தட்டிச் சிரிக்கும் நகைச்சுவையுடன் நடிப்பார். வசனம் பேசுவார்.

அதேபோல தெருக்கூத்துக் கலைஞர்கள் நெடுங்கல் ஜடைவாத்தியார், குந்தாரப்பள்ளி துரைசாமி, காவேரி வாத்தியார், வேப்பனப்பள்ளி கோபால், மாது வாத்தியார் போன்ற சிறந்த தெருக்கூத்துக் குழுக்கள் வந்து தம்முடைய ஆற்றலை இந்த இராயக்கோட்டை மண்ணிலே பதிவு செய்து சென்றிருக்கிறார்கள்.

இந்த இராயக்கோட்டைத் தெருக்கூத்தில் ஒரு தனிச்சிறப்பு உண்டு. சுதந்திரப் போராட்ட தியாகியாகிய விஸ்வநாததாஸ் தெருக்கூத்தில் சுதந்திர உணர்வைப் பாடல்களில் ஊட்டியது வரலாறு கண்ட உண்மை.

அதைப் பின் பற்றியபடி இங்குள்ள தெருக்கூத்துக் கலைஞர்கள் தாம் பாத்திரங்களை ஏற்றுப் பாடல்களைப் பாடும் போது,

“வெள்ளைக் கொக்கு பறக்குது பாரீர்! –இந்த
வெள்ளைக் கொக்குக்கு இங்கு என்னடி வேலை!
விரட்டி அடித்திட அனுப்பிடு ஓலை!
அதிகாலை, அதுவே நல்ல வேலை!”

என்று பாடலைப்பாடினால் போதுமே மக்கள் கூட்டம் கைத்தட்டி சுதந்திர

தாகத்தை வெளிப்படுத்திய நாட்டுப்பற்றுள்ள தெருக்கூத்துத் திடலாக இராயக்கோட்டை விளங்கியுள்ளது என்று பெரியவர்கள் கூறுவதைக் கேட்டு மகிழ முடிகிறது. பெருமிதம் கொள்ள முடிகிறது.


அதேபோல இராயக்கோட்டையினும், அதன் சுற்றுபுறக் கிராமங்களிலும் வசதி படைத்தவர்கள், பெரியவர்கள் இறந்து விட்டால் அவர்களின் நினைவாக தெருக்கூத்துகள் நடைபெறுவது அன்றைய வழக்கமாக இருந்து வந்துள்ளது.

இராயக்கோட்டை மண்ணில் தெருக்கூத்துக் கலை மிகவும் பழமையாதாக இருந்து வந்துள்ளது. சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு நாயக்கர் குலத்தைச் சார்ந்த கோட்ட முனுசாமி நாயக்கர் அவர்கள் எமதர்மன் வேடம் அணிந்து கோட்டை வாசலில் இருந்து தெருக்கூத்து நடைபெறும் இடத்திற்கு பாடிக் கொண்டும், ஆடிக்கொண்டும் வந்தால் அதைப் பார்க்கக் கர்பிணிப் பெண்கள் அஞ்சுவார்களாம். கருக் கலைந்து விடும் என்ற அச்சத்தைத் தரும் தோற்றம் உடையதாகத் தெருக்கூத்து நடைப்பெற்றதாக கூறுவார்கள்.

இன்றும் தெருக்கூத்துக்கலை அழியாமல் இராயக்கோட்டை மண் பண்டைய மரபையும், பாரம்பரியத்தையும் காத்து வருகிறது.

அதற்குச் சான்றாக மொல்லம்பட்டி பொம்பூன் முனுசாமி போன்ற தெருக்கூத்துக் கலைஞர்களுக்கு தமிழக அரசு உதவித்தொகை அளித்து வருவதை இன்றும் காணலாம்.

“வாழ்க கலைகள்!
வளரவேண்டும் தெருக்கூத்துக் கலை!”



இராயக்கோட்டை தெருக்கூத்துக் கலைக்குழு

ஒசூர் அருள்மிகு

# சந்திரசூடேசுவரர் திருக்கோயில்

ஆய்வாளர் : இரா. இராமகிருட்டிணன், எம்.ஏ., எம்.ஃபில்.

ஒசூர் நகரின் கிழக்கே மலை மீது சந்திரசூடேசுவரர் திருக்கோயில் அமைந்துள்ளது. கோயில் அமைந்துள்ள இம்மலை முன்னாளில் **"எருது மலை"** என்று அழைக்கப்பட்டது. அப்பெயர் வடமொழியில் **"ரிஷபாத்ரி"** எனப்பட்டது. **"ரிஷபம்"** என்ற சொல்லிற்கு எருது, காளை, விடை, ஆனேறு என்பது பொருளாம். எருது என்னும் காளை (நந்தி) ஊர்தியே சிவபெருமானின் ஊர்திகளில் முதன்மையானது. கொடியேற்றம், திருமணக் காட்சி, பிரதோசம் ஆகிய சிறப்பு நாட்களில் இறைவன் காளையின் மீதே எழுந்தருள்கிறார். நான்முகன், திருமால், தருமதேவதை ஆகிய தேவர்களும் காளை ஊர்தியாக சிவபெருமானைத் தாங்கியிருக்கின்றனர். நான்முகன் தங்கியது வேதவெள்விடை ; திருமால் தாங்கியது மால்விடை ; தருமதேவதை தாங்கியது. வேதவெள்விடை ; இறைவன் அடியவர்க்கு ஆனேற்றின் மீது அமர்ந்து வந்தே காட்சி அளித்திருக்கின்றான். தரும தேவதை சிவனை நோக்கித் தவமியற்றிச் சிவனருளால் குன்றாக மாறிச் சிவனைத் தாங்குகிறார் எனத் தலபுராணம் கூறுகின்றது. இத்தகு சிறப்பு வாய்ந்த எருது மலையின் மீது சிவபெருமான் சந்திரசூடேசுவரர் என்ற பெயர் பூண்டு இலிங்க வடிவில் கோயில் கொண்டுள்ளார்.

## கோவிலின் சிறப்பு

1. தமிழகத்தின் மலை மீது அமைந்துள்ள சிவன் கோயில்கள் சிலவே. அவற்றுள் ஒன்று சந்திரசூடேஸ்வரர் கோயில்
2. ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையான சிவன் கோயில்.
3. தான் தோன்றீசராக சிவன் இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ள தலம்.
4. கிருட்டிணகிரி, தருமபுரி ஆகிய இரு மாவட்டச் சிவன் கோயில்களில் இக்கோயிலில் மட்டுமே 63 நாயன்மார்களின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.
5. கிருட்டிணகிரி மாவட்டச் சிவாலயங்களில் இக்கோயிலில் மட்டுமே சப்த மாதர்களின் திருவுருவங்கள் அமைந்துள்ளன.
6. எண்திசைக் காவலர்கள் தத்தம் ஊர்திகளுடன் (வாயு நீங்கலாக) உரிய திசைகளில் சிவனின் பரிவார தெய்வங்களாக இடம்பெற்றுள்ளனர்.

7. சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் முதல்முதலில் தங்கத்தேர் பெற்ற தலம்.

8. துவாரபாலர்களின் திருவுருவங்கள் நிறுவப்பட்டு அவர்களின் வழிபாட்டிற்கு ஒரு சிற்றூரின் வரித்தொகை நிவந்தமாக அளிக்கப்பட்ட சிறப்புப் பெற்றது.

9. வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பன்மொழிகளில் தல புராணம் பெற்றுள்ள கோயில்.

10. தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்களில் அதிகமாகக் கல்வெட்டுகள் (சுமார் 89 கல்வெட்டுகள்) கொண்ட கோயில்.

## கோயிலின் தோற்றம்

ஆனைகொண்டா எனும் நாட்டு (இந்நாடு எங்கிருந்தது என அறியமுடியவில்லை) மன்னனான கிருஷ்ணகந்தர்வ ராயர் தன் மகன் வேண்டுகோளுக்கு இணங்க ஓலைக் குடிசையாய் இருந்த சிவன் கோயிலுக்குக் கட்டிடம் எழுப்பி, இறைவனுக்குத் துலாபாரத் தானமும் செய்தார் எனத் தல புராணம் கூறுகிறது. கோயிலின் தோற்றம் பற்றி வேறு சான்றுகள் ஆய்வாளருக்குக் கிடைக்கவில்லை.

## வளர்ச்சி

கோயிலில் உள்ள கணபதிச் சிற்றாலயம் கங்கர்களின் சிற்பக்கலைக் கூறுகளைக் கொண்டுள்ளது எனவும், உள் திருச்சுற்றிலுள்ள சப்த மாதர்கள், சூரியன் திருவுருவங்கள் கங்கர்கள் காலத்தவை எனவும் டாக்டர் தேவரகொண்டா ரெட்டி தம் 'தலைக்காடு கங்கர்களின் கோயில்கள் – ஓர் ஆய்வு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துக்கு வலிவு சேர்க்கும் விதமாக ஒசூர்ப் பகுதியில் கங்கர்களின் மூன்று கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன[1]. இவற்றின் காலம் கி.பி. 9 மற்றும் 10–ஆம் நூற்றாண்டாகும். எனவே ஒசூர்ப் பகுதி கங்கர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் இக்கோயிலின் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

சோழ மன்னர்களில் முதலாம் இராசேந்திரன் (கி.பி. 1012–1044) மற்றும் முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070–1120) ஆட்சிக் காலக் கல்வெட்டுகள் இக்கோயிலின் பழைமையைப் பறைசாற்றுகின்றன. பொதுவாக முதன்மைத் தெய்வத்தின் கருவறை உருவான பிறகே அர்த்தமண்டபம், மகா மண்டபம், உற்சவர் மண்டபம், சிற்றாலயங்கள், திருச்சுற்று மதில்கள் ஆகியன அமைவது மரபு. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் பழமையானது முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி.1018) ஆட்சிக்காலக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு[2] தெற்கு வாயிலின் அருகே உள்ள துலாபாரத் தூணில் காணப்படுகிறது. இச்சான்றுகள் கோயிலின் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையை உறுதி செய்கின்றன.

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் இராசராசன் பெரியான் என்னும் செங்கீரை கோயிலில் விளக்குகள் எரிய ஆண்டொன்றிக்கு 90 நாழி எண்ணெய் தடையின்றி வழங்க அறக்கொடை[3] அளித்துள்ளான்.

ஒய்சளர் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 1261) ஒசூர்ப் பகுதியின் தலைவன் திரிபுவனமல்ல பூர்வாதிராச அத்தியாழ்வார் மகன் தர்மத்தாழ்வர் இக்கோயிலில் நம்பிராட்டியாரை (மரகதாம்பிகையை) எழுந்தருளச் செய்து வழிபாட்டிற்கு ஒரு சிற்றூரைக் கொடையளித்துள்ளான்[4]. இதே கால கட்டத்தில் துவாரபாலகர்களின் திருவுருவங்கள் சிறுபிள்ளை என்பவரால் நிறுவப்பட்டு வழிபாட்டிற்கு ஒரு ஊரின் வரிப்பணம் கொடையாக அளிக்கப்பட்டது[5]. அம்பிகை சந்நிதிக்கு முன்னுள்ள மண்டபத் தூண்கள் நடப்பட்டன[6]. முதல் திருச்சுற்று மதில் கட்டப்பட்டது[7].

விசயநகர மன்னர்கள் ஆட்சியில் (கி.பி. 1377) கோயிலின் தோட்டத்தைப் பராமரிக்க நிலம் கொடையாக அளிக்கப்பட்டது[2]. இரண்டாம் அரிஅரனின் மகாப்பிரதானி கோயில் திருப்பணிக்குக் கொடையளித்தான்[10]. தென்னக மகா மண்டலேசுவரனான புக்கனி தலைமை அமைச்சர் சோமப்ப தண்டநாயகனால் மலையடிவாரக் கோயிலும், கல்யாண மண்டபமும் கட்டப்பட்டன[11].

பதினைந்தாம் நூற்றாண்டில் நவக்கிரகங்களின் அருகில் தூண்கள் கட்டப்பட்டன[12]. வழிபாட்டிற்கு நிலக்கொடை, நிவந்தம், பொன், வரிப்பணம் ஆகியன அளிக்கப்பட்டன[13]. பதினாறாம் நூற்றாண்டில் (கி.பி. 1555) கோயிலின் இரண்டாம் திருச்சுற்று மதில் சுவர் கோடிநாயக்கனின் மகன் முதியா என்பவனால் கட்டப்பட்டது[14].

1956–ஆம் ஆண்டில் ஊர் பெரியவர்களின் முயற்சியால் சந்திரசூடேசுவரர் கோயிலுக்கு மின்சார வசதி செய்யப்பட்டது. 1972–ஆம் ஆண்டில் கோயிலின் மூலவர் விமானத்திலும், அம்பிகை விமானத்திலும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு விழா நடைபெற்றது. 1999–ஆம் ஆண்டில் மரத்தேரின் பழுதடைந்த இரு சக்கரங்களுக்குப் பதிலாகச் சுமார் மூன்று இலட்சம் செலவில் புதிய தேர்ச்சக்கரங்கள் பொருத்தப்பட்டன. மேலும், ரூ.22,500/– செலவில் கோயில் மதில் சுவர் பழுதுபார்க்கப்பட்டது. 2001ம் ஆண்டில் சென்னை வேணுகோபால சுவாமி கைங்கரிய டிரஸ்ட் (டி.வி.எஸ்) சுமார் அறுபது இலட்சம் செலவில் கோயில் திருப்பணி மேற்கொண்டனர். விமானங்கள் பழுது பார்க்கப்பட்டன. ஆறுமுகர், விநாயகர் சந்நிதிகள், நந்தி, கொடிக்கம்பம், பலிபீடம் ஆகியவை ஆகம விதிகளின்படி மாற்றி அமைக்கப்பட்டன. உள் திருச்சுற்று மேல்தளமும் மதில் சுவரும் பழுது பார்க்கப்பட்டன. கிழக்கு வாசல் வைக்கப்பட்டது. புதிய கொடித்தூண் நிறுவப்பட்டு அதற்குச் செப்புக் காப்பிடப்பட்டது. இராசகோபுரம் ரூ. 4,80,000/– செலவில் பழுது பார்க்கப்பட்டது. இறையன்பர்களின் உள்ளம் மகிழும் வண்ணம் இத்திருப்பணிகள் நிறைவுற்று 22.02.2002 அன்று திருக்குடமுழுக்கு விழா மிகச் சிறப்பான முறையில் நடந்தேறியது.

2002–ஆம் ஆண்டில் அன்னதான சமையல் கூடம் ரூ. 1,65,000/– செலவில் கட்டப்பட்டது. 2003 ஆம் ஆண்டிலும் தேர்ச்சக்கரங்கள் பழுதடைந்தன. பழுதடைந்த தேர்ச்சக்கரங்களுக்குப் பதிலாக நான்கு புதிய இரும்புச் சக்கரங்கள் ஒசூர் டி.வி.எஸ். நிறுவன நிர்வாக இயக்குநர். திரு. வேணு சீனிவாசன் அவர்களால் செய்து கொடுக்கப்பட்டது. இந்நிறுவனத்தினர் திருக்கோயில் முழுவதுக்கும் வண்ணப்பூச்சு செய்து கோயிலுக்குப் புதுப்பொலிவு ஊட்டினர். இதே ஆண்டில் சந்திரசூடேசுவரர் கோயிலில் அன்னதானத் திட்டம் தமிழக அரசால் தொடங்கப்பட்டது. இந்த அன்னதானத் திட்டம் தடங்கலின்றிச் செம்மையாக நடைபெற திரு. வேணு சீனிவாசன் அவர்களால் நன்கொடையாகப் பத்து இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டு, அத்தொகை கோயில் பெயரில் வைப்புத் தொகையாக வங்கியில் செலுத்தப்பட்டு, அத்தொகைக்கான வட்டித் தொகையில் நாள்தோறும் மதியம் பக்தர்களுக்கு அன்னதானம் தடங்கலின்றி நடைபெற்று வருகின்றது.

2006–ஆம் ஆண்டில் ரூ.27 இலட்சம் செலவில் தமிழகச் சுற்றுலாத் துறையினரால் காளிகாம்மாள் – காமாட்சீசுவரர் கோயில் படிக்கட்டுகள், இரும்புக் கைப்பிடி குடிநீர் வசதி, சிற்றுந்துகள் நிறுத்திடத்திற்குக் கான்கிரீட் தளம், குப்பைத் தொட்டிகள், கோயிலின் வெளிப்புறத்திற்கு மின் வசதி ஆகியன செய்து கொடுக்கப்பட்டன. மேலும், ஒசூர் நகராட்சியும், சுற்றுலாத் துறையும் இணைந்து இறையன்பர்களுக்கு ஓய்வுக் கூடம், கழிப்பிட வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத்தனர். மலை மீது பூங்கா நிறுவப்பட்டு, அது கோயில் நிர்வாகத்தின் பொறுப்பில் விடப்பட்டது. 2007ஆம் ஆண்டில் ஒசூரிலுள்ள அருள் ரப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு.வி. வஜ்ரவேல் அவர்களால் சுமார் 77 இலட்சம் செலவில் புதிய தங்கத் தேர் செய்யப்பட்டுக் கோயிலுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. இத்தங்கத் தேரின் குடமுழுக்கு 14.09.2007 அன்று காலை 9.15 மணிக்கும், மாலை 6.00 மணிக்கு வெள்ளோட்டமும் நடைபெற்றன. தங்கத் தேரோட்டத்திற்குத் திருச்சுற்றுப்பாதை முழுவதும் 10 அடி அகலத்திற்குப் பலகைக் கற்களுக்கு மேலே இரும்புக் கம்பிகள் பரப்பப்பட்டு கான்கிரீட் தளம் அறங்காவலர் குழுவினரால் அமைக்கப்பட்டது.

புதிய இராசகோபுரம் மதில் சுவரின் தென்பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள மேற்கு வாயிலைப் பிரித்தெடுத்து அக்கற்களைக் கொண்டு புதிதாக எழுப்பப்பட இருக்கும் இராசகோபுரத்தின் வாயில் பகுதிக்குப் பயன்படுத்திக் கொண்டு, அதன்மேல் 9 கலசங்கள் கொண்ட ஏழுநிலை இராசகோபுரம் எழுப்பும் பணிக்கான திட்ட வரைவு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. திட்டச் செலவு – சுமார் ரூ.1,14,00,000/– இத்தொகையைப் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகத் திரட்டி, இராசகோபுரத் திருப்பணிக் குழுவின் மேற்பார்வையில் இத்திருப்பணி நடைபெறும் என அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கி. வரதராஜ் தெரிவித்தார்[15].

## திருக்கோயில் அமைப்பு

சந்திரசூடேசுவரர் திருக்கோயில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் இரு திருச்சுற்றுகளைக் கொண்டுள்ளது. இக்கோயிலை அடையப் படிக்கட்டுகள் கொண்ட மூன்று பாதைகளும், ஒசூர்–கிருட்டிணகிரி நெடுஞ்சாலையிலிருந்து கான்கிரீட் சாலை ஒன்றும் உள்ளன. இக்கோயில் மூலவர் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், உற்சவர் மண்டபம், மரகதாம்பிகை கருவறை, இராச கோபுரம் ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளது. உள் திருச்சுற்றில் மூலவர் கருவறைக்கு இடப்புறம், மரகதாம்பிகை உட்கோயில் அமைந்துள்ளது. மேலும் வள்ளி – சண்முகர் – தேவயானை, இராச கணபதி, சப்தமாதர் ஆகிய தெய்வங்களுக்கான தனித்தனிச் சிற்றாலயங்கள், சண்டேசுவரர் சந்நிதி, பரிவார தெய்வங்கள், ஆலய மணி, கிணறு, நந்தி, கொடித்தூண், பலி பீடம், துலாபாரம், பொருள் வைப்பு அறை, திருமடப்பள்ளி ஆகியன அமைந்துள்ளன.

கருவறையில் தான்தோன்றீசராக சந்திரசூடேசுவரர் இலிங்க வடிவில் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். உற்சவர் மண்டபத்தில் உமை முருகன் உடனாய சிவன் (சோமாஸ்கந்தர்), அம்பிகை, ஆடல்வல்லான் – சிவகாமியன்னை, இரு தேவியருடன் சுப்பிரமணியர், சந்திரசேகரர், துர்க்கை, விநாயகர், பிரதோச நாயகர் – நாயகி, சண்டேசுவரர், மாணிக்கவாசகர், கண்ணப்பநாயனார், அத்திரதேவர் ஆகியோரின் திருவுலாத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன.

## அம்பிகை உட்கோயில்

மூலவருக்கு வடக்கே உள்ள மரகதாம்பிகை சிற்றாலயத்தில் 'மரகதாம்பாள்', 'பச்சையம்மன்' 'பர்வதம்மன்' என்ற திருப்பெயர்களைப் பூண்டுள்ள அம்பிகை நாற்கரங்களோடு நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறாள். இச்சிற்றாலயம் கருவறை, அர்த்த மண்டபம் ஆகிய உறுப்புகளைக் கொண்டுள்ளது.

## கருவறைக் கோட்ட தெய்வங்கள்

மூலவர் கருவறைப் புறச்சுவர்க் கோட்டங்களில் தெற்கே நடனக்கோலக் கணபதியும், தென்முகக் கடவுளும், மேற்கே திருமாலும், வடக்கே நான்முகனும், துர்க்கையும் கோட்ட தெய்வங்களாக நிறுவப்பட்டுள்ளனர்.

## பரிவார தெய்வங்கள்

உள் திருச்சுற்றில் மகா கணபதி, சமயக் குரவர் நால்வர், அறுபத்து மூன்று நாயன்மார்கள், கயலட்சுமி, கலைமகள், கால பைரவர், பஞ்சலிங்கம், ஒன்பான் கோள்கள், சூரியன், சந்திரன், எண்திசைக் கடவுளர் ஆகியோர் சிவனின் பரிவார தெய்வங்களாக இடம் பெற்றுள்ளனர்.

இரண்டாம் திருச்சுற்றின் வடகிழக்கில் சலகண்டேசுவரர் சந்நிதியும் தென்கிழக்கே தல மரமான வில்வ மரமும், வாயிலின் இடப்புறம் தங்கத் தேர்நிலைக் கூடமும், திருக்கோயில் அலுவலகமும் உள்ளன. திருச்சுற்று மதிலின் வெளியே மேற்கில் குளம் உள்ளது.

## திருக்கோயில் வழிபாடு

'வழிபாடு' என்பது முன்னோர் காட்டிய வழியில் வழிபடல், பின்பு வழிபடல் என்றாயிற்று. 'வழிபாடு' என்ற சொல் இன்று தொழுதல், வணங்குதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. பன்னிரெண்டாம் நூற்றாண்டு முதல் அன்றைய வழிபாட்டுச் செய்திகளைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஒய்சளர் ஆட்சிக் காலத்தில் இறைவன் திருமுழுக்காட்டிற்குத் தினமும் 20 குடம் தூய நீர் தென்பெண்ணையாற்றிலிருந்து கொண்டு வரப்பட்டது. நன்னீர் கொண்டு வர ஆண்டுச் செலவிற்கு 120 பொன் கொடையளிக்கப்பட்டது[16]. தவம் செய்யும் முனிவருக்குத் தனி இடம் ஒதுக்கி அங்கு 13 நாட்கள் சிவனை வழிபட நிவந்தம் அளிக்கப்பட்டது[17]. பதினாறாம் நூற்றாண்டுகளில் விசயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இறைவன் வழிபாட்டிற்கும், திருமுழுக்காட்டிற்குத் தூய நீர் கொண்டு வரவும் பலரால் கொடையளிக்கப்பட்டது.

## சிறப்பு வழிபாடு

கோயில்களில் நடைபெறும் சிறப்பு வழிபாட்டினை ஐந்து வகையாகப் பகுத்துக் காணலாம். அவை, வார வழிபாடு, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நடைபெறும் பிரதோச விழா, மாத வழிபாடு, ஆண்டு வழிபாடு மற்றும் குடமுழுக்கு விழா என்பவையாகும். சந்திரசூடேசுவரர் கோயிலில் சிறப்பு வார வழிபாடு எதுவும் நிகழ்வதில்லை. 15 நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு திரயோதசியன்றும் பகற்பொழுதின் இறுதிப் பொழுதான பிரதோசப் பொழுதில் நந்தி, சிவபெருமான் மற்றும் அம்பிகை ஆகிய மூவருக்கும் சிறப்பு திருமுழுக்காட்டு நிகழ்த்தப்பட்டு, ஆடை அணிகலன்கள், மலர்களால் அலங்கரித்து ஆராதிக்கப்படுகின்றனர். பின்னர் பிரதோச நாயகர் நாயகி இருவரும் பிரகார உலா வருகின்றனர்.

மாத விழாவாக முழு நிலா நாளில் பௌர்ணமி விழாக் கொண்டாடப் படுகிறது. இறையன்பர்கள் இறைவன் குடிகொண்டுள்ள மலையைக் கிரிவலம் வருகின்றனர். உற்சவர் பல்லக்கில் திருவீதியுலா வருவார். இக்கோயிலில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் மகா நவசண்டி யாகம், நவராத்திரி, விசயதசமி, கார்த்திகை தீபத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா, பொங்கல் விழா, சிவன் ராத்திரி, தை மாதத்தில் இரத சப்தமி மற்றும் பெருந்திருவிழா ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

## திருக்கோயில் நிர்வாகம்

சந்திரசூடேசுவரர் கோயிலின் அன்றைய நிர்வாகம் குறித்த செய்திகளைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சோழர் ஆட்சியில் '**தேவர் பண்டாரம்**' என்றழைக்கப்பட்ட கோயில் கருவூலம் இருந்தது. கோயில் வருவாய் தேவர் பண்டாரத்தில் செலுத்தப்பட்டது[19]. கோயிலைச் சார்ந்த சைவ மடம் ஒன்றிருந்தது. '**மாகேசுவரர்**' எனப்படும் சைவத் துறவியர்க்கு அம்மடத்தில் உணவு அளிக்கப்பட்டது. மடத்தின் தலைவராக **முதலியார் முத்தி** என்பவர் இருந்தார்[20]. கோயில் வழிபாட்டிற்கும், பராமரிப்பிற்கும் சரிகை, சுங்கம் போன்ற வரிகள் விதிக்கப்பட்டன[28]. பதின்மூன்றாம் நூற்றாண்டில் கோயில் நிர்வாகியாக ஸ்தானிகள் இருந்தனர். மடாதிபதி, ஸ்தானீகர், ஜீயர், வீரசோழ அணுக்கர் ஆகியோர் கொண்ட நிர்வாகக்குழு கோயிலின் நிர்வாகத்தை ஏற்று நடத்தியது. ஒய்சளர் ஆட்சிக்காலத்தில் கோயிலின் பராமரிப்பிற்கும், திருப்பணிக்கும் தேவதான ஊர்களிலிருந்தும், தேவதான நிலங்களிலிருந்தும் சித்தாயப் பொன், இராயச நிவந்தம், கேள்வி நிவந்தம் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் பொன் சர்வ மானியமாகக் கோயிலுக்கு அளிக்கப்பட்டது[22]. காணிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது[23].

பதினான்காம் நூற்றாண்டில் மடாதிபதிகள், ஸ்தானிகர் போன்றோர் கோயில் நிர்வாகத்தை ஏற்றிருந்தனர்[24]. பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில் சைவ மடாதிபதிகள், சைவத் துறவியர், ஜீயர், நம்பிமார், ஸ்ரீவீரபத்திரர், பழுவாச்சாரியர், சிற்பாச்சாரியர், வீரசோழ அணுக்கர் ஆகியோர் கோயில் ஆட்சிக்குழுவில் அங்கம் வகித்தனர்[25]. பதினேழாம் நூற்றாண்டில் மடாதிபதிகள், சைவத் துறவியர், பட்டர், நம்பிமார், வீரபத்திரர், பழுவாச்சாரியர், சிற்பாச்சாரியர் ஆகியோர் திருக்கோயில் நிர்வாகத்தை ஏற்றிருந்தனர்[26].

## இன்றைய நிர்வாகம்

சந்திரசூடேசுவரர் திருக்கோயில் 19.7.1975 முதல் இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாக அமைப்பின் கீழ் செயல் அலுவலர் மற்றும் அறநிலையத் துறையால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலர் குழுவினராலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 1956 முதல் 18.7.1975 முதல் 39 ஆண்டுகள் திருவாளர்கள் இரங்கசாமி பிள்ளை, மூர்த்தி, சிங்காரவேலு முதலியார், அருணகிரியார் ஆகிய அறங்காவலர் குழுத் தலைவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. திரு. கி. வரதராஜ் அவர்கள் 1997 முதல் 2001 வரையும் இருந்து செயல் அலுவலரோடு சேர்ந்து

கோயிலை நிர்வகித்து வந்தனர். தற்போது மீண்டும் 2007 முதல் கி. வரதராஜ் அறங்காவலர் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். திருக்கோயில் நிருவாகம் அறங்காவலர் குழுவின் ஆலோசனைப்படி செயல் அலுவலரின் செயல்பாட்டில் நடைபெற்று வருகிறது.

அடிக்குறிப்பு

1. இ.க.ஆ.எண்கள் 307/1969–70, 485 & 509/1970–71
2. மேலது எண் 270/1969–70
3. மேலது எண் 303/1969–70
4. மேலது எண் 261/1969–70
5. மேலது எண் 258/1969–70
6. மேலது எண் 266/1969–70
7. மேலது எண் 297/1969–70
8. இக.ஆ.எண்கள் 265/1969–70
9. மேலது எண் 288/1969–70
10. மேலது எண் 293/1969–70
11. மேலது எண் 492, 493 & 494/1970–71
12. தருமபுரி கல்வெட்டுகள், (முதல் தொகுதி, எண் 1974/37-A
13. மேலது எண் 1974/37-B, 45, 48-A & 51-A
14. இ.க.ஆ.எண் *264/1969-70*
15. அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கி.வரதராஜ் அவர்களுடன் நேர்க்காணல் நாள் 7.9.2009 மற்றும் திருக்கோயில் தலைமை அர்ச்சகர் திரு. சந்திரசேகர் குருக்கள் அவர்களுடன் நேர்காணல் நாள் 7.9.2009
16. இ.க.ஆ. எண். 256 & 259–70. இக்குறிப்பின்படி ஒரு பொண்ணுக்கு ஒரு குடம் நீர் கிடைத்தது என்பது அறியலாம்
17. தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) எண் 1974/33C
18. மேலது. எண் 1974/45 மற்றும் 51A, இ.க.ஆ.எண் 293/1969–70

பார்வை நூல்கள்

தமிழ் நூல்கள்


1. கைலாசநாத குருக்கள். கா – சைவ திருக்கோயில் கிரியை நெறி, இந்து கலாவிருத்திச் சங்கம், கொழும்பு. முதல் பதிப்பு 1963

2. செல்வராஜ். சி. – தமிழில் ஆட்சிச் சொற்கள், அன்பு பதிப்பகம், சென்னை. 1993

3. நஞ்சப்பா.ந. (மொழிபெயர்ப்பாசிரியர்) – சந்திரசூடேஸ்வர சுவாமி கோயில்ஸ்தலபுராணம், வெளியீடு : கே.ஏ. மனோகரன், ஒசூர். முதல் பதிப்பு 1976

4. நாகப்பா நாச்சியப்பன் – திருக்கோயில் வழிபாடு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதல் பதிப்பு 1991

5. நாராயணசாமி. எஸ். – சிவாலயத் திருமேனிகள், திருவாடுதுறை ஆதீனம், திருவாடுதுறை, முதல்பதிப்பு 1999

6. முத்துச்சாமி பிள்ளை. கோ.மு.கோயிற் களஞ்சியம், அறிமுகம், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

**கன்னட நூல்கள்**


1. தேவரகொண்டாரெட்டி தலைக்காடு கங்கர்களின் கோயில்கள் – ஓர் ஆய்வு கன்ன இலக்கியக் கழகம், பெங்களூரு, முதல் பதிப்பு 1994.

2. கட்டுரைகள் 1. Kothandaramiah. K.S. A Brief Account of The Antiquity of Sri Chandrachoodeswara Swami Temple at Hosur.

3. கல்வெட்டுகள்

   1. தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. 1975

   2. இந்தியக் கல்வெட்டுகளின் ஆண்டறிக்கைகள் நடுவண் அரசு தொல்லியல் துறை, புதுதில்லி. (1969–70 மற்றும் 1970–71)



ஒசூர் சந்திரசூடேஸ்வரர் ஆலயம்

# அத்திமுகம் ஸ்ரீ ஐராவத ஈசுவரர்கோயில்

அத்திமுகம் என்ற ஊரில் எழுந்தருளியிருக்கும் ஈசுவரன் கோயில் ஐராவத ஈசன் ஆகிய இந்திரனால் வழிபட்ட தலமாதலால் ஐராவதீசர் கோயில் எனப்படுகிறது.

திருவிளையாடல் புராணம், இந்திரன் சொக்கநாதரை வழிபட்டுத் தன் சாபவிமோசனம் பெற்றான் என்றும், ஐராவதமும் சொக்கனையே வழிபட்டுச் சாப விமோசனம் பெற்றது என்றும் கூறுகிறது.

திருவிளையாடல் புராணத்தில் உள்ள வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம், இந்திரன் சாபம் தீர்த்த படலம் என்ற இருபடலங்களில் இந்த வரலாறு சொல்லப்பட்டுள்ளது.

தருமபுரியை அடுத்த பொம்மிடியில் உள்ள ஐராவத ஈசர் கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு சொக்கநாதர் என்பது பெயர். அத்திமுகத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குப் பெயர் அழகேசன் என்பதாகும். அழகேசன் என்பது சுந்தரேஸ்வரர் என்பதன் தமிழ் வடிவமே. ஊற்றங்கரையை அடுத்த தலக்கரையில் உள்ள பழமையான கோயிலையும் ஐராவதீசர் கோயில் என்றே கூறுவர்.

இதனால் பாண்டிய நாட்டு மரபை ஒட்டிச் சொக்கநாதர், சுந்தரேஸ்வரர் என்ற பெயரில் ஈசுவரன் கோயில் எழுப்பி, ஐராவதத்தோடு சார்புடையதாக்கிக் கொண்டாடப்படும் மரபினது இந்தக் கோயில் என்று கொள்ளலாம்.

பண்டைத் தமிழகத்தில் வெள்ளை யானைக்குத் தனியாக கோயில் இருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் சித்தரிக்கிறது.

**"அமரர் தருக் கோட்டம் வெள்ளையானைக் கோட்டம்**

**புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில்**
**உச்சிக்கிழுவன் கோட்டம் ஊர்க்கோட்டம் வாழ்கோட்டம்**

**வஜ்ஜிரக்கோட்டம் புறம்பனையான் வாழ்கோட்டம்**

**நிச்சந்தக் கோட்டம் நிலாக்கோட்டம்" - என்று.**

**சிலப்பதிகாரம் கனாத்திறமுரைத்த காதை பரக்கப்பப் பாடுகிறது.**

அமரர் தருவாகிய கற்பகவிருட்சமும், வெள்ளை யானையாகிய ஐராவதம், அமரர் கோன் ஆயுதமாகிய வஜ்ராயுதம் ஆகியவற்றுக்குத் தனித்தனியே மதுரையில் கோயில்கள் இருந்தன என்று தெரிகிறது.

வேலை மட்டும் வைத்து வழிபடும் கோயில்கள் இன்றும் பல உண்டு. அந்த மரபில் இந்திரனுக்கும் இந்திரனுடைய வாஹனம், ஆயுதம், வேல் எல்லாம் வழிபடப்பட்டன என்று தெளியலாம்.

## இந்திரன் சாபம் பெற்ற வரலாறு :

காசிப முனிவர்க்கு அதிதியிடம் தோன்றியவன் இந்திரன். இவன் அமரர்கோன் தலைவன். இவனது தலைநகர் அமராவதி. ஆயுதம் வஜ்ராயுதம். தேவி இந்திராணி. வாஹனம் ஐராவதம் என்றும் வெள்ளை யானை மற்றும் உச்சைச் சிரவம் என்னும் வெள்ளைக் குதிரை. சபை அதர்மை. வனம் நந்தனம். இவன் நூறு அசுவமேத யாகங்கள் செய்து இந்திரப் பதவியை அடைந்தான் என்பது புராணம்.

தூர்வாச முனிவர் பரமபரத்தில் உள்ள பகவானை வழிபட்டு அங்கிருந்து நிர்மால்யத்தை எடுத்துக் கொண்டு வரும்போது எதிரே வெள்ளை யானையாகிய ஐராவதத்தின் மேல் இந்திரன் எதிரே வந்தான். அவன் கோலாகலமாக வருவதைக் கண்டு மகிழ்ந்த தூர்வாசர் தான் கொண்டு வந்த நிர்மால்யத்தை அவனுக்குப் பிரசாதமாக அளித்தார். அவன் அந்தப் பிரசாதத்தை யானைமேல் இருந்தவாறே வாங்கி யானையின் பிடரியில் வைத்தான். யானை அந்தப் பிரசாதத்தை எடுத்துக் காலில் போட்டு மிதித்துவிட்டது. இதனைக் கண்டு சினமுற்ற தூர்வாசர், யானையையும், இந்திரனையும் சபித்தார். இந்திரன் உக்கிரகுமாரபாண்டியன் முடி சிதறவும், யானை காட்டு யானையாகவும் சபித்தார். தன் செல்வமெல்லாம் இழந்த இந்திரன் தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது மீண்டும் வெளியே வர அவற்றைப் பெற்றனன்.

இவ்வாறு இந்திரன் செல்வம் இழந்த வரலாற்றைத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது.

ஒருமுறை இந்திரன் சபைக்குத் தேவர் குருவாகிய பிரகஸ்பதி வந்தார். இந்திரன் தக்க மரியாதை செய்யவில்லை ஆதலின் மறைந்துவிட்டார். குருவை எங்கு தேடியும் கிடைக்காததால் இந்திரன் பிரமனிடம் முறையிட்டார். பிரமன் துவட்டாவின் புத்திரன் விச்சுவ உருவனைக் குருவாகக் கொள்க என்றார்.

விச்சுவ உருவன் யாகம் செய்கையில் அசுரர்களுக்கு உச்சம் உண்டாகவும், தேவர்கள் துன்பம் எய்தவும் மனதில் நினைத்து யாகம் செய்தனர். தன் ஞானத்தால் அதை அறிந்த இந்திரன் துவட்டாவின் மகனைக் கொன்றான். இதனால் இந்திரனுக்குப் ப்ரமஹத்தி தோஷம் வந்தது. தன் குமாரன் கொலையுண்டதை அறிந்த துவட்டா பெரிய யாகம் ஒன்றைச் செய்து அதிலிருந்து விருத்திரா சுரனை உண்டாக்கி இந்திரனை அழிக்க முயன்றான்.

இந்திரன், ததீச முனிவர் எலும்பால் செய்த வஜ்ராயுதத்தால் அவனைக் கொன்றான். இதனால் தனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தைத் தீர்த்த யாத்திரையால் போக்கிக் கொண்டான்.

இனி ஐராவதீசர் எழுந்தருளியுள்ள ஊர் அத்திமுகம் என்று பெயர் பெற்றது குறித்துப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. அவை வருமாறு.

1) அத்திமுகத்தில் உள்ள பாதாள லிங்கேசர் முகம் யானை முகம் போல் விளங்குகிறது. இது ஒரு ஸ்வயம்பு லிங்கம் என்று கூறப்படுகிறது. அத்திமுகத்தை உடைய லிங்கம் விளங்கும் ஊராதலால் இவ்வூர்க்கு அத்திமுகம் என்பது பெயர் என்று அறியப்படுகிறது.

2) அத்திமுகத்தை உடைய ஐராவதுசன் வழிபட்ட தலம் ஆதலால் அத்திமுகம் என்பது பெயர். இவ்விரண்டு கருத்துக்களுக்கும் முறையே அத்திமுகலிங்கம், அத்திமுக லிங்க ஈசர் காரணமாக இவ்வூர் அத்திமுகம் எனப் பெயர் பெற்றது என்று தெரிவிக்கின்றன.

3) தற்போது அத்திமுக ஈசர் எழுந்தருளியுள்ள கோயில் அருகில் அகஸ்திய நதி ஓடுகிறது. அகஸ்திய நதிமுகத்தில் இவ்வூர் உள்ளதால் அகஸ்திய முகம் என்றே ஊர்க்கும் பெயர். அதுவே பிற்காலத்தில் அத்திமுகம் என்றாயிற்று என்பர் ஒரு சாரர்.

நதிக்கரையில் கிராமம் இருந்தால் அந்த நதியின் பெயரால் ஊரும் கோயிலும் அமைவது இயற்கையே. எடுத்துக்காட்டாக பெண்ணை ஈசுவரன் கோயில், பெண்ணேசுவர மடம் என்பவற்றைக் கூறலாம். காவிரிக்கரையில் இருப்பதால் காவேரிப்பட்டிணம் என்று வந்தது. (புண்ணியதீர்த்தத்தை எல்லாம் காவிரி என்பது தமிழ் மரபு) இதனால் அகத்ஸ்திய முகம் அத்திமுகம் என்ற கூற்று சரியானதாகத் தோன்றுகிறது.

4) அத்திமுகம் என்ற இவ்வூர் அத்திமல்லன் (அத்திமல்லராயன்) என்ற ஹொய்சால அரசன் பெயரால் இவ்வாறு வழங்கப்படுவதாக உள்ளது. மாறாக அரசனுக்கு இந்த ஊர் இளைவன் பெயர் அமைந்திருக்கலாம்.

பாதாள லிங்கம் ஸ்வயம்பு என்றும், அதன் முகம் யானை முகமாக இயல்பாகவே அமைகிறது என்றும் கூறப்படுகிறது. மாற்றாக இந்த லிங்கம் அகஸ்திய நதியில் இருந்தது என்றும் அதனை எடுத்து வந்து கோயில் கட்டி மக்கள் வழிபட்டனர் என்றும் கூறுவர். நதிக்கரையில் எடுத்து வரப்பட்ட லிங்கத்திற்குப் பதிலாக வேறொரு லிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டதென்றும், பழைய லிங்கத்தையும் மக்கள் பாதாள லிங்கமாக வழிபடுகின்றனர் என்றும் கூறுவர்.

பாதாள லிங்கத்தின் மேல் சூரிய ஒளிபடுகிறது என்று சொல்லப்படுகிறது. எந்த நாளில் அவ்வாறு சூரிய ஒளி விழுகிறது என்பதுவும், முகத்தோடு கூடிய லிங்கங்கள் வேறு எங்காவது உள்ளனவா என்பதுவும் ஆய்வுக்கு உரியன. இந்தக் கிழக்கு வாசலை ஒட்டி முன்னர் 16 கால் திறந்தவெளி மண்டபம் அமைந்திருந்தது. மண்டபத்தைத் தாண்டி அர்த்தமண்டபம், கருவறை என்ற அமைப்பில் கோயில் உள்ளது. இப்பொழுது 16 கால் மண்டபத்தைச் சுற்றுச்சுவர் எடுத்து வடதிசையில் வாசல் வைத்துள்ளனர்.

கர்ப்பக் கிரஹத்தைச் சுற்றி மூன்று திசைகளிலும் சுவர்களில் புடைப்புச் சிலையாகத் தெற்கே தக்ஷினாமூர்த்தி, மேற்கே மகாவிஷ்ணு, வடக்கே துர்க்கை அம்மன், திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சுமார் இரண்டரை அடி முன்னதாகக் கர்ப்பக் கிரக அடிவாரம் அமைந்துள்ளது. அதனை அடுத்து மூன்றடி நடைபாதையும், சுற்றுச்சுவரும் அமைந்துள்ளது. இந்த அமைப்பு இது ஒரு குகை கோயிலைப் போலத் தோற்றமளிக்கச் செய்கிறது.

திறந்தவெளி மண்டபம் இருந்தபோது கோயிலின் வாசலில் துவாரபாலகர் இருக்குமிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஐராவத இந்திரன், பைரவர், சூரியன் மேடைமேல் அமைக்கப்பட்டுள்ளது.

அத்திமுகம், கிருஷ்ணகிரி – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் ஒசூர்க்கு முன்னால் குறுக்கே செல்லும் பேரண்டப்பள்ளி – பாகலூர் சாலையில், பாகலூரை நோக்கிப் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நெடுஞ்சாலையில் இருந்து சிறிது தொலைவு மேற்குநோக்கிச் சென்றால் தரைமட்டத்திலிருந்து 10 அடி பள்ளத்தில் கோயில் அமைந்துள்ளது.

கிழக்கு நோக்கிய கோயில் ஏதோ காரணத்திற்காகச் சிறிது காலம் கிழக்கு வாசலை அடைத்துவிட்டு வடக்குப்புறம் வாசல் அமைத்து வழிபட்டு வந்தனர். தற்போது கிழக்கு வாசல் திறக்கப்பட்டுள்ளது. படிக்கட்டுகளில் கீழே இறங்கிக் கருவறையை நோக்கிப் பிரகாரத்தைக் கடந்து சென்றால் கிழக்கு வாசலை அடையலாம். திறந்தவெளி மண்டபமாக இருந்தபோது இந்தச் சந்நிதிகளின் முன்பாக எளிதில் வரமுடியாது. தற்போது கருவறைக்கு வரவேண்டும். கர்ப்பகிரகத்தில் நுழைந்தவுடன், அர்த்த மண்டபத்தில் தென்திசையில் வலம்புரி விநாயகர் அருள்பாலிக்கிறார். மூலவராக ஸ்ரீ அழகேசர் அருள்பாலிக்கிறார்.

கோயிலைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் அக்னி மூலையில் முறையே பெரிய விநாயகர் திருமேனி உள்ளது. மேற்கு திசையில் முறையே நாகர் புற்று வடிவமாக உள்ளார். அந்தக் காலத்து அரசியார் இந்தப் புற்றீசனை வழிபட்டனர் என்பர். நாகரை அடுத்து முருகன் வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளி உள்ளார். ஸ்ரீ முருகனுக்கு அடுத்து ஸ்ரீ நடராசர் அருகில் அருள்பாலிக்கின்றார்கள். சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனம் நிகழும்போது இந்த ஸ்ரீ நடராசர்க்கும் விழா நிகழ்கிறது. பரம்பரையாகச் செட்டியார்கள் இந்த வழிபாட்டைச் செய்கிறார்கள். இதனால் இந்தப் பிரகாரத்தில் உள்ள தெய்வங்கள் பின்னாளில் செட்டியார்களால் கட்டப்பட்டிருக்கலாம் என்று முடிவு செய்யலாம்.

ஸ்ரீ நடராசர் சந்நிதிக்கும் கீழே பாதாளலிங்கம் அமைந்துள்ளது. இந்தப் பாதாள லிங்கமே யானை முகத்தோடு அமைந்துள்ளது என்பர். இந்த லிங்கத்தின் மேல் ஆண்டிற்கு ஒருமுறை சூரிய ஒளி விழுகிறது என்பர். அது எந்த நாள் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை.

மூலவர் சந்நிதிக்கு முன் சூரியன், ஐராவதீசன் எழுந்தருளியுள்ள இடத்தில் ஒரு பாறை இருக்கக்கூடும். அந்தப் பாறை அப்படியே பயன்படுத்தப்பட்டிருக்கலாம். பாதாளலிங்கேசர் மட்டுமே முதலில் இருந்திருக்கக்கூடும். பின்னர் கருவறையோடு கோயிலை எடுத்திருக்கலாம். கருவறை கட்டிய சில ஆண்டுகளுக்குப் பிறகு 16 கால் மண்டபச் சுற்றுச்சுவர் அமைத்திருக்கக்கூடும். இங்கு ஹொய்சால அரசன், வீரராமநாதன் கல்வெட்டுகள் தென்புறச் சுவரில் உள்ளன. இதனால் அத்திமுக ஈசர் வீரராமநாதன் காலத்திற்கு முற்பட்டவர் என்று கருதலாம்.

பாண்டிய நாட்டைத் தவிர சோழ நாட்டிலும் ஐராவதீசர் கோயில்கள் உள்ளன. இதனால் சோழர் காலத்தில் வணிகர்கள் இந்தக் கோயிலைக் கட்டியிருக்க வாய்ப்புண்டு.

இராயக்கோட்டையில் தூர்வாசர் தவம்புரியும் இடம் உள்ளது. தூர்வாசரிடமிருந்து சாபம் பெற்ற இந்திரன் இங்குக் கோயில் கொண்ட இறைவனைத் தியானித்து நலம் பெற்றுள்ளான் என்று அத்திமுகத்திற்கும் இந்த மண்ணுக்கும் தொடர்பு காணலாம்.

**கோவிந்தன் சின்னசாமி**, ஒசூர்.



# கிருஷ்ணகிரி மாவட்டத் திருநாள் சந்தைகள் ஒரு கண்ணோட்டம்



ஆ.அன்பழகன், M.A., M.Ed., M.Phil., முனைவர் பட்ட ஆய்வாளர்

புவி இயலார் குறிஞ்சி மற்றும் முல்லை நிலப் பிரதேசங்களாகக் கிருஷ்ணகிரி மாவட்டப் பகுதிகளைக் குறிப்பர். தென்பெண்ணையாற்றைத் தவிர வேறு பெரிய நதிகள் எதுவும் இம்மாவட்டதினூடே பாய்ந்து செல்லவில்லை. எனவே கால்நடை மேய்ப்பு சார் சமூகமாகவே (Pastrol Society) இம்மாவட்ட மக்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றனர். கால்நடைகளைக் கொண்டே மக்களது வாழ்க்கைத் தரம் நிர்ணயிக்கப்பட்டது. இங்கு ஏற்பட்ட அரசுகளும் நிலைத்த அரசுகளாக விளங்கவில்லை. இடைக்கால இந்திய வரலாற்றில் தென்னிந்தியாவில் தோன்றிய விஜயநகரப் பேரரசு டெல்லி சுல்தான்களின் ஆதிக்கத்தைத் தென்னகத்தில் தடுத்து நிறுத்தியதோடு மட்டுமின்றித் தமிழகத்தில் கலை, பண்பாடு, கலாச்சாரம் போன்ற பல துறைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. விஜய நகர ஆட்சிக்காலத்தில் ஒவ்வொரு கிராமமும் கிராமப் பொருளாதாரத்தின் அலகாகவும், நடைமுறையில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதாகவும் இருந்தது. கிராமங்கள் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததால் அதனைச் சார்ந்த வாழ்க்கையே நிலவி வந்தது. விஜயநகரப் பேரரசைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான முதலாம் புக்கனின் மகன் குமாரகம்பண்ணன் காலத்தே கிருஷ்ணகிரி மாவட்டமும் விஜய நகர ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. விஜயநகரப் பேரரசின் முளுவாய் ராஜ்ஜியத்தின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாகக் கிருஷ்ணகிரி மாவட்டம் விளங்கி வந்தது. கர்நாடக மாநிலத்தில் உள்ள முளுபாகல் முளுவாய் ராஜ்ஜியத்தின் தலைநகரமாகும்[1]

## வணிகர்களும், வணிக வழிகளும் (Traders and Trade Routes) :

நானா தேசிகள், திசையாயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார் நகரத்தார் போன்ற பல வணிகக் குழுவினரைப் பற்றிய செய்திகளைக் கல்வெட்டுக்கள் விவரிக்கின்றன.[1] தகடூரிலிருந்து அண்டை நாடான கர்நாடகத்திற்குச் செல்லும் பெருவழிகள் முற்காலத்திலேயே இருந்துள்ளன. அதியமான் பெருவழி எனப்படும் வணிக வழிகளும் அவைகளைக் குறிக்கும் மைல் கற்களும் தகடூர்ப்பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வணிகர்கள் தங்கள் பயணத்தின் போது தங்கி இளைப்பாறிச் செல்லும் இடமே தாவளம் எனப்படும்.

இன்று கிருஷ்ணகிரி–இராயக்கோட்டைச் சாலையில் தவளம் என்ற சிற்றூர் உள்ளது. இது வணிகத் தாவளங்களின் ஒன்றாக இருக்கலாம் எனச் சாந்தலிங்கம் கருதுகிறார்.[2] கொங்கு நாட்டுப் பகுதிகளான கோவை, ஈரோடு, நாமக்கல், சேலம் மற்றும் தர்மபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் இருந்த வர்த்தக மையங்கள் கர்நாடகப் பகுதிகளின் வர்த்தக மையங்களோடு வர்த்தகப் பெருவழிகளால் இணைக்கப்பட்டிருந்தன. மைசூரில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்த பெருவழிகளில் கொத்தூர் வழியாக வந்த பெரு வழியும் ஒன்றாகும். கொத்தூரில் வணிகக் கல்வெட்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[3]

## விஜய நகர காலச் சந்தை ஆக்கம் :

விஜய நகர ஆட்சி காலத்தில் தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தில் பல அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்தன. பேட்டை, பாளையம் போன்ற சந்தை மையங்கள் உருவாயின.

நாயக்க மன்னர்களும் அவர்களின் மேலாண்மைக்கு உட்பட்டிருந்த பாளையக்காரர்களும் தங்களது வரி வருவாய் உயரப் பேட்டைகளை உருவாக்கினர். கிருஷ்ணகிரி நகரில் உள்ள பழையபேட்டை, புதுப்பேட்டை, ஒசூர் நகரில் உள்ள தேர்ப்பேட்டை போன்றவை விஜய நகர காலத்துப் பேட்டைகளுக்குச் சிறந்த உதாரணங்களாகும். இப்பேட்டைகள் அனைத்தும் கோயிலோடு பிணைக்கப்பட்டிருந்தன. பேட்டைகள் கிராமங்களைச் சந்தை வளையத்துக்குள் கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றின. வாரத்தில் ஒரு நாள் சந்தைகள் கூடுவதும், அங்கு உள்ளூர், வெளியூர் வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் கூடுவதும் 15, 16ஆம் நூற்றாண்டுகளில் அதிகரித்தன.

## திருநாள் சந்தை (அ) ஜாத்திரைகளின் தோற்றம் :

பேட்டைகள், சந்தைகள் மட்டுமல்லாது "திருநாள் சந்தைகள்" என்ற பெயரில் கோயில் திருவிழாக்களை அடிப்படயாகக் கொண்ட, ஆண்டுக்கொரு முறை கூடும் சந்தைகளும் இடைக்காலத்தின் இறுதியில் அதிகரித்ததாகத் தேவ. பேரன்பன் தனது தமிழகத்தின் பொருளாதார வரலாறு என்ற நூலில் சுட்டிக்காட்டுகின்றார்.[1]

கர்நாடக மாநிலத்தில் தொடங்கிக் கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்கள் மற்றும் கொங்கு மண்டலம் முழுவதிலுமாக இருத்திருநாள் சந்தைகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. கால்நடை வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட இச்சந்தைகள் "ஜாத்திரைகள்" என்றும் அழைக்கப்படுகின்றன. முல்லை நில மக்களின் பிரதான தொழில் கால்நடை மேய்த்தலாகும். கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் முக்கிய தொழிலாகக் கால்நடை மேய்த்தல் பன்னெடுங்காலமாக விளங்கி வந்துள்ளது. கால்நடைச் செல்வமே

பிரதான செல்வமாக இம்மக்களால் போற்றப்பட்டு வந்துள்ளது. எனவே இத்திருநாள் சந்தைகளில் கால்நடை வர்த்தகமே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஆடுகள், மாடுகள், குதிரைகள் போன்றவை இங்கு விற்பனை செய்யப்பட்டன. தற்போது ஈரோடு மாவட்டம் அந்தியூரில் ஆண்டு தோறும் நடைபெறும் திருநாள் சந்தையில் ஆடு, மாடுகள் இவற்றோடு குதிரைகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

## திருநாள் சந்தைகளின் அமைவிடங்கள் :

ஆண்டுத் திருநாள் சந்தைகள் பெரும்பாலும் பெண் தெய்வ வழிபாட்டிடங்களில் கூடின. அறுவடைக் காலம் நிறைவுற்ற வேளையில் தொடங்கி விதைப்புக் காலத்திற்கு முன்பாக இச்சந்தைகள் நிறைவு பெற்றுவிடும் வண்ணம் இத்திருவிழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆற்றங்கரையோரங்களிலும், ஏரிக்கரைகளிலும் அமைக்கப்பட்டுள்ள தாய் தெய்வக் கோயில்களே இத்திருநாள் சந்தைகளின் அமைவிடங்களாகும். கிராமத் தெய்வங்கள் என்று அழைக்கப்படும் காவல் தெய்வங்களான மாரியம்மன், எல்லையம்மன், பிடாரியம்மன், காளியம்மன், அங்காளம்மன், பட்டாளம்மன், சாக்கியம்மன், முத்தலாம்மன், படவட்டம்மன், நாச்சியம்மன், செல்லியம்மன், சாமுண்டி போன்ற தெய்வ வழிபாட்டிடங்களில் இவ்வாண்டுத் திருநாள் சந்தைகள் கூடின.[1] கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணையாற்றின் கரையில் அமைந்துள்ள காவேரிப்பட்டிணம் அங்காளம்மன் திருவிழா, பாகலூர் சூடநாதர் திருவிழா, கும்ளாபுரம் கௌரம்மா ஜாத்திரை, கெலமங்கலம் நாயக்கன் ஏரிக்கரையில் அமைந்துள்ள பட்டாளம்மன் திருவிழா, தேன்கனிக்கோட்டை பேட்ராயசுவாமி திருவிழா போன்றவை குறிப்பிடத்தக்கவை, பக்தர்களும், வர்த்தகர்களும், கால்நடைகளும் இளைப்பாறுவதற்கு வசதியாக நதிக் கரைகளிலும், ஏரிக்கரைகளிலும் இத்தாய் தெய்வக் கோயில்கள் அமைக்கப்பட்டு அருகில் பசும் சோலைகளும், வனங்களும் அக்கோயில்களை ஒட்டி உருவாக்கப்பட்டன.

## கிருஷ்ணகிரி மாவட்டத் திருநாள் சந்தைகள்

### கெலமங்கலம் பட்டாளம்மன் ஆண்டுத் திருநாள் சந்தை :

'கெல' அல்லது 'கில' என்ற சொல்லுக்குக் 'கோட்டை' என்பது பொருள். இராயக்கோட்டை, ஊடேதுர்க்கம், இரத்தினகிரி, அஞ்செட்டி துர்க்கம், நீலகிரி போன்ற மலைக்கோட்டைகளும் தேன்கனிக்கோட்டை போன்ற தரைக்கோட்டையும் கெலமங்கலத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளன. இவைகள் அனைத்துமே ஹைதர் மற்றும் திப்பு காலத்தில் ஆங்கிலேயேருக்கு எதிரான போர்களில் பங்கு பெற்றவை. கெலமங்கலம் ஊருக்குத் தென்கிழக்கே பாகலூர் பாளையக்காரர்களின் குடும்பத்தினர்களால் ஏரி ஒன்று வெட்டப்பட்டுள்ளது.

இதன் பெயர் நாயக்கன் ஏரி என்பதாகும். அந்த ஏரியின் கரையில் அமைந்துள்ள கோயில் பட்டாளம்மன் கோயில் என்பதாகும். இங்குதான் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் திருநாள் சந்தை நடைபெறுகிறது. இக்கோயிலுக்கு முன்பாக ஊஞ்சல் கம்பம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. விஜயநகர ஆட்சியின் போது திருநாள் சந்தைகள் நடைபெறும் கோயில்கள் முன்பாக கல்தூண்களாலான ஊஞ்சல் கம்பங்கள் கர்நாடகப் பகுதிகளில் தொடங்கி தகடூர்ப் பகுதிகள் வரை நிறுவப்பட்டன. தகடூர்ப் பகுதியில் பாலக்கோடு அருகேயுள்ள சோமேஅள்ளி அக்குமாரியம்மன் கோயில் முன்பாக பிரமாண்டமான இரண்டு ஊஞ்சல் கம்பங்கள் 15, 16ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டள்ளதைக் காணலாம். அஞ்செட்டி, நாட்றாம்பாளையம், தேன்கனிக்கோட்டை, இரத்தினகிரி போன்ற பகுதிகளில் உள்ள மக்களால் வளர்க்கப்பட்ட கால்நடைகள் மற்றும் விளை பொருட்கள் கெலமங்கலம் திருநாள் சந்தையில் விற்பனை செய்யப்பட்டன. கர்நாடகப் பகுதிகளின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள ஊராக கெலமங்கலம் இருப்பதால் உள்ளூர் வியாபாரிகள் மட்டுமின்றிக் கர்நாடக, ஆந்திரப்பகுதி வணிகர்களும் இங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டனர். காபு என்ற இனத்தைச் சேர்ந்த பூஜாரியே பட்டாளம்மன் கோயிலுக்குப் பூஜாரியாக உள்ளார். இவர்கள் பரம்பரை பரம்பரையாக பூஜை செய்யும் உரிமையை பெற்றுள்ளனர். இத்திருநாள் சந்தையின் போது பட்டாளம்மனுக்கு ஆடு, கோழி முதலானவற்றைப் பலியிடுகின்றனர். இத்திருநாள் சந்தையில் தேர்த்திருவிழாவும் விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

## <u>கும்ளாபுரம் ஆண்டுத் திருநாள் சந்தை :</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஒன்றியத்தில் கும்ளாபுரம் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்துக் 'கோயில்கள் நகரம்' என்று அழைக்கப்படும் விதமாக இவ்வூரில் 101 கோயில்கள், 101 குகைகள் இருந்ததாக நம்பப்படுகிறது. மிகுதியான குளங்களும் ஏரிகளும் இருந்ததால் அந்நீர் நிலைகளில் தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கின. எனவே தாமரை நகர் என்று பொருள்படும், 'கும்ளாபுரம்' என இவ்வூர் அழைக்கப்படுகிறது. கும்ளாபுரத்தில் வீர சைவம் என்று அழைக்கப்படும் லிங்காயத்து சமயத்தவரின் மடங்களும் உள்ளன. கும்ளாபுரம் சிவன் கோயிலில் பளிங்குக் கல்லினால் ஆன விநாயகர் சிலை ஒன்றும் உள்ளது. இங்கு ஏராளமான நடுகற்களும் கண்டு பிடிக்கப்பட்டன. கௌரம்மாள் எனப்படும் பெண் தெய்வத்திற்கான திருநாள் சந்தை ஆண்டுதோறும் செப்டம்பர் மாதத்தில் இங்கு நடைபெறுகிறது. ஆனால் ஜாத்திரையின் போதும் கௌரம்மாள் சிலை அருகில் உள்ள ஏரியின் மண்ணைக் கொண்டு உருவாக்கப்பட்டு, ஒரு மாதத் திருவிழாவிற்குப் பிறகு மீண்டும் ஏரியில் கொண்டு போய்க் கரைக்கப்பட்டு விடுகிறது. சைவம், வைணவம், வீர சைவம் போன்ற பல சமயத்தவரும் ஒருங்கிணைந்து கௌரம்மாள் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர்.

## காவேரிப்பட்டணம் அங்காளம்மன் திருநாள் சந்தை :

தென்பெண்ணையாற்றங்கரையில் அமைந்துள்ள காவேரிப்பட்டணம் தரைக்கோட்டைகளுள் ஒன்றாகும். இங்கிருந்து 3 கி.மீ தொலைவில் தென்பெண்ணை ஆற்றங்கரையில் அமைந்துள்ள கோயிலே வரலாற்று சிறப்புமிக்க பெண்ணை நாயனார் திருக்கோயிலாகும். காவேரிப்பட்டணத்தில் ஆண்டுதோறும் மகாசிவராத்திரியன்று நடைபெறும் மயானக் கொள்ளைத் திருவிழா மற்றும் அங்காளம்மன் திருவிழா சிறப்பானதொரு திருநாள் சந்தையாகும். பல்வேறு கிராமங்கள் இத்திருநாள் சந்தையோடு இணைக்கப்பட்டுள்ளதால், பெருமளவிலான மக்கள் கூட்டம் திருவிழாவின் போது கூடும். தீ மிதித்தல், அலகு குத்துதல், தீச்சட்டி சுமத்தல் போன்ற வழிபாட்டுச் சடங்குகளும் இவ்விழாவின் போது நடைபெறுகிறது.

## பாகலூர் சூடநாதர் கோயில் திருநாள் சந்தை

தென்பெண்ணையாறு தமிழகத்தில் நுழையுமிடத்தில், அதன் கரையில் அமைந்துள்ள நகரம் பாகலூராகும். பாகலூர் பாளையக்காரர்களின் குலதெய்வமான சூடநாதரின் கோயில் இங்கு உள்ளது. சூடநாதர் கோயில் ஆண்டுத் திருநாளின் போது கால்நடைச் சந்தை இங்குக் கூடுகிறது. கர்நாடக எல்லையை ஒட்டி அமைந்துள்ள ஊராதலால் தமிழக வணிகர்கள் மட்டுமின்றி கர்நாடக வணிகர்களும் பெருமளவில் இச்சந்தைக்கு வருகை புரிந்து, வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர்.

## திருநாள் சந்தைகளில் தெய்வ வழிபாட்டு முறைகள் :

மாரியம்மன், எல்லம்மன், பத்ரகாளியம்மன், அங்காளம்மன், செல்லியம்மன், நாச்சியம்மன், கெங்கம்மா, படவேட்டையம்மன், பொங்கலம்மன் முத்தியாலம்மன், பிடாரியம்மன், சாமுண்டி, சாக்கியம்மன் போன்றவை கிராம தெய்வங்களாகவும், காவல் தெய்வங்களாவர். கிருஷ்ணகிரிப் பகுதி மக்களால் வணங்கப்படும், அத்தெய்வங்களுக்காக ஆண்டுத் திருநாள் சந்தைகள் எனப்படும் ஜாத்திரைகள் பெருமளவில் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கு அனைத்துப் பிரிவு மக்களும் ஒன்று கூடிப் பல்வேறு வழிபாட்டு முறைகளை மேற்கொள்கின்றனர். குறிப்பாகக் காவேரிப்பட்டணம் அங்காளம்மன் திருவிழாவின் போது அலகு குத்துதல், தீ மிதித்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற பல்வேறு விதமான சடங்குகள் நடத்தப்படுகின்றன. இது பற்றி லெபானு, ரிச்சர்ட்ஸ் போன்றவர்களும் தங்களின் சேலம் மாவட்ட விவர நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இதைத் தவிர தேன்கனிக்கோட்டை பேட்ராய சுவாமி திருவிழா, கெலமங்கலம் பட்டாளம்மன் திருவிழா போன்றவற்றில் அலகு குத்திக் கொண்டு ஊஞ்சலில் தொங்கியபடி செல்லும் ஒரு வழிபாட்டு முறையையும் குறிப்பிட்டுள்ளனர். விஜயநகரப் பேரரசின்

ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இவ்வழிபாட்டு முறை பின்பற்றப்பட்டு வந்ததாக டி.வி.மகாலிங்கமும் குறிப்பிட்டுள்ளார். இத்திருவிழாவிற்கு முதல் நாள் பிரமாணர்கள், கோமுட்டி செட்டிகள், வைசியர்கள் ஆகியோருக்கான நாளாக ஒதுக்கப்படும். அவர்கள் தங்கள் குல சம்பிரதாயங்களின் படி வழிபாடுகள் நடத்துவர். பிற நாட்கள் மற்ற பிரிவினர்கள் தங்கள் சம்பிரதாயங்களின் படி வழிபாடுகள் நடத்துவர். ஆடு, கோழி, பன்றி, எருமைக்கடா முதலிய விலங்குகள் இத்தெய்வங்களுக்காகப் பலியிடப்படும். பரம்பரைபரம்பரையாக பூசை செய்யும் கிராம பூஜாரிகள் இக்கோயில்களில் பூஜாரிகளாக இருப்பர். அறுவடைக்காலங்களில் இவர்களுக்கெனத் தானியங்கள் அல்லது தானியச் சுமைகள் அளிக்கப்பட்டன. கோயிலுக்கு உட்பட்ட மான்ய நிலங்களில் இவர்கள் விவசாயம் செய்து கொள்ளவும் உரிமை பெற்றிருந்தனர். இவர்களைத் தவிர தலையாரிகள், கோல்காரர் எனப்படும் காவல்காரர்கள், காணிக்கை முடிநீக்குபவர்கள் (முடிதிருத்துபவர்) பறையறிவிப்பவர்கள், காதணி அணிவிக்கும் ஆசாரிகள் போன்றோருக்கும் அறுவடைக் காலங்களில் குறிப்பிட்ட அளவு தானியங்கள் அளிக்கப்பட்டன.[1] இவர்கள் ஆயக்காரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் திருவிழா நிமித்தம் நோன்பு சாற்றுதல் நாளில் தொடங்கி காப்பு அல்லது கங்கணம் அணிந்து கொள்வர். தொடக்க நாளன்று கரகம் எடுத்தல் நிகழ்ச்சி நடைபெறும். ஆண்கரகம், பெண்கரகம் என்று இருவகையான கரகங்களை அலங்கரித்து வழிபடும் வழக்கமும் இத்திருநாள் சந்தைகளில் நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.[2] எருதாட்டம் எனப்படும் திருநாள் சந்தையின் இறுதிநாளில் ஒவ்வொரு கிராமத்தவரும் தங்கள் ஊர்க் கோயில் எருதுகளுடன் வந்து கோயிலைச் சுற்றி மூன்று முறை வலம் வருவர். அடுத்த நாள் கரகங்கள் கோயிலுக்கு அருகில் உள்ள நீர்நிலைகளுக்கு எடுத்துச் சென்று வழிபாடு செய்வதுடன் திருநாள் சந்தைகள் நிறைவு பெற்றுவிடும் இதற்குக் கங்கை பூஜை என்று பெயர்.

## திருநாள் சந்தைகளில் அங்காடிகளின் அமைவிடங்கள் :

திருநாள் சந்தைகளில் ஒவ்வொரு அங்காடி பிரிவுகளுக்கும் தனித்தனி இடங்கள் ஒதுக்கித் தரப்பட்டன. கோயிலுக்கு முன்புறமாக மங்கள பொருட்கள் மற்றும் தெய்வ பூஜைக்குத் தேவையான பொருட்களை விற்கும் கடைகள் அமைக்கப்பட்டன. அதற்கு அடுத்த வளையல்கள், கண்ணாடி பொருட்கள் மற்றும் அழகு சாதனப்பொருட்கள் விற்பனை நிலையங்களும், நெசவாளர்களின் துணி வகைகள் விற்பனையும், இனிப்புக் கடைகளும் அடுத்தபடியாகவும் பாங்குற அமைக்கப்பட்டிருக்கும். கன்னார்கள் எனப்படும் பாத்திரங்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் விற்போர் கடைகளும், விவசாயத்திற்குத் தேவைப்படும்

வேளாண் கருவிகள் விற்கும் கருமார்களின் கடைகள் இறுதியாக அமைக்கப்பட்டன. வனங்களிலும், சோலைகளிலும் கால்நடைச் சந்தைகள் நடைபெறும்.

## விற்பனைப் பொருட்களும், தரகர்களும் :

உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி பொருட்களையும், கால்நடைகளையும் இத்திருநாள் சந்தைகளில் விற்பனை செய்தனர். இந்தச் சந்தைகளில் விற்கப்படும் பொருட்களின் விலையை நிர்ணயிப்பதில் தரகர்கள் பெரும் பங்காற்றினர். சரக்குகளின் விலையைத் தரகர்களே தீர்மானித்தனர். அத்தகைய பணியைச் செய்வதற்காக அவர்கள் குறிப்பிட்ட அளவு பணமும் பெற்றுக் கொண்டனர். தரகர்கள் தங்களுக்குள் உரையாடிக் கொள்ளப் பொருளாதார சங்கேத மொழிக் குறியீடுகளையும் பயன்படுத்தினர்.[1] திரு. பிரான்சிஸ் புக்கானன் தன்னுடைய பயண விவர குறிப்பில் இத்திருநாள் சந்தைகளில் விற்கப்பட்ட கால்நடைகளின் தரம் அவற்றை வாங்கிச் சென்ற பலதரப்பட்ட வியாபாரிகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கால்நடைகளோடு குறும்பர் இன மக்களால் நெய்யப்பட்ட கனமான கம்பளிப்போர்வைகள், குயவர்களின் மட்பாண்டங்கள், நெசவாளர்களின் வண்ண வண்ண ஆடைகள், லம்பாடிகள் மற்றும் இருளர் இனப் பழங்குடி மக்களால் காடுகளிலிருந்து கொண்டு வந்து விற்கப்பட்ட தேன், கடுக்காய், சாதிக்காய் முதலிய மூலிகைப் பொருட்கள். போயர்கள் எனப்படும் கல் தச்சர்களால் உருவாக்கப்பட்ட உரல், அம்மி, குழவி போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள். சாணார்கள் எனப்படும் மக்களால் நுங்கு. பதநீர், பனை வெல்லம் முதலிய பொருட்களும், முஸ்லீம் வியாபாரிகளால் பாக்கு, புகையிலை போன்றவற்றோடு தோல் பொருட்களும் விற்கப்பட்டன.

## திருநாள் சந்தை வணிகர்களும், அவர்களிடம் பெறப்பட்ட வரிகளும்

கிருஷ்ணகிரி மாவட்டத் திருநாள் சந்தைகளில் வாணிகம் செய்வதற்கென விஜயநகர ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து மட்டுமல்லாது பிற பகுதிகளிலிருந்தும் வணிகர்கள் வருகை புரிந்தனர். பெட்னூரிலிருந்து செஞ்சிக் கோட்டை செல்லும் வணிக வழியில் ஆண்டுதோறும் ஐந்தாயிரம் முதல் ஆறாயிரம் பொதிமாடுகள் சரக்குகளைச் சுமந்து சென்றதாக பேயஸ் குறிப்பிடுகின்றார்.[1] மிளகு, ஏலம், கிராம்பு போன்ற வாசனைப் பொருட்கள் மலபார் பகுதிகளில் இருந்து மலபார் வணிகர்களால் கொண்டு வந்து விற்கப்பட்டன. வீரபனாஜியர், செட்டிகள், பணியர்கள், ரெட்டிகள் போன்ற வணிக சமூகத்தினரும் திருநாள் சந்தைகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். வீர சைவத்தைப் பின்பற்றும் லிங்காயத்துப் பிரிவினர் பூஜை பொருட்கள் மற்றும் மங்களப் பொருட்களான வளையல்கள், ஆரங்கள் போன்றவற்றை விற்பனை செய்தனர். கொல்லர் வரி, குயவர் வரி, எண்ணெய் வணிகர் வரி, கைக்கோளர் வரி போன்ற வரிகள் வணிகர்களிடம்

வசூலிக்கப்பட்டன. கோயில் நிர்வாகம் வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தது என்றும் அறியமுடிகிறது.[1] வணிக வழிகளில் பொருட்களுக்கும், வணிகர்களுக்கும் வழிப்பறிகொள்ளையர்களால் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கக் காவல்காரர்கள் என்பவர்கள் நியமிக்கப்பட்டனர் என்றும் இதற்கென வணிகர்களிடம் காவல் வரி என்ற ஒரு வரி வசூல் செய்யப்பட்டதையும் திரு.டி.வி.மகாலிங்கம் சுட்டிக்காட்டுகின்றார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் இத்திருநாள் சந்தைகள், மாவட்ட மக்களின் பண்பாடு, கலாச்சாரம், வழிபாடு போன்றவற்றைப் பன்னெடுங்காலாமாகப் பேணிக் காத்து வருகின்றன. இனத்தால், மொழியால், வேறுபட்ட மக்களை ஒற்றுமைப்படுத்தி வளமை வழிபாட்டை இச்சந்தைகள் கட்டிக் காத்து வருகின்றன. தாய் தெய்வங்களைக் கொண்டாடினால் மழைவரும் என்றும், விளைச்சல் பெருகும் என்ற நம்பிக்கைகளும் மக்களிடம் காணப்படுகின்றன. உற்பத்தியாளர்களுக்கும், வணிகர்களுக்கும், நுகர்வோருக்குமிடையே இத்திருநாள் சந்தைகள் ஒரு உறவுப் பாலமாக இன்றளவும் விளங்கி வருவது எவராலும் மறுக்க முடியாத பேருண்மையாகும்.



தேவர்குந்தாணி கல்மண்டபம் – அரண்மனை நடன மன்றம்

# கிருஷ்ணகிரிக் கல்வெட்டுக்களும் அறவியலும்

கல்வெட்டியல் அறிஞர் முனைவர் **கா. அரங்கசாமி,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி.,

முன்னுரை : தமிழகத்தில் இயற்கை வளமும் வணிக வளமும் நிறைந்த நாடு கொங்கு நாடு.

தமிழ்நாடு ஐந்து என்று முதன் முதலில் தனிநாடாகக் கொங்கு நாட்டைத் திருமந்திரம் குறிக்கும். "மான்படு காடு, மீன்படு சுனை, பொன்படு குட்டம், தேன்படுவரை" என்று கொங்கு நாட்டின் இயற்கை வளத்தைக் கல்வெட்டுக்கள் உணர்த்தும். கொடுமணல் அகழ்வு ஆய்வுகள் இம்மண்ணின் வணிக வளத்தையும் பழமையான நாகரிகத்தையும் எடுத்துரைக்கும். சித்திரமொழிப் பெரிய நாட்டவையின் மெய்க்கீர்த்தி கொங்கு வேளாளர்கள் வணிகர்களுடன் சேர்ந்து வட எல்லை வரை சென்று அறவியல் ஆட்சி நடத்திய மேம்பாட்டைக் கூறும் கிருஷ்ணகிரிக் கல்வெட்டுக்களும் கொங்கின் புகழ்பாடக் காணலாம். அறப்பழங்காலத்தில் கொங்குநாடு மங்களூர் மற்றும் மைசூர், கோலார் வரை பரவியிருந்தது. தெற்காணம்பி நாடும் கட்டியர் நாடும் பாணநாடும் பரந்திருந்த செய்தியை வரலாறு காட்டும். கிருட்டிணகிரிக் கல்வெட்டுக்கள் வட எல்லையில் கொங்கின் பண்பாட்டு விளக்காக விளங்கக் காணலாம். இங்கு அக்கல்வெட்டுக்கள் காட்டும் அறவியல் செய்திகளை மட்டும் சுருக்கமாகக் காண்போம்.

## கிருஷ்ணகிரிக் கல்வெட்டுக்கள் வகைதொகை :

கிருட்டிணகிரிக் கல்வெட்டுக்கள் என்னும் தொகுதியில் அச்சிடப்பட்ட கல்வெட்டுக்கள் நூற்றி முப்பது ஆகும்[1]. அவற்றுள் கோயிலுக்குத் தந்த நில தானம், தேவதானம், அவையின் செயல், காணி பற்றிய குறிப்பு, பிராமண மானியம், மடம் ஏரி தானம், திருப்பணிக்குத் தந்தாமை, இறையிலி சர்வமானியம், நிவந்தமாக வழங்கியது பற்றிய கல்வெட்டுக்களே அதிகம். இவற்றின் தொகை ஐம்பத்தி ஐந்து ஆகும். அடுத்து வருவன நடுகல் பற்றிய எழுத்துக்கள். அவற்றின் தொகை இருபத்தியிரண்டு. ஏறத்தாழ இதற்கு இணையாக அமைவது நந்தாவிளக்கு, சந்தி விளக்கு, திருவிளக்கு பற்றியன இருபத்தி ஒன்றாகும். நான்காவதாகத் "தோளுக்கும் வாளுக்கும் நன்றாக" என்றும், மன்னன் நன்றாக, மக்கள் நன்றாக என வழங்கிய தானம் பற்றியவை பதினொரு கல்வெட்டாகும். எஞ்சியவை பல்வேறு

செய்திகளைக் கூறுவன. அவற்றுள் குறிக்கத் தக்கன, அரசியல் மாற்றம், போர்கள், நாட்டுப் பிரிவுகள், போரில் ஏற்பட்ட அழிவுகள், தண்டனை, அவைகள் பற்றிய செய்திகளாகும். இறுதியில் ஓம்படைக் கிளவி கொண்ட கல்வெட்டுக்கள் இருபத்தி ஐந்து ஆகும். அறம்பற்றிய வெண்பாப் பாடல் கொண்ட கல்வெட்டு இரண்டும், ஆண், பெண் தீப்பாய்ந்தது இரண்டும் சிவசமயப் பெயர் தாங்கிய கல்வெட்டுக்கள் ஆறும் அமைந்துள்ளன. அத்துடன் இடைக்காலச் சோழ பாண்டியர், அவர்களுக்கு முன்பிருந்த பல்லவர், நுளம்பர், பாணர், பின்வந்த விசயநகரத்தார், உம்மத்தூர் மன்னர்கள் பற்றிய குறிப்புக்களும் உள்ளன. மேலும், சங்ககால அதியனின் வழிவந்தோர் பற்றிய குறிப்புக்கள் உள்ளதையும் நாம் அறிதல் வேண்டும். இவ்வாறு இக்கல்வெட்டுக்களைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு வரை நம் நாட்டின் வரலாற்று ஆவணங்களாகக் காணலாம்.

## அறவியல் விளக்கம் :

அறம் என்பதன் பொருள் "மனத்துக்கண் மாசிலனாதல்" என்பார் திருவள்ளுவர். ஆதலால் அறமாவது மனத்தால், சொல்லால், செயலால் எந்த உயிர்க்கும் தீமை செய்யாது நன்மையே செய்வதாகும். அரசியல், பொருளியல், வாழ்வியல் யாவும் அறத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பதே திருக்குறளின் உயர்ந்த நோக்கமாகும். சமயச் சார்பற்ற வாழ்வியல் சார்ந்த பண்பட்ட உயர்ந்த ஒழுக்க நெறி நின்று தெய்வநிலை பெறுவார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுலக வாழ்வினை மண்ணில் படைப்பர் என்பதே அறவியலின் அடித்தளமாகும். அத்தகைய அறவியல் அடித்தளச் செய்திகள் இக்கல்வெட்டுக்களில் உள்ள பாங்கினைக் காண்போம்.

## கிருட்டிணகிரிக் கல்வெட்டுக்களில் காணும் அறவியல் செய்திகள் :

அறவியல் சிந்தனைகளின் அடிப்படை கொண்ட வெண்பா வடிவில் அமைந்த பாடல் கொண்ட இரு கல்வெட்டுக்கள் இத்தொகுதியில் உள்ளதைக் காணலாம்.

> "*தண்டீச்சுரன் ஓலை சாகரஞ்சூழ் வையத்துக்*
> *கண்டீச்சுரக் கருமம் ஆராய்க - பண்டே*
> *அறஞ் செய்த றங் காத்தான் பாதம்*
> *திறம்பாமல் சென்னிமேல் வைத்து*"(2)

இப்பாடல் சிறந்த அறவியல் சிந்தனை கொண்டதாகும். அறம் செய்வோர், நல்லறங் காப்போர் தனக்கென வாழாத பெருமைக்குரியோர். அத்தகு சீர்மிக்கோர் தம் பாதங்களை நாம் நம் தலைமேல் வைத்துப் போற்ற வேண்டும் என்பதால், தனக்கென வாழும் தனி மிருக வாழ்வினை விடுத்துப் பிறர்க்கென வாழும் தெய்வ வாழ்வோ போற்றிப் புகழத்தக்கது; அவ்வாறு போற்றும் உலகே நிலைத்து நிற்கும் எனபதையும் இத்தொடர்கள் உணர்த்தக் காணலாம். அவ்வாறு அறங்காத்த பெருமைக்குரியவர் தண்டீச்சரன் என்னும் சண்டேசுவர நாயனார் ஆவார். அவர்

கோயில் அறக்காப்பின் தலைவர், ஆதியில் கோயில்கள் யாவும் அறநிலைகளாகவே இலங்கின. எனவே கோயில் அறச் செயல்முட்டாமல் காப்பவர் – கண்காணிப்பவர் தண்டேசுவர நாயனார் ஆவார். எனவே அவர் ஆய்ந்து காண்க என்பதால் அறம் காத்த பாங்கு புலப்படும்.

கிருட்டிணகிரிக் கல்வெட்டுக்களில் "வாளுக்கும் தோளுக்கும் நன்றாக" எனத் தானம் தந்த கல்வெட்டுக்கள் பதினொன்று என்று முன்னர் கண்டோம். அறவியல் நோக்கில் இக்கல்வெட்டுக்கள் சீரிடம் பெற்றவையாம். "வாள்" என்பது உருவகமாக நல்லறிவினையும் நல்ல பண்பழகினையும் உணர்த்தும். திருமந்திரத்தில் படைக்கும் பிரம்மன் தவம் செய்து சிவனிடமிருந்து வாள் பெற்றான் (மெய்யறிவு பெற்றான்) எனக் காண்க. "வாள்நுதல்" என்ற பாடல் அடிகளையும் சிந்திக்க. எனவே, வாள் என்பது வாளாயுதத்தை மட்டும் குறிக்காமல் வாள் போன்ற ஒளிமிக்க கூரிய அறிவினையும் குறிக்கத்தக்க அழகினையும் குறிக்கக் காணலாம். எனவே இறையருளால் மன்னவன் அல்லது தலைவனின் அழகும் அறிவும் ஆற்றலும் வாள்போல ஒளிர்க என வேண்டுவதுடன், தோளுக்கும் நன்றாக என வேண்டினர். தோளுக்கும் நன்றாக என்பதன் நுட்பம் காண்போம். திருமந்திரம் "உடம்பை வளர்த்தேன். உயிர் வளர்த்தேன்" என்றும், "உடம்பார் அழியின் திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்" என்றும் கூறிடக் காண்க. எனவே நல்ல உடல், நல்ல உள்ளம், நல்லற ஞானம் பெறுவதே உயிர்கள் பெற்ற பேறாம் என்பது புலப்படக் காண்க. எனவே இத்தகைய நல்லற ஞான நுட்ப வழிபாடே "வாளுக்கும் தோளுக்கும் நன்றாக" என வேண்டும் வழிபாடாகும். அதற்காகக் கொடுக்கப்படும் தானமே தலையாயது என்பதும் உணரப்படும். இத்தகைய அறம் போற்றும் வழிபாடுகள் சிறந்திருந்தமை சிந்தனைக்குரியதாகும்.

## திருப்பணி, கோயில் பணி பற்றிய அறக்கல்வெட்டுக்கள் :

கிருட்டிணகிரி மாவட்டக் கல்வெட்டுக்களில் கோயில் பணி பற்றிய கல்வெட்டுக்களே மிகுதி என்பதையும் முன்னர்க் கண்டோம். இதனால் கொடையுள்ளம் படைத்தோர் பலராக இருந்தமை உணரப்படும். கோயில் கொடைகளைப் பட்டியலிட்டுப் பார்த்தால், திருப்பணி, நாள்வழிபாடு, அமாவாசை விழா போன்றவை சிறக்கத்தக்க நிலக்கொடைகளுடன், இறையிலி சர்வமானியம் மற்றும் நிவந்தமாகத் தந்த நிலத்தானமும் இடம்பெறக் காணலாம். கோயிலுக்குத் தந்த தானத்தை அவையினர் பெற்றுக் கொண்டு அறம் முட்டாமல் செய்ய ஒப்புக் கொண்டதும், கோயில் சார்ந்த பிராமணர்க்குத் தந்த தானமும், மடங்களும் ஏரி குளங்கள் அமைத்து மக்கட்கு நன்மை செய்தவையும் (அறப்பணி) பற்றி கூறும் கல்வெட்டுக்களே மிகுதியாகும்.

கோயில்களில் நந்தாவிளக்கு, சந்திவிளக்கு, திருவிளக்கு போன்றவை எரிக்கத் தந்த கல்வெட்டுக்கள் இருபத்தியொன்று உள்ளன. விளக்கறம் ஞான நல்லறம். அதனைச் சீருடன் நடத்தியதைப் பார்க்கும்போது ஞான நல்லறத்தில்

மக்கள் காட்டிய ஆர்வம் புலப்படும். பிறர்வாழ்வினில் ஒளியேற்றும் செயலும் விளக்கறமே. எனவே மக்களின் நலன் நாடிச் செய்யும் நல்லறத்தில் தலைமை சான்றது விளக்கறம் என்பதை அறியலாம். விளக்கறம் போற்றக் காசுகள், நிலங்கள், பசுக்கள் தந்த பாங்கினை இத்தொகுதி முழுதும் காணலாம்.

## மக்கட் பணியும், பண்பாடும் :

தகடூர் நாட்டுக் குயில்நாட்டு அஞ்சிட்டத்தில் ஆடவர் சாமி கமன் கங்கமார்த்தாண்ட ஆடவர் சாமி கோயில் காரியத்துக்கு ஏர்ப்பணி செய்யும்போது புலி தாக்க, புலியைக் கொன்றுபட்டான்[3] என்பதால் கோயில் பணியாகிய புனிதப் பொதுப் பணியைச் செய்தமை அறியப்படும். போரில் சிறந்த வீரனுக்கு நடுகல் நடுவர். இவண் ஏர்ப்பணியில் போரிட்டமைக்காகவும், தியாகத்துக்காகவும் இவனுக்கும் நடுகல் நாட்டப்பட்டு வழிபாடு செய்யப்பட்ட பண்பாட்டினைக் காணலாம். அவ்வாறே கங்கவரம் கல்வெட்டால், எயில்நாட்டுக் காமுண்டன் "கலிஞ்சிறை கங்கவரம் கல்வெட்டால், எயில் நாட்டுக் காமுண்டன்" கலிஞ்சிறை உரிமைக்குப் போராடிக் கலிஞ்சிறை (கொடுஞ்சிறை) புகுந்துபட்ட செய்தியும் அறியப்படும்[4].

இருகல்வெட்டுக்கள் ஆண், பெண் இருவர் தீப்பாய்ந்த செய்தியைக் கூறுகின்றது. ஆண் தீப்பாய்ந்த செய்தி கேட்கப்படாத செய்தியாம். கூத்தாடிக்குப்பம் கல்வெட்டு "எயில் நாட்டு மேலையூர் கங்கள் வசவனான இராசேந்திர சோமீராபிச்சி பொக்கன் தீப்பாய்ந்தான்"[5] என்று கூறும். அரசனால் பட்டம் பெற்ற அதிகாரி தனக்கு ஏற்பட்ட தாழ்வு காரணமாக தீப்பாய்ந்து உயிர்விட்டிருக்கலாம் என்று கருத இடமிருக்கக் காண்க. கணவன் பாம்பு தீண்டி இறந்துபடத் தலைக் கற்புக் கொண்ட அவனது மனைவி தீப்பாய்ந்த செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்தும்[6]

சின்னக்கொத்தூர் கல்வெட்டு படைத்துணை சென்றுபட்ட தியாகச் செம்மலின் வீரம் குறிக்கும். "தேவரடியார் மகன் மாராழ்வான் நரசிங்க தேவன் படைத்துணைப் போய்ப்பட்டான்"[7] என்னும் தொடர் நோக்கத்தக்கது. தேவரடியார் பணியில் இருந்தவர் மகன் (ஆண்களும் தேவரடியாராக இருந்தமை இதனால் அறியப்படும்) செய்த தியாகத்தை இந்நடுகல் போற்றக் காண்க. அவ்வாறே தட்டக்கல் நடுகல்லும் ஒரு தியாகியின் வீரச்செயலைக் குறிக்கிறது. விக்கிரம சோழ வளநாட்டை நாயகம் செய்கிற தித்தாழ்வான் பிறரைத் தாக்க வந்த புலியைக் கொன்றுபட்ட செய்தியும் எண்ணத்தக்கது. நெடுசால் நடராசர் கோயில் கல்வெட்டால் "மாராயம்" என்ற மதிப்பிற்குரிய பட்டம் பெற்றவருக்குச் சிறப்புச் செய்யக் காணி கொடுத்த செய்தி உள்ளது[8]. இவ்வாறு சீர்மிக்க பணி செய்வார்க்குப் பட்டமும் காணியும் தந்தது சிறப்புச் செய்தியாகும்.

பெண்ணேசுவரம் கல்வெட்டில் "சேரமான் பெருமாள்" பெயரில் அமைந்த மடத்துக்கு "மடப்புறம்" தந்த செய்தியுடன் ஏரி பற்றிய செய்தியும் இடம்பெறக்

காணலாம். இவ்வாறு சமயப் பெரியோர் தம்மைப் போற்றும் பண்பாடு சிறந்திருந்ததை இதனால் அறியலாம். யாவற்றுக்கும் மேலாக "நாடு நகர் நன்றாக[9]" என்று இறைவனை வேண்டித் தானம் தந்த செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்தும். இவ்வாறு பக்தி செய்வதில் தனக்கென வேண்டாத தியாகப் பண்பாட்டைக் காணமுடிகின்றது.

அவையின் செயல்பாடுகள் விசயநகர ஆட்சியில் முற்றிலும் அழிந்தன என்பர். ஆயினும் ஒரேயொரு கல்வெட்டு அவையின் செயல்பாட்டைத் திருக்காவனத்தில் குறைவறக்கூடி நிறைவற, நிறைந்து[10] செய்த செயலைக் குறிக்கின்றது. அத்துடன் இக்கல்வெட்டுக்களால் சிவசமயம் இப்பகுதியில் நல்ல செல்வாக்குடன் விளங்கிய பாங்கினை அறியலாம். முக்கண்ணுடையார்[11] சிவன்படவர்[12] சிவநாமம் முழுதுடைய பிள்ளையார்[13] திருநீற்றுச் சோழமாராயன்[16] போன்ற அருள் நிறைந்த பெயர்களைக் காண்க. உயர்குடிமகளிர் கூத்தாடுந் தேவர் நாச்சியார் என்ற பெயரைக் கொண்டதில் அவர்தம் பண்பாடு விளங்கும். இவ்வாறு பழஞ்சமயமான சிவசமயப் பெயர்களைத் தம் மக்கட்கு இட்டு வழங்கிய பண்பாடு, மரபுகாக்கும் பக்தி நிறை பண்பாடாக மலர்ந்து விளங்கியதைக் காண்க.

ஓம்படைக் கிளவிகள் காட்டும் அறவியல் நிலைகள் : "தமிழ்க் கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள்" (கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுக்களை கொண்ட ஆய்வு[17] என்னும் ஆய்வேட்டில் ஓம்படைக் கிளவிகள் காட்டும் அறநிலைகள் பற்றி விரிவாக ஆய்ந்திடக் காண்க. அதில் ஆதியில் மக்களை நம்பியும் அவைகளை நம்பியும் அறம் செய்தனர் என்றும், இடைக்காலத்தில் ஆர்வம் காரணமாகவும், அச்சுறுத்தல் காரணமாகவும் அறத்தைக் காக்க முற்பட்டனர் என்றும்; பிற்காலத்தில் எதிர்மறைப் போக்கே ஓங்கிட அச்சுறுத்தியே அறம்காக்க முற்பட்டனர் என்பது விளக்கப்படக் காணலாம். ஓம்படைக் கிளவிகளால் நமது அறவியல் போக்கும் அயலவர் உறவால் ஏற்பட்ட தாழ்ச்சியை – வீழ்ச்சியைத் தெளிவாக உணர்ந்திட முடியும். வழிபாடு என்பதும் அறங்காப்பதும் மெய்யறிவின்பாற்பட்டதாக இருந்தால் மட்டுமே பயன்தரும். திருக்குறள் கற்றதன்பயன் வாலறிவன் நற்றாள் படர்தல் என்று கூறிடக் காண்க. வாலறிவு என்பது தூய மெய்யறிவாகும். எனவே மெய்யறிவு வழி நின்று போற்ற வேண்டிய வழிபாடும் அறக்காப்பும் தாழ்ந்த மக்களால் இழிந்த அச்சுறுத்தல் நிலைக்கு ஆட்பட்டது. இதனை இத்தொகுதியில் உள்ள ஓம்படைக் கிளவிகள் வழி தெளிவாகக் காணலாம். ஓம்படை என்பது இறையருள் வழிவழிக் காக்க என்றும் அறத்தை வழிவழிக்காக்க என்றும் பொருள்படும் சொல்லாகும்.

கிருட்டிணகிரிக் கல்வெட்டுக்கள் தொகுதியில் ஓம்படைக் கிளவிகள் உள்ள கல்வெட்டுக்கள் இருபத்தி ஐந்தாகும். அவற்றுள் சிறந்த நிலையில் "அவையினர் காக்க[18]" என்பது ஒரு கல்வெட்டில் வரக்காண்க. "பன்மகாரட்சை[19]" ஒரு கல்வெட்டிலும் இடம்பெறக் காணலாம். இவ்வாறு மக்களுக்கு மதிப்புத் தந்து அறங்காக்கக் கூறியவை இரு கல்வெட்டுக்கள் மட்டுமே என்பதை நினைக்க.

“இத்தன்மத்தை ரட்சிப்பான் பாதம் என் தலைமேலன”[20] என்பதும் ஓரிடத்தில் வந்துள்ளது. இது ஆசை காட்டல் நிலையாகும். “சந்திராதித்தவரை காக்க” என்பது எட்டிலும், எஞ்சியவை அச்சுறுத்தும் வண்ணம் “கங்கைக் கரையில் குரால் பசு கொன்ற பாவத்தில் போவான்” என்பது பதினான்கு கல்வெட்டுக்களிலும் இடம்பெறக் காணலாம். இது அச்சுறுத்தல் நிலையாகும். “அச்சமே கீழ்களது ஆசாரம்” என்று கயமை அதிகாரத்தில் திருக்குறள் கூறக் காண்க. அச்சுறுத்தி அறத்தை நிலைநாட்டுவது என்பது பக்தியற்ற செயல் மட்டுமன்றி அறத்துக்கும் புறம்பானதாகும். எனவே, மக்களின் தாழ்ந்த அறங்கெட்ட நிலையினை இக்கிளவிகளின் வழிநாம் அறியமுடியும்.

முடிவுரை : மேற்கூறிய செய்திகளால் அறவியல் நிலையில் நாம் அயலவர் ஆட்சியால், அயலவர் கூட்டுறவால் எப்படியெல்லாம் தாழ்ந்தோம் என்பதைக் கண்டோம். தமிழ்மண் திருக்குறள் விளைந்த மண். திருக்குறளுக்கு “அறம்” என்பதே பெயர். சிவன் அறத்தின் வடிவம் என்பதும், உமையம்மை 32 அறம்புரக்கவே அருளாட்சி செய்வாள் என்பதும் சிவசமயக் கோட்பாடாகும். சிவனது ஊர்தியும், அறத்தின் வடிவம் ஆகும். ஆனால் கல்வெட்டுக்களில் காணும் ஓம்படைக் கிளவிகளால் நம் மண்ணில் ஏற்பட்ட அறக்கேட்டினை நன்கு அறிய முடிகின்றது. கிருட்டிணகிரி மாவட்டத்தில் கொங்கின் வடஎல்லைப் பகுதி, தொடர்ந்து அயலவர் போரிட்ட மண். ஆங்காங்கே அயலவர் ஆட்சியும் நடந்தது உண்டு. எனவே அறந்திரிந்த அரசியல் வந்த வகையை நாம் அறியலாம். விடுதலை பெற்ற பின்னரும் நாம் அறவியல் நிலைகளை ஆக்கவழியில் வளர்த்து அறவியல் சமுதாயம் படைத்திட வழிவகை காணல் வேண்டும். இன்றேல் “மண்புக்கு மாய்வது மண்” என்ற குறள் உண்மையாகும். அறக்கேடும் பண்புக் கேடும் மன்னனையே அழிக்கும் என்பதை இன்றைய இயற்கை அழிவுகள் காட்டக் காண்க. எனவே, அறம் போற்றும் – வளர்க்கும் சமூகம் வாழும் என்பதை நினைவில் நிறுத்தி அறவியல் ஆக்கம் படைக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் கருத்தாகும்.

<u>சான்றெண் விளக்கம் :</u>


1. கிருட்டிணகிரி மாவட்டக் கல்வெட்டுகள், தமிழ்நாடு தொல்லியல் துறை, சென்னை–8. ஆண்டு 2009 (முதற்பதிப்பு)

2. எண் 117/1973, 3. எண் 50/1973, 4. எண் 86/1973, 5. எண் 1312/1973, 6. எண் 114/1973, 7. எண் 141/1973,

8. எண் 99/1973, 9. எண் 114சி/1973, 10. எண் 117/1973, 11. எண் 4/1973, 12. எண் 4/1973, 13. எண் 77ஈ/1973

14. எண் 57/1973, 15. எண் 108/1973, 16. எண் 71/1973

17. முனைவர் கா.அரங்கசாமி, தமிழ்க்கல்வெட்டுக்களில் அறவியல் கோட்பாடுகள் (பிஎச்.டி.ஆய்வேடு)

18. எண் 79/1974

19. எண் 114பி/1973

20. எண் 71பி/1973



# விடுதலைப் போராட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம்

**S.B.கல்பனா**, முதுகலை பட்டதாரி ஆசிரியர்,
நாளந்தா பள்ளி, கிருஷ்ணகிரி.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளும் போட்டி போட்டுக் கொண்டு விடுதலைப் போரில் ஈடுபட்ட போதும், தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் விடுதலைப் போரில் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். விடுதலைப் போராட்டம் தமிழக சமுதாயத்தின் பல்வேறு மக்களையும் ஈர்த்தது. தேசிய உணர்வால் உந்தப்பட்ட தனிப்பட்டோர், சிலர் தங்கள் சக்திக்கும், கிடைத்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு செயல்பட்டுள்ளனர். சிலர் தங்கள் எதிர்ப்பை வினோதமான வழிகளிலும் வெளிக்காட்டியுள்ளனர். ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சி கோழைகளையும் வீரர்களாக்கியது.

*1802–ம் ஆண்டு உழவர் போராட்டம் :*

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விடுதலைப் போராட்டத்தின் முதல் கட்டமாக **1799–ல்** நடைபெற்ற பெருந்துறை, பரமத்தி உழவர்களின் ஆயுதப்புரட்சி ஆகும். பெருந்துறை கிராமத்தலைவர் சின்னான் ஆங்கிலேயர் ஆதிக்கத்தையும், அதிகமான வரிவசூல் செய்வதையும் எதிர்க்கத் துணிந்தார். அவரது இம்முயற்சிக்கு முதன் முதலில் ஆதவு தெரிவித்தவர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூரை சேர்ந்த புட்டா முகமது, முகமது காசிம், ராமானுல்லாகான் ஆகிய மூவரும் துணைநின்றார்கள். புரட்சி ஆரம்பித்த சில காலங்களிலேயே முகமது காசிம் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். ஆனால் முகமது காசிம் தனக்கு ஆங்கிலேயர்கள் மரண தண்டனை நிறைவேற்றினால் அது கேவலமானது, மேலும் ஆங்கிலேயர்கள் கையால் சாகக்கூடாது என்று தன்னைத்தானே கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர் விட்டார்[1].

கிழக்கிந்தியக் கம்பெனிச் சட்டம் (ஆண்டு **1802** பகுதி **2**) அனைத்துக் கிழக்காசிய நாடுகளிலும் வழங்கி வந்த ஜமீன்தாரி முறையை ரத்து செய்தது. ஆனால் இங்கிலாந்து அரசாங்கம் அதற்கு ஒப்பவில்லை. ஜமீன் உரிமை பாரம்பரிய உரிமை என்றும் சொன்னது அரசு ஸ்காட்லாந்தில் ஜமீன்தாரி முறை போன்றதொரு முறை நிலவிற்று. தமிழ்நாட்டு ஜமீன்தாரர்கள் புதிய ராஜாக்கள் ஆனார்கள். ரயத்துவாரி முறையை அகற்றியதன் வழியாக ரயத்து (விவசாயி)களின் நலன்கள் அழிந்தன.

ஜமாபந்தியின் போது தரிசு நிலங்களுக்கும் வரிவசூல் செய்யப்பட்டது. கணக்கர்கள் விதிக்கப்பட்ட அளவுக்கு மேல் வசூலித்தார்கள். எதற்கும் ரசீது

கிடையாது. உழவர்களுக்குத் தக்காவிக்கடன் தரும் பொருட்டு அரசு கொடுத்த பெரும் தொகையைக் கணக்கர்களே வைத்துக் கொண்டார்கள். தீர்வை 50 சதம் உயர்த்தப்பட்டது. புஞ்சைக்கும் நஞ்சைத் தீர்வையே தரிசு நிலங்களுக்கும் பயிர் செய்யாமல் அடைப்பில் போட்ட நிலங்களுக்கும் கூட வரி, கணக்கப்பிள்ளைகளின் ஏடுகள் காட்டிய நில அளவுக்கும் கும்பினி அரசு அளவையிட்டுப் பதிந்த அளவுக்கும் நிறைய வேறுபாடு.

முறையான நில அளவைப் பதிவு, நிலத்தரத்துக்கும், பயிருக்கும் ஏற்ற வரி விதிப்பு. அளவைத் தவறு மற்றும் அதிகாரிகளது பேராசையால் கூடுதலாக வசூலிக்கப்பட்ட பணத்தைத் திருப்பித் தருதல், உழவர் நலன் மறுத்த கணக்கர்களைத் தண்டித்தல் இவை தாம் உழவர்களின் கோரிக்கைகள். இவை ஏற்கப்படவில்லை உழவர்கள் போராடத் தீர்மானித்தார்கள்.

இதன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தேன்கனிக்கோட்டை மற்றும் ஒசூர் உழவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தை கூட்டினார்கள். அங்கே தீர்மானித்தபடி முப்பது பேர் அடங்கிய உழவர் குழு ஒன்று சென்னைக்குப் போய் வருவாய் ஆணையத்திடம் தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தது. உழவர் குறையை போக்குவதற்குப் பதிலாக அரசு அவர்களைக் கைது செய்தது. இதையறிந்த உழவர்கள் ஆயிரம் பேர் இராயக்கோட்டைக்கு 10 மைல் தொலைவில் திரண்டார்கள். இராயக்கோட்டை ஆட்சியர் கோபனின் தலைமையிடம், உழவர்கள் தமது தலைவர்கள் 30 பேரின் விடுதலை கோரினார்கள். விடுதலை மறுக்கப்பட்டது. உழவர் கூட்டம் கலைய மறுத்தது. உழவர்கள் இன்னும் அதிகத் தொகையினர் குவிந்தனர். அவர்களை கலைக்க நான்கு கம்பெனிப் படைவீரர்களை ஏவியது அரசு. படைவரும் முன் உழவர்கள் தம் தலைவர்களைத் தாமே விடுவித்துக் கொண்டு அகன்றனர். இராயக்கோட்டை உழவர் 150 பேர் நாட்டுத் துப்பாக்கிகளும், வாள் மற்றும் குத்தீட்டிகளும் வைத்திருந்தனர் என்றாலும், ஒருவரும் வன்முறையில் ஈடுபடவில்லை என்று சென்னைக்கு எழுதினார் ஆட்சியர் கோபன்[2].

பாலக்கோட்டுப் பகுதி உழவர் நிலையும் இதுவே. அவர்கள் தம் போராட்டத்திற்கு உதவுமாறு தேன்கனிக்கோட்டை உழவரை வேண்டினர். உழவர் போராட்டம் தருமபுரி பாரமகால் பகுதி முழுவதும் பரவி 1810–ஆம் ஆண்டு வரைக்கும் எரிந்தது.

படை பலத்தால் பாரமகால் உழவர் எழுச்சி அடங்கியது போன்று தோன்றிற்று. ஆனாலும் உழவர் பலர் திரளாக ஆங்காங்கே கூடினார்கள். ஆட்சிக்கு ஒரு சவாலாகப் பயிர்த் தொழிலைக் கைவிட்டார்கள். மாவட்ட ஆட்சியர் விசாரணைக்கு விடுத்த அழைப்பை ஏற்க மறுத்தார்கள். இவ்வாறு இரு திசை ஆற்றல்களையும் இணைத்தால் தான் வெற்றி கிடைக்கும் என்ற நிலையில் அதற்கு பாலமாகச் செயல்பட்டவர்கள் தான் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பகுதியை சேர்ந்த இஸ்லாமிய சகோதரர்கள்[3].

*ஒத்துழையாமை இயக்கம் 1920 :*

1919–க்குப் பின் தமிழகத்து அரசியலில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. காந்தியடிகளின் வரவால் தமிழகம் அனைத்திந்திய இயக்கத்துடன் விறுவிறுப்புப் பெற்று முன்னேறியது. அந்தச் சமயத்தில் தான் கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் மக்கள் சுதந்திரப் போராட்டத்தில் இன்னும் தீவிரமாக ஈடுபடலாயினர். ஆங்கியேர்களின் ஆதிக்கத்தை நீக்க வேண்டுமென்று எண்ணிய காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை 1920, ஆகஸ்ட் 1–ம் நாள் தொடங்கி நடத்தினார். இவ்வியக்கம் தமிழகத்தின் இராஜாஜி, ஈ.வே.ராமசாமி நாயக்கர், வரதராஜுலு நாயுடு, திரு.வி.க., சத்தியமூர்த்தி ஆகியோரின் முயற்சியால் பரவியது. ஊர் தோறும் கூட்டங்கள் நடத்துதல், பிரச்சாரம் செய்தல் ஆகியவற்றில் மக்கள் ஈடுபலாயினர், பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், வரிகட்டுதல் ஆகியவற்றை மக்கள் புறக்கணித்தனர்.[4]

இந்தியாவில் எங்கோ ஓர் இடத்தில் காந்தி தன்னுடைய போராட்டத்தை அறிவித்துவிட்டால் அதனைத் தமிழ்நாட்டில் தான் முதன் முதலில் செயல்வடிவம் கொடுக்கப்படும். அவ்வாறு செயல்வடிவம் கொடுக்கும் சுதந்திரச் சிற்பி இராஜாஜி தான் அவரை ஈன்றெடுத்த மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டமே ஆகும். காந்தியப் போராட்டங்கள் ஆங்காங்கே நடைபெற்ற போது தன் சொந்த மாவட்டத்தில் நடந்த எந்தப் போராட்டத்தையும் இவர் முன் நின்று நடத்தவில்லை. ஆனால் அப்போராட்டங்களை மாகாண அளவில் தலைமை ஏற்று நடத்திக் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தார்[5].

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த மொ.முனுசாமி கவுண்டர் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். மேலும் கொடமாண்டப்பட்டி என்ற ஊரில் மு.ராமசாமி கவுண்டர், ரா. ராமகிருஷ்ண ஐயர்[6], ஆர். ஷாகிப் முகமது இப்ராஹிம், பகதூர் ஷாகிப், சு. நாகராஜ மணிக்காரர் ஆகியோர் ஒத்துழையாமை இயக்கத்திலும் 1922–ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலிலும் ஈடுபட்டனர். மேலும் இவர்கள் உப்பு சத்தியாக்கிரகம், அன்னியத்துணி பகிஷ்கரிப்பு ஆகிய போராட்டங்களிலும் ஈடுபட்டனர். அப்போது கிருஷ்ணகிரியின் மையப்பகுதியில் இருந்த கார்னேசன் திடலில் எல்லா போராட்டங்களும் நடைபெற்றன[7]. ஆரம்ப காலத்தில் இப்போராட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் மக்கள் அவ்வளவாகப் பங்கெடுக்கவில்லை. இப்போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

*காந்தியின் கிருஷ்ணகிரி வருகை – 1927*

1927–ஆம் ஆண்டு காந்தியடிகள் தருமபுரி வழியாகக் கிருஷ்ணகிரிக்கும் வருகை புரிந்தார். அவர் 24–ஆம் தேதி ஆகஸ்டு மாதம் 1927–ல் கதர்த் துணிகளை

விற்கும் பொருட்டும், கதர் பற்றிய விழிப்புணர்வைக் கிராம மக்கள் மத்தியில் எடுத்துக் கூறவும், அன்னிய துணிகளைப் புறக்கணிக்கும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டார். இவ்வருகையின் போது, காந்தியடிகள் மனைவியும் உடன் வந்திருந்தார், கூடவே கதர் பிரச்சார ஊர்தியும் வந்திருந்தது[8].

இவர்கள் வருகையை எதிர்பார்த்திருந்த கிருஷ்ணகிரி மக்கள் அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்றனர். சாலையின் இருமருங்கிலும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. காந்தியடிகளை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார்கள் மக்கள். ஆனால் இவ்வரவேற்பில் முஸ்லிம் இன மக்கள் மட்டும் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் இந்து மதத்தைச் சேர்ந்த சுவாமி சாரதானந்தா என்பரை ரங்கிலா ரசூல் என்ற முஸ்லீம் நபர் படுகொலை செய்துவிட்டார். இதனால் இப்பகுதியில் மதக்கலவரம் நடக்கும் அபாயம் ஏற்படும் நிலை ஏற்பட்டிருந்தது. எனவே இதனைத் தடுக்கும் பொருட்டுப் பேச்சுவார்த்தை மூலம் சுமூகமாக தீர்வு காணப்பட்டது. மேலும் ரசூல் செய்தது தவறு என்பதை நிரூபித்தார். ஆனால் முஸ்லீம்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மறுபுறம் காந்தியின் வருகைக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் சாலையெங்கிலும் கற்களையும், மரங்களையும் போட்டுத் தடை ஏற்படுத்தினர். இதையெல்லாம் பொருட்படுத்தாத காந்தியடிகளும் அவர் மனைவியும் கிருஷ்ணகிரியில் கதர் பிரச்சாரம் செய்தனர்[9]. அப்போது பாலக்கோட்டை சேர்ந்த பட்டாளஞ் செட்டியார் என்ற தீவிர காங்கிரஸ் தொண்டரும் தீர்த்தகிரி முதலியார் நடத்தி வந்த பாரத மாதா பஜனையில் தேசிய கீதங்களை பாடி வருபவரும் இவர் காந்திக்குக் கதர் மாலையை சூட்டினார். அப்போது பட்டாளஞ் செட்டியார் கையில் 2.5 பவுன் மதிப்புள்ள டாலர் செயின் போட்டிருந்தார். அதைக் கண்ட காந்தி அவரது கையை பிடித்துக் கொண்டு இந்தச் செயினை மாதர் முன்னேற்றப் பணிக்குக் கொடுப்பீர்களா என்றார். உடனே பட்டாளஞ் செட்டியார் செயினை அப்படியே உருவிக் காந்தியின் பாதத்தில் பேசாமல் வைத்துவிட்டு வணங்கினார். பட்டாளஞ் செட்டியார் முதுகில் தட்டிக் கொடுத்தபடி அவர் தந்த தங்கக் காணிக்கையை ஏற்றுக் கொண்டார் காந்தி[10]. இவ்வாறு கிருஷ்ணகிரி வருகையை இனிதே முடித்துக் கொண்டு பின்னர் ஒசூர் வழியாகப் பெங்களூர் பயனித்தார்.

### *சட்டமறுப்பு இயக்கம் 1930*

**1929**-ல் ஜவஹர்லால் நேரு தலைமையில் கூடிய லாகூர் காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானித்தின்படி **1930**-ஆம் ஆண்டு ஜனவரி **26**-ம் நாள் முழுமையான விடுதலை நாளென நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து **1930**-ஆம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினார்[11]. கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் ஏராளமானோர் இதில் பங்கு கொண்டனர். அவர்களுள் கோ.அம்மாயம்மாள்,

ப.ஆறுமுகம், மேகலசின்னம்பள்ளியைச் சேர்ந்த இரா.முனுசாமி செட்டியார், தௌலதாபாத்தைச் சேர்ந்த அ.ராஜா செட்டியார் ஆகியோர் சட்ட மறுப்பு இயக்கம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும் ஈடுபட்டனர். மேலும் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த சா.சின்னையராஜி, ஒசூரின் வே.தேசாயி, பெண்ணேஷ்வரமடத்தின் நா.முதலியார் கிருஷ்ணகிரி தௌலதாபாத்தின் ரா.நாகராஜன் ஆகியோர் இவ்வியக்கம் மட்டுமின்றித் தனிநபர் சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல் ஆகியவற்றிலும் ஈடுபட்டனர்[12]. கிருஷ்ணகிரியில் நடந்த இப்போராட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். தௌலதாபாதிலிருந்து புறப்பட்ட இக்கூட்டம் கிருஷ்ணகிரியின் மையப் பகுதியான கார்நேசன் திடல் வந்தடைந்தது. கூட்டம் முடியும் சமயத்தில் இப்போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய அ.ராஜா செட்டியார், ரா.நாகராஜன் ஆகியோரையும் காவல்துறை கைது செய்து கிருஷ்ணகிரி அதாலத் நீதிமன்றத்தில் விசாரணைசெய்து ஒசூர் சிறையில் அடைத்தனர்.

மேலும், சு.கன்னையநாயுடு இப்போராட்டத்தில் கைது செய்யப்பட்டு 7 மாதம் வேலூர்ச் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் அடைக்கப்பட்டார். இதே போல் க.கதர்ராமுலு நாயுடு என்பவர் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதால் கடலூர் சிறையில் அடைக்கப்பட்டு விடுதலையானார்[13]. 1932–ல் விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட கே.எஸ். கண்ணைய ராஜு கள்ளுக்கடை மறியல் மற்றும் சட்ட மறுப்பு இயக்கத்திலும் ஈடுபட்டதால் வேலூர் சிறையில் 6 மாதம் அடைக்கப்பட்டார். இதுபோல் குற்றவியல் பிரிவு 4ன்படி கைது செய்யப்பட்ட ர.சாமராவ், மொ.தங்கவேல் ஆகியோரும் 6 மாதம் தண்டனை வழங்கி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர்[14].

சட்டமறுப்பு இயக்கமானது உப்பு சத்தியாக்கிரகம் அன்னியத்துணி பகிஷ்கரிப்பு, கள்ளுக்கடை மறியல் ஆகியவற்றின் மூலம் வெற்றி கண்டது. ஆனால் மற்ற மாவட்டத்தை ஒப்பிடும் போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இப்போராட்டம் தோல்வியடைந்தது. தொடங்கிய ஒரு சில நாட்களிலேயே கிருஷ்ணகிரிப் பகுதியில் இருந்த முக்கியமான வீரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டனர். மேலும் மக்களை அடுத்தகட்டப் போராட்டத்திற்கு வழி நடத்திச் செல்லத் தலைவர்கள் இல்லாத காரணத்தினால் இப்போராட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சற்று தொய்வு கொண்டது.

### *உப்புச் சத்தியாக்கிரகம் 1930*

காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தின் முதலாவதாக உப்புச் சட்டத்தை மீறுவது என முடிவெடுத்தார். ஆங்கிலேயே அரசு உப்பு மீது விதித்த வரியை எதிர்த்து 1930, மார்ச் 12–ம் நாள் உப்புச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார். தமிழகத்தில் இந்த இயக்கத்திற்கு இராஜாஜி தலைமைத் தாங்கினார். பல

காங்கிரஸ் தொண்டர்களுடன் திருச்சியிலிருந்து வேதாரண்யம் சென்று உப்பு எடுத்தார்[15]. இதனால் கிருஷ்ணகிரி மாவட்டம் தென்னிந்தியாவில் உப்பு சத்தியாகிரகத்தைத் தலைமையேற்று நடத்தியது என்பதில் ஐயமில்லை.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முனியப்ப செட்டியார் என்பவர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டதால் 6 மாதம் சென்னை மத்தியச் சிறையிலடைக்கப்பட்டார். ஜே. ராமுலு ஐயர் என்பரும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டார். இந்த ஆண்டிலேயே கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதால் 1 வருடம் மதுரை மற்றும் கண்ணனூர் சிறையில் அடைக்கப்பட்டார். நா. நரசிம்மராஜு 1930ல் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு இதே ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்திலும் கலந்து கொண்டார். இதனால் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், கடலூர் ஆகிய சிறைகளில் இரண்டரை ஆண்டுகள் சிறைப்பட்டுப் பின் விடுதலையானார். மேலும் ம.நஞ்சுரெட்டியார், அ.சண்முகம், ஏ.சீனிவாசன், கோ.ஸ்ரீராமாராஜூ ஆகியோர்கள் உப்புச் சத்தியாக்கிரகம், கள்ளுக்கடை மறியல் மற்றும் தனிநபர் சத்தியாகிரகத்திலும் ஈடுபட்டதால் சென்னை, திருச்சி, அலிபுரம் ஆகிய சிறைகளில் அடைக்கப்பட்டு விடுதலையாயினர்[16].

1921–ஆம் ஆண்டு விடுதலை இயக்கத்தில் சேர்ந்த சு. நாகராஜ மணியக்காரர், 1930–ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கம், கள்ளுக்கடை மறியல், உப்பு சத்தியாக்கிரகம் சிறைச் சென்று ஒசூர் மற்றும் வேலூரில் 27 நாட்கள் காவலில் வைக்கப்பட்டார்[17].

பெருமாள் செட்டியார் 1933–ல் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொண்டு சிறை சென்றார். வேலூர் சிறையில் சுமார் மூன்று வாரங்கள் காவலில் வைக்கப்பட்டார். இ.வெங்கடாசலம் என்பவர் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கெடுத்துக் கொண்டதால் 1930–ல் கைது செய்யப்பட்டு இ.பி.கோ. 179–வது பிரிவின் படி ஆறு திங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் மத்தியச் சிறையில் காவலில் வைக்கப்பட்டார்[18].

## *ஜவர்ஹலால் நேருவின் கிருஷ்ணகிரி வருகை – 1936*

1935–ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின்படி 1937–ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறும் என ஆங்கிலேய அரசு அறிவித்தது. உடனே காங்கிரஸ் கட்சியினர் நாடெங்கிலும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் மேற்கொண்டனர். இது சம்பந்தமாக கிருஷ்ணகிரி நகரில் மைய பகுதியில் உள்ள கார்நேசன் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நேரு பேசும் போது சத்யமூர்த்தி அதனை தமிழில் மொழி பெயர்த்துக் கூறினார். இக்கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த கே.வெங்கடாச்சாரி, தா.ஆறுமுகச் செட்டியார், எஸ்.நாகராஜமணியக்காரர் ஆகியோர் முன்னின்று நடத்தினார்கள்[19]

## *தனிநபர் சத்தியாக்கிரகம் – 1941*

1939–ஆம் ஆண்டு இந்தியத் தலைவர்கள் அனுமதி இல்லாமல் இந்தியாவை ஆங்கிலேய அரசு இரண்டாவது உலகப் போரில் ஈடுபடுத்தியது. இதனை எதிர்த்து 1940–ஆம் ஆண்டு நாடு முழுவதும் தனிநபர் சத்தியாக்கிரகம் முழு வேகத்துடன் நடைபெற்றது. தமிழகத்தில் காமராஜர் உட்பட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழகத்தில் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுவோர் காந்தியடிகளின் அனுமதி பெற்று ஈடுபட்டனர்[20]. அவ்வாறு கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் பலர் ஈடுபட்டனர். மற்ற போராட்டங்களை விட இதில்தான் அதிகமானோர் கலந்து கொண்டனர். அவர்கள் பல இடங்களில் கைது செய்யப்பட்டுச் சிறையிடைக்கப்பட்டு விடுதலையாயினர்.

*கிருஷ்ணகிரி ந.அன்னாஜி அவர்களும் தம் துணைவியார் அ.லலிதா* அன்னாஜியும் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்துக்கொண்டு கைது செய்யப்பட்டு 9 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளிச் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார். கணவன் மனைவி என்று இருவரும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபடுவது மிகப் பெரிய சாதனையாகும். இவ்வாறு ந. அன்னாஜி அவர்களும் தம் துணைவியர் லலிதா அன்னாஜி அவர்களும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தார்கள்[21]. அதே போல் முதுகானப்பள்ளி பி.கே. தேவையா இதில் கலந்து கொண்டு குற்றவியல் பிரிவு 38(5)–ன் படி வேலூர் மத்தியச் சிறையில் ஒரு மாதம் சிறை வைக்கப்பட்டார்[22]. ஒசூர் ம.திட்டையாவும், ஜி.லக்குமையாவும் தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு 2 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுதலையானார்கள்[23]. மேலும் 1942–ல் வெள்ளையனே வெளியே இயக்கத்திலும் *ஈடுபட்டதால் தலா 9 மாதங்கள் அலிபுரம் சிறையில் காவலில் வைக்கப்பட்டு* விடுதலையானார்கள்[24]

காவேரிப்பட்டிணம் எஸ். நாகராஜமணியக்காரர் அவர்கள் எம்.ஏ. தத்துவம் படித்தவர். இவர் 1931–ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு 3 மாதங்கள் *சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ஒசூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டு* விடுதலையானார்கள்[25].

கிருஷ்ணகிரி பரவாசுதேவையா வழக்குரைஞராக இருந்தார். இவர் 1925–ல் விடுதலை போராட்டத்தில் ஈடுபட்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதால் கைது செய்யப்பட்டு தலா 2 மாதங்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டு விடுதலையானார். இதே போல் ஜி.பார்த்தசாரதி என்பவரும் இவ்வியக்கத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு விடுதலையானார்[26].

ஒசூர் சின்னப்ப ரெட்டியார் தனிநபர் சத்தியாக்கிரகம் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு 3 நாட்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு ஒசூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்[27].

ஒசூர் வட்டம் லட்சுமிபுரம் கே.முனிரெட்டியார் விடுதலை இயக்கத்தில் 1919–ஆம் ஆண்டு இணைந்தார். தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு 8 நாட்கள் ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டைச் சிறையில் வைக்கப்பட்டு விடுதலையானார். ஒசூர் ம.பாப்பாசெட்டியார் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு 15 நாட்கள் ஒசூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார். இதேபோல் பி.வெங்கடரெட்டியார், ஷாகிப்பாஷா ஆகியோர் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டு 3 நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ஒசூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார்கள்.[28]

ஒசூர் வெ.தட்டாச்சாரியாரும், க.தோட்டையும் இவ்வியக்கத்தில் கலந்துகொண்டு ஒசூர் பெல்லாரி சிறையில் 6 மாதமும், ஐதராபாத் சிறையில் 6 மாதமும் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார்கள். கிருஷ்ணகிரி கே.வெங்கடாச்சாரி தனிநபர் சத்தியாகிரத்தில் கலந்துகொண்டு 6 மாதங்கள் சிறைத்தண்டனைப் பெற்றுத் திருச்சிராப்பள்ளிச் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார்.[29]

### *வெள்ளையனே வெளியேறு இயக்கம்–1974*

1941–ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து காந்தியாடிகள் அன்னியர்களை இந்தியாவை விட்டு விரட்டும் பொருட்டு 1942–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8–ஆம் நாள் வெள்ளையனே வெளியேறு என்னும் போராட்டத்தைத் தொடங்கினார். இச்செய்தி நாடெங்கும் பரவிக் கிளர்ச்சிகளும் ஊர்வலங்களும் நடைபெற்றன.[30] தமிழகத்திலும் இப்புரட்சி நடைபெற்றது அதில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சார்பாகப் பலர் கலந்துகொண்டு போராட்டங்களில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

ஜெகதேவியைச் சேர்ந்த தி.பலராமன் என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டுச் சேலம் சிறையில் காவலில் வைக்கப்பட்டார். கிருஷ்ணகிரி தா.ஆறுமுகம் செட்டியார் இதில் கலந்துக்கொண்டு கைது செய்யப்பட்டு 8 மாதங்கள் தண்டனை விதிக்கப்பட்டு அலிபுரம் சிறையில் காவலில் வைக்கப்பட்டார். ஒசூர் கே.கேம்பையா இவ்வியக்கத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள் தண்டனை பெற்று ஒசூர்ச் சிறையில் சிறைவைக்கப்பட்டு விடுதலையானார்.[31]

கிருஷ்ணகிரி எஸ்.நல்லய்யா வெள்ளையனே வெளியேறு இயக்கம் மற்றும் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டதால் 9 மாதங்கள் தண்டனை பெற்று ஓமலூர்

சிறையில் காவலில் வைக்கப்பட்டார். ஒசூர் இரங்கசாமி மச்சப்பாவும் இவ்வியக்கத்தில் கலந்துக்கொண்டு 21 நாட்கள் தண்டனை பெற்று ஒசூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார்.[32]

அச்சட்டிப்பள்ளி ஏ.என்.நஞ்சுரெட்டியார் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும், அந்நியத்துணி பகிஷ்கார இயக்கத்திலும் பங்கு கொண்டதால் தலா 3 மாதங்கள் ஒசூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானார். ஒசூர் அ.வஜ்ரலிங்கம் இதில் கலந்துகொண்டு குற்றவியல் பிரிவு 38 (5)–ன் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் தண்டனை பெற்று அலிபுரம் சிறையில் காவலில் வைக்கப்பட்டு விடுதலையானர். காவேரிப்பட்டிணத்தைச் சேர்ந்த தெய்வம் என்பர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார். பின்னர் காங்கிரஸிலிருந்து விலகி 1943–ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர். [33]

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் கிருஷ்ணகிரிப் பகுதியை சேர்ந்த விடுதலைப் போராட்ட வீரர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைத்து விடுவார்கள். இங்குப் போராட்டம் நடத்தும் வீரர்கள் ஒரு குறுகிய எல்லைக்கு உட்பட்டுத் தங்கள் போராட்டங்களில் முழுமையாக வெற்றி பெற முடியாமல் போயிற்று. மேலும் கிருஷ்ணகிரி, ஒசூர், தேன்கனிக்கோடை போன்ற பகுதிகள் ஓரளவிற்குக் குளிர்ப் பிரதேசங்கள் ஆகும். எனவே ஆங்கிலேய அதிகாரிகள் இங்கு ஓய்வெடுக்க வருவது வழக்கம் இதனால் கெடுபிடி அதிகமாக இருக்கும். மேலும் இப்பகுதிகள் ஆங்கிலேயர்களுக்கு மேற்கு இராணுவ கேந்திரமாக இருந்தால் விடுதலைப் போராட்ட வீரர்கள் இம்மாவட்டத்தின் சார்பாகச் சாதிக்க முடியாமல் போயிற்று.[34]

இவ்வாறு தன்னலமற்ற தியாகிகள் பலரின் பங்களிப்பினால் இந்நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து 1947 ஆகஸ்ட் 15–ம் நாள் விடுதலைப் பெற்றது. மேலும் விடுதலைப் போராட்டத்திற்கு 50–க்கும் மேற்பட்டோரை அர்ப்பணிந்த கிருஷ்ணகிரி மாவட்டம் இன்று வலிமையான இந்தியாவில் வளமான தமிழ்நாட்டைப் படைக்க அயராது பாடுபட்டு வருகிறது.

1. த.பழமலய், தருமபுரி, மண்ணும் மக்களும், தகடூர் நாட்டுத் தகடூர், பெருமிதம் வெளியீடு, வழுதிபிராட்டி, 2005, ப.216.

2. ஸ்டாலின் குணசேகரன், விடுதலை வேள்வியில் தமிழகம், பகுதி–2, நிவேதிதா பதிப்பகம், ஈரோடு. 2000 ப.ப. 306–307.

3. K.Arumugam, Seminar 'Agrarian Distress in Baramahal Territory (1780-1818), Dharmapuri, 1989/

4. பா.மாணிக்கவேலு, இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு, சென்னை. 1973, ப.94

5. ச.கிருஷ்ணமூர்த்தி, ச.செவ்வராசு, தருமபுரி மாவட்ட தொல்லியல் கையேடு, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2005. ப.ப.229–230.

6. விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்நாடு யார்–யார்? தொகுதி–1, ப.193

7. மேலது, ப.ப.194–195.

8. P.Pulney Andy Senji, Tamilnadu District Gazetteers, (Dharmapuri District Gazetteers) Govt. of Tamilnadu, Madras, 1995. P.151.

9. Fortnightly Report, Ist Half of September 1927

10. விடுதலை பொன்விழா சிறப்பு மலர்–97 அக்டோபர்–4–5, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒசூர்.

11. Bipin Chandra, India's Struggle for Independence, (1857-1947), Penguin Books, New Delhi. 1989, P.270.

12. விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ்நாடு யார்–யார்? தொகுதி1, ப.196

13. மேலது, ப.197.

14. த.பழமலய், தருமபுரி – மண்ணும் மக்களும், ப.237.

15. David Arnold. The Congrees in Tamilnadu, Nationalist Politics in South India, (1919-1937) Manohar, New Delhi, 1977. P.138

16. தமிழக விடுதலை போராட்ட வீரர்கள், யார்–யார்? தொகுதி2, ப.ப. 198–199.

17. தியாகசீலர், தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழா மலர், (தருமபுரி மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் சிறப்பு மலர்) ப.8

18. விடுதலைப் போராட்ட வீரர்கள் தமிழ்நாடு யார்–யார்? தொகுதி–1, ப.ப.200–201

19. தியாகசீலர், தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழா மலர், (தருமபுரி மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் சிறப்பு மலர்)

20. The Mailk 8 January 1942

21. த.பழமலய், தருமபுரி, மண்ணும் மக்களும், ப.183

22. நேர்காணல் : தி.ஜீவானந்தம், ஒசூர், நாள் : 29–9–2006

23. தியாகசீலர் தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழா மலர், தருமபுரி மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் மலர், ப.28

24. தமிழக விடுதலைப் பேராட்ட வீரர்கள் யார்–யார்? தொகுதி–2, ப.202

25. த.பழமலய், தருமபுரி, மண்ணும் மக்களும, ப.237

26. விடுதலை பேராட்ட வீரர்கள் தமிழ்நாடு, யார்–யார்? தொகுதி–1, ப.203

27. நேர்காணல், பஞ்சாட்சரம், பாப்பாரப்பட்டி, நாள். 26.6.2007

28. விடுதலை போராட்ட வீரர்கள் தமிழ்நாடு, யார்–யார்? தொகுதி–1, ப.204

29. மேலது, ப.ப.204–205.


30. ம.பொ.சிவஞானம், விடுதலைப் போரில் தமிழகம், தொகுதி–2, பூங்கொடி பதிப்பகம், சென்னை–1984, ப.204.

31. விடுதலைப் பேராட்ட வீரர்கள் தமிழ்நாடு, யார்–யார்? தொகுதி–1, ப.206

32. மேலது, ப.ப.206.

33. விடுதலைப் பொன்விழாச் சிறப்பு மலர் –97 அக்டோபர் 4–5, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஒசூர்.

34. நேர்காணல், அ.தையல் நாயகியம்மாள், ஒசூர். நாள் : 04.07.2007.



ஜக்கேரி ஆலமரம்

# வரலாற்றின் பார்வையில் நீதி நிர்வாகம்

கிருஷ்ணகிரி என்ற சொற்றொடர் தமிழில் கண்ணபிரான் மலை, கருமலை என்ற பொருள் தரக்கூடியதாகும். இந்திய விடுதலைக்குப் பிறகு சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும், பின்னர் 2.10.1965–ம் தேதிக்கு பிறகு தருமபுரி மாவட்டத்தின் ஒரு பகுதியாகவும் இருந்து 9.2.2004 முதல் தனி மாவட்டமாக விளங்கி வரும் கிருஷ்ணகிரி மாவட்டம் தமிழக வரலாற்றில் தனியிடம் பெற்று விளங்குவதை வரலாற்றைப் பயிலும்போது நாம் வியப்புடன் அறிய நேர்கிறது.

புவியியல் அடிப்படையில் வட தமிழகமானது பாலகாட், பாரமகால், தலகாட் என பிரிக்கப்பட்டு அதில் கிருஷ்ணகிரி மாவட்டம், பாலகாட், தலகாட் பிரிவுகளில் அமைகிறது. மலைகள், பள்ளதாக்குகள், வனங்கள் அடங்கிய ஒசூர், டெங்கனிகோட்டா பகுதிகள் பாலகாட் பிரிவிலும், கிருஷ்ணகிரி பிராந்தியம் தலகாட் பிரிவிலும் அடங்கியமைகிறது.

தமிழக வரலாற்றின் புதிய கற்கால கலாச்சார சுவடுகளைக் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தொகரப்பள்ளி, கொல்லப்பள்ளி ஆகிய கிராமங்களின் மலைப் பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை கண்டறிந்துள்ளது. ஆதியில் தகடூர் நாட்டின் பகுதியாகவும், பின்னிட்டு வரலாற்று அறிஞர். திரு. நீலகண்ட சாஸ்திரி அவர்களின் கருத்துப்படி நிகரிலி சோழ மண்டலத்தின் பகுதியாகவும் (ஆதாரம் – திருமலை கல்வெட்டு – குலோத்துங்க சோழன் 1198 கி.பி.) இருந்த கிருஷ்ணகிரி மாவட்டம் சோழர்களுக்கு பின் ஹொய்சாள மன்னர்களின் ஆட்சியில் இருந்தபோது கிருஷ்ணகிரி–வேப்பனப்பள்ளி அருகில் அளேகுந்தாணி என்ற ஊர் ஹொய்சாள மன்னர்களின் தலைநகரமாகவே விளங்கியது. இன்று அந்த ஊர் குக்கிராமமாக, எஞ்சிய சுவடுகளுடன் காட்சியளிப்பது வரலாற்றின் விந்தை ஆகும். ஹொய்சாளர்களின் ஆட்சி ஓயும்போது உருவான விஜய நகரப் பேரரசின் பகுதியாக கிருஷ்ண தேவராயரின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக கிருஷ்ணகிரி மாவட்டம் விளங்கியது. பின்னர் கிருஷ்ணகிரி மாவட்டம் டெங்கனிக்கோட்டை, ரத்தினகிரி, ஆலம்பாடி, ஜெகதேவி, பாளையங்களாகப் பிரிந்து, பாளையக்காரர்களின் ஆளுகையில் இருந்தபோதுதான் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் இந்தத் தீபகற்பத்தில் வேர்விடத் தொடங்கியது. மைசூர் சாம்ராஜ்யத்தின்

**என்.ரவிசங்கர்,** எம்.எல்., வழக்கறிஞர், கிருஷ்ணகிரி.

பகுதியாக ஹைதர்அலி, திப்பு சுல்தான் ஆகிய மாபெரும் விடுதலைப் புரட்சியாளர்களின் கோட்டையாக விளங்கிய கிருஷ்ணகிரிக் கோட்டை 1972–ல் ஸ்ரீரங்கபட்டண உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் வசமானது. காப்டன் ரீட் என்பவரின் பிரதிநிதியாக XV காரிசன் என்பவர் கிருஷ்ணகிரி பகுதியின் நிர்வாகத்தை 1792ம் வருடம் முதல் நிர்வகித்தார். 1799ம் வருடம் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை விரிவாக்கம் செய்த ராபர்ட்கிளைவ் கிருஷ்ணகிரியை ராணுவத் தலைமையகமாகச் சிலகாலம் வைத்திருந்தார். அபபோது ஆங்கில ராணுவ வீரர்களின் குடியிருப்பாகக் கிருஷ்ணகிரி நகரின் அன்றைய பழையபேட்டைப் பகுதி விளங்கியது. அதன் எஞ்சிய அடையாளமாகக் கிருஷ்ணகிரி விருந்தினர் மாளிகை "கிரஹாம் ஹவுஸ்" என்ற பெயரில் பொதுப் பணித்துறையினரால் இன்றும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கேப்டன் கிரஹாம் என்பவர் ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் நியமிக்கப்பட்ட முதல் கிருஷ்ணகிரி துணை ஆட்சியர் ஆவார். கிருஷ்ணகிரி பழையப்பேட்டைப் பகுதியில் குடியிருப்புகள் அதிகமாகவே 18–ம் நூற்றாண்டின் இறுதியில் இன்றைய புதியப்பேட்டை (தௌலாதாபாத்) ஆங்கிலேயர்களாலேயே கம்பைநல்லூர் குடும்பத்தைச் சேர்ந்த லட்சுமணராவ் என்பவர் உதவியுடன் உருவாக்கப்பட்டது. கிருஷ்ணகிரி சேலம் சாலையில் அரசு பால் பண்ணைக்கு எதிரில் அக்ராஹரம் என்ற கிராமக் குடியிருப்பில் மேற்கண்ட லட்சுமணராவ் வாழ்ந்து மறைந்தார் என குறிப்புகள் உள்ளன. கிருஷ்ணகிரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் ஆகிய போர்களில் பங்கேற்ற வீரர்களின் எண்ணிக்கை மிகுதி. சிப்பாய்யூர், சுபேதார்மேடு, தளவாய்ப்பள்ளி ஆகிய கிருஷ்ணகிரிக்கு அருகிலுள்ள கிராமங்களின் பெயர்களே அதற்கு சாட்சியங்களாகும். இன்றும்கூட வீட்டுக்கு ஒரு இராணுவ வீரனை அனுப்பும் பெருமை கிருஷ்ணகிரியைச் சுற்றியுள்ள மேற்படி ஊர்களுக்கு உண்டு.

நீதி நிர்வாக பரிபாலன முறை குறித்த தெளிவான குறிப்புகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விஜயநகரப் பேரரசு காலத்திலிருந்து காணப்படுகின்றன. விஜயநகரப் பேரரசின் தலைநகரில் மன்னரின் தலைமையில் உச்ச நீதிமன்றம் **(Imperial Court)** இருந்தது. விஜயநகரப் பேரரசு பல மண்டலங்களாக பிரிக்கப்பட்ட ஒவ்வொரு மண்டலத்திலும் மண்டலாதிபதிகளின் தலைமையில் சார்நிலை நீதிமன்றங்கள் இருந்தன. விஜயநகரப் பேரரசு ஆட்சியில் கோயிலில் நடைபெற்ற குற்றங்களைத் தண்டிக்கும் அதிகாரம் கோயில் தர்மகர்த்தாக்களிடமிருந்தன.

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியில் கிருஷ்ணகிரி பகுதியில் நீதி நிர்வாகம் கிராம சபை, வருவாய்த்துறையதிகாரி நீதி நிர்வாகம் உள்அடுக்கு முறையில் இருந்தது. சாதிப் பஞ்சாயத்து நீதி முறையும் கிராம சபை நிர்வாகத்திற்குள் இருந்தது. இதனால் ஆங்காங்கே குழப்பம், அமைதியின்மை ஏற்பட்டு நிர்வாக சிக்கல் நிலவியதை அப்போதைய கிருஷ்ணகிரி உள்ளடங்கிய பிராந்திய ஆட்சியர் அலெக்சாண்டர் பெல் கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகத்திற்கு அனுப்பியுள்ள அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. 9.10.1795–ம் தேதியிட்ட கிருஷ்ணகிரி துணை

ஆட்சியர் T.B.ஹர்டிஸ் அவர்களின் அறிக்கை கிருஷ்ணகிரிப் பகுதியில் நிலவிய கொள்ளையர்களின் கொள்ளைச் சம்பவங்களை விவரிக்கிறது. மாவட்ட ஆட்சியரின் முகாம் கிருஷ்ணகிரி அருகிலுள்ள முத்தூர் இடத்தில் அமைந்தபோது அது கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டது. டாக்டர் B.S.பாலிகாவின் – சென்னை நிர்வாக அறிதல்கள் **(Studies in Madras Administration by Dr. B.S.Baliga)** என்ற நூலில் கிருஷ்ணகிரிப் பகுதியில் 1802க்கு முந்தைய நீதிநிர்வாகம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அப்போது **Court of circuit** உயர்நீதி அமைப்பாக விளங்கியது. சிவில் நீதிமன்றமாக சதார் அதாலத் என்ற பெயரிலும், குற்றவியல் நீதிமன்றமாக பௌஜ்தாரி அதாலத் என்ற பெயரிலும் **Court of Circuit** செயல்பட்டது. இதையடுத்துக் கீழ்நிலை நீதியமைப்பாக ஜில்லா கோர்ட்டுகள் இயங்கின. இதன் நீதிபதியாக மாவட்ட ஆட்சியர்கள் பணியாற்றினார்கள். அவர்கள் காஜி, முப்தி, பண்டித் ஆகியவர்கள் துணையுடன் **(personal laws)** நீதிப் பணியைச் செய்தனர்.

1802–ம் வருடம் **Regulation -II** ற்கு பிறகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் **(District Civil Court)** உருவாக்கப்பட்டு அதன் கீழ் கிருஷ்ணகிரியில் **Circuit Court** அமைக்கப்பட்டது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு நீதி மன்றமாக சென்னை நகரில் **Rajudari Adalat** நீதிமன்றம் இயங்கியது. இந்த நீதியமைப்பு முறையும் தோல்வியடைந்ததாக 1816ம் வருடத்திய கர்னல் மன்றோ கமிஷன் அறிக்கை தெரிவிக்கிறது. இதனால் 1816ம் வருடத்திற்கு பிறகு மாவட்ட நீதிபதியிடமிருந்து சிவில் வழக்கு விவகாரங்களும் மாஜிஸ்டிரேட் அதிகாரமும் வருவாய்த் துறையினருக்கு மாற்றப்பட்டு மாவட்ட நீதிபதிக்கு உதவியாக மாவட்ட முன்சிப்புகள் நியமிக்கப்பட்டனர். 1843–ம் வருடம் கிருஷ்ணகிரியிலிருக்கும் **Circuit Court** நீக்கப்பட்டுச் சேலத்திலிருந்து மாவட்ட நீதிபதி அதிகாரத்திற்குள் கிருஷ்ணகிரி நீதி நிர்வாகம் அமைந்துவிட்டது. அதன்பின்னர் தருமபுரி மாவட்டம் உருவானபோது கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைந்தது. கிருஷ்ணகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றம் எஸ்டேட் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு தீர்ப்பாயமாகவும் செயல்பட்டு வந்துள்ளது. மோட்டார் வாகனவிபத்து, தீர்ப்பாயமாக விளங்கிவரும் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 1974–ம் வருடம் 21 வாகன விபத்து வழக்குகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இன்றைய வாகன விபத்து வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது வியப்புதான் மிஞ்சும்.

கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றம் தமிழகத்தின் மிகப் பழமையான நீதிமன்றங்களில் ஒன்றாக விளங்குகிறது. 1995–ம் வருடத்திய தருமபுரி மாவட்ட கெஜட்டியர் விவரப்படி கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றம் தொடங்கப்பட்ட தேதி சரியாக தெரியாதபட்சத்திலும் இரண்டு நூற்றாண்டுகளைத் தாண்டியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்குப் பதிவுப் புத்தகம் **(Suit Register)** கிருஷ்ணகிரி மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் 1823ம் வருடம் முதல் காணப்படுகிறது. வழக்குப் பதிவுப் புத்தக விவரப்படி சென்னை மாகாணத்தின் 4 மேல்முறையீட்டு

நீதிமன்றங்களில் ஒன்றாகக் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகவும், ஒசூர் – காஞ்சிபுரம் – சித்தூர் – திண்டுக்கல் எல்லைக்குள் நீதியதிகாரம் கொண்டதாகவும் கொண்ட மேல்முறையீட்டு நீதிமன்றம் இருந்துள்ளது. பின்னர் இந்த நில ஆள்வரை காலப்போக்கில் குறைந்துள்ளது. கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம் 'பாராமகால்' **(Baramahal)** எனப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட முன்சீப் நீதிமன்றம் சிலகாலம் ஒசூரில் முகாமிட்டு முகாம் நீதிமன்றமாகவும் **(Camp Court)** செயல்பட்டுள்ளது.

1799ம் வருடம் மாவீரன் திப்பு சுல்தான் வீழ்ந்தபிறகு கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்தின் முதல் ஆட்சியராக கேப்டன் அலெக்சாண்டர் ரீட் பதவியேற்றார். அப்போது ஏற்கனவே திப்பு சுல்தானால் மாவீரன் நெப்போலியனிடம் தூதுவராக அனுப்பப்பட்ட பெருமைக்குரிய **(Mir. M. Gulam Ali)** மிர். எம்.குலாம் அலி கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தின் முதல் மாவட்ட முன்சிப்பாக நியமிக்கப்பட்டார் என்ற விவரத்தையும் அவரது சொந்தப் பங்களாவை நீதிமன்றமாகச் செயல்பட அவர் கொடையளித்தார் என்ற விவரத்தையும் ஆராயும்போது கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றம் 200 ஆண்டுகளைக் கடந்துவிட்டது என்றே நாம் உறுதியாக அறியலாம்.

கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றத்திலிருந்து 1959ற்கு பிறகு ஒசூர் தேன்கனிக்கோட்டை, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி உள்ளிட்ட ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் உருவாகி கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றம் என்ற ஆலமரத்தின் விழுதுகளாக நிலவி வருகின்றன. ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ஒரு பகுதியுள்ள கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தின் சாதனைகளாக நாம் பார்க்கும்போது 1974ம் வருடத்திலேயே 1,022 வழக்குகள் பதிவாகி 1,267 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ள சங்கதி அப்போதைய மாவட்ட முன்சீப்பாக இருந்தவருடைய நீதிப்பணி வேகத்தை நமக்கு நினைவுபடுத்துகிறது. இன்னும் சொல்லற்கரிய சிறப்புகளைக் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்ட முன்சிப் நீதிமன்றம் இன்னும் பல நூற்றாண்டுகளைத் தாண்டிப் புதுப் பொலிவுடன் என்றும் விளங்கும் என்பதில் நாம் பெருமிதமடைவோமாக.

## கட்டுரைக்கு உதவிய நூல் விவரங்கள் :


1. திரு. நீலகண்ட சாஸ்திரிகளின் **"History of South Indian (1955)**
2. திரு. **R.**வெங்கட்ரமணய்யாவின் **"Studies in the History of the Third Dynasty of Vijayanagar (Part-II Chapter-IX)**
3. **The Baramahal Records (Justice)**

4. The Manual of Administration of the Madras presidency by C.D. Maclean Vol.1 1885) P.270

5. "Studies in Madras Administration" Vol-II, Dr. B.S. Baliga.


6. GAZETTEER OF INDIA TAMIL NADU STATE DHARMAPURI District (1995) Editor : P.POULNEY AND Y.SENJI

## கட்டுரையாசிரியர் விவரம்

கட்டுரையாளரான என்.ரவிசங்கர் 10.03.1964ல் கிருஷ்ணகிரி மாவட்டம் வட்டத்திலுள்ள, தொகரப்பள்ளி என்ற ஊரில் T.B.நஞ்சுண்ட செட்டியார் – மாதேவியம்மாளுக்கு மகனாகப் பிறந்தவர். பள்ளிக் கல்வியைத் தொகரப்பள்ளி கிராமத்திலும் மேல்நிலைக்கல்வியைக் கிருஷ்ணகிரியிலும், சட்டக்கல்வியைச் சேலம் மைய சட்டக்கல்லூரியிலும் பயின்றவர். 20 வருடங்களுக்கும் மேலாக கிருஷ்ணகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் உரிமையியல் குற்றவியல் உள்ளிட்ட அனைத்து வழக்குகளையும் நடத்தி வருபவர். இவரது தந்தை தேசிய காங்கிரஸ் இயக்கத்திலும் ஹரிஜன சேவையிலும் பணியாற்றித் தமிழ்நாடு அரசின் பிற்படுத்தப்பட்டோர் நல ஆலோசனை கமிட்டி உறுப்பினராக 1966–ல் வருட கால கட்டத்தில் பணியாற்றியவர். சைவ சித்தாந்த பயிற்சி முடித்த கட்டுரையாளரின் பல கட்டுரைகள் "வீரசைவ முரசு", "தேசிய தொழிலாளர் முரசு", "கிராம ராஜ்யம்" ஆகிய இதழ்களில் வந்துள்ளன. கட்டுரையாளர் "சட்டக்கதிர்" என்ற சட்ட மாத இதழில் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளை மொழிபெயர்ப்பும் செய்துள்ளார். இந்திய பத்திரிக்கையாளர் சங்கத்துடன், இணைந்த தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கத்தின் கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். தருமபுரி மாவட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**கட்டுரையாளர் பெயர் விலாசம் :**

**N.ரவிசங்கர் M.L.**, வழக்கறிஞர்,
2/461–சி, ஆனந்தநகர், ராயக்கோட்டை ரோடு
(நீதிமன்றம் எதிரில்), கிருஷ்ணகிரி – 635 001.
தொலைபேசி 04343 – 292177, செல் : 94433 30483



# காந்தியவாதி தியாகி. காவேரிப்பட்டணம் எஸ்.நாகராஜ மணியகாரர் எம்.ஏ.,


**என்.ஆர்.ஜெயசந்திரன், B.Com.,**

துணைப்பதிவாளர் (ஓய்வு), காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

செல் : 98427 79664


ஆங்கிலேயர்களிடம் அடிமைப்பட்டு இருந்த நம் பாரத நாட்டை அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுவிக்க “விடுதலை என்ற வீரவிதையை விதைத்துத் தன்னலம் மறந்து போராடியவர்கள் எத்தனையோ லட்சம் பாரதமெங்கும் பரவிக் கிடக்கின்றனர்.

## நான்கு வகை அரசியல்வாதிகள் :

நம் முன்னோர்கள் நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு வகையாகப் பிரித்துள்ளனர். அந்த நான்கு வகை நிலம் போல நான்குவிதத் தலைவர்களைக் காணமுடியும். விடுதலை வேட்கையை உருவாக்கி, மக்களிடையே தியாக உணர்வை உண்டாக்கி, தியாகங்கள் பல செய்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசியல்வாதிகள். அவர்கள் நாட்டு விடுதலை என்ற ஒரே குறிக்கோளுடன் அனைத்தையும் துறந்து சிறைவாசம் அனுபவித்துப் பதவியை வெறுத்துத் தூயநெறியுடன் வாழ்பவர்கள் முதல் வகையினர். விடுதலைக்குப் பின் நாட்டின் நிர்வாகத்திலும், சீரமைப்பிலும், சேவையிலும் சிறந்து விளங்கிய அரசியல்வாதிகள் இரண்டாவது வகையினர். அரசியலால் முன்னுக்கு வந்து பதவிகளையும், வசதிகளையும் அடைந்த அரசியல்வாதிகள் மூன்றாம் வகையினர். அரசியல் மூலம் பதவிகளையும், வசதிகளையும் பெற்று நாட்டைப் பற்றியும், நாட்டு மக்களைப் பற்றியும் வெளியில் பேசித் தியாகிகள், பொதுநலத் தொண்டர்கள் போலப் போலி வாழ்க்கை வாழுகின்ற அரசியல்வாதிகள் நான்காம் வகையினர். இந்த நான்கு வகை அரசியல்வாதிகளை இந்த நாடு பார்த்து வருகிறது.

விடுதலைக்காகப் பாடுபட்ட பல லட்சக்கணக்கான விடுதலை வீரர்களைக் கொண்ட கட்சியிலுள்ள அரசியல்வாதிகளை இரண்டு விதமாக வேறுபடுத்த முடியும். தங்களின் செயல்பாடுகளால், சிந்தனைகளால் கட்சிக்குப் பெருமை சேர்த்துத் தன்னலம் துறந்து தியாக வாழ்வு வாழும் பிரிவினர் ஒருவகை. மற்றொரு வகையினர் கட்சியின் ஆதரவால் பெருமையால் தாங்கள் செல்வத்தையும், வசதிகளையும், பதவிகளையும் பெற்று பலன் பெறுவர்.

## காவேரிப்பட்டணம் தந்த காந்தியவாதி :

நான்கு வகை அரசியல்வாதிகளில் முதல் வகையைச் சார்ந்தவரும், கட்சி அரசியல்வாதிகளில் முதல் பிரிவில் அடங்குபவரும் அவதரித்த புண்ணியபூமி காவேரிப்பட்டணம். கிருஷ்ணகிரிக்குத் தெற்கே எட்டு கிலோமீட்டர் தொலைவில் தென்பெண்ணையாற்றங்கரையில் சோலைகள் சூழ அமைந்த அழகான நகரம் காவேரிப்பட்டணம். அந்த நகரத்தில் சத்தியசீலராக, சாணை பிடிக்காத வைரமாக, சுடரொளி வீசிச் சுற்றியிருந்தவர்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர் காந்தியவாதி விடுதலைவீரர் தியாகி. எஸ். நாகராஜமணியகாரர். வீரசைவ குலத்தில், சைவதீத்தம் வி.சுப்பிரமணியகார், திருமதி. சந்திரம்மாள் தம்பதியருக்கு அருந்தவப்புதல்வராக 1908ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் நாள் பிறந்த தியாகி எஸ். நாகராஜமாணியகார் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ.,) படித்தவர். சிறந்த கல்வியாளர். அவருடைய மனைவி திருமதி ராணி சென்னம்மாள் கணவரின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டவர்.

## விடுதலைப் போராட்டம் :

பள்ளிப் பருவத்திலேயே விடுதலை வேட்கையால் ஈர்க்கப்பட்டவர். 1921ஆம் வருடத்திலேயே தனக்குப் பதிமூன்று வயது இருக்கும் போது நாட்டு விடுதலையைப் பற்றி சிந்தித்தவர். 1930ஆம் ஆண்டிலிருந்து ஒத்துழையாமை இயக்கம், கள்ளுக்கடை மறியல், உப்பு சத்தியாக்கிரகம் அந்நியத் துணைகளை வெறுத்து ஒதுக்குதல், தீயிட்டுக் கொளுத்துதல் ஆகிய போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற செம்மல்.

1939ல் காந்திஜி அவர்களின் அறைகூவலை ஏற்றுத் தனிநபர் சத்தியாகிரக இயக்கத்தில் கிருஷ்ணகிரியில் எஸ்.நாகராஜமணியகாரும், பருகூரில் லலிதா அண்ணாஜியும், ஒசூரில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று மையத்தின் தலைவருமான கே.ஏ. மனோகரன் அவர்களின் தந்தையுமான கே. அப்பாவு பிள்ளையும், தேன்கனிக்கோட்டையில் ஐ.எம்.பி. ஆறுமுகமும், பாலக்கோட்டில் மாரண்டஹள்ளி வெங்கடாசல உடையாரும், தருமபுரியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஜி.நடேச செட்டியாரும், நல்லம்பள்ளியில் லளிகம் பச்சாக்கவுண்டரும், பாப்பாரப்பட்டியில் எஸ்.எஸ்.முத்துக்குப்பனும், அரூரில் எஸ்.எல்.வி. கோவிந்தசாமி செட்டியாரும் கலந்து கொண்டு வெள்ளையர் ஆட்சியை எதிர்த்தனர். அவர்களுக்கு ஆங்கிலேய அரசு ஆறுமாத காலம் சிறை தண்டனை விதித்தது. வேலூர் சிறையில் ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்தனர்.

## இருமுறை சட்டமன்ற உறுப்பினர் :

வெள்ளையர் ஆட்சிகாலத்தில் வரி கட்டுபவருக்கே ஓட்டு உரிமை உண்டு என்ற விதி இருந்தது. அந்த விதியின் படி 1946–ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி – ஒசூர் பொது கிராமத்துறைத் தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தருமபுரி – அரூர் பகுதிகளுக்கு எம்.ஜி.நடேசசெட்டியார் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருவரும் இந்திய தேசியக் காங்கிரஸ் சார்பாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். திரு. எஸ்.நாகராஜமணியகார் 1957 முதல் 1962 வ்ரை கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து மீண்டும் ஒருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## கிருஷ்ணகிரி அணை கட்டக் காரணமானவர் :

தியாகி எஸ். நாகராஜமணியகார் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது ஆற்றியப் பணிகள் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவை. கிருஷ்ணகிரி வட்ட மக்களின் நீண்டநாள் கனவாக இருந்த கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தை நினைவாக்கிடப் பாடுபட்டவர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றில் பெருகிவரும் ஆற்றுநீரைச் சேமித்து வைப்பதற்கு என்று அணை ஒன்று இல்லாது இருந்த காலத்தில் தென்பெண்ணை ஆற்றின் வெள்ளம் வீணாகப் பயன்தராமல் கடலில் கலப்பதையும் கருத்தில் கொண்டு தன் தொகுதி மக்களின் நலனைக் கருதி அப்போதைய முதலமைச்சராக இருந்த கர்மவீரர் காமராஜரிடம் கோரிக்கை வைத்துக் கிருஷ்ணகிரிக்கு அருகே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் அணை கட்ட ஏற்பாடுகள் செய்தவர். அந்த அணை கட்டுவதற்கு காமராஜர் 1.1.1955 அன்று அடிக்கல் நாட்டினார். அந்த அணை இரண்டரை வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டது. அந்த அணை அமையும் இடத்தில் உள்ள நான்கு கிராம மக்களுக்கு வேறு இடங்களில் இடமாற்றம் செய்யப்பட்டது.

ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்தில் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்ட அந்த அணை 10.11.1957 அன்று திறந்து வைக்கப்பட்டது. அரசின் கட்டுமானப் பணிகளில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட கூடுதல் செலவுதான் வரும் என்பது வழக்கம். ஆனால் கிருஷ்ணகிரி அணைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் இருபது இலட்சம் ரூபாய் அரசுக்குத் திருப்பி செலுத்தப்பட்டது என்பது ஒரு அதிசயத் தகவல். அவரது சாதனையைப் போற்றும் வகையில் அணைக்கு மேற்கே கிருஷ்ணகிரி சாலையில் உள்ள ஒரு குடியிருப்புப் பகுதிக்கு நாகராஜபுரம் என்று பெயரிட்டுள்ளனர்.

## ஆற்றிய சமுதாயப் பணிகள் :

கிருஷ்ணகிரி அணை கட்டப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களில் பலருக்குக் கிருஷ்ணகிரி ஒசூர் நெடுஞ்சாலையில் குருபரப்பள்ளிக்கு மேற்கே வீட்டு இடங்கள்

ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டித்தரப்பட்டன. அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உறுதி செய்ய கக்கன்புரம் என்ற ஊரில் கையால் காகிதம் செய்யும் குடிசைத் தொழில் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக இருந்தவர் எஸ்.நாகராஜ மணியகார்.

தருமபுரி மாவட்டம் தனியாகப் பிரிந்தவுடன் அமைக்கப்பட்ட தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். காவேரிப்பட்டணம் பேரூராட்சித் தலைவராக இருந்த பொழுது காவேரிப்பட்டணம் நகர மக்களுக்குக் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்தார். காவேரிப்பட்டணத்தில் கூட்டுறவு நகர வங்கியின் தலைவராகவும், சேலம் மாவட்ட போர்டு கமிட்டியின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். காவேரிப்பட்டணம் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் தலைவராக இருந்த பொழுது, காவேரிப்பட்டிணத்திற்கு வடக்கே காந்திநகர் என்ற குடியிருப்பைத் தொடங்கி அந்தக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

## காவேரிப்பட்டணம் காந்தி மண்டபம் :

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் சேலம் மாவட்டத்தின் பகுதிகளாக இருந்தபோது 1954ஆம் ஆண்டில் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் காவேரிப்பட்டணம், தருமபுரி நெடுஞ்சாலையில் சுமார் 40 சென்ட் நிலம் காந்தி நினைவு மண்டபம் கட்ட ஆணை பெற்றுக் காந்தி மண்டபம் ஒன்றை கட்ட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டவர். பூமிதான இயக்கத் தலைவர் ஆசார்ய வினோபாபாவில் 1954ல் காவேரிப்பட்டணம் வந்த பொழுது பூமிதான இயக்கத்திற்காக ஒரு ஏக்கர் நஞ்சை நிலம் தானமாக வழங்கினார்.

தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராக இருந்தபோது தன் பயணத்திற்காக ஒதுக்கப்பட்ட வாகனத்தைச் சொந்தக் காரணத்திற்காக பயன்படுத்தமாட்டார். குறைந்த தூரம் செல்வதாக இருந்தாலும், தன் சொந்தக் காரியம் என்றாலும் தன் சொந்தச் செலவிலேயே வேறு வண்டியில் தான் பயணம் செய்வார். தென்பெண்ணை ஆற்றின் மேல் காவேரிப்பட்டணத்தில் மேம்பாலம் கட்டவும், அவர் காரணமாக இருந்திருக்கிறார். கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் சுப்பிரமணியபுரம் என்ற குடியிருப்பு அமையவும் அவரே காரணமாக இருந்தார். அவருடைய இல்லத்திற்கு அவருடைய பெயருடன் விளங்கும் "நாகராஜமணியகார் பூங்கா" அவர் புகழையும் தியாகத்தையும் மக்கள் நெஞ்சில் என்றும் நீங்காமல் வைத்திருக்கும்.

## பிரபலமானவர்களின் காவேரிப்பட்டணம் வருகை :

அவரது இல்லத்திற்குப் பாரத முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய், முதலமைச்சர் காமராஜர், அமைச்சர்கள் கக்கன், மஜித், ஜோதி வெங்கடாஜலம், ஜி.பூவராகன், கேரள ஆளுநராக இருந்த பா.இராமச்சந்திரன், இலக்கியச் செல்வர்

குமரி ஆனந்தன் ஆகியோர் வருகை புரிந்து அவருடைய ஆலோசனைகளைக் கேட்டுள்ளனர்.

## தாமிரபத்திர விருதை மறுத்தவர் :

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் தொடங்கிய கப்பல் நிறுவனத்தில் ஒரு பங்குதாரராக இருந்துள்ளார். தனக்கு மத்திய அரசு, தான் செய்த தியாகத்தைக் கருதி விடுதலை வீரருக்கு வழங்கப்படும் தாமிரப்பத்திர விருதை வழங்க முன்வந்த போது அதைப் பெற மறுத்துவிட்டு, தான் நாட்டு விடுதலையில் பங்கேற்றுப் போராடியது பொது சேவைக்கும், நாட்டு விடுதலைக்கும் தானே தவிர தாமிரப் பத்திர விருதைப் பெறவும், பாராட்டுப் பெறவும், பண முடிப்பு பெறுவதற்கும் அல்ல என்று கூறி விடுதலை வீரர்களுக்கு அரசு வழங்கும் தியாகிகள் ஓய்வூதியத்தையும் பெற்றுக் கொள்ள மறுத்த மாமனிதராக தியாகி எஸ்.நாகராஜ மணியகார் விளங்குகிறார்.

## ஆன்மிகப் பணிகள் :

1967ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாகவும், காங்கிரஸ் இயக்கத்தின் செயல்பாடுகளில் அவர் மனநிறைவு கொள்ளாததாலும் காங்கிரஸிலிருந்து விலகி இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் தொடங்கிய காந்தி காமராசர் தேசிய காங்கிரஸ் கட்சியில் துணைத்தலைவராகவும், அதன் முக்கிய ஆலோசகராகவும் செயல்பட்டார்.

1968ஆம் ஆண்டில் இருந்து அவர் அமரராகும் வரை தனது இல்லத்தில் வாரம் தோறும் சிறந்த ஆன்மிகப் பேச்சாளர்களையும், இலக்கிய ஆர்வலர்களையும் அழைத்துத் தம் செலவிலேயே ஆன்மிகம் மற்றும் இலக்கிய கூட்டங்கள் நடத்தினார். மேலும் திருக்குறள் பற்றி வாரம்தோறும் விளக்க கூட்டங்கள் நடைபெற ஏற்பாடு செய்தார்.

பெண்ணேஸ்வரம் சிவாலயம், காவேரிப்பட்டணம் பெருமாள் கோவில், ஈஸ்வரன் கோயில் ஆகிய கோயில்களைச் சீரமைக்க இந்து சமய அறநிலையத்துறை மூலம் நிதிவசதி கிடைக்கப் பாடுபட்டவர்.

இந்திய அளவில் வீரசைவ சமுதாயத்தினரை ஒன்றுபடுத்தி வீரவைசத்தை வளர்க்க அனைத்திந்திய வீரசைவக் கமிட்டியின் நிர்வாகக் குழு உறுப்பினராகப் பணியாற்றியவர்.

## 70வது வயதில் அமரரானார் :

அவதரித்த நாள் முதல் அமரராகும் நாள் வரை மக்கள் நலனே தன் நலன் என்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் காவேரிப்பட்டணத்திற்குப் பெருமை சேர்த்த காந்தியவாதி தியாகி. எஸ். நாகராஜ மணியகார் 1978 ஆம் ஆண்டு

ஜூலை மாதம் 21–ஆம் நாள் காந்தியடிகள் மறைந்த நாளான வெள்ளி அன்று மாலை 5.00 மணிக்கு அமரரானார். அவரது உடல் காவேரிப்பட்டணத்தில் உள்ள காந்தி மண்டப வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**சட்டமன்றப் பேரவையில் இரங்கல் தீர்மானம் :**

காந்தியவாதி தியாகி எஸ். நாகராஜ மணியகார் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் 31.08.1978 அன்று நிறைவேற்றப்பட்டது. சட்டமன்ற பேரவைத் தலைவர் மாண்புமிகு. திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## இரங்கற் குறிப்பு




மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினராக திரு. **எஸ்.நாகராஜ மணியகார்** அவர்கள் 21.07.1978ஆம் தேதியன்று இறந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். நாகராஜ மணியகார் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டுவரை ஒசூர் பொது கிராமப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையிலும், 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.



# பெண்ணையாற்றங்கரைப் பசுச் செல்வம்

என். சந்திரசேகர்



காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி – யென
மேவிய யாறு பலவோடத் திரு
மேனி செழித்த தமிழ்நாடு. – மகாகவி பாரதியார்.

திருநாவுக்கரர், திருஞானசம்பந்தர், சுந்தரர் முதலான தேவார முதலிகளாலும், திருமங்கையாழ்வார் முதலான திவ்யப் பிரபந்தச் சங்க காலப் புலவர் பெருமக்களாலும், மகாகவி சுப்ரமண்ய பாரதி முதலான தீர்க்கதரிசனக் கவிஞர்களாலும், மா.ராசமாணிக்கனார் முதலான வரலாற்று ஆய்வாளர்களாலும் அன்று முதல் இன்று வரை போற்றிச் சிறப்பிக்கப்பட்டு வரும் பெருமைக்கு உரியது தென்பெண்ணை ஆறு.

இவ்வாறாக வளம் விளைவிக்கும் பகுதியின் பசுச் செல்வங்களை விஞ்ஞான ரீதியாக நிர்வகிப்பதால் பெருகும் செல்வமிகு எதிர்காலம் குறித்துச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணையாறு :

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஐந்து வருவாய்க் கோட்டங்களில் கிருஷ்ணகிரி, ஒசூர் மற்றும் ஊத்தங்கரை முதலான மூன்று வருவாய்க் கோட்டங்களில் 503 வருவாய்க் கிராமங்கள் உள்ளன.

இவற்றில் பெரும்பாலான கிராமங்கள் தென்பெண்ணை ஆற்றுப் பாசனத்தை நம்பியே உள்ளன.

ஆறும், ஆறு சார்ந்த விவசாய நிலப் பகுதியை மருதநிலம் என்கிறோம். இப்பகுதி மக்களது தொழில் விவசாயம், முதன்மைச் செல்வம் பசுவினம் ஆகும்.

## விஞ்ஞான எதிர்காலம் :

தென்பெண்ணையாற்று நாகரீகத்தில் பெரும்பங்கு ஆவினத்திற்கு உண்டு.

இந்த ஆவினங்களை விஞ்ஞான பூர்வமாக நிர்வகிப்பதால் ஆவினங்களும் பெருகும். அதன் விளைவாக அப்பகுதியும் பொருளாதார ரீதியாக முன்னேறும்.

## செல்வம் கொழிக்கும் பசுச் செல்வம் :

வறுமையை ஒழித்து, சுய வேலைவாய்ப்பைப் பெருக்கி, சுற்றுச்சூழலைக் காத்து, விவசாயத்தை வளமாக்கி கிராமப்புறப் பொருளாதாரத்தை அதிகரித்து மனித குலத்தின் மதிப்பீடுகளை மேம்பாடடையச் செய்வதோடு உடல் நலத்திற்கேற்ற சத்துப் பொருட்களைக் கொடுத்து, உரம், உயிர் வாயு, மருந்துப் பொருட்கள், பஞ்சகவ்யம், சக்தி / ஆற்றல் என எண்ணற்ற வழிகளில் நமக்கு உதவிச் செல்வம் கொழிக்கும் சிறந்த செல்வமாக விளங்குவது பசுச்செல்வம் என்றால் அது மிகையாது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூர் நகர்ப்புறம் நீங்கலாகப் பெருவாரியான பகுதிகள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளன. அதுவும் தென்பெண்ணை ஆறு பாயும் பகுதிகளில் விவசாயம் சிறப்பாக இருக்கிறது. இதனோடு தொடர்புடைய ஆவினங்களை அதன் பால், பால் பொருட்கள், கோமயம் (சாணம்) மற்றும் அதன் சிறுநீர் முதலானவற்றை அறிவியல் ரீதியாக நிர்வகிக்கக் கற்றுக் கொண்டால் தனி நபர் வருவாய் கூடுவதோடு கிராமப்புறப் பொருளாதாரமும் மேம்படுகின்றது.

உதாரணத்திற்கு ஒரு பசுவின் மூலம் 5 குதிரைத் திறனுக்கு இணையான அதாவது 40000 மெகாவாட் மின்சாரத்திற்கு இணையான திறனைப் பெற முடியும் எனவும், ஒரு பசு ஒரு வருடத்திற்கு 3500 கிலோ சாணம் கொடுக்கிறது. இதில் 800 கிலோ ஹைட்ரஜன், 560 கிலோ பாஸ்பரஸ் மற்றும் 1040 கிலோ பொட்டாசியம் உள்ளன. இவற்றின் மதிப்பு ரூ. 17,885/– என அறிவியல் ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

## மருந்தாய் :

மஹாராஷ்ட்ரா மாநிலம், நாக்பூரில் உள்ள கோ விஞ்ஞான ஆய்வு அமைப்பானது பசுவின் சாணம் மற்றும் அதன் சிறுநீர் மூலம் இரத்தசோகை, மார்புச்சளி, மூட்டுவலி, தோல் வியாதிகள், ஒற்றைத் தலைவலி, தூக்கமின்மை, சைனஸ், நாட்பட்ட காயம், ஆஸ்த்மா, மூலம், வயிற்றுப் புண், காமாலை, ஆண்மையின்மை, காசநோய், பொடுகு, இளநரை முதலான நோய்களுக்கு 30க்கும் மேற்பட்ட மருந்துகளைத் தயாரித்து அரசு அங்கீகாரத்தோடு வர்த்தக ரீதியாக

வெற்றி கண்டுள்ளதோடு விரும்புவோர்க்கு மேற்படி மருந்துகளைத் தயாரிக்கப் பயிற்சியும் அளிக்கின்றது.

## பரோபகார்த்தம் :

"பரோபகாராத்தம் இதம் சரீரம்" என்பது முதுமொழி. அதாவது இவ்வுடல் எடுத்ததன் பயன் எல்லோருக்கும் பயன்படும் வகையில் உதவி வாழ்வதே.

பசுவானது அனைத்து வகையிலும் தனது பொருட்கள் மூலம் அகிலத்தோர் அனைவரும், உயர உதவியாக இருக்கின்றது.

## நிறைவு :

தென்பெண்ணையாற்று நாகரீகத்தோடு நேரடியாக நெருங்கிய தொடர்புடைய ஆவணங்களை அறிவியல் பூர்வமாக நிர்வகித்தால் எதிர்காலம் இன்னும் ஒளிமயமாகும் என்பது நிச்சயம்.

<u>பார்வை நூல்கள்</u>


1. தென்பெண்ணை – மா. இராசமாணிக்கனார்

2. திருநாவனூர் – ச. பரணன், தமிழ்நாடு அரசு தொல்லியத் துறை

3. கசாப்புக்கடைகள் நாகரிகத்தின் பாலைவனம்
– டாக்டர் நரேஷ் சேத்தியா,
மேயோ மருத்துவமனை, நாக்பூர்


4. கோ விஞ்ஞான் – பஞ்சகவ்ய பொருட்கள், நாக்பூர்

5. கிருஷ்ணகிரி மாவட்ட அரசு இணையதளம்




வீரக்கல்

# நானும் என் மழலைகளும்



'மலை' ரத்தினசாமி, தலைமை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, மத்தூர் - 636203.



Dear Grassshooper.

A rare pink grasshooper has been found by a school boy taking part in a natural trail. The insect was found by 11 Year old Daniel Tate who thought it was a flower untill he saw it jumb and then he realized it was a grasshooper, which has been born pink, "I thought it was a flower but I saw it moving. so I tried to catch it", said Daniel.

A news from the New Indian Express dated 10th, sept. 2009, under the heading "LIVING EARTH"

I dedicated this title thesis to the II Year - Old Boy - Daniel.

மக்கள் நல்லவர்களா? - ஊரில் சென்று வீடுகளில் வாழும் மனிதர்களை உணர்ந்து வா - என்ற முனிவர் ஆணைக்கிணங்க ஊருக்குள் சென்றான். அவன் கேட்டது கிடைத்தது. தாகத்து நீர் மோர் கிடைத்தது. பசிக்குப் பழம் தந்தனர். வினாக்களுக்கு ஏற்பான பதில் தந்தனர். திரும்பியவன் சொன்னான். "எல்லோரும் நல்லவர்கள்!"

இன்னொருவன் சென்றான். கேட்டது ஏதும் கிடைக்கவில்லை. பூட்டியிருந்த வீடுகள் அதிகம் தென்பட்டன. சாத்தியிருந்த வீடுகள் திறக்கப்படாமலேயே பதில் கிடைத்தன. களைத்துத் திண்ணையில் அமர்ந்தான். இங்கெல்லாம் அமரக்கூடாது என விரட்டப்பட்டான். இவனுக்கு முன்னதாக வினாவை வீசி விசாரித்தது சில கூட்டம். கலங்கியவனாய்ச் சோர்வுற்றுத் திரும்பியவன் சொன்னான்.

"மோசமான மக்கள், உருப்படாத ஊர்!"

நான் முந்தைய வகை அனுபவசாலி. **I am a perfect optimist person** நல்லதைத் தேர்ந்தெடுக்கும் குணம் கொண்டவன். குறையில்லா

மனிதர் இல்லை. அதனைத் தவிர்த்து, நிறை புரிந்து நிதானத்துடன் ஒருங்கிணைந்திட சாமர்த்தியம் மிக்கவன். எனது கட்டுரை இயல்பானது. எதார்த்தம் மிக்கது மட்டுமல்ல நேர்மையானது என்பது உண்மை. மாறாய்ச் சொன்னால் இயற்கை நியதிக்குக் கட்டுப்பட்டு இருக்கும்.

மேல்நிலை வகுப்பில் தமிழ்ப்பாட நூலின் தீக்குச்சிகள் என்ற புதுக்கவிதை பாடம் நடத்தினேன். மாணவியரையும் படித்திடச் சொன்னேன்.

இத்தலைப்பு எதனைக் குறிப்பாய் உணர்த்துகிறது என்றேன். பதில் இல்லை.

தீக்குச்சி என்றதும் நினைவில் வருவன யாவை? என்றேன். சமைக்கும் நெருப்பு, தீபாவளிப் பட்டாசு எனப் பதில்கள் வரலாயின.

அதே புத்தகத்தில் 3வது பாடம் : கலப்பெண்கள் (Complex Number) அதில் கலப்பெண்களை குறிக்கக் குறியீடு Z என்பதாகும். இதனை இணை Conjugateயை Z என்று குறிப்பது வழக்கம். $\bar{Z}$ என்பதை Z bar எனப்படிக்கணும். bar என்றதும் எது நினைவுக்கு வருகிறது. யோசித்துச் சொல்லுங்கள் என்றேன். தவறாக நினைக்ககூடாது. மதுக்கடை - ஓட்டல் - bar ஐ சிலர் கூறினர்.

"நீங்க சின்ன வயசுல விரும்பிச் சென்று பார்த்திருக்கும் ஒரு அம்சத்தில் இதனைப் பார்த்திருக்கணும்" என்றேன். அதுல bar இருத்திருக்கும் என்றேன். Nobody gives the proper answer நான் கூறினேன். Circus பார்க்காதவர்கள் இல்லை. அதுல பார் விளையாட்டு பாராட்டத்தக்க ஒரு அம்சம் இல்லையா? என்றேன். வளர்ந்த மாணவியர் சற்றே தலை குனிந்தனர். நான் வருத்தம் அடையவில்லை. எது தெரிந்திருக்கணுமோ அது தெரியக்காணோம். வேண்டாதது பதிவாகியுள்ளது. சமூகத்தைத்தான் சாடவேண்டியுள்ளது.

## நூற்றாண்டுகளைக் கடந்த

# ரிமவுண்ட் டிப்போ



## ஒசூர் கால்நடைப் பண்ணை - மத்தகிரி

**வி.குணசேகரன்,** பேராசிரியர் **தி.கோவிந்தன்,**
விவேகானந்தா கொடை மற்றும் அறக்கட்டளை, தருமபுரி



குதிரை கடந்த நூற்றாண்டு வரை மனிதனுக்கு மிகவும் பயன்பட்ட விலங்கு மனிதனை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லவும், மிக முக்கியமாகப் படைவீரர்களைக் கொண்டு செல்லவும் பயன்பட்டது. ஆங்கிலேயர்கள் குதிரை வளர்ப்பிற்கெனத் தனித்தனி அமைப்புகளை உருவாக்கி அறிவியல் ரீதியான குதிரை வளர்ப்பினை இந்தியாவில் வேரூன்ற விட்டார்கள். ஆங்கிலேயர்கள் காலத்தில் குதிரை வளர்ப்பிற்கெனப் பல பண்ணைகள் இருந்தாலும், தென்னகத்தில் தலைசிறந்த பண்ணையாகத் தற்போது ஒசூருக்கு அருகில் உள்ள மத்தகிரியில் அமைந்த கால்நடைப் பண்ணை திகழ்ந்தது. இது ஆங்கிலேயர்கள் காலத்தில் ரிமவுண்ட் டிப்போ (குதிரைகளை வளர்த்துப் பயிற்சி அளிக்கும் இடம் எனப் பொருள்) என்று அழைக்கப்பட்டது.

மத்தகிரி என்ற பெயருக்குக் குதிரைகளுக்குப் பயிற்சி தரும் இடம் என்ற ஒரு பொருள் உண்டு. ஒசூருக்குத் தெற்கே நான்கு மைல் தொலைவில் மத்தகிரியில் அமைந்துள்ள தற்போதைய மாவட்டக் கால்நடைப் பண்ணை இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே குதிரைப் பண்ணையாக இருந்ததுடன் சென்னை மாகாணத்தின் காலாட்படை மற்றும் பீரங்கிப் படைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களின் கிடங்காகவும் இருந்தது. அப்போது மத்தகிரியின் மக்கள் தொகை 2848. அதில் பெரும்பாலோர் டிப்போவிற்குச் சம்மந்தப்பட்டவர்களாக மட்டுமே இருந்தனர். டிப்போவானது அரை சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இருந்தது. இது ஒசூரை விட உயரமாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது. இதில் குறைந்த அளவே வாணிகம் நடைபெற்றது. ஆனால் வாராந்திரச் சந்தையில் எண்ணெய் மற்றும் விவசாய விளை பொருட்களை வாங்க அதிக மக்கள் கூடினார்கள். இவை போன்ற சுவையான தகவல்கள் லெ.பானு என்ற ஆங்கிலேயர் எழுதிய சேலம் அரசிதழில் (பகுதி 2) குறிப்பிடப்பட்டுள்ளன.

1828–ஆம் ஆண்டு மைசூர் மாநிலத்தின் பெங்களூருக்குத் தெற்கே 43 மைல் தொலைவிலிருந்த கோங்குல் என்ற இடத்திலிருந்த குதிரைப் பண்ணை தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டது. மத்தகிரியில் குதிரைப் பண்ணையினைத் தேர்வு செய்தது மலைப் பகுதி போன்று. மைசூருக்கு ஓரளவு அருகில் இருந்தாலேயும், மேலும் திறந்தவெளி ஊராகவும் நல்ல மண் மற்றும் இரண்டு பெரிய ஏரிகளைக் கொண்டிருந்ததால் இந்தப் பகுதி தேர்வு செய்யப்பட்டது.

1779–80ஆம் ஆண்டு குதிரைகளை வாங்குவதற்காக மங்களூரில் ஒரு பண்ணை ஆரம்பிக்கப்பட்டது. குதிரைகள் வாங்கப்பட்ட உடன் இந்தப் பண்ணையில் வைத்து ஒரு மாதம் பராமரிக்கப்பட்டுப் பின்னர் அதன் உடல் தகுதியினை அலுவலர்கள் கொண்ட குழு மூலம் உறுதி செய்யப்பட்டு பல்வேறு பகுதியில் உள்ள படைகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன.

1810–ஆம் ஆண்டு சென்னை கமிசரியட் (ராணுவத்திற்கு உணவு மற்றும் தேவைப்படும் பொருள்களை வழங்கும் துறை) துறை என்று உருவாக்கப்பட்டு அதற்குப் புதியதாகப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 1814–15ம் ஆண்டு வாக்கில் சீரங்கப்பட்டணத்திற்கு அருகில் ஒரு மேய்ச்சல் பண்ணை உருவாக்கப்பட்டு இளம் குதிரைகள் மங்களூரில் இருந்து வாங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுப் பின்னர் படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1826 மற்றும் 1827–ஆம் ஆண்டு லெப்டினன்ட் மேன்னர்ஸ், கேப்டன் காக்ஸ் மற்றும் கேப்டன் பிரிஸ்காட் போன்ற ஆங்கிலேயர்கள் குதிரை வர்த்தகத்தில் அரசின் சார்பில் ஈடுபட்டிருந்தனர். 1828–ஆம் ஆண்டு கேப்டன் அண்டர் என்பவர் 400 குதிரைகளை ஒசூர் மாவட்டத்திலுள்ள ஆனெக்கல் பகுதியில் வைத்துப் பராமரிக்க அனுமதி கேட்டார். அதே வருடம் ஆகஸ்டு மாதம் கேப்டன் அண்டரிடம் மத்தகிரியில் குதிரைப் பண்ணை அமைப்பதற்கான நிலம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது கோங்குல் பண்ணையிலிருந்து 959 குதிரைகளும், குட்டிகளும் வட இந்தியாவில் இருந்து 200 குதிரைகளும் மொத்தம் 1159 எண்கள் இருந்தன.

1830–ஆம் ஆண்டு சென்னை மாகாணமும், பம்பாய் மாகாணமும் சேர்ந்து இரண்டு மாகாணத்திற்கும் பொதுவான அமைப்பின் மூலம் குதிரைகளை வாங்கிப் பரிமாறிக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இது 1849இல் தொடர்ந்து செயல்படுத்த இயலாமல் முடிவிற்கு வந்தது.

1834ம் ஆண்டு மத்தகிரி குதிரைப் பண்ணையினைத் தோற்றுவித்த கேப்டன் அண்டரிடம் உதவியாளராக இருந்த லெப்டினன்ட் ஜெ. ஹல் குதிரைப்பண்ணை அதிகாரியாகப் பொறுப்பேற்றார். இவர் தொடர்ந்து இதே பணியிடத்தில் 20 வருடம் லெப்டினன்ட் கர்னல் ஆகப் பதவி உயர்வு பெறும் வரை பணிபுரிந்தார். இந்தக் காலகட்டத்தில்தான் குதிரை இனப்பெருக்கப் பணி தொடங்கியது. இங்கிலாந்திலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் ஆண் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

1838–ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசு சோதனை அளவில் குதிரை இனப்பெருக்க நிலையம் மத்தகிரியில் தொடங்க ஒப்புதல் அளித்தது. அதற்கான குதிரைகள், அரபு, இங்கிலாந்து, கேப் மற்றும் துருக்கி போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டன. 1842–இல் ஆண்டு சில்லாதார் என்ற குதிரை வளர்ப்போரிடம் குதிரைகள் இனப்பெருக்கம் செய்ய ஒப்படைக்கப் பட்டது. இது 1846–இல் இம்முறை முடிவிற்கு வந்தது. பின்னர் கப்பன் என்ற ஆங்கிலேயர் சில முக்கியமான வம்சாவளிக் குதிரைகளை மட்டும் பண்ணையில் வைத்துக் கொண்டு மீதமுள்ள குதிரைகளை விவசாயிகளிடம் வளர்க்க விடலாம் என்ற உத்தரவிட்டார்.

பல்வேறு வகையான குதிரை வளர்ப்பு மற்றும் இனப்பெருக்க முறைகளை ஆராய்ந்து பார்த்த அலுவலர் குழு ஒசூரில் இனப்பெருக்கம் செய்யப்பட்ட குதிரை தரத்தில் மிக உயர்ந்ததாக இருப்பதாகக் கண்டறிந்தது.

சென்னை மாகாணத்தின் கவர்னர் அவர்களுக்கும் படைகளின் முக்கிய தளபதிகளுக்கும் குதிரைகள் இங்கிருந்தே சென்றதாகக் குறிப்புகள் உள்ளன. ஒரு வருடத்தில் சராசரியாக 600 முதல் 700 குதிரைகள் கொள்முதல் செய்யப்பட்டன. மேலும் அதே அளவிற்குக் குதிரைகள் பண்ணையிலிருந்து படைகளுக்கு அனுப்பப்பட்டன. 1869 முதல் 1870 வரை நடந்த குதிரைப் பரிமாற்றக் கணக்குகளைப் பார்க்கும் போது பல ஆச்சர்யமூட்டும் உண்மைகள் புலப்படுகின்றன. 1876–77 –ஆம் ஆண்டு மிகக் குறைந்த அளவாக 370 குதிரைகளும், 1874இல் அதிகபட்சமாக 608 குதிரைகளும் பண்ணையில் இருந்தன. 1876–ஆம் ஆண்டு அதிகபட்சமாக 818 குதிரைகளும் பண்ணையில் இருந்தன. ஒரு வருடத்தில் சராசரியாக 400 முதல் 600 குதிரைகள் பயிற்சி பெற்றுப் படைகளுக்கு அனுப்பப்பட்டன. இது தவிர ஒரு வருடத்திற்கு 15–20 குதிரைகள் பண்ணையில் இறப்பதும் உண்டு. தனியார் குதிரை வியாபாரிகளுக்கு வேண்டுமானால் குதிரைகள் விலைக்கும் அளிக்கப்பட்டன.

இதே காலகட்டத்தில் நிலவிய குதிரைகளின் விலை நிலவரமும் அளிக்கப்பட்டுள்ளது. குதிரைகளின் சராசரி விலையானது ரூபாய் 517லிருந்து 544 வரை இருந்தது. அரேபியக் குதிரைகள் 628 ரூபாய் வரை விலை போனது. அதற்கு அடுத்த படியாக விலை ஆஸ்திரேலியா மற்றும் பெர்சியா நாட்டுக் குதிரைகள். இதில் வட இந்தியக் குதிரைகள்தான் கடைசி ரகம்.

1876ம் ஆண்டு நிலவரப்படி ஒரு குதிரைக்கு ஒரு வருடத்திற்கு பராமரிப்புச் செலவாக 14 ரூபாய் 2 அணா மற்றும் 7 பைசாக்கள் செலவானது. இது வருடத்திற்கு வருடம் மாறுபட்டுக் கொண்டிருந்தது. சில வருடம் 17 ரூபாயும் செலவானது.

பண்ணையின் மொத்தப் பரப்பு 711 ஏக்கராகும். இதில் பண்ணைக் கட்டிடங்கள், தோப்புகள் மற்றும் புல் தரைகளாக மட்டும் 484 ஏக்கர். தோட்டமாக 44 ஏக்கர், கிராமப்பகுதியில் 28 ஏக்கர், ஓடை, ஏரி மற்றும் கிணறு ஆகியவை சேர்ந்து 21 ஏக்கர். சாலை 27 ஏக்கர். அலுவலர் குடியிருப்பாக 29 ஏக்கர், தனியார் உடைமையாக 76 ஏக்கர்.


1876–ஆம் ஆண்டின் பண்ணையின் வரவு செலவுக் கணக்கின்படி பண்ணையில் 1095 குதிரைகள் இருந்தன. ஒரு குதிரையினை 700 ரூபாய்க்கு அரசே கொள்முதல் செய்து கொண்டது. வரவு செலவுக் கணக்கில் பண்ணையின் கட்டடிங்கள் போன்ற சொத்திற்குச் செய்த முதலீட்டிற்கும் குதிரைகள் கொள்முதல் செய்ததிற்கும், 4 சத வட்டி நிர்ணயித்துக் கொண்டு வரவு செலவு பார்த்ததில் அந்த ஆண்டு மட்டும் பண்ணைக்கு 79000 ரூபாய் நட்டம். ஆனால் பண்ணையின் அசையா சொத்துக்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் பண்ணைக்கு வரவு அதிகமே.

பண்ணையின் தலைமை அலுவலரான ரிமவுண்ட் ஏஜென்ட் அவர்களின் மாதச் சம்பளம் ரூபாய் 1527, 14 அணாக்கள். அவருக்கு அடுத்தபடியாக இருந்த கால்நடை அறுவை சிகிச்சை நிபுணருக்கு ரூ.760–2–7 சம்பளம். ஒரு நடத்துநருக்கு ரூ.160ம் உப நடத்துனருக்கு 125ம் மற்றும் பண்ணையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் இதரச் செலவுகளுக்கமாகச் சேர்த்து ரூ.46,000ம் செலவானது.

ரிமவுண்ட் டிப்போவின் அன்றாட அலுவல்களை ஆராயும் போது எவ்வளவு நேர்த்தியாகப் பணிகள் நடைபெற்றன என்பது தெளிவாகிறது. அன்றைய காலகட்டத்தில் ஒரு குதிரையின் மதிப்பு 700 என்றால் ஏறக்குறைய அது **350** சவரன் தங்கத்திற்கு சமம். அதனைத் தற்கால பணத்தோடு ஒப்பிட்டு பார்த்தால் ஒரு குதிரையானது பல லட்ச ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சொகுசுக் காருக்குச் சமமாகும். அந்தப் பண்ணையின் தலைமை அலுவலரின் ஊதியமானது பண்ணையில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களின் மொத்த ஊதியத்தை விடப் பலமடங்கு அதிகமாக இருந்தது.

பாரம்பரியமிக்க கால்நடைப் பண்ணை பல சிறப்புகளைத் தாங்கிக் கொண்டுள்ளது. நூற்றாண்டுகளைக் கடந்து இன்றளவும் கம்பீரமாக நிற்கும் பல கட்டிடங்கள். அந்தக் கால மக்களின் அறிவுக் கூர்மையினையும், தொழில்நுட்பத் திறத்தினையும், காலங்களைக் கடந்து நிற்க வேண்டுமென அவர்களின் தொலைதூரப் பார்வையியையனையும் எடுத்துக் காட்டுவனாக உள்ளன.

குறிப்பு : மத்தகிரி என்பது மத்தர் தரை என்பதன் திரிபு. மத்தர் என்பது மாவுத்தர் என்ற சொல்லின் திரிபு. மா + உத்தர் என்ற சொல்லுக்குப் பசு, குதிரை, யானை போன்ற விலங்கினங்களை விசைத்தெழச் செய்பவர் என்று பொருள். இந்த விலங்களுக்குப் பயிற்சி அளிப்பதனால் அவை விசைத்தெழுகின்றன என்று கண்டவர்கள் அதற்குக் கருவியாகக் கொண்ட கருவியே அங்குசம். அதற்குத் தோட்டி என்பது தமிழ்ச்சொல். அந்தத் தோட்டி போல உள்ள மலை மத்தகிரிக்கு அருகில் உள்ளது. அத்தோட்டிமலையை அங்குசகிரி என்று கூறுகிறோம்.



இராயக்கோட்டை தர்ஹா

# உயிர் மீண்ட சேவல் உரிமையை மீட்டுத் தந்தது!

**என்.ஆர்.ஜெயசந்திரன்,** B.Com., துணைப்பதிவாளர் (ஓய்வு),
காவேரிப்பட்டணம், கிருஷ்ணகிரி மாவட்டம். Cell : 98427 79664

குழந்தைகள் கடவுளை நேசிக்கிறார்கள். கடவுளும் குழந்தைகளை நேசிக்கிறார். முதியவர்களைவிட குழந்தைகளின் பக்திக்கு ஆண்டவன் எப்பொழுதும் தவறாமல் அருள்பாலிக்கிறார். குழந்தைகளின் தெய்வ பக்தி குறையில்லாதது. அப்பழுக்கற்றது. அற்புத ஆற்றல் பெற்றது.

### அறுநூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த அதிசயம்

சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு விஜயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டில் தென்னாடு இருந்தபொழுது அதிசயம் நிகழ்ந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரிக்குத் தெற்கே எட்டு கிலோமீட்டர் தொலைவில், தேசிய நெடுஞ்சாலையில், தென்பெண்ணையாற்றங்கரையில் அமைந்துள்ள அழகிய ஊர் காவேரிப்பட்டிணம். அந்த ஊரில் தான் அந்த அதிசயம் நடந்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது!

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டரின் வழித்தோன்றல்களான குலாலர் இனத்தவர். அவ்வூரில் வாழ்கின்றனர். அவ்வூர் குலாலர் இனத்தவரின் தலைவராக இருந்தவர் ஆட்டக்கல் சோலைச்செட்டியார் அவரும், அவரது குடும்பத்ினரும் அன்னை சிவகாமியின் பக்தர்கள்.

### வரி வசூலிக்க வந்த அலுவலர்கள்:

பிரதாபதேவமகாராயர் ஆட்சியில் பணிபுரிந்த வீரமுஷ்டி, ராதாமுஷ்டி என்ற இரு வரி வசூலிக்கும் அலுவலர்கள் கி.பி.1398–ஆம் ஆண்டில் ஒருநாள் ஆட்டக்கல் சோலைச் செட்டியாரிடம் சென்று தாங்கள் இருவரும் காவேரிப்பட்டணத்தில் உள்ள குலால இனமக்களிடம் வரி வசூலிக்க வந்திருப்பதாகக் கூறினர். சோலைச் செட்டியார் அவ்விரு அலுவலர்களிடமும் தம் இனத்தவர்கள் செய்யும் தொழிலை விளக்கி, அவர்கள் தொழில் செய்யும் இடங்களையும் காண்பித்து, அவர்களிடம் தங்களின் பழங்காலப் பெருமையையும் விளக்கிக் கூறியதுடன் தாங்கள் களிமண்ணால் ஆன கலைப்பொருட்களையும், மக்களுக்குத் தேவைப்படும் மண்பாண்டங்களையும் செய்வதாகக் கூறி எளிய ஏழை மக்களாக உள்ள தம் இனமக்களால் வரி செலுத்த இயலாத நிலையையும் விளக்கினார்.

வரி வசூல் செய்ய வந்த அவ்விரு அலுவலர்களும், அவருடைய விளக்கத்தையும், சமாதானத்தையும் ஏற்காமல் 'உடனே வரி செலுத்துங்கள்' என்று

வற்புறுத்தினர். குலால இன மக்கள் கூடி விட்டனர். வரி செலுத்த ஒருவரும் முன்வரவில்லை. எனவே ஆத்திரமடைந்த அந்த இருவரும் "வரியை உடனே செலுத்த வேண்டும். செலுத்தாவிட்டால் வீட்டிலிருப்பவர்கள் வெளியே வர முடியாது. வெளியே இருப்பவர்கள் வீட்டினுள் செல்லமுடியாது" என்று கடுமையாக எச்சரித்துத் தங்களுடன் வந்த பணியாட்களைக் குலாலர்கள் வசிக்கும் வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

**பறந்து வந்த சேவல் :**

அந்த சமயத்தில் தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது! சோலைச் செட்டியர் வீட்டிலிருந்த சேவல் சரேலென்று பறந்து வந்து அவர்கள் அருகில் கொக்கரித்து நின்றது. ஏற்கனவே ஆத்திரத்தில் இருந்த அந்த இருவரும் பதட்டமடைந்து குலாலர் மக்களைப் பார்த்து, "சேவலை எங்கள் மீது பறக்க வைத்து எங்கள் கண்களைக் குருடாக்கப் பார்க்கிறீர்களா?" என்று கூச்சலிட்டு, அந்தச் சேவலைப் பிடித்து, கழுத்தைத்திருகி தரையில் வீசினர். அந்தச் சேவல் துடிதுடித்தபடிச் செத்தது.

**செல்வி மீனாட்சியின் சீற்றம் :**

வீட்டில் தான் செல்லமாய் வளர்த்த சேவல் துடிதுடித்து செத்ததைப் பார்த்துச் சோலைச் செட்டியாரின் பத்து வயதுச் சிறுமி மீனாட்சி ஆத்திரமடைந்தாள். குலாலர் இன மக்கள் வேதனை அடைந்தனர். அரசரை எதிர்த்து ஏதும் பேச முடியாத நிலையில் ஆத்திரமடைந்த மீனாட்சி, கண்களில் நீர் கலங்க, அவ்விருவரையும் பார்த்து, "வரி வசூல் செய்வதற்கும், சேவலுக்கும் என்ன சம்பந்தம்? உங்களுக்கு ஏதும் தீங்கு செய்யாத என் சேவலை ஏன் கொடூரமாக கழுத்தைத் திருகிக் கொன்றீர்கள்? நீங்கள் மனிதர்களா? அல்லது காட்டில் திரியும் நரிகளா? என் சேவலை மீண்டும் உயிர்ப்பித்துத் தரவேண்டும்" என்று ஆவேசத்துடன் கூறினாள்.

**சவாலை ஏற்றுக் கொண்ட செல்வி மீனாட்சி :**

சிறுமியின் ஆவேசப் பேச்சு குலாலர் இன மக்களைக் கொதிப்படைய வைத்தது. அதன்பின்னர் அவ்விருவரும் பெரிய கலவரம் ஏற்பட்டால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்பதை உணர்ந்தனர். செல்வி மீனாட்சியைப் பார்த்து வேறு சேவல், இதைவிட நல்ல சேவல் வாங்கித் தருகிறோம். நீங்கள் வரி செலுத்துகிறீர்களா என்று கேட்டனர். ஆனால் மீனாட்சியோ தனக்குத் தன்னுடைய அந்தச் சேவல்தான் வேண்டும் என்று வற்புறுத்தினாள். அவ்விருவரும் அவளையும், அங்கிருந்தவர்களையும் பார்த்து, நாங்கள் சேவலை உயிர்ப்பித்துத் தந்தால் நீங்கள் வரி செலுத்துகிறீர்களா? என்று கேட்க, அச்சிறுமியும் மற்றவர்களும் சேவல் உயிர் பெற்று வந்தால் தாங்கள் வரி செலுத்துகிறோம் என்று

கூறினர். வரிவசூல் அலுவலர்கள் என்ன செய்தும் சேவல் உயிர் பெறவில்லை. இப்பொழுது என்ன செய்வது? குலால இன மக்களிடம் வகையாக மாட்டிக் கொண்டோம் என்று கலக்கமுற்றிருக்கும் வேலையில், சிறுமி மீனாட்சி, "நான் அந்தச் சேவலை உயிர் பிழைக்க வைக்கிறேன். எங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கிறீர்களா?" என்று கேட்டாள். அவர்களுக்கும் சேவலுக்கு உயிர் கொடுத்தால் உங்கள் சமூகத்திற்கு வரி விலக்குச் சலுகை அளிக்கிறோம் என்றனர்.

**இறந்த சேவல் உயிர்பெற்றது :**

கூடியிருந்த அனைவரும் சிறுமி மீனாட்சிக்கு இவ்வளவு தைரியமா? சவால் விட்டுப் பேசுகிறாளே என்று ஆச்சரியப்பட்டனர். சவாலை ஏற்றுக் கொண்ட செல்வி மீனாட்சி வீட்டின் உள்ளே சென்று அவர்களின் குல தெய்வமான அன்னை மீனாட்சியை வணங்கி, ஒரு சிறிய பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து அந்த சேவலின் மீது தெளித்தாள். சற்று நேரத்தில் சேவல் உயிர் பெற்று பழையபடியே பறந்து வீட்டினுள் சென்றுவிட்டது!

**வரிவிலக்கு சலுகைப் பட்டயம் :**

இந்த அதிசயத்தைக் கண்ட அந்த இரு அலுவலர்களும், கூடியிருந்த மக்களும் செல்வி மீனாட்சியின் பக்திக்கு இருந்த சக்தியை எண்ணி வியந்தனர். அந்த இரு அலுவலர்களும் அங்கிருந்தவர்களிடம் மன்னரிடம் இந்த நிகழ்ச்சியைக் கூறுவதாகத் தெரிவித்து அப்பகுதியை விட்டு வெளியேறினர். விஜயநகருக்கு விரைந்து சென்று மன்னர் பிரதாபதேவமகாராயரிடம் நடந்ததை விளக்கினர். மன்னர் மனம் மகிழ்ந்து, செல்வி மீனாட்சியின் பக்தியைப் பாராட்டி குலாலர் சமூகத்தினருக்கு வரி விலக்குச் சலுகைக்கான ஆணையை வழங்கினார்.

அதற்கான அரசாணையை இனிவரும் அலுவலர்கள் அறிந்து கொள்ளச் செப்புப்பட்டகத்தில் சாசனம் செய்துக் கொடுத்திருக்கிறார். அந்த அறுநூறு வருட செப்புப்பட்டய சாசனத்தை இப்பொழுதும் அந்தச் சிவகாமி ஆலயத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். காவேரிப்பட்டணத்தில் நடைபெறும் ஊர்த்திருவிழாவின் பொழுது அச்சமுதாயத்தினர் அப்பட்டையத்தைத் தங்கள் சமுதாயத்திற்குக் கிடைத்த அரிய பொக்கிஷமாகக் கருதி ஊர்வலத்தில் எடுத்து வருகின்றனர்!

தகவல் : **வரலாற்றில் தகடூர், ஆசிரியர் சொ.சாந்தலிங்கம்**

# PENNESWARAR TEMPLE IN KRISHNAGIRI DIST

**Dr. Major Syed Shahabudeen**
Principal & HOD of Islamiyah College, Vaniyambadi & J.Vidhyavathi, Research Scholar.

Temples are the mainstay and the backbone of the Hindu religion. Prof. K.A.Nilakanta Sastri rightly points out that the temple and the *matha* were the two gifts of medieval Hinduism to Southern India[1]. It was under the Cholas that these institutions entered on a process of gradual expansion and adaptation, which attracted the imagination of the people.

As a religious institution, the South Indian Temples reach back to a remote antiquity. The existence of numerous temples (Kottams) of Brahmanical, Buddhist and Jain deities is fully attested by the Sangam literature. The early temples were structures of brick and mortar. Under the Pallavas, the temples were constructed out of solid blocks of granites, rock-out 'cave-temples'[2].

The Hindu temple attained the zenith of its influence on the social life of the country. Temples were not merely places of worship, as it is generally believed. During the medieval period, temples assumed greater role in the socio-economic life of the people. Temples provided employment to skilled and unskilled laborers. They maintained hospitals. Temples functioned as landholder, employer, and consumer of goods and services, as a bank and museum, as hospital and theatre, in short, as a nucleus, which gathered round itself all that was best in the art of civilized existence. Elaborate arrangements were made for the management of the affairs of the temple. Temples assumed much importance in the daily life of the people. As a result, every town and every locality had a temple which was the centre of the socio-economic activity of the people. Its importance may be realised from the popular proverb in Tamil "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" "Don't live in a place where there is no temple". Therefore the temples of the medieval period have few parallels in the annals of mankind.

Consistent with this historical traditions Penneswarar Temple near Kaveripattinam in Krishnagiri District is a repository of mythology, history, religion and culture. It is located at Penneswara Madam a small village on the banks of Thenpennai river which is five kilometers away from Kaveripattinam in Krishnagiri District. This holy temple of Siva has a long history. It is related by the local traditions that Swayambu Lingam of Moolavar was worshipped by the *munis, rishis* and *sittars* some two thousand years before[3]. With a view to corroborate this information, it is reported that the *sittars* had lived on the nearby mountainous region. Since the deity appeared on the banks of Thenpennai river as Swayambu lingam to the *munis* and *rishis,* it was called Penneswarar. It is also related that *munis* had learned the Vedas and the *amman* deity is known as Vedanayagi[4].

The recent researches have proved that people lived in this region some three thousand years ago. From the excavations, it was found that the vessels and other household articles used by the people were available in this area. The dolls made of burnt mud, black and red tiles were discovered. Therefore the antiquity of the people of this region is well established[5].

There was a village called Jainoor very near to Penneswara madam, where Jains lived in large number and they opposed the Saivites very vehemently. Mootur, Avathavadi, Kavaikarai, Verpalli, Arasampatti were some of the very important villages around Jainoor. Jain population was greater in these villages and they exercised preponderant influence in the region. They gave trouble to the Saivites. So Kulothunga III undertook an expedition from Tanjore and marched towards Penneswara madam where he fought and inflicted a crushing defeat on the Jains of Jainoor.[6]

When Kulothunga III went to Penneswara madam to wage a war against the Jains, he and his army stationed there for a few days. It is believed that Kulothunga III in his dream was assured by God who appeared as Swayambu lingam that he would definitely win the war. Next day morning, the king saw a cow milching under a palm tree. He went near the palm tree, and to his surprise, he found the God in the form of Swayambu lingam. So the deity is known as Panai Eswarar. Later Kulothunga III won the war and he promised that he would build a Eswar temple at Penneswara madam. He consulted the *munis* and built the temple in memory of his victory in the war.[7]

This historic temple was known by different names during different periods from different reasons. For example, the temple is situated on the eastern banks of Thenpennai river. So it is called Sri Penneswarar Temple. Swayambu Lingam was witnessed under the palm tree. So it is known as Panai Eswarar. This name was popular during the ancient days of *munis, rishis* and *sittars.* As Kulothunga III stayed there for some time during the course of his expedition, it was called Penneswara Madam. On the opposite side of temple, a mountain is found. Therefore it is called Sri Penneswara Malai. *Malai* in Tamil means mountain. Since this temple was under the control of the Nayanar dynasty for a few years, the temple is also called Penneswara Nayanar. Another name for the temple is Thenpenneswarar, as it is located on the eastern banks of the river. As there is Cheraman Perumal Madam in the temple, it is known as Pennai (River) + Eswarar (God) + Madam = Penneswarar Madam.[8]

The *gopuram* constructed on the south side of the temple is the biggest one in the entire district of Krishnagiri and Dharmapuri. The basement of the gopuram was built by black stones and the western side of the *gopuram* was constructed with burnt bricks and chunnam. The *gopuram* has seven niches (Maadam) which are made of wood. The height of the *gopuram* is 110 feet. The sculpture decorates the *gopuram*. On the east and west side of the *gopuram*, there are three *devakottangals* on each side and on the north and south, two *devakottangals* are found on each side, So there are totally ten *devakottangals*. But there are no idols. The Hindu Religious Endowment Board has recently understood the necessity of renovating the *gopuram* and it extended financial support to build the compound wall. Near the entrance of the *gopuram* on both sides, two statues of 4 feet height of Duvarabalagar of the 15th century are installed.

Next to the entrance of the *gopuram*, there is a big open ground, on the eastern side of which the staircases are constructed to go to the river. On the western side, there is a big well. There is a *mandapa* located on the south east of the temple. This *mandapa* was said to be constructed by Vellappa Kadar Kandan Chetty during the sixteenth century. He has also donated land to Perumal Temple of Verpalli Village.

The *Mandapa* was renovated by a business magnate of Kaveripattinam Mr. Murugesa Mudaliyar recently. This temple has two circles. One open ground facilitating the assemblage of devotes on festival times. The other circle is the actual circle of the temple.

## THE STRUCTURE OF THE TEMPLE

The temple has front *Mandapa, andaralam* and *sanctum sanctorium.* In the front *Mandapa,* adjacent to the northern inner side of the wall, a beautiful statue of Vinayaga is installed. He is also called by the devotees as Adiyaman Pillaiyar. A statue of Nandi and Bali Peetam are also there in the front *mandapa* facing towards west. Lingam is also found in small size. In this olden days, there was an entrance towards east to see God. But now the door is closed and a gate on the south side is constructed.

It is very interesting and inspiring to observe that there are *Adhitanam, Upapeetan, Padrmajadgi, Kopadam Muppattai Kumudam, Kandam Pattigai Kandam, Vedigai* etc. as per the usual norms of the temple and they are located outside the wall of *sanctum sanctorium* all around. But there are no sculptures on the wall. *Prastham, Vinanam, Girivam, Stupi, Sigaram* and *Kalagam* are associated with the *sanctum sanctorium.*

## SCULPTURE :

Many idols and sculptures are installed inside the outer wall of the temple. From the left to right, Vinayagar statute of 1 1/2 feet height and the idols of Sapta Madha are located. Next on the western side, there are nine small rooms. Rama, Lakshmana and Sita are housed in room No. 1 In the next five rooms, lingams are installed. In another room, Lord Muruga with his consorts Valli and Deivanai in standing posture are found. Amman was placed in one room. On the platform of the southern side, a peetam of Navagraha is constructed. On the eastern side of the wall, statues of Sun, Moon, Nandi with beard are available. It is reported that these statues belonged to the period of Kulothunga III and all the statues around Garbagraha might have been added during the later days. On the southern side Dhakshnamurthy and on the northern side Durgai are placed in a majestic way.

The epigraphical sources especially the inscriptions available in the temple provides adequate information in this regard. Thirty inscriptions are identified so far. Of these, ten inscriptions belonged to the Chola period (6 of Kulothunga Chola III and 4 of Raja Raja III), 5 incriptions of the Hoysalas, 3 of the Vijayanagar kings and the remaining belonged to the later kings. These are the main sources of information about Penneswara Temple which throw light mainly on land grants and donations given to the temple by the rulers of different periods.

It is noted that the *rishis*, sages and ascetics lived in and around Sri Penneswara hills and worshipped Ashtalingams (eight phalluses). They used to go around the hills of the temple during the full moon (*Pournami*)[9].

Their foot prints on the rocks opposite to Varunalinga are found even today which stand as a testimony to the performance of divine duties by the sages and ascetics with devotion and commitment. Even today, the pious and holy people perform *Poojas*, worship the deity and go around the hills on the full moon[10].

From the historical evidences it is learned that the seventeen rulers of Thagadur Nadu visited the temple and worshipped Sri Vedanayagi Penneswarar Adhiyaman. The last of the rulers of Thagadur Nadu was also reported to have visited the temple and performed the *pooja* with much devotion and dedication. It is clear from this fact that the history of the temple goes back to ancient times especially Sangam Age.

There is a *Rajagopura* with seven stages on the southern side of the temple looking at Sri Penneswara hills. It appears as if the sun which rises in the east throws its light first on Sri Penneswarar and withnesses the deity. In the *Rajagopuram* one can find Sri Sarabeswarar. On the two sides of the gopuam, Duvara Balagars are housed. On the front side of the *sanctumsanctorium*, Sri Sangatahara Vinayagar is located looking towards south. *Abisheka Aaradhana* rituals and *Poojas* are performed to Sangatahara Vinayaga.

It is interesting to note that the seven virgin angels namely, Brahmmi, Maheswari, Gowmari, Vaishnavi, Varahhi, Indirahi and Samundi are found in this temple facing towards west and Dhakshinamoorthy facing towards south are installed in this historic temple of Sri Penneswarar.[11]

In between Athputhalingam and Anandhalingam, there is mangala prathalingam, on the upper side of which there is a ring where there was a palm three under which Sri Penneswarar appeared for the first time.[12]

A unique features of this temple is that on the eastern side of the *sanctum sanctorium*, Lord Muruga with both of his consorts Valli and Dheivanai and cock, arrow and peacock is found and they were engraved in one stone. The devotees throng in large number to worship Lord Muruga and to have a *dharshan* of this majestic deity with his consorts and other paraphernalia.

Behind the idol fixed in the *sanctum sanctorium*, the *moolavar* Mahavishnu facing towards west is seen. Sri Bramadevan facing the north and Sri Sandikeswarar facing the south are found. The devotes feel very happy and proud to worship these gods and perform all the rituals and *pooja.*

This temple was built by Kulothunga III. His idol is installed inside the temple in honour of the founder and builder of the temple. The idols of Sangatahara Ganapathi, Rajaganapathi, Dhakshinamoorthy, Sapthakannigai, Rama, Lakshmana, Sita, Anjaneya, Uchishta Ganapathy, Athputhalingam, Ananthalingam, Mangalappratha Lingam, Iswarya Lingam, Poornalingam, Bramma, Vishu, Durgai, Sandikeswarar, Nagar, Nagabairavar; Nandidevar, Sun Moon, Muruga, Valli, Dheivanai and Navagraha idols are available within the precincts of the temple. The Navagraha namely Sun, Moon, Jupiter, Saturn, Venus, Mars, Mercury, Ragu, Kedu, the nine deities representing the nine constellations are installed in the temple.[13]

Some of the unique and notable features of this temple deserve special mention. The Sun-God worshipping Lord Siva could be understood from the fact that the morning rays of the sun throw light on Nandi first and then on the deity. [14] Sri Penneswarar is the *Kula deivam* (family deity) of the large number of people belonging to different social strata of the society. It is very interesting to observe that the temple, river and the hill-all the three are very beautifully located in one place and it is a wonderful scene not only to the devotees but also to the travellers. Every year on January 1, the devotees from the Agrahara of Papparapatti in Dharmapuri District and Krishnagiri and also the devotees from Vaisya Kula of the District organise special *aradhana* invoking God by chanting hymns and offering oblations and worshipping. They organise special *samabandhi bhojanam.* This is very unique event of the temple.[15]

*Poojas* i.e. worshipping God and chanting mantras are performed regularly twice every day. One the full moon time. i.e. *Pournami* of every month, thousands of devotees visit the temple and invoke the blessing of God.[16] *Abisheka Aradhana,* chanting of mantras and performing special *Poojas* are organised on all important and festival days.[17]

This temple is not merely a place of worship but a centre of social and cultural activities of the people of this region. The beliefs

and practices of the devotees form the basis of their socio-cultural activities. From cradle to grave, whatever ritual the devotees perform, it is centred to this temple organisation. Marriages are performed here. The sick people seek remedy. The poor and downtrodden are looked after by the distribution of free food *(Anna dhana)* and free clothing on all auspicious occasions.

## FOOT NOTES AND REFERENCES:


1. K.A. Nilakantha Sastri, The Cholas, Madras University of Madras, 1984, P.635
2. Ibid.p.641.
3. Interview with Mr.Mohan Kumar, the Gurukkal on 7th August 2007.
4. Ibid.
5. Isthala Varalaru, Sri Vedanayagi Penneswara Swamy Thirukkoil (Tamil) 2005-p.2.
6. Ibid.
7. Ibid. p.3
8. Interview with Mr.Mohanan Kumar, the Gurukkal on 7th August 2007.
9. Ibid.
10. Ibid.
11. Isthala Varalaru, op.cit.,p.5.
12. Ibid.
13. Ibid.
14. Ibid.
15. Interview with Mr.P.Paranthama Kannan, the Executive Officer on 10th August 2007.
16. Ibid.
17. Ibid.

# History of Bagalur Palayam Poligars

*Bagalur which is at a distance of 14 k.m. from Hosur Taluk of Krishnagiri District is situated on the banks of Pennaiyar. Bagalur was the head Quarters of a palayam of 89 Villages and the Traces of a Fort are still seen. The Gubala Gurappa Nayaka was appointed as a Poligar of Bagalur Palayam by the great Hoysala King Ballala II for his act of protect the King Ballala II in war with Sevuna King on 1207 A.D. Then onwards the Hoysala King Veeraballala granted "Pattayam" and sword to the poligar of Bagalur Palayam. The sword is still protected by the family members of the Bagalur Palayam Poligar. The said poligar Gubala Gurappa Nayaka permitted to use Tiger head Royal symbol and obtain concessions from payment of Royalty with condition to sent army to Hoysala Kingdom whenever required. The famous Dasara Festival in Mysore also allowed to conduct in Bagalur with permission of King Veeraballala and this festival celebrated Bagalur in few years back with great manner.*

*The Bagalur Palayam extended from Bagalur to Sringeri Mountain of Karnataka in several years ago, and the wealth of Bagalur Palayam valued as three lakh pagodas in 18th century and it was stated by the Board of Revenue Madras vide G.O.No.773 Dt. 4.9.83 and G.O. No.779 Dt. 7.7.85 with reference to GAZETTEER OF Salem District.*

*The Gutala Gurappa Nayaka established Hosur Town and Hosur become the capital of Bagalur Palayam. In the Eastern side of the Hosur Town the Gutala Gurappa constructed Hill Temple namely Chandra Choodeswara Temple and it becomes family temple of Bagalur Palayam Poligar and they offered "Thalli" at that time of car festival Kalayanaurtchavam.*

*After Gutala Gurappa, Shri Rama Varma Nayaka ruled Bagalur Palayam and render his army assistance to Hoysala kings during war times, especially Hoysala King Veeraballalla III war with malik Kafur the famous general of Alauddin Khilji. In 1345 A.D. the Hoysala Kings acknowledged the supremacy of Vijayanagara empire and then the Bagalur poligars shifted*

*their loyalty to the Vijayanagara empire. In Battle of Talikotatvar the poligar of Bagalur Palayam Shree Ramalingappa Nayaka assisted with 6000 strong army in favour of Vijayanagara Army defeated by the Bhamini sultans. The last connection of Vijaynagara empire with Bagalur Palayam ended at that time of Vijaynagara King Sri Ranga Raya rule in Srirangapatna of Karnataka State.*

*In 1636 A.D.one of the Mysore Dynasty General tried to Capture Hosur, the Capital of Bagalur Palayam and that attempt was defeated by the Rama Nayaka the poligar of Bagalur Palayam. After successes in the above Battle the Rama Nayaka constructed a tank in lake of Hosur, namely "Rama Nayakan Tank" and Rama Temple in Hosur fort. After the demise of Jijayanagara empire in Sri Rangapatna, the Bagalur Palayam lost its territory and then become a part of the Mysore Kingdom (Vide Francis Buchanan MD Vol III Chapter XX Page 432)*

*In 1655 A.D. the Mysore King Srikanterva Narasaraja Odayar invaded Bagalur Palayam and Bagalur Palayam poligar acknowledged the supremacy of the Mysore Kingdom and agreed to pay 6000 pagodas to Mysore Kingdom. (Vide Auvals of Mysore Royal Family Vo.I page 365 by lewis Rice) After the death of Mysore King Srikanterva Narasaraja Odayar the Bagalur Palayam Poligar declined to pay tax to Mysore Kingdom, then the next ruler of Mysore Kingdom Shri Dodda Devaraja Odayar send troops to bagalur palayam on 1667 A.D. and captured and annexed the Bagalur Palayam as a part of Mysore Kingdom. (Report of the Govt. of Madras No. 773 Dt. 4.9.1883 and Report No. 779 dt. 7.7.1885) Then the poligar of Bagalur Palayam quit Hosur and settled at Bagalur. In the period of Bagalur Poligar Yerrappa Nayaka the Maratha king attempted to annex Bagalur to their Kingdom and during the Battle the Bagalur paligar Chandrasekara Nayaka was killed by the Maratha Army Chief Venkoji Rao. Then the Yerappa Nayaka of Bagalur Palayam entered an Treaty with Marathas and agreed to pay 2000 pagodas to Maratha Kingdom. In that juncture the Historical records silenced about in action of Mysore King to protect Bagalur. After Yerrappa Nayaka, the Nanjappa Nayaka ruled Bagalur Palayam and he war differed with his cousin brothers*

*namely Rama Lingappa Nayaka and Chokkanatha Nayaka. The powerful sultan entered and appointed Ramalingappa nayaka and Chokkanatha Nayaka in the place of Nanjappa Nayaka.*

*The great ruler of Mysore Kingdom Hyderali entered Bagalur Palayam and annexed araberi portion to their kingdom. At that time the Diwan of Bagalur Palayam Venkatarao approached Muslim Ruler of Sira for help and then the war held between. Hyderali Troops and Sira Ruler Troops on 1763 AD and SIRA Rulers Troops successed to protect Bagalur and laid 3000 strong Army men for protection of Bagalur.*

*After the demise of Muslim Rulers in SIRA, the Bagalur Palayam poligars never related to Mysore Kingdom and become friend of East India Company of England. On 23.6.1768 the Bagalur poligar entered an agreement with Col. Smith in Araberi and then captured Hosur from Hyderali by Bagalur Palayam poligar Choodappa Nayaka On 3.7.1768 and on 11.7.1768 captured Denkanikottai with the help of British troops. On 16.11.1768 the British Cal. Wood troops surrounded by Hyderali troops in Hosur and 200 men with animals were killed by Hyderali Troops and Hyderali returned to Bangalore and then ordered his army Chief Ibrahim Khan to capture Bagalur and then Choodappa Nayaka war imprisoned by Ibrahim Khan. Then Hyder Ali, released Choodappa Nayaka after received penalty of 15.000 Poagadoas Hyerali died 1782 and Choodappa Nayaka turned supporter of British Troops. In the year of 1791 A.D. the pattayam of Bagalur Palayam returned to Choodappa Nayaka from the great, Tippusultan under the request of Lord Corn Walis and then on 1792 A.D. under the treaty between British and Tipusultan the above said pattayam again taken over by Tipusultan and Choodappa Nayaka ousted from Bagalur Palayam and sheltered at Rayadurga along with his 3 sons, namely Nanjappa Nayaka, Mudduveerabadrappa Nayaka, Veerachoddappa Nayaka and they succeed as 22nd, 23rd, 24th poligars respectively. The 23rd poligar Muddaveerapadrappa Nayaka left to Kandy in Ceylon. In 1799 A.D. after demise of Tipusultan Bagalur Palayam restored under the Rule of Choodappa Nayaka and then Nanjappa Nayaka. From 1822 A.D. onwards the British rulers slowly reduced the powers of*

Bagalur Palayam poligars. After the period of Marinanjappa Nayaka in 1841 the Bagalur Palayam Poligar become debtor of Rs. 28.000/- and the Marinanjappa Nayaka mortgaged palayam to one Kotta Nanjappa Setty and cleared the Debts on 14.2.1984 the Pattayam of Bagalur Palayam attached by money lender kotta Subba Chetty and on 21.10.1904 the Bagalur Palayam Poligar Veerachodappa Nayaka filed on appeal to the Revenue Board. Then onwards the villages belongs to Bagalur Palayam were liberated and some landed property were allotted to Bagalur Palayam poligar for his life expenses. Hence the History of Bagalur Palayam ended.

The poligars claimed Chandravamsa of Kshatrya Kulam and Kasyaba gotram. They claimed Maduri Ruler Viswanatha Nayaka belongs to their community. The Nayakar of Tanjore, Jagadevipalayam. Chennapatna Norganti (Chittoor) related to the poligar of Bagalur Palayam. One poligar of Bagalur Palayam namely Chandrasekara Nayaka constructed tank for the memory of his beloved wife Chandrambudi and it was called as Chandrambudi Tank. The Poligar of Bagalur Palayam constructed several check dams and constructed Bridge in 1867 A.D. The Akbar Anai Dam was constructed and later developed by Government in Kodiyalam Village of Hosur Taluk.

The end of Bagalur Palayam poligar is the great lesson in our District History.



வீரக்கல்


Written by :

**Chinna Kuttappa**
Ex.Councilor,
Oddapatty Panchayat Union,
Shoolagiri - Po, Hosur-Tk,
Krishnagiri-Dt.

Cell No. 94428 72009

# வெள்ளி விழா வெளியீடு எண் - 14




தொடக்க விழா




பாராட்டு விழா

அக நாட்டு வரலாற்றை அறிவோம்;
வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்போம்;
வரலாறு படைப்போம்.